தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை; 1981 ஏப்ரல் 28.

சித்திரை 16, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.”

உலகம் பழிக்கும் தீய ஒழுக்கத்தை விட்டுவிட்டால், மொட்டை அடித்தலும், சடை வளர்த்தலும் ஆகிய புறக்கோலங்கள் வேண்டாம்.

(1) வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

மின் கட்டணத்தை உயர்த்தும் திட்டம்

*வினா எண் 909—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் கட்டணத்தை உயர்த்துமாறு நமது மாநில அரசுக்குத் திட்டக் கமிஷன் ஏதேனும் ஆலோசனை கூறியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) விவசாயத்திற்கு மொத்த மின் உற்பத்தியில் சுமார் 28 சதவிகிதம் வழங்கப்படுகிறது. ஆனால், உற்பத்தி விலை யூனிட் ஒன்றுக்கு சுமார் 48 காசாக இருக்கும்போது விவசாயத்திற்கான ஒரு யூனிட்டின் சராசரி விலையான 17 பைசா என்பது குறைவான விலையாகும். இதன் வாயிலாக மின் வாரியத்திற்கு ஆண்டுக்கு ரூ. 72 கோடி வரை இழப்பு ஏற்படுகிறது. எனவே, இது குறித்த பிரச்சனைகளை ஆழ்ந்து பரிசிலித்து மின் வாரியத்தின் நிதி நிலைமையை மேம்பாடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென திட்டக்குழு பரிந்துரை செய்துள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் திட்டக்குழு மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் சில ஆலோசனைகள் கூறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே மின் கட்டணத்தை இன்றைக்குக் கட்ட முடியாத ஒரு சூழ்நிலையில் விவசாயிகள் சிரமப்பட்டுக் கொண்டும், நிலுவை அதிகப்படுத்திக் கொண்டும் இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் மேலும் உயர்த்துவது சரிதானா? ஆகவே அந்த ஆலோசனையைக் கூறிய மத்திய திட்டக் குழுவிடமே இந்த மாநிலத்திற்கு ஏதாவது மத்திய அரசிடம் இருந்து மானியம் பெறுவதற்கு திருப்பி ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒரு பொது நிறுவனம் என்றால் இழப்பு இல்லாமல் நடைபெற வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் அதனுடைய முதலீடுகள், அதனுடைய சொந்த நிதிகளிலிருந்தே பெற்றுக்கொள்கிற வகையில் அது நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் மின்சார வாரியம் தொடர்ந்து பல கோடிக்கணக்கான ரூபாய்களை இழப்பாகப் பெற்று வருகிற காரணத்தால் அதைச் சரிசெய்ய வேண்டும் என்று திட்டக் குழு கூறியது. அப்படிச் சரி செய்ய வேண்டுமென்று சொல்கிறபோது இந்தியாவிலேயே தமிழகத்தில் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குகிற கட்டணம் மிகவும் குறைவாக இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆகவே அந்தக் கட்டணத்தை உயர்த்தி நிதிநிலைமையைச் சரி செய்தால் இன்னும் திட்டங்களை அதிகமாக தமிழ்நாட்டில் நிறைவேற்றுவதற்கு வழி ஏற்படும் என்று மத்தியக் குழு நமக்குப் பரிந்துரை செய்தது. விவசாயிகளிடையே நமக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்னையை நம் அரசு சார்பில் விரிவாக எடுத்து திட்டக் குழுவிடம் விளக்கினோம்.

திரு. என். பழனிவேல்: இன்று மத்திய அரசிலும் இம்மாதிரி ஒரு மின்சார இலாக்கா, மின்சாரத் துறை அமைச்சர் என்றெல்லாம் இருக்கிறார்கள். நமக்கு இப்படி ஒரு நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் பற்றாக் குறையான மின்சாரம் வைத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் மத்திய அரசின் அந்த மின்சார இலாக்கா நமது மாநிலத்திற்கு உருப்படியான உதவியோ அல்லது ஆலோசனையோ ஏதாவது சொல்லுமா? அது சம்பந்தமாக நம் மாநில அரசு என்ன யோசனை கூறியுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நமக்கு உருப்படியான ஆலோசனைகள் தேவை இல்லை. நமக்குத் தேவை உதவி. அதைத் திட்டக் குழு பொறுத்தவரையில் அவர்கள் மொத்தமாக மத்திய அரசு மாநிலங்களுக்கு

எப்படி உதவி செய்ய வேண்டுமென்று வரைமுறை வைத்துக் கொண்டு உதவி செய்கிறார்கள். தனியாக மத்திய மின்சாரத்துறை எந்த உதவியும் அளிப்ப தில்லை. நமது மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் 1977-78ல் ரூ. 15.67 கோடி நஷ்டம். 1978-79ல் ரூ. 23.51 கோடி நஷ்டம். 1979-80ல் ரூ. 24.56 கோடி நஷ்டம். 1980-81ல் ரூ. 108 கோடி நஷ்டம் வரும். 1981-82ல் ரூ. 142.81 கோடி நஷ்டம் வரும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு விசேஷ நிலைமை, ஏறக்குறைய 10 இலட்சம் பம்பு செட்டுகள் வைத்து நீர்ப்பாசனம் செய்து வருகிற நிலையிலே தமிழகம் இருக்கின்ற காரணத்தினால், அது ஒரு கட்டுப்படியாகாத தொழிலாக இருக்கிற காரணத்தினால், அதற்கு மின்சாரத்தை மலிவு விலையில் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்கி, அதோடு ஏனைய தொழில்களை வளர்ப்பதற்கு ஒரு ஏற்பாட்டை மத்திய திட்டக் குழுவிற்கு எடுத்துச் சொல்லி, அதற்கு வேண்டிய நிதி உதவி நீங்கள் அளிக்க வேண்டுமென்று மத்திய அரசிற்குச் சொல்லுவ தோடு, நமக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுகட்டிக் கொள்ளக்கூடிய முறையிலே, அதிக லாபம் சம்பாதிக்கின்ற தொழிற்சாலைகளுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி, இந்த விவசாயிகளுக்கு மலிவான கட்டணத்தில் மின்சாரம் கொடுப்பதுபற்றிய நியாயத்தை திட்டக் கமிஷனுக்கு நமது அமைச்சர் அவர்கள் எழுதுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே தொழில்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணம் அதிகம். இன்னும் சொல்லப் போனால், தொழில் துறைகளுக்குப் போடுகின்ற கட்டணம் மூலம் வரக்கூடிய அதிக வருவாயை வைத்து, இந்தமாதிரி ஏற்படும் இழப்பைச் சரிசெய்கிறோம். இன்னும் நாம் தொழில் துறைகளுக்கு அதிகக் கட்டணம் போட்டால், தொழில் களே நம் நாட்டிற்கு வராது. மத்திய அரசைப் பொறுத்தவரையில், ஒரு பொது நிறுவனம் நஷ்டத்தில் இயங்கினால் அதற்கு நிதி உதவி செய்யாது. அப்படிச் செய்ய ஆரம்பித்தால், ஒவ்வொரு மாநிலத்திலும் பொது நிறுவனம் அதற்குப் பிறகு தொடர்ந்து பல கோடி ரூபாய் நஷ்டமாகக்கூடிய நிலைமையில் நடத்தப்பெறும். இன்னொரு கருத்தையும் தெளிவாக்க விரும்புகிறேன். விவசாய உணவு உற்பத்தி பம்பு செட்டுகளை வைத்து ரொம்ப விசேஷமாகச் செய்வதாகச் சொன்னார்கள். நாம் இதிலேகூட சில அடிப்படை உண்மை களைத் தெரிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மூன்றில் ஒரு பங்கினர் பம்பு செட்டுகள் வைத்துப் பயிர் செய்கிறார்கள். மற்றவர்கள் கிணற்றுப் பாசனம், ஏரிப் பாசனத்தை நம்பி பயிர் செய்கிறார்கள்.

ஆகவே, மூன்றில் ஒரு பங்கினர்தான் பம்பு செட்டு வைத்து விவசாயம் செய்கிறார்கள். பம்பு செட்டு வைக்க முடியாதவர்கள், கவலை மூலம் விவசாயம் செய்கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயத்திற்கு உரிய கட்டணத்தை விதிப்பது பற்றி நாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஏற்படும் நட்டத்தைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக திட்டக் கமிஷன் ஏதாவது யோசனை கூறியிருக்கிறதா? குறிப்பாக இன்னும் உயர்த்த வேண்டுமென்று யோசனை கூறியிருக்கிறதா? அதன்மீது அரசு உயர்த்துவதென்று முடிவு செய்து விட்டதா?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நஷ்டமில்லாமல் நடக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எது எது நஷ்டத்தில் இயங்குகிறது என்பதை ஆராய்ந்து, அதற்குத் தேவையானபடி உயர்த்தலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். விவசாயத்திற்கான மின் கட்டணத்தை தமிழ்நாட்டிலே உயர்த்துகின்ற ஒவ்வொரு நேரத்திலும், நாம் எவ்வளவு சட்டம் ஒழுங்குப் பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னோம். இருந்தாலும், அவர்கள் சொல்வது, இக் கட்டணம் மிகவும் குறைவாக இருக்கிறது; நீங்கள் உயர்த்தினால் ஒழிய எதிர்காலத்திலே முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சாத்தியமில்லை என்று அவர்கள் திரும்பச் சொல்லிவிட்டார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசு சார்பில் தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 910—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன?

(இ) நெல்லை, குமரி மாவட்டங்களின் மலை ஓரப்பகுதியில் துவங்க அரசு முன்வருமா?

1981 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ), (ஆ) மற்றும் (இ)— திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வேம்பார், வைப்பார் என்ற இரண்டு இடங்களிலும், கன்னியாகுமரி, மதுரை மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொன்று விதம், தீக்குச்சிகள் மற்றும் மெல்லொட்டுப் பலகைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்க அரசு சாத்தூரிலுள்ள தமிழ்நாடு தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் கூட்டமைப்பிற்கு அனுமதி வழங்கியுள்ளது. ஒரு தொழிற்சாலை நிறுவ ஆகும் செலவு ரூ. 4.50 லட்சம். முதலிரண்டு தொழிற்சாலைகளுக்கு அரசு பங்கு மூலதனமாக தலா ரூ. 75,000 அளிக்கப்பட்டுள்ளது. மற்ற மூன்று தொழிற்சாலைகளுக்கு தலா ரூ. 1 லட்சம் அரசு பங்கு மூலதனமாகவும், ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒரே தொழிற் கூட்டுறவு அலுவலரின் இலவசப் பணியும் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலையை ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நன்றி. தொழிற்சாலைக்கு மூலப்பொருள்கள் கிடைப்பதற்கான என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வதோடு, இந்த மூலப்பொருள்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் மலையோரப் பகுதிகளில் இந்த மரங்களும், மற்றவைகளும் இருப்பதால், அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான மென்மையான மரங்கள் தமிழகத்திலேயே கிடைக்கின்றன. தமிழகத்தில் 16,370 எக்கர் நிலப் பரப்பில் மென்மையான மரங்கள் பயிரிடப்பட்டிருக்கின்றன. இந்த மரங்கள் இன்றைக்கு வனத் துறையின் பாதுகாப்பில் இருக்கின்றன. வனத் துறையின் பாதுகாப்பில் இருக்கிற மென்மையான மரங்கள் அனைத்தும் தீக்குச்சி மெல்லொட்டுப் பலகைகள் உற்பத்தி செய்வதற்கு சாத்தூரிலிருக்கிற தமிழ்நாடு மாநில தீப்பெட்டித் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பிற்கே முழுமையாக மேற்கண்ட 16,370 எக்கரில் விளைந்திருக்கக்கூடிய மரங்களை மொத்தமாகக் கொடுக்க வேண்டும் என்று 31—3—1981 அன்று அரசு தெளிவாக ஆணையிட்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தலைவரவர்களே, அதற்கான முயற்சிக்கு நன்றி செலுத்துவதோடு, ஏற்கனவே இந்த மாதிரியான மூலப் பொருள்கள் கேட்கும்போது காட்டு இலாக்கா கொஞ்சம் நாட்களை நீடிப்பதற்கு முயற்சிப்பார்களே, அதற்காக வன இலாகா அமைச்சர் அவர்களிடம் மீண்டும் இதை வற்புறுத்தி காலாகாலத்தில் கிடைப்பதற்கு அரசாங்கம் வழி வகுக்க முன்வருமா? இந்தத் தொழிற்சாலை எப்போது முதல் செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வனத்துறைதான் மார்ச் 31 ஆம் தேதி அதற்கு உறுதி அளித்திருக்கிறது. மேற்கொண்டு அதைப் பெறுவதற்கு இந்த அரசு அக்கறை எடுத்துக் கொள்ளும். திருநெல்வேலி மாவட்டத்தில் வேம்பார், வைப்பார் என்ற இரண்டு இடங்களும் கடலோரப் பகுதியில் இருக்கின்றன. வைப்பார் என்ற இடத்திலே துவங்கியிருக்கிற தொழிற்சாலை ஏப்ரல் மாத இறுதிக்குள் துவங்கப்படும். வேம்பார் என்ற இடத்தில் தொழிற்சாலைக்கான நிலம் வழங்குவதற்கான முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. விரைவிலே நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வேலை துவங்கப்படும். அதைப்போலவே கன்னியாகுமரி, மதுரை, கோவை போன்ற இடங்களில் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு எந்த இடம் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை; விரைவில் முடிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. என்னுடைய தொகுதியான சத்தியமங்கலம் மிகவும் பின்தங்கிய தொகுதி. தமிழ்நாட்டிலேயே அதிக அளவிற்கு வன இலாக்கா மரங்கள் அங்கே இருக்கின்றன. தீப்பெட்டி தயாரிப்பதற்குத் தேவையான மரங்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. ஆகவே என்னுடைய தொகுதியில் இப்படிப்பட்ட தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னதைப்போல தொழிற்சாலையை கோவையில் எந்த இடத்தில் ஆரம்பிப்பது என்று முடிவு எடுக்கப்படவில்லை. சத்தியமங்கலம் பெரியார் மாவட்டத்தில் வருவதாலே உரிய நேரத்தில் இது பரிசீலிக்கப்படும்.

1981 ஏப்ரல் 28]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மென்மையான மரங்கள் சேலம் மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் அதிகமாக விளைகின்றன. அதனால் அங்கே தீக்குச்சி தொழிற்சாலை அமைக்க அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடப்பாண்டில் இல்லை. எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

பந்தலூரில் ஒட்டுப்பலகை கூட்டுறவுத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 911—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம், பந்தலூரில் ஒட்டுப்பலகை கூட்டுறவுத் தொழிற்சாலை எப்போது அமைக்கப்பட உள்ளது?

(ஆ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு ஒட்டுப்பலகை மற்றும் வினியர்ஸ் தொழில் கூட்டுறவு தொழிற்சாலை லிமிடெட் பந்தலூரில் 31—3—1980-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 20.22 லட்சம். இத் தொழிற்சாலையை அமைப்பதற்குத் தகுதியான இடத்தை தேர்ந்தெடுக்க தொழில் நுட்ப நிபுணர்களின் கருத்தைப்பெற்று இத் திட்டத்தை நிறைவேற்ற மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது தொழிற்சாலை அமைப்பதாகக் கூறினார்கள். அந்தப் பகுதியில் ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருக்கிற ரிபாட்டிரியேட்ஸ் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே தொழிற்சாலை அமைக்கும்பொழுது ஸ்ரீலங்கா ரிபாட்டிரியேட்ஸ்சுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றிய குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலைக்கான இடம் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். பெங்களூரிலிருந்து 'ஸ்பெஷலிஸ்ட்ஸ்' வந்து பார்வையிட்டு அதனுடைய முறையை அரசிற்கு அறிவித்திருப்பதாகத் தெரிகிறது. அது உண்மையா ? தொழிற்சாலை எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எந்த இடத்திலே தொழிற்சாலை அமைப்பது என்ற பரிந்துரையை பெங்களூரிலிருக்கிற 'இந்தியன் இன்டஸ்ட்ரியல் பிளைவுட் இன்ஸ்டிடியூட்' என்ற நிலைய நிபுணர்களிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அபிப்பிராயம் வந்தவுடன் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில்தான் அது எந்த இடத்தில் என்று நிர்ணயிக்கப்படும்.

ஆற்காடு—கண்ணமங்கலம் சாலையினைப் புதுப்பிக்கும் திட்டம்.

* வினா எண் 912—திரு. இல. பலராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் ஆற்காடு—கண்ணமங்கலம் சாலையைப் புதிப்பிக்க அரசிடம் தனித்திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஆற்காடு கண்ணமங்கலம் சாலையைப் புதுப்பிக்கும் பணியில் ஓரளவு முடிவுற்றும், மீதிப் பணிகளுக்கு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டும் உள்ளன. ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இன்றைய தினம் வரையில் ஓரளவுக்கு வேலை செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரைவில் கட்டி முடிக்கப்பட்டு விடும் என்று சொல்லிவிட்டார்.

1981 ஏப்ரல் 28]

திரு. இல. பலராமன் : கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதனுடைய மதிப்பீடு யாது? அது எப்போது ஆரம்பிக்கப்படும்? ஆற்காடு நவாபு காலத்திலேயிருந்து அது அப்படியே இருக்கிறது. பல பேருந்துகள் அந்தத் தடத்திலே செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே விரைவாக அந்தப் பணியைச் செய்வதற்கு அரசு உத்திரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு உள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் கிடைத்தவுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு கட்டி முடிக்கப்படும். அது ஆறு ரீச்சஸ் ஆக பிரிக்கப்பட்டிருக்கிறது. அதிலே கி. மீ. 1/0—5/0 ரூ. 1,72,000, கி. மீ. 6/0—8/0 ரூ. 85,000, கி. மீ. 8/0—9/4 ரூ. 46,000, கி. மீ. 13/0—15/0 ரூ. 81,000, கி.மீ. 16/0—18/8 ரூ. 1,55,000, கி.மீ. 21/4—24/0 ரூ. 1,00,000. ஆகவே மொத்தம் 6 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. சிறு பாலத்திற்காக 1 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் அளவிலே வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

செய்யாற்றுப் பாலத்தில் சுங்கவரி வசூல்.

*வினா எண் 913—திரு. பாபு ஜனார்த்தனம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1958 முதல் செய்யாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும் பாலத்திற்கு 'சுங்கவரி' வசூலிக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதை இந்த அரசு நீக்கும் உத்தேசம் ஏதும் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) ஆம். 1962-63 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி பாலத்தில் சுங்கவரி வசூலிக்கப்படுகிறது. அரசுக்கு தற்போது அதனை நீக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுங்கவரி வசூலிப்பதால் ஆண்டுக்கு எவ்வளவு வருவாய் அரசுக்கு வருகிறது? ஏற்கெனவே செய்யாறு பகுதியிலே இருப்பவர்கள் விவசாயிகள்தானே, ஆகவே

அவர்களுக்கு இச்சப்பட்ட சிரமங்கள் இருக்கலாமா? ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்களாவது நடவடிக்கை எடுத்து அதைத் தள்ளுபடி செய்ய ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு H தலைவர் அவர்களே, 1962-63-இல் 16 இலட்சத்து 40 ஆயிரம் செலவிலே அந்தப் பாலம் கட்டப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 46 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்படுகிறது. இதுவரையிலே வசூலிக்கப்பட்டிருக்கிற தொகை 7 இலட்சத்து 15 ஆயிரத்து 222 ரூபாய். இன்னும் 7 லட்சத்து 19 ஆயிரத்து 716 ரூபாய் வசூலிக்கப்பட வேண்டும். ஆகவே 1962-62-லிருந்து இந்த 20 ஆண்டுக்காலத்திலே சுமார் 7 லட்சம் ரூபாய்தான் வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த தொகை இன்னும் 20 ஆண்டுக்காலத்திலே வசூலிக்கப்படவேண்டும். ஆகவே நானும் நீங்களும் உயிரோடு இருக்கின்றவரையில் வசூலித்துக்கொண்டிருக்கின்ற சூழ்நிலைதான் இருக்கிறது. விவசாயிகளிடமிருந்து இது வசூலிக்கப்பட வில்லை. வாகனங்கள் போகிற நேரத்திலே வசூலிக்கப்படுகின்றன.

திரு. த. வேணுகோபால் H தலைவர் அவர்களே, செய்யாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு இருக்கும் இந்தப் பாலத்திலே போகின்- மாட்டு வண்டிகளுக்காக வசூலிக்கப்படுகிறதா அல்லது லாரி, பஸ் போன்றவற்றிற்கு வசூலிக்கப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு H நான் ஏற்கனவே சொன்னது போல் வாகனங்களுக்கு மட்டும்தான் வசூலிக்கப்படுகிறது.

இரவு நேர லாரி ஓட்டுநர்களுக்காக ஓய்வு விடுதிகள் கட்டும் திட்டம்.

*வினா எண் 914—திரு. வெ. அரங்கராசன் H மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரவு நேரங்களில் நெடுஞ்சாலைகளில் லாரிகளை ஓட்டிச் செல்லும் டிரைவர்கள் தங்கிச் செல்ல ஓய்வு விடுதிகள் கட்டும் திட்டம் அரசு பரிசீலனை யில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு H ஆம்'

திரு. வே. அரங்கராசன் H தலைவர் அவர்களே இரவு நேரங்களிலே லாரிகளை ஓட்டுகின்ற டிரைவர்களுக்கு வசதியாக ஓய்வு விடுதிகள் கட்டுவது அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்

எந்த எந்த இடத்தில் அரசு கட்ட இருக்கிறது? இதனுடைய திட்ட மதிப்பீடு என்ன? இந்தப் பணியை எப்போது ஆரம்பிக்க இருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்வியில் "நெடுஞ்சாலைகளில்" என்றுதான் போட்டிருக்கிறார்கள். நெடுஞ்சாலை என்றால் தேசிய நெடுஞ்சாலைகளும் இருக்கின்றன. அதேபோல மாநில நெடுஞ்சாலைகளும் இருக்கின்றன இப்பொழுது மாநில நெடுஞ்சாலைகள் போகின்ற இடங்களிலெல்லாம் இது போன்ற மோட்டல்ஸ் கட்டுவதற்குரிய திட்டம் அரசினுடைய பரிசீலனையிலே இருக்கிறது. 1. தொழுதூர், 2. திண்டுக்கல், 3. பவானி, 4. கோவில்பட்டி, 5 கிருஷ்ணகிரி ஆகிய இந்த 5 இடங்களிலும் சாலையோர ஓய்வு விடுதிகள்—மோட்டல்ஸ்—கட்டும் கோரிக்கையை மத்திய அரசிற்கு 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாநில அரசு மத்தியசாலை நிதியின்கீழ் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யும்படி கேட்டது. உனால் மத்திய அரசானது மாநில சாலைகளில் கட்டப்படும் சாலை ஓர ஓய்வு விடுதிகளுக்குத்தான் (Motels) மத்திய சாலை நிதியிலிருந்து பகுதி உதவித் தொகை கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது. இது மேற்கொண்டு பரிசீலனையில் உள்ளது.

திரு. வெ. அரங்கராசன்:

(மாண்புமிகு பேரவைத் தலைவர் H இந்தக் கேள்வி நீக்கப்படுகிறது.

திரு. மி. வின்சென்ட்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் H இந்தக் கேள்விக்கும் அனுமதி மறுக்கப்படுகிறது.(அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. மி. வின்சென்ட்: அண்ணா சொன்னது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம், உட்காருங்கள்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலில் மோட்டல் கட்டப்படும் என்று சொன்னார்கள். அந்த மோட்டல் சகல பிரயாணிகளுக்குமா? ஏனென்றால் இந்தக் கேள்வி

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

யில் லாரி ஓட்டுநர்களைப்பற்றி மட்டும் கேட்கப்பட்டிருக்கிறது. திருச்சிக்கும் சென்னைக்கும் இடையிலே தினசரி பல லாரி விபத்துக்களைப் பார்க்கிறோம். ஆகவே, குறிப்பாக அதைத் தடுப்பதற்கு அரசு விசேஷ நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இரவுநேரங் களில் எந்தவிதமான விபத்துக்களும் ஏற்பட்டு விடக் கூடாது ; தூங்காமல் ஓட்டுகின்ற காரணத்தால் இதுபோன்ற ஓய்வு விடுதிகளை நாம் கட்ட வேண்டு மென்று மைய அரசுக்கு எழுதினோம். நெடுஞ்சாலைகளில், அதிலும் குறிப் பாகத் தேசிய நெடுஞ்சாலைகளில் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் சாலைகள் அகலமாக இருக்கின்ற காரணத்தாலும், போகின்றவர்கள் அதிவேகமாகப் போகின்ற காரணத்தாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அவைகளைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் சென்ட்ரல் ரோட் ஃபண்ட் மூலமாக இன்று உதவி கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே, இன்று சரக்குப் போக்குவரத்திலே, மிக முக்கியமாக லாரிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. அதிலும் குறிப்பாக தேசிய நெடுஞ்சாலைகளில்தான் போக்குவரத்துக்கு இடையூறாக இந்த லாரிகள் இரவு நேரங்களில் நிறுத்தப்பட்டு மற்ற போக்கு வரத்துக்கும் இடையூறு செய்யக்கூடிய ஆபத்தான நிலைமை உருவாகி வரு கிறது. ஆகவே, மத்திய அரசிலிருந்து நாம் ஏன் அனுமதி பெற வேண்டு மென்று எனக்குப் புரியவில்லை. நாம் இன்றைக்குப் போக்குவரத்துக்கு பல்வேறுவிதமான ஸ்டாண்டுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தேசீய நெடுஞ்சாலையில் 50 மைல்களுக்கு ஒரு இடத்தில் நம்முடைய உள் ளாட்சித்துறையே இப்படிப்பட்ட ஸ்டாண்டுகளைக் கட்டலாம். தேவையா னால் அதற்கு நிதி தேவை என்று மத்திய அரசை நாம் வற்புறுத்த வேண்டாமா ? எனவே, உடனடியாக இந்த வேலையை ஆரம்பிப்பதற்கு அரசு திட்டமிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தேசீய நெடுஞ் சாலையைப் பொறுத்த அளவில் அதற்குரிய பணத்தை மத்திய அரசுதான் கொடுக்கிறது. ஆனால் தேசீய நெடுஞ்சாலைகளில் சாலை ஓர ஓய்வு விடுதிகள் (Motels) கட்டுவதற்கு மத்தியசாலை நிதியிலிருந்து (C.R.F.) மேற் கொள்ள இயலாது என மத்திய அரசு தெரிவித்துள்ளதால் அத்திட்டத்தை மாநில நெடுஞ்சாலைகளில் மேற்கொள்ளுவது பற்றி பரிசீலிக்கப்பட வேண்டும் அதுமட்டுமல்லாது, கொடுக்கக்கூடிய பணத்தைக்கூட அவர்கள் சப்சிடியாக

மானியமாகக் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் வருகின்ற பணத்தை விடக் கூடாது; அதன் மூலமாக இதுபோன்ற ஓய்வு விடுதிகளைக் கட்ட வேண்டுமென்ற எண்ணத்தோடு நாம் உதவியைக் கேட்கின்றோம். ஆனால் உள்ளாட்சித் துறையைப் பொறுத்த அளவில் ஏற்கனவே உங்களுக்கு நன்றாகத் தெரியும், பல பஞ்சாயத்து யூனியன்கள் பணம் இல்லாமல் உதவி கேட்கின்ற நிலைமையிலே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இவைகளை உள்ளாட்சித் துறையின் மூலமாகச் செய்ய முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலையில் ஏற்படும் லாரி விபத்துக்களில் பெரும்பான்மையானவை இரவு 12 மணிக்குமேலே விடியற்காலம் 3 மணிக்குள்தான் ஏற்படுகின்றன. ஆகவே, இரவு 12 மணிக்கு மேலே 3 மணிக்குள், முழுவதுமாக லாரி, பஸ் போக்குவரத்தைத் தடை செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, எல்லோருக்குமே இரவு 12 மணியிலிருந்து 3 மணி வரையிலும் தூக்கம் வரும் என்று சொல்லிவிட முடியாது. ஒருசிலருக்கு 12 மணிக்கு மேல்தான் தூக்கத்திலிருந்து விழிப்பே ஏற்படுகிறது. ஆகவே, அவைகளை எல்லாம் பார்த்தால் கண்டிப்பாக எந்த நேரத்தில் தூங்குவது, எந்த நேரத்தில் விழிப்பது என்கின்ற நிலைமையே இல்லாமல்தான் இருக்கிறது. ஆகவேதான் அவைகளையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்தத் திட்டத்தையே நாம் அமுலாக்கி இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்விகளை எல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறையில் கேட்கலாம் போலிருக்கிறது.

மேல மணக்குடி—கீழ மணக்குடி ஊர்களை இணைக்க பாலம் கட்டும் திட்டம்.

* 915 வினா—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதியைச் சார்ந்த மேலமணக்குடி—கீழமணக்குடி ஆகிய ஊர்களை இணைக்க கடல் காயலின் மேலே பாலம் கட்ட மதிப்பீடு ஏதாவது உள்ளதா?

(ஆ) எப்பொழுது இந்த வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் வசிக்கும் 1½ இலட்சம் மீனவர்கள் பலன் அடைய கடற்கரை சாலை அமைக்க அரசு முயற்சி எடுத்து, அந்தப் பாலம் கட்டினால் மீனவர் மற்றும் சுமார் 120 கிராமங்கள் பலன் அடையும். சுமார் 40 ஆயிரம் கிராம மக்கள் பலன் அடைவார்கள். இண்டர்னேஷல் டூரிஸ்ட் சென்ட்டராகிய கன்னியா குமரியையும், டூரிஸ்ட் சென்ட்டராகிய கோவளத்தையும் இணைக்க கடற்கரை சாலை அமைக்க வேண்டுமென்று அரசு திட்டம் தீட்டியுள்ளதாக நான் எண்ணுகிறேன். ஆதலால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் கூட, இந்தப் பாலம் உடனடியாகக் கட்டப்பட வேண்டும். அதற்கு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டுள்ளது. அது அடுத்த மதிப்பீட்டிலாவது உடனடியாக எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தப் பணிக்காக, தோராயமாக, ரூபாய் 36 இலட்சம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது நிதிநிலை சரியில்லாத காரணத்தால், அரசின் ஒப்புதல் பெற்ற எந்தத் திட்டத்திலும் இது அங்கீகரிக்கப்படவில்லையென்ற காரணத்தாலும் அடுத்த ஆண்டு அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மேல மணக்குடிக்கும் கீழ மணக்குடிக்கும் உள்ள தூரம் அரை பர்லாங்கூட இல்லை. ஆனால், மேல மணக்குடியிலிருந்து கிராம மக்கள் கீழ மணக்குடிக்கு வர 14 மைல் தூரம் சுற்றவேண்டியிருக்கிறது. ஆதலால், இந்தப் பாலத்தைக் கட்ட அரசு வேகமாக பணியைக் கட்டாயமாக மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கீழ மணக்குடிக்கும் மேல் மணக்குடிக்கும் இடையே சாலை எதுவும் கிடையாது. அங்கே பழையாறு என்ற ஆறு குறுக்கிடுகிற காரணத்தால், அதற்காக 200 மீட்டர் அகலத்துடன் பாலம் கட்ட வேண்டிய சூழ்நிலையெல்லாம் இருக்கிறது என்று எனக்குக் குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவைகளையெல்லாம் கவனத்திலே கொண்டு பரிசீலிக்கப்படும்.

1981 ஏப்ரல் 28]

கும்பகோணம் பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்யும் திட்டம்

* வினா எண் 916—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்ய அரசு குறிப்பு ஏதேனுமுண்டா ?

(ஆ) புதிய இடத்திற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(இ) எப்போது கட்டுமானப் பணி துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) விரைவில் துவக்க நகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பேருந்து நிலையம் கும்பகோணம் மையப் பகுதியில் அமைந்துள்ளது. பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பேருந்து நிலையத்தை மாற்ற வேண்டியது அவசியமாக இருந்தாலுங்கூட, மையப் பகுதியிலேயிருப்பதை கவனத்திலே கொண்டு, அருகிலே உள்ள காவலர் இல்லங்கள்—போலீஸ் குவார்ட்டர்ஸ்—சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட அந்தக் கட்டிடங்கள் எல்லாம் இடிந்த நிலைமையிலேயிருக்கின்றன. அந்தக் காவலர் இல்லங்களை இடித்துப் பேருந்து நிலையத்தோடு சேர்த்தால், அதுவே பேருந்து நிலையத்திற்குப் போதுமானதாக இருக்கும். எனவே, புதிதாக ஆக்கிரமித்துள்ள இடத்தைக் காவலர் இல்லங்கள் கட்டித்தரவும், பழைய பேருந்து நிலையத்தை காவலர் இல்லங்களோடு சேர்த்து விஸ்தரிக்கவும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே. கும்பகோணத்திலே புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக இப்பொழுது 7 ஏக்கர் 58 சென்ட் அரசின் மூலமாக நகராட்சியால் பெறப்பட்டிருக்கிறது. ஆனால், மொத்த அளவான 10 ஏக்கர் 43 சென்ட் பெற வேண்டுமென்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக ரூபாய் 50 இலட்சத்திற்கு மேல் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, சுருக்கமாக நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே அந்தப் பேருந்து நிலையத்தைக் கட்ட வேண்டுமென்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே, இரண்டு ஆண்டுக்காலத்திற்கு முன்னால்தான் மகாமக விழாவை யொட்டி, ஏறத்தாழ பல இலட்சம் ரூபாய் செலவு செய்து இப்பொழுதிருக்கிற பேருந்து நிலையத்தில் புதிய கட்டிடங்கள் கட்டி இருக்கிறார்கள், கடைகள் எல்லாம் புதிதாக அமைத்திருக்கிறார்கள். இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையில் அந்த இடத்தை விட்டு, புதிய இடத்திற்கு மாற்றுவதால், அரசு பல இலட்சம் ரூபாய் வீணாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், தற்போதுள்ள பேருந்து நிலையம் கும்பகோணத்தின் மையப் பகுதியில் இருக்கிறது. காவலர் இல்லங்கள் எல்லாம் இடிந்து போயிருக்கின்றன. அங்கே கூட கிட்டத்தட்ட 10 ஏக்கர் நிலத்திற்கு மேலிருக்கிறது. அதை எடுத்து விஸ்தரித்தால் போதுமானதாக இருக்கும். எனவே, அரசு மறுபரிசிலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையம் பொது மக்களுக்கு வசதியாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த 10 ஏக்கர் 43 செண்ட் இடத்தைப் பார்வையிட்டு அதை ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, பொதுவாக திட்டங்கள் தீட்டப்படுகிற நேரத்தில் இன்னும் 20 ஆண்டுகளுக்குப் பின்னாலே மக்கள் தொகை எவ்வளவு இருக்கும்? ஆகவே, அங்கே இருக்கக்கூடிய நகரம் எவ்வளவு விரிவடையும் என்பதை எல்லாம் நோக்கிலே கொண்டுதான் இந்தத் திட்டங்கள் எல்லாம் தீட்டப்படுகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்திற்கு நான் அண்மையில் சென்று இருந்தேன். தமிழக அரசின் சார்பில் நடைபெறுகின்ற போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக புதிய புதிய பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் விடப்பட்டு இருப்பதால், அந்தப் பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் நிற்பதற்கு இடம் இல்லாமல், சில நேரங்களில் உள்ளே செல்வதற்கே ½ மணி நேரம் ஆகிறது. ஆகவே, தற்போதுள்ள பேருந்து நிலையத்தை பெருநகர் பேருந்து நிலையமாக வைத்துக் கொண்டு, புற நகர் பேருந்துகளுக்கு வசதியான முறையில் புதிய பேருந்து நிலையம் கட்ட அரசு முன்வருமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற பேருந்து நிலையம் நெருக்கடியான இடத்தில் இருக்கிறது, பொது மக்களுக்கு வசதியாக இல்லை என்ற காரணத்தினால்தான், புதிய பேருந்து நிலையம் வசதியான இடத்தில் கட்ட வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டு இருக்கிறோம். குறிப்பாக, இந்தக் கும்பகோணம் பஸ் நிலையத்தைப் பொறுத்தவரையில், அதன் உள்ளே 50 பஸ்கள் ஒரே நேரத்தில் நிற்கும் அளவிற்கு (It becomes 'A' Class Bus-stand அது போன்ற ஒரு இடத்தை பெறும் சூழ்நிலை அதற்கு இருக்கிறது.

சின்னமனூர் அரசு மருத்துவமனை.

*வினா எண் 917 திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னமனூர் நகராட்சியில் அனுமதிக்கப்பட்டுள்ள அரசினர் மருத்துவமனை எப்போது செயல்பட ஆரம்பிக்கும் ?

(ஆ) ஓடைப்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) சின்னமனூரில் அரசினர் மருத்துவமனை 1—2—1981 ஆம் நாளிலிருந்து இயங்குகிறது.

(ஆ) ஓடைப்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையம் 31—10—1980 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, சின்னமனூர் நகராட்சியில் ஆரம்பிக்கப்பட்டு இப்போது நடந்து வரும் மருத்துவ மனைக்கு உடனடியாகக் கட்டிடம் கட்ட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எம். எஸ். 1945, ஹெல்த், தேதி 3—11—1979-ல் கண்டுள்ள உத்தரவின்படி ஏற்கனவே சின்னமனூரில் இருக்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையம் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக இயங்க வேண்டும் என்று ஆணையிடப்பெற்று, 6—2—1981-ல் இருந்து அது துவங்கி நடந்து வருகிறது.

[1981 ஏப்ரல் 28

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓடைப்பட்டியில் மருத்துவ மனை கட்டுவதற்கு கிராம மக்கள் நிலம் நன்கொடையாகக் கொடுத்தார்களா ? அப்படிக் கொடுத்து இருந்தால் எவ்வளவு கொடுத்தார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கே நிலம் கொடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதனுடைய விரிவான நிலை இன்னும் புரியவில்லை. இருந்தாலும், அதற்குக் காத்துக் கொண்டு இருக்காமல், நாம் அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை ஆரம்பிக்க முடிவு எடுத்து இருக்கிறோம்.

மருத்துவ மனைகளில் பென்சிலின் மருந்தினை உபயோகித்தல்.

*வினா எண் 918 திரு. அ. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவமனைகளில் பென்சிலின் ஊசி போடுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிறுத்துவதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) குறைக்கப்பட்டு இருக்கிறது.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறைக்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அண்மையில் ஒரு செய்தி கேள்விப்பட்டேன். சென்னையில் உள்ள கஸ்தூரிபா காந்தி ஆஸ்பிடலில் ஒரு 16 வயது பெண் செப்ட்ரோ பென்சிலின் ஊசி போட்டதால் இறந்துவிட்டார் என்று அரசாங்கமே கூட ஒரு உத்தரவு போட்டுள்ளதாகக் கேள்விப்படுகிறேன். அதாவது, அவுட்-பேஷன்ட்டுகளுக்கு செப்ட்ரோ பென்சிலின் போடக் கூடாது என்று. அப்படி அரசாங்க உத்தரவையும் மீறி அரசாங்க மருத்துவ மனைகளில் இந்த ஊசியைப் போடுகின்றவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ? அப்படி ஒரு அரசாங்க ஆணை உண்டா என்பதையும் அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, கஸ்தூரிபா காந்தி ஆஸ்பிடலில் ஒரு பெண் சாந்தி—என்ற பெயருடைய பெண் இறந்தார் என்பது உண்மை. அதிலே என்ன பிரச்னை என்றால், பென்சிலின்

1981 ஏப்ரல் 28]

ஊசி போடக் கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. அப்படி ஒரு ஆணை போடுவோம் என்று சொன்னால், சில நேரங்களில் மற்ற மருந்துகளுக்கு ரெசிஸ்ட் ஆகாமல் இருப்பவர்களுக்கு இந்த மருந்து போட்டு பிழைக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட முடியாது. அவர்கள் உயிரிழக்க நேரிடும். ஆகவே, மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக, தேவைப்பட்டால்தான் போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது பென்சிலின் ஊசி போடக் கூடாது என்று முழுமையாகத் தடை செய்யப்படவில்லை என்றும், எச்சரிக்கையாக தேவைப்பட்டால்தான் போட வேண்டும் என்று உத்தரவு போட்டு இருப்பதாகச் சொன்னார்கள். பென்சிலின் ஊசியைப் போடுவதற்கான எச்சரிக்கையைக் கடைபிடிக்காத காரணத்தால் பலர் இறந்து இருக்கிறார்கள். அப்படி எச்சரிக்கை இல்லாமல் அந்த ஊசியைப் போட்டு, அதன் காரணமாக இறப்புக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது? அதை எச்சரிக்கையாகப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பொறுத்து, அங்கே இருக்கும் மருத்துவ அதிகாரிதான் அந்த ஊசியைப் போட வேண்டும், செவிலியர்கள் அதைப் போடக் கூடாது என்ற உத்தரவையும் அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, ஊசி போடுவதைப் பொறுத்தவரையில் செவிலியர்கள்தான் மருத்துவமனைகளில் போடுகிறார்கள். டாக்டர்கள் போடுவதில்லை. நான் எச்சரிக்கையாக என்று சொன்னது 'ரீ ஆக்ஷன்' வரக்கூடிய நோயாளியா என்பதைப் பார்த்து அதன் பிறகு ஊசி போட வேண்டும் என்பதுதான். இந்தக் குறிப்பிட்ட நோயாளியைப் பொறுத்தமட்டில் அவர் ஏற்கெனவே பென்சிலின் போட்டு பழக்கப்பட்ட நோயாளி என்பதால் 'டெஸ்ட் ஊசி' போட்டுப் பார்க்காமல் போட்டிருக்கிறார்கள். எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் எங்காவது ஒன்றிரண்டு நோயாளிகள் இறந்துவிடுகின்ற துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. ஆனால் ஒரு நோயாளி பென்சிலின் போட்டு இறந்துவிட்டார் என்றால் அது பத்திரிகையில் பெரிய விளம்பரமாக வருகிறது. அதே நேரத்தில் பென்சிலின் இல்லாமல் ஒரு நோயாளி இறந்து விட்டால் அது பத்திரிகையில் வருவதில்லை, விளம்பரம் கிடைப்பதில்லை. ஆகையால் நாம் எச்சரிக்கையாக, ரீ ஆக்ஷன் வருகிறதா என்பதைப் பார்த்து, ஊசி போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

[1981 ஏப்ரல் 28

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த பென்சிலின் ஊசியை அரசாங்க மருத்துவ மனைகளில் போடுவதை விட்டுவிட்டு, அரசாங்க அனுமதி இல்லாமல் கிராமங்களில் டாக்டர் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பல்வேறு டாக்டர்கள் இந்த ஊசியைப் போடுவதினால் பலர் செத்துவிடுகிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை என்றாலும் சட்டமன்ற உறுப்பினர் களின் கவனத்திற்கு வருகிறது. இப்படி அனுமதி இல்லாமல் டாக்டர்கள் போடுவதைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, பலர் செத்து விடுகிறார்கள் என்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். பென்சிலின் ஊசி போடுவதினால் சிலருக்கு அனாபிலிஸ்டிக் ரீ ஆக்ஷன் வருகிறது. பி காம்பிளக்ஸ் போட்டால் கூட சிலருக்கு இந்த 'ஷாக்' வருகிறது. அது வேறு விஷயம். அன் ஆதரைஸ்ட் டாக்டர்ஸ்—தகுதி இல்லாத டாக்டர்கள் கிராமத்தில் பென்சிலின் ஊசி போடுவதைத் தடை செய்ய என்ன நடவடிக்கை என்பதுதான் அவர் களுடைய கேள்வி என்று கருதுகிறேன். அதற்கு அவர்கள் போட்டிருக்கிற பீடிகை மக்கள் மத்தியிலே பீதியை ஏற்படுத்துவதாக இருக்கிறது. அப்படி யாரும் பென்சிலின் ஊசி போடுவதாகத் தெரியவில்லை. தகுதி பெற்றிருக்கிற பல டாக்டர்கள் போடுகிறார்கள். தகுதி இல்லாத டாக்டர்கள் பென்சிலின் மட்டுமல்ல, செப்டோமைசின், டொமைசின் போன்ற ஆண்டிபயாடிக் மெடிசின் எதுவாக இருந்தாலும் பயன்படுத்தக் கூடாது என்று ஏற்கெனவே சொல்லி யிருக்கிறோம். அந்தத் தடை இருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, பென்சிலின் ஊசி தடை செய்யப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. நான் வருடத்திற்கு இரண்டு முறை பென்சிலின் ஊசி போட்டுக் கொண்டால் என் உடலில் இருக்கிற வியாதி எல்லாம் தீர்ந்துவிடுகிறது. ஆகையால் தடை செய்யக்கூடாது. ஆனால் செவிலியர்கள் ஊசி போடுவதற்குப் பதிலாக டெஸ்ட் செய்து டாக்டர்களே ஊசி போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, செவிலியர் களுக்கு ஊசி போட நல்லவகையில் ட்ரெயினிங் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், 'இன்ட்ராவீனஸ்' ஊசி போடுவதற்கு நான் கற்றுக்கொண்டதே இராயப்பேட்டை மருத்துவ மனையிலுள்ள செவிலியரிட மிருந்துதான். அவர்கள் அவ்வளவு நன்றாக கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

1981 ஏப்ரல் 28]

ஆகையால் செவிலியர்களுக்கு ஒட்டுமொத்தமாகத் தெரியாது என்று சொல்லுவது அவர்களுடைய பயிற்சியின் தரத்தைக் குறைப்பதாகும். டாக்டர்களே ஊசி போட வேண்டுமென்றால் நோயாளிகளைப் பார்த்து, பிரிஸ்கிரிப்ஷன் கொடுப்பதில் தடங்கல் ஏற்படும். நோயாளிகளைப் பார்த்து பிரஸ்கிரிப்ஷன் கொடுப்பது டாக்டர், மருந்து கொடுப்பது மருந்தாளுநர், ஊசி போடுவது செவிலியர். இந்த முறைதான் பல்லாண்டுக் காலமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது, இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-40)

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, தற்போது பென்சிலின் ஊசி போடுவது குறைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம் அதனால் மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுகின்றது என்பதா? அல்லது இப்போது தயாரிக்கப்படுகின்ற பென்சிலின் மருந்தின் தரக்குறைவா? காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த பென்சிலின் ஊசி கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே போகின்ற நேரத்தில் அனாபிலிஸ்டிக் ரீஆக்ஷன் வருகின்றது. ஆகவே டிஸ்கிரிமினேட்டட் ப்ரெஸ்கிரிப்ஷன் இல்லாமல் பென்சிலின் பயன்படுத்தப்படக் கூடாது என்று ஆணையிட்டு இருக்கிறோம். இதைக் கட்டுப்படுத்தி இருக்கிறோம். ஏன் என்றால் எதற்கெடுத்தாலும் இதைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே இதற்கென்று ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இதனை செட்யூல்ட் ட்ரக்ஸ் 'எச்' குரூப்பிலே சேர்த்துவிட்டால் இந்தமாதிரி பிரச்சினைகள் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு மருத்துவ மனைகளுக்கென இந்திய மருந்தக நிறுவனத்திடமிருந்து வாங்கப்பெற்ற மருந்துகள்.

*** வினா எண் 919—திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கென (IDPL) Indian Drugs and Pharmaceuticals Limited விடமிருந்து ஒரு ஆண்டிற்கு எவ்வளவு தொகைக்கு மருந்துகள் வாங்கப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : 1979-80-ல் ரூபாய் 2,66,23,096 பெறுமான மருந்து பொருட்கள் இந்தியன் டிரக்ஸ் அண்ட் பார்மாசூட்டிகல்ஸ் இடமிருந்து அரசு, மருத்துவமனைகளுக்காக வாங்கப்படுகிறது.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, வருடத்திற்கு ரூபாய் 2 கோடி 66 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள மருந்துகள் அரசு மருத்துவமனை களுக்காக வாங்கப்படுவதாக அறிவித்தார்கள். இந்த மருந்துகளை தமிழ் நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே இங்கேயே தொழிற்சாலை களை ஆரம்பிக்கக்கூடிய உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஐ.டி. பி.எல். தமிழ் நாட்டிலேயே இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் நம்முடைய பணமும் போடப்பட்டு ஜாயின்ட் செக்டாரிலே தான் மருந்துகள் தயாரிக்கப் படுகின்றன. தாதா என்ற இந்த கம்பெனியிலே இருந்துதான் மருந்துகளை வாங்கிக் கொண்டிருக்கிறோம். நாம் ஐ.டி.பி.எல். இடமிருந்து வாங்குகின்ற மருந்துகளைப் பொறுத்தவரை தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய கம்பெனியிலே தயாரிக்கக்கூடிய மருந்தாகத்தான் அவை இருக்கின்றன. மேலும் ஐ.டி.பி.எல். என்பது அரசாங்கத்தினுடைய ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, ஐ.டி.பி.எல். இடமிருந்து வாங் கப்படுகின்ற மருந்தின் தரம் பிரைவேட் கம்பெனியிடமிருந்து வாங்கப்படுகின்ற மருந்தை விடக் குறைவாக இருக்கின்றன என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கத்தினுடைய நிறுவனத்தில் தயாரிக்கப்படுகின்ற மருந்தின் தரத்தைப்பற்றி இப்போது கேள்வி கேட்டுப் பயன் இல்லை.

குடந்தை அரசினர் மருத்துவமனை.

* வினா எண் 920—திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) குடந்தை அரசினர் மருத்துவமனையில் அன்றாடம் வரும் புற நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இருக்கின்ற படுக்கைகளை கூடுதலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 1,392.

(ஆ) இம் மருத்துவமனையில் கூடுதலாக 50 படுக்கைகள் போட ஏது வாக புதிய பகுதிக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

தேவாரத்தில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம்.

*வினா எண் 921—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடி தொகுதி தேவாரத்தில் அரசு மருத்துவமனை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அந்த மருத்துவமனை கட்ட எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இங்கு மருத்துவமனை கட்டுவதற்கான நிலத்தை மருத்துவத் துறைக்கு ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நிலம் கிடைத்தவுடன் அரசு மருத்துவமனை கட்டுவதற்கான செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்படும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, நிலம் கிடைத்த பிறகு மருத்துவமனை கட்டப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நிலத்தைப் பெறுவதற்கு என்ன ஆயத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அங்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அடிக்கல் நாட்டப்பட்டும் இன்னும் மருத்துவமனை கட்டாமல் இருப்பதால் அங்குள்ள மக்களிடையே ஒரு அதிருப்தி ஏற்பட்டு தப்பு அபிப்பிராயம் கொள்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே உடனடியாக அங்கே மருத்துவமனை கட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அண்மையில் மதுரை கலெக்டர் அவர்களுக்கு 2 ஏக்கர் நிலத்தை இலவசமாக மருத்துவ இலாக்காவுக்கு ட்ரான்ஸ்ஃபர் செய்ய வேண்டும் என்று நான் எழுதி இருக்கிறேன். அது குறித்து உடனடியாகக் கவனிப்பதாக மதுரை கலெக்டர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே விரைவில் இந்தப் பணிகள் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை கட்டுவதற்கான மதிப்பீடு ஏதாவது அரசு தயாரித்துள்ளதா ? அப்படி மதிப்பீடு செய்யப் பெற்றிருந்தால் எவ்வளவு விரைவில் அது ஆரம்பிக்கப்படும் என்று ஒரு கருத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்பொழுது நில ஆர்ஜிதம் செய்யும் கட்டத்தில்தான் இருக்கிறோம்.

சுற்றுலாப் பயணிகள் வரும் வண்டிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் திட்டம்.

* வினா எண் 922—திரு. கெ. சொக்கலிங்கம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி மாநிலங்களில் இருந்து நமது மாநிலத்துக்கு வரும் சுற்றுலா பயணிகள் வண்டிக்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான கட்டணம் எவ்வளவு?

(இ) எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ), (ஆ) மற்றும் (இ) சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் பிரிவு 63 (6)-ன் கீழ் பிற மாநிலங்களிலிருந்து உரிமம் பெற்றுவரும் பேருந்து களுக்கு அரசு வரி விலக்கு அளித்து ஆணை வழங்கியுள்ளது.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கூடுதல் வரி விதிப்பின் காரணத்தினால் வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா? திருப்பதி போன்ற வெளிமாநிலங்களி லிருந்து, திருத்தணி, மகாபலிபுரம் போன்ற இடங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இதன் காரணமாக வெகுவாகக் குறைந்திருக்கிறார்கள். அதை நீக்க அரசு முன்வருமா? அதே நோக்கில், இந்த வரி விதிப்பு சம்பந்தமாக கேரள போக்குவரத்துத் துறை அமைச்சரும், ஆந்திர போக்குவரத்துத் துறை அமைச்சரும், தமிழக போக்குவரத்து அமைச்சரிடம், இந்த வரி விதிப்பைப் பற்றி ஏதாவது பேச்சு வார்த்தைகள் நடத்தினார்களா? அப்படி நடத்தி யிருந்தால் அதன் முடிவு என்ன? அதைப் போக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நான் பதில் சொல்லும்போதே சொன்னேன் அந்த வரி விதிப்பு ரத்து செய்தாகிவிட்டது என்று சொன்னேன். இரண்டாவதாக, உறுப்பினர் குறிப்

1981 ஏப்ரல் 28]

பிட்ட மாநிலங்களின் போக்குவரத்து அமைச்சர்கள், என்னிடம் பேசினார்கள், அதன் காரணமாகத்தான் வரி விதிப்பு ரத்து செய்யப் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ரத்து செய்து விட்டதாகச் சொன்னார்கள். நன்றி, ஆனால் அப்படி ரத்து செய்யப்பட்டது எந்தத் தேதியிலிருந்து அமுலுக்கு வருகிறது என்று சொல்வாரா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு, திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 18—5—1979 ஆம் தேதியன்று உதகையிலே நடந்த அந்தக் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டு, 26—3—1980 அன்று அதற்கான ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது அந்த வரிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத் திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் சுற்றுலா பஸ்களில் பயணிகள் செல்லும் போது, கர்நாடகத்தில் ஒரு சீட்டுக்கு 260 ரூபாயும், ஆந்திராவில் ஒரு சீட்டுக்கு 300 ரூபாயும், கேரளத்தில் ஒரு சீட்டுக்கு 160 ரூபாயும் வசூல் செய்கிறார்கள். மொத்தம் 55 சீட்டுகள் இருக்கின்றன. இதனால் அந்த மாநில அரசுகளுக்கு நல்ல வருமானம் வருகிறது. ஆகவே, மீண்டும் அரசு இதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா? இந்த வரிவசூல்கூட 3 மாதங்களுக்கு ஒரு முறைதான் செய்யப் பெறுகிறது. ஆகவே, அரசு இதை மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வரிவிலக்கு கொடுத்திருக்கிற காரணத்தால் ஒரு ஆண்டிற்கு 15 லட்சம் ரூபாய் வருமானம் நமக்குக் குறைகிறது என்று சொன்னாலும், இங்கே வருகிற சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் முகமாகத்தான் அரசு இதைச் செய்திருக்கிறது. மற்ற மாநில அரசுகள் கூட இங்கே இருந்து போகிற பேருந்துகளுக்கு வரி விலக்குக் கொடுப்பதாக ஒப்புதல் அளித்திருக்கிறார்கள், அப்படி ஒரு முடிவு, நடந்து முடிந்த கூட்டத்தில் எடுக்கப்பட்டு, அதை இங்கே நாம் அமுல் செய்திருக்கிறோம். மற்ற மாநிலங்களும் அதைக் கொடுப்ப தற்கும், அமுல் செய்வதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்று கடிதங்கள் வந்திருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆல் இந்தியா பெர்மிட் பெற்று சுற்றுலாப் பயணிகள் வெளி மாநிலங்களுக்குச் சென்றால் 140 ரூபாய் கட்டி விடுகிறார்கள். அப்படிக் கட்டுவது ஒன்றே போதும்,

தனியாக மாநில அரசுகள் வசூலிக்கத் தேவையில்லை என்ற வகையில் ஒரு ஏற்பாட்டை மொத்தமாக தமிழக அரசு மத்திய சர்க்காரிடம் கேட்டு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆல் இந்தியா பெர்மிட் முறையில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. அதில் எப்போதுமே 140 ரூபாயை அந்தந்த மாநிலங்களிலேயே, ஆல் இந்தியா பெர்மிட் வழங்கி, வசூல் செய்து விடுவார்கள். அதில் மற்ற யாரும் வரி வசூல் செய்வது என்கிற பிரச்சினையே இல்லை. ஆனால், நாம் இப்போது பேசிக் கொண்டிருப்பது ஆம்னி பஸ்களைப் பற்றியும், மற்றும் ஸ்பேர் பஸ்களைப் பற்றியும்தான்.

சென்னையிலிருந்து டெல்லிக்கு மேலும் ஒரு ரயில் விடும் திட்டம்.

*வினா எண் 923—திரு. என். பழனிவேல்—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து டெல்லிக்கு மேலும் ஒரு ரயில் சர்வீஸ் துவங்குமாறு மைய அரசிடம் நமது மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலங்களிலே, சென்னையிலிருந்து டெல்லிக்கு மக்கள் அதிகமான அளவில் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் போவதினால், ஒரு வாரம், இரண்டு வாரம் முன்னதாகக் கூட டிக்கெட் வாங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தக் குறையை தவிர்க்கவும், டெல்லி-சென்னை போக்குவரத்துகளை இன்னும் அதிகப்படுத்தக் கூடிய முறையிலேயும்—இப்போது தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் டெல்லி செல்வதுபோல—மேலும் ஒரு ரயில் வண்டியை விடுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இதுபற்றி தென் மண்டல ரெயில்வே பொது மேலாளர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எழுதிக் கேட்டு, அப்படி எழுதிக் கேட்டதற்கு சென்னையிலிருந்து டெல்லிக்கு நான்கு

சர்வீஸ்களும், டெல்லியிலிருந்து சென்னைக்கு நான்கு சர்வீஸ்களும் இருக்கின்றன என்றும் இதற்கு மேல் விடுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் காரணம் இருப்புப்பாதை தரம் போதுமானதாகயில்லை, எரிபொருள்கள், ரெயில் பெட்டிகள் போதுமான அளவிற்கு இல்லை என்றும் எனவே தற்போது அதைப்பற்றி நாங்கள் பரிசீலிக்க முடியாது என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. மி. வின்சென்ட்: 1979-ல் மத்திய ரெயில்வே அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி-காஷ்மீர், நாகர்கோவில்-டெல்லி, நாகர்கோவில்-பாம்பே இவற்றிற்கு ரெயில் விடப்படும் என்று கன்னியாகுமரியில் அறிவித்தார்கள். ஆனால் வருடங்கள் இரண்டு ஆகியும் அமைதி காக்கப்படுகிறது, எனவே இது குறித்து மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அப்படிப்பட்டதொரு அறிவிப்பை மத்திய அமைச்சர் அவர்கள் செய்திருப்பார்களேயானால் இன்றையதினம்கூட அதை ஞாபகமூட்டுகிற வகையில் மத்திய அரசுக்கு நாம் எழுதுவதில் எந்த விதமான தவறும் இருக்காது. அதை நாம் செய்யலாம்.

ஆத்தூரில் இருந்து தென்குமரை வரை பேருந்து விடும் திட்டம்

*வினா எண் 924—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதியில் ஆத்தூரிலிருந்து சார்வாய்புதூர் கிராமத்தின் வழியாக சார்வாய் வடகுமரை தென்குமரை வரை பேருந்து வழித்தடம் அனுமதித்திருந்தும் பேருந்துகள் எதுவும் செல்வதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அந்த வழித் தடத்தில் பஸ்கள் விட அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: (அ) & (ஆ) பஸ் உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு, தற்போது ஆத்தூர்-சார்வாய், வடகுமரை, தென்குமரை வழித்தடத்தில் பேருந்துகள் சார்வாய்புதூர் கிராமத்தின் வழியாக சரிவர ஓடிக்கொண்டிருக்கின்றன.

6 திருமதி தா. இராசாம்பாள்: அங்கே பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்கள் ஆத்தூர் சென்று வரவும், அங்குள்ள பெண்கள் பிரசவ காலத்தில் அவசரமாக ஆத்தூர் மருத்துவமனைக்கு வரவேண்டியிருப்பதாலும், அதோடு வியாபாரம் சம்பந்தமாக ஆத்தூர் வரவும் அங்கே அந்தப் பகுதி மக்களுக்கு பஸ் போக்குவரத்து வசதி இல்லை. தனியாருக்கு பர்மிட் வழங்கியும் அடிக்கடி பஸ்களை நிறுத்திவிடுவதால் அங்குள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்

டிருக்கிறார்கள். ஆகவே ஆத்தூரிலிருந்து சார்வாய்புதூர், சார்வாய் வடகுமரை தென்குமரை வரை பஸ் விடுவதற்கு பர்மிட் அளித்து அந்த வழிகளில் பஸ்விட இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இப்போது அனுமதித்துள்ள வழித் தடத்தில் அந்தத் தனியார் துறை பேருந்துகள் சரியாக இயங்கவில்லை என்ற தகவல் கிடைத்தவுடன் அங்குள்ள அதிகாரிகள் அவர்களைப் பார்த்து நிச்சயமாக சரியாக ஓட்டியாக வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி ஓடிக்கொண்டிருக்கிறது. இதில் மேலும் வசதி செய்ய வேண்டுமென்ற நிலைமை இருக்குமானால் அதிகாரிகள் பார்த்துவிட்டு தேவை என்று சொன்னால் கூடுதல் பேருந்துகள் விடுவதுபற்றி அல்லது இன்னும் அதிகமான எண்ணிக்கையில் ட்ரிப்ஸ் விடுவதுபற்றி அரசு ஆலோசனை செய்யும்.

திருமதி தா. இராசாம்பாள்: தற்போது நீண்டநாட்களாக அனுமதி பெற்று அங்கே பஸ் விடாமல் அடிக்கடி இப்படி நிறுத்திவிடுவதால் அங்குள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்படுவதால் ஒரு தேதி குறிப்பிட்டு இந்தத் தேதிக்குள் கண்டிப்பாக அங்கே ரெகுலராக பஸ் விடப்படும் என்ற உத்தரவாதத்தை இந்த அரசு அளிக்குமா? அங்குள்ள மக்கள் இதுபற்றி என்னிடம் பல முறை கூறியுள்ளார்கள். அதை நான் அதிகாரிகளிடம் தெரிவித்தேன். அது பயன் அளிக்கவில்லை. அவர்கள் அடிக்கடி உண்ணாவிரதம், ஸ்டிரைக் என்று அறிவித்துக் கொண்டிருப்பதால் இதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்தக் கருத்தை இவர்கள் எடுத்து வைத்த பின்புதான் அதைப்பற்றி அங்குள்ள அதிகாரிகளிடம் கேட்டபோது, அந்தத் தகவல் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு தனியார் பஸ்காரர்களைப் பார்த்து சரியாக வண்டி இயங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் தவறு நடக்குமானால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும், தேவையான வசதியும் செய்து தரப்படும்.

சேலத்திலிருந்து திண்டிவனத்திற்கு புதிய இருப்புப்பாதை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 925—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் இரும்பாலை திட்டத்தை முன்னிட்டு சேலத்திற்கும் திண்டிவனத்திற்கும் திருவண்ணாமலை, செஞ்சி வழியாக புதிய இருப்புப்பாதை அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த மாநில அரசு, மத்திய அரசிற்கு பரிந்துரை செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

1981 ஏப்ரல் 28]

கைத்தறியில் உற்பத்தியாகும் பாலிஸ்டர் துணிகள்.

*வினா எண் 926—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறியில் உற்பத்தியாகும் பாலிஸ்டர் துணிக்கு எக்ஸைஸ் வரியை ரத்து செய்யுமாறு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இது மத்திய அரசின், நிதித்துறையில் பரிசிலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலிஸ்டர் பொறுத்தவரை கைத்தறியில் உற்பத்தி செய்வதற்கு அதிக முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால், இது மெஷின் தறிகளோடும், மில்களோடும் போட்டி போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த வரி உயர்வினால் மேலும் அதன் விலை அதிகமாகும் என்பதை வற்புறுத்தி, உடனடியாக இதற்கு வரி விலக்கு அளிக்கும்படி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மனதிலே கொண்டுதான் 1976-லே இருந்து தொடர்ந்து இந்த அரசு வற்புறுத்திக் கொண்டு வருகிறது. சமீபத்தில் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் கடிதத்தில், இக்கருத்துருவை மத்திய அரசு நிதி அமைச்சகத்தின் கவனத்திற்கு கடிதம் எழுதியுள்ளோம். மத்திய அரசின் முடிவான பதில் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, தொடர்ந்து வலியுறுத்துவதற்குக் காரணம், பாலிஸ்டர் கைத்தறித் துணியின் விலை குறைவாகவும், அதே நேரத்தில் நெசவாளர்களுக்கு அதிகக் கூலி கொடுக்கவும், இதை உணர்ந்து மிகவும் அழுத்தமாக மத்திய அரசை நாம் வலியுறுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கனவே எழுதப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. ஆனால், பரிசீலனையில் இருக்கின்றது என்ற பெயரால் காலம் கடத்தக் கூடாது. சீக்கிரமாக அனுமதி வழங்க மீண்டும் மத்திய அரசைக் கவனப்படுத்துமா? வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வற்புறுத்தலாம்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இயந்திரத் துணியோடு போட்டியிடும் கைத்தறிப் பாலிஸ்டர் துணிகளுக்கு மத்திய அரசு வரியை ரத்து செய்ய முன்வரவில்லை என்றாலும், குறைக்க முன்வருமா? எக்சைஸ் வரி தற்போது மத்திய அரசு எவ்வளவு விதிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயத் தீர்வை என்பதுதான் எக்சைஸ் டியூடி. இதை முழுவதுமாக ரத்து செய்யும்படி கோரியிருக்கிறோம். இது எந்த அளவு தற்போது வசூலிக்கப்படுகின்றது என்று கேட்டார்கள். பதனிடப்படாத செயற்கை இழை கலந்த துணிகளின் (100 சதவிகிதம் பாலியஸ்டர் துணிகள்) மீது ஆயத் தீர்வை விதிப்பு இல்லை. ஆயத் தீர்வை, துணிகளின் விலை அடிப்படையில் விதியின்கீழ் விதிக்கப்படுகிறது. துணியின் விலை ஒரு சதுர மீட்டர் ரூ. 3-க்கு மிகாமல் இருப்பின், ஒரு சதவிகிதம் பெருமான விகிதம்; துணியின் விலை ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 3-க்கு மேல் மிகுந்தும், ஆனால் ரூ. 4-க்கு மிகாமலும் இருப்பின், ஒரு ச.மீ.-க்கு 3 பைசாவும், ஒரு ச.மீ. துணியில் உண்மை மதிப்புக்கும் ரூ. 3-க்கும் உள்ள வித்தியாசத்தில் 7 சதவிகிதம், துணியின் விலை ஒரு ச.மீ.-க்கு ரூ. 4-க்கு மேல் மிகுந்தும், ஆனால் ரூ. 5-க்கு மிகாமலும் இருப்பின், ஒரு ச.மீ.-க்கு 10 பைசாவும், ஒரு ச.மீ. துணியின் உண்மை மதிப்புக்கும் ரூ. 4-க்கும் உள்ள வித்தியாசத்தில் 7 சதவிகிதம் என்று இப்படி தர வாரியாக ஆயத் தீர்வைகள் போட்டு வருகிறார்கள். ஆயத் தீர்வை பாலியஸ்டரின் அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. இப்படி மத்திய அரசு உத்தரவிட்டால், பாலியஸ்டர் துணியின் விலை அதிகமாகிப் போய்விடும், எனவே ஆயத் தீர்வையைக் குறைத்தால் மலிவு விலையில் விற்கலாம் என்பதை மனதில் கொண்டு இதை வலியுறுத்தி வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்க நெசவாளர்கள் செலுத்திய தொகை.

* வினா எண் 927—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்க நெசவாளர்கள் C.T.F. நிதியாக செலுத்திய பணம் அரசு Contribution நிதி ஆகியவை கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியில் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு?

(ஆ) இத்தொகை நெசவாளர்களுக்கு கொடுக்க ஏதேனும் தடையுண்டா?

1981 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ரூ. 1,72,772.44 ஆகும்.

(ஆ) கூட்டுறவு மத்திய வங்கிகளிடம் சேமித்து வைக்கப்பட்டுள்ள இந்த மொத்த தொகையையும் எடுத்து உறுப்பினர்களுக்குத் திருப்பித் தருவதானால் வங்கிகளின் நிதி நிலைமை மிகவும் பாதிக்கப்படும். இது அரசின் ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினா-விடை நேரம் நீடிக்கப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சம சிக்கன நிதித் திட்டம் இப்போது அமுலில் இல்லை. இந்தத் திட்டத்தை ரத்து செய்து ஆறு ஆண்டுகளாகிறது. இந்தத் திட்டத்தின் வாயிலாக நெசவாளர்களிடமிருந்து வசூல் செய்த தொகையும், கூட்டுறவு சங்கத்திலிருந்து வசூல் செய்யப்பட்ட தொகையும், அரசிடமிருந்து உதவியாக கொடுக்கப்பட்ட தொகையும் ஒன்று சேர்த்து நெசவாளர்கள் பெயரில் கூட்டுறவு மத்திய வங்கியில் போடப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ ஆறு ஆண்டு காலமாக கூட்டுறவு மத்திய வங்கியின் நிதி நிலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, ஏழை நெசவாளர்களுடைய பணத்தை வைத்துக் கொண்டிருப்பது நியாயம்தானா ? இது நெசவாளர்களிடையே ஒரு போராட்ட உணர்வை ஏற்படுத்துவதை அரசு உணர்ந்திருக்கிறதா ? எனவே அந்தப் பணத்தை உடனடியாக நெசவாளர் களுக்குத் திருப்பித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு தலைவரவர் களே, 1962-ல் ஆரம்பிக்கப்பட்ட சமச் சிக்கனத் திட்டத்தின் அடிப்படையிலே, குறிப்பிட்ட சங்கத்திலே சங்க மானியமாக 64,029 ரூபாயும் அரசு மானியமாக ஒரு இலட்சத்திற்கு மேலாகப் பணம் கூட்டுறவு வங்கியிலே இருக்கிறது. இந்தச் சமச் சிக்கன நிதித் திட்டம் 1975 முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமாக மாற்றப்பட்டு குழுக் காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டது. இப் புதிய திட்டத்தின்படி சங்க உறுப்பினர் யாராவது இறக்க நேரிட்டால் அவருடைய கணக்கில் சேமித்து வைக்கப்பட்ட மொத்தத் தொகையும் அத்துடன் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து சேமிப்புத் தொகைக்குச் சமமாகவோ அல்லது குறைந்தபட்சம் ரூபாய் 500-ஐ பெறுவதற்கோ தகுதி உள்ளவர் ஆகிறார். இந்தத் தொகை 1—3—1980 முதல் ரூபாய் 3,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் இதில் ஆர்வம் உள்ளவர்கள் சேர்ந் திருக்கிறார்கள். சேராதவர்களுக்கு இந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. கைத்தறி இயக்குநர் இதுபற்றி அரசு

விரைவில் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று வேண்டியுள்ளார். கூட்டுறவுப் பதிவாளர் மற்றும் கைத்தறி இயக்குநரின் பரிந்துரைகள் நிதித் துறையுடன் கலந்து விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமச் சிக்கன நிதித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நெசவாளருக்கும் குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய்க்கு மேலே அவர்களுடைய நிதியாக இருக்கிறது. ஆறு ஆண்டு காலமாக இந்த நிதி தேங்கிக் கிடக்கிறது. நெசவாளர்கள் கடந்த ஆறு ஆண்டு காலத்தில் பல்வேறு சங்கடங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு உதவி செய்யாவிட்டாலும் அவர்களுடைய பணத்தை அவர்களுக்குக் கொடுக்க உடனடியாக முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதற்கான ஏற்பாடுகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மீண்டும் கூறிக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சமச் சிக்கனத் திட்டம் இப்போது மாற்றப்பட்டு குரூப் இன்ஷூரன்ஸ் திட்டம் என்பதாக இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்திலே ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாகப் பணம் செலுத்தியிருந்தால் அரசாங்கம் கொடுத்த 'கான்ட்ரி பியூஷன்' பிடித்துக்கொண்டு, அந்த நெசவாளர்கள் பணமும் கூட்டுறவு' சங்கம் கொடுத்த பணமும்தான் அவர்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் கொடுத்த மானிய தொகையைச் சேர்த்து அந்த நெசவாளர்களுக்கு குரூப் இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் மாற்றினால் அது நெசவாளர்களுக்கு உதவியாக இருக்குமே, அதைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறிப்பிட்ட திருப்புவனம் சங்கத்திலே மட்டும் ஒரு இலட்சத்திற்கு மேலே இருக்கிறது. ரூபாய் 82.98 இலட்சம் கூட்டுறவு மத்திய வங்கிகளில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பாதுகாப்புத் திட்டமாக குழு காப்பீட்டிலே மாற்றப்பட்டிருக்கிறது. இதிலே சேர விரும்பாதவர்கள் மட்டும் தான் திருப்பி கொடுப்பதற்காக, மெம்பர்கள் கேட்கிறார்கள். அதை இந்த அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 28]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த சமச் சிக்கனத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, அந்தத் திட்டத்திற்கான 'பை-லாக்கள்' தயாரிக்கப்படவில்லை. ஏற்கனவே அதிலே உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டவர்கள் 58 வயதாகிவிட்ட காரணத்தால் அவர்கள் கட்டிய பணத்தைத் திருப்பிப் பெற முடியாத நிலை இருக்கிறது. அந்தப் பணத்தை திருப்பிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடம்பூரில் கால்நடை மருத்துவமனை கட்டும் திட்டம்.

*வினா எண் 928—திரு. மு. அப்பாத்துரை: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம் கடம்பூரில் கால்நடை மருத்துவமனை கட்ட தனியார் இனாமாக நிலம் கொடுக்க முன் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக மருத்துவமனை கட்ட நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம் கடம்பூரைச் சேர்ந்த திரு ஆர். காசிராஜன் என்பவர் 1.95 ஏக்கா நிலத்தை கடம்பூர் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்ட, நன்கொடையாகக் கொடுக்க முன் வந்துள்ளார்.

(ஆ) இந்த நிலத்திற்கு நன்கொடைப் பத்திரம் பதிவு செய்து நன்கொடையாக நிலத்தைப் பெறுவதற்கு கயத்தாறு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் துரித நடவடிக்கை எடுத்து வருகிறார். நன்கொடைப் பத்திரம் பெற்று கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரிடமிருந்து கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு வந்ததும் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்.

* குறுகிய கால வினா எண் 12—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் மத்திய அரசு கொடுத்து வந்த அரிசியை நிறுத்தி விடுவதாக அறிவித்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மாநில அரசு என்ன மாற்றுத் திட்டத்தை கையாள இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) போதிய அளவு உபரி அரிசி இல்லாததால் மத்திய அரசு அரிசி வழங்கவில்லை. ஆனால் அரிசி வழங்கப்பட மாட்டாது என்று மத்திய அரசு திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மாநில அரசுக்கு மத்திய அரசு எவ்வளவு அரிசி ஒதுக்கியிருக்கிறது? இந்த ஆண்டிலே மத்திய அரசு மாநில அரசுக்கு எவ்வளவு அரிசி தந்துள்ளது? தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக தமிழ்நாட்டிற்கு மைய அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது? அது சென்ற ஆண்டைவிட அதிகமா அல்லது குறைவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நாம் ஒரு லட்சம் டன் தேவை என்று மைய அரசுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறோம். ஆனால் அதற்கு முன்னோடியாக மத்திய அரசு நடப்பு ஆண்டில் முதல் 6 மாதங்களுக்கு 7 கோடியே 40 லட்சம் மானியம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். ஆகவே அரிசி இல்லாத காரணத்தால் பணமாகக் கொடுக்கப்படும் என்பதை அறிவித்திருக்கிறார்கள். வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு இந்த ஆண்டிலே 10 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, வறட்சிப் பணிகள் மாநில முழுவதும் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே வறட்சிப் பணிகளுக்காகக் கொடுக்கப்படுகிற அரிசி திடீரென்று நிறுத்தப்பட்டால் வறட்சிப் பணிகள் அதனால் பாதிக்கப்படும். ஆகவே வறட்சிப் பகுதியிலே உள்ள மக்களுக்கு அரிசி தாராளமாகக் கிடைக்க ஆவன செய்யப்படுமா?

1981 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வறட்சியை மையமாகக் கொண்டு இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று இந்த மாநில அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஆனாலும் 1981-82-ல் இந்தத் திட்டத்தை முழுத் திட்டமாக மைய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. முதலில் இது ஒரு சென்ட்ரல் செக்டார் ஸ்கீம் என்ற அளவிலே முழு மானியமும் மைய அரசாலே கொடுக்கப்பட்டது. இப்போது இந்த ஆண்டிலே பாதிதான் கொடுப்பதாக அறிவித்துள்ளார்கள்.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, மைய அரசு ஒருகால் இந்தத் திட்டத்திற்கு உதவ முன்வராவிட்டால் மாநில அரசு இதை முக்கியத் திட்டமாகக் கருதி வேண்டிய அரிசி, முதலீடு ஆகியவற்றை ஒதுக்கி, வேலைவாய்ப்பை தீவிரப்படுத்தத் திட்டம் தீட்டியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் மைய அரசு உதவவில்லை என்று இதுவரையிலும் சொல்லவில்லை. முதலிலே "இட் இஸ் எ சென்ட்ரல் செக்டார் ஸ்கீம்" என்று முழுத் திட்டமாக மைய அரசு கருதி வந்தது. இந்த ஆண்டிலிருந்து சென்ட்ரலி ஸ்பான்சர்டு ஸ்கீம் என்ற அளவிலே பாதி மானியம் என்ற அளவிலே தான் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை எல்லாம் மைய அரசுக்கு எடுத்துச் சொல்லி நமக்கு அரிசி வேண்டும் என்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்கு முழுமையாக மைய அரசு உதவி செய்துவிட்டு இப்போது அரிசியில்லை என்று சொல்வதன் நோக்கம் என்ன? ஏற்கெனவே என்.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலமாகத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக பல கிராமங்களிலே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டு இருக்கின்றன. இப்போது அரிசியில்லாத காரணத்தினால் அந்த வேலைகள் இடையிலே நிறுத்தப்படும். இதற்காக அமைச்சர் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மைய அரசிடத்திலே போதிய அளவுக்கு உபரி அரிசி இல்லாத காரணத்தினாலே அரிசி கொடுக்க முடியவில்லை என்ற எண்ணத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். ஆனால் கையிருப்பிலே இருந்தால் நமக்குக் கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் முதல் 6 மாதங்களுக்கு 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் ; அடுத்த ஆறு மாதங்களுக்கும் 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் அவர்கள் ஒதுக்குவார்கள்.

[1981 ஏப்ரல் 28

(முற்பகல் 10-10)

குறுகிய கால வினா எண் 13—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் (வேலைக்கு உணவு திட்டம்) அமைப்பையே மாற்றி மத்திய அரசு அண்மையில் உத்தர விட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனால் திட்டத்தின் பணி பாதிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகின்ற பணமும், அரிசியும் பயன்படுத்தப்பட்ட பிறகு மத்திய அரசுக்கு 'யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட்', அதாவது அவைகளைப் பயன்படுத்தியதற்கான சர்ட்டிபிகேட் என்ற ஒன்றை அனுப்ப வேண்டும். இந்த அரசிலிருந்து இதுவரையில் இந்த வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. இவ்வளவு அரிசியைப் பயன்படுத்தியிருக்கிறோம், இவ்வளவு ரூபாய்களைச் செலவழித்திருக்கிறோம் என்ற 'யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட்' அனுப்பாத காரணத்தால்தான் மத்திய அரசாங்கம் நமக்கு நிதியையோ அல்லது அரிசியோ ஒதுக்கவில்லை என்ற கருத்து நிலவுகிறது. மேற்கு வங்காளத்திலேயிருந்துகூட அப்படிப்பட்ட 'யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட்டை' அனுப்பியிருக்கிறார்கள். டெல்லியில் பாராளுமன்றத்திலேயே சொல்லியிருக்கிறார்கள் எனவே, இங்கேயிருந்து 'யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட்டை' அனுப்பாத காரணத்தால் மத்திய அரசாங்கம் நமக்கு முறையாக நிதியோ அல்லது அரிசியையோ கொடுக்கத் தயங்குகிறதா? ஆமெனில், அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்களுடைய தனிப்பட்ட கருத்தாக இதைச் சொல்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாக இந்தக் கருத்தை வெளியிட்டிருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். ஆகவே, 'யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட்' கொடுக்காத

1981 ஏப்ரல் 28]

காரணத்தால் இந்த அரிசி கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு புதிதானது, வேண்டுமென்றே கூட சொல்வதாகவும் இருக்கும். ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகளை இதுவரையில் மைய அரசு நமக்குத் தெரிவிக்க வில்லை. மாநில அரசைப் பொறுத்தவரையில் குறிப்பாக வேலைக்கு உணவுத் திட்டம், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் இந்த தமிழக அரசுதான் அதிகமான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று அதன் மூலம் இந்தத் திட்டத்தை மிக விரைவாகவும், வேகமாகவும், நல்ல முறை யிலேயும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் வேலைக்கு உணவு வழங்கும் முறையில் இரண்டு கிலோ அரிசி, ஒரு கிலோ அரிசிக்குண்டான பணம் ஆகியவை கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுவதால் தற்பொழுது அந்த வேலைக்கு ஆட்கள் வருவதில்லை. எனவே அரிசிக்குப் பதிலாக மொத்தமாக பணம் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, கடந்த ஆண்டு முடிந்த வரையிலும் இந்தத் திட்டத்திற்கு அரிசியாக அவர்கள் ஒதுக்கிக் கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டு அரிசி உபரியாக இல்லாத காரணத்தால் ஒதுக்க முடியவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப் பாக கொடுப்பதை, 'கைன்ட்' ஆக, அரிசியாக வேண்டுமானாலும் கொடுக்க லாம், பணமாக வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆகவே, அந்தந்த நிலைமை களுக்கு ஏற்ற வகையில் அந்தந்த அரசுகள் செயல்படுத்த வேண்டுமென்றுதான் மைய அரசு விதிமுறைகளைக் கொடுத்துள்ளது. அந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: பேரவைத் தலைவரவர்களே, வேலைக்கு உணவுத் திட்டம் என்ற வகையில் தமிழகத்திலே கொடுக்கப்பட்ட அரிசி காண்ட்ராக்ட் முறையில் கொடுக்கப்பட்ட காரணத்தால், காண்ட்ராக்டர் களுக்கு அந்தத் தேதிகளில் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அவர்களுக்குரிய ஒதுக்கீட்டைக் கொடுக்க முடியாத காரணத்தால் அரிசி வழங்கப்படவில்லை. எனவே பணமாகக் கொடுத்துவிட்டுப் பிறகு நிதி கிடைக்கின்ற காரணத்தால் அரிசியை வாங்கி விற்று விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறதே, அது அரசுக்குத் தெரியுமா? அதை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் காண்ட்ராக்டர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்றுதான் ஏற்கனவே அரசின் மூலமாக விதிமுறைகளை அந்தந்த ஆணையாளர்களுக்கு, அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போன்று அப்படிப்பட்டவிதத்தில் காண்ட்ராக்ட் முறையில் வேலைகள் செய்யப்பட்டிருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எழுமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருநெல்வேலி மாவட்டம், கழுகுமலையில் நடைபெற்ற கலவரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'திருநெல்வேலி மாவட்டம், கழுகுமலையில் 24—4—1981 அன்று நடந்த கலவரம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்' என்று தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கேட்டு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. கு. ரமணி, திரு. சோ. அழகர்சாமி, திரு. ரா. கிருஷ்ணன், திரு. ரா. உமாநாத், திரு. என். பழனிவேல், திரு. இரா. கருப்பையா, திரு. செ. சிவசாமி, திரு. என். எஸ். வீ. சித்தன் ஆகியோரிடமிருந்து முன்னறிவிப்புக்கள் வந்துள்ளன. இது எப்படி அவசர முக்கியம் என்பது குறித்து மிகச் சுருக்கமாக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன். திரு. சோ. அழகர்சாமி அவர்கள்.

* திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் கழுகுமலையில் இரு வகுப்பாரிடையே ஏற்பட்ட ஒரு சச்சரவின் காரணமாக 24—4—1981 இரவு 11 மணிக்கு பஜாரிலே கடைகளுக்கு ஒரு கும்பல் தீ வைத்து, பல இலட்சக்கணக்கான பெருமான பொருள்கள் சேதம் அடைந்து, மிகப்பெரிய நஷ்டத்திற்கு அந்தப் பகுதி ஆளாக்கப்பட்டிருக்கிறது. அந்த மனக்கசப்பு ஒரே நாளிலே ஏற்பட்டு, உடனே நடந்திருக்க முடியாது.

1981 ஏப்ரல் 28] [திரு. சோ. அழகர்சாமி]

அங்கு போலிஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அது போலீஸ் ஸ்டேஷன் இல்லாத இடம் அல்ல. அது பெரிய நகரம். அங்கு போலீஸ் ஸ்டேஷன் இருந்தும் கூட, அதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படாதது மட்டுமல் லாமல், அங்கு முன்கூட்டியே புகைச்சல் இருந்திருக்கிறது என்றாலும், அதற்கு முன்னாலேயே அந்தப் போலீஸ முன்னெச்சரிக்கையாக, நடவடிக்கையோ அல்லது அந்தப் புகைச்சலைத் தீர்க்கவோ, அந்தச் சம்பவங்கள் நடக்காமல் தடுக்க வேண்டுமென்ற ஒரு ஏற்பாட்டையோ அங்குள்ள போலீஸ் அதிகாரிகள் எடுக்கவில்லையென்று தெரிகிறது.

அது மட்டுமல்ல, அந்த இடத்தில் இப்பொழுதிருக்கிற சப்-இன்ஸ்பெக்டர் முன்பு இரண்டு ஆண்டுக்காலம் அங்கிருந்தவர். அவர்மீது பொதுமக்கள் பல விதமான புகார்கள் சொல்லி, அவருடைய நடவடிக்கை ஊழல் நிறைந்திருந்த தன் காரணமாக, எந்தப் புகார் கொடுத்தாலும் அந்தப் புகார்மீது சரியான நடவடிக்கை எடுக்காமல் இருந்ததன் காரணமாக, அவர்மீது வந்த புகார் காரணமாக, அவர் மாற்றப்பட்டிருக்கிறார். திரும்ப மறுபடியும் இரண்டு மூன்று மாதங்களில் அவர் அந்த இடத்திற்கு வந்ததன் காரணமாக, அந்தப் புகார்கள் கொடுத்தவர்கள்மீதெல்லாம் அவருக்குக் கோபம் ஏற்பட்டிருக் கிறது. அதற்குப் பிறகு, அந்த நியாயமான சில புகார்கள்மீது நடவடிக்கை எடுக்கவில்லையென்று அந்த வியாபாரிகளும் மற்ற பொதுமக்களும் சொன்ன நேரத்தில், அந்தப் புகார்கள்மீது நடவடிக்கை எடுக்காமல், அந்தக் கடைகளில் காவல் காத்திருந்த காவல்காரர்கள்மீது நடவடிக்கை எடுத்து, அந்தக் காவல் காரர்களை போலீஸ் ஸ்டேஷனில் அடித்து, துன்புறுத்தியதன் காரணமாக சென்ற மாதம அந்த வியாபாரிகள் பூராவும் கடை அடைத்து, பஸ் மறியல் போன்ற நடவடிக்கையை, போலீஸ் அதிகாரிகளை எதிர்த்து எடுத்திருக்கிறார் கள். இது நடந்தும்கூட, மேலதிகாரிகளுக்குச் சொல்லியிருந்தும் சகலக் கட்சி களைச் சேர்ந்த வியாபாரிகளெல்லாம் சேர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவ ருக்குச் சொல்லியும் பெரிய அதிகாரிகளையெல்லாம் பார்த்தும், இங்கு கூட அமைச்சரவர்களுக்குக் கூட புகார்கள் அனுப்பியிருந்தும், அந்த சப்- இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும், அவரை மாற்ற வேண்டு மென்று சொல்லியிருந்துங்கூட, அவர் மாற்றப்படவில்லை. அவர் அங்கிருப்ப தன் காரணமாக இந்தக் கலவரம் ஏற்படுகிறதோ என்று தோன்றுகிறது. ஆகவே, ஜாதிக் கலவரம் என்றால் அது எவ்வளவு பெரிய கலவரமாகப் போய், கேவலமாகிவிடுகிறது என்பதோடு மட்டும் அல்லாமல், இங்குள்ள அரசியல் கட்சிகள் அத்தனை பேருமே வெட்கித் தலை குனியக் கூடிய அளவுக்குத் தமிழகம் பூராவும் ஜாதி மோதுதல்கள் ஏற்படக்கூடிய வகையில், இது நமது அத்தனைபேருக்கும் எச்சரிக்கையாக இருக்கிறது. ஆகவேதான் இந்தச்

சம்பவங்கள் தொடங்கிய காலத்திலேயே, ஆரம்ப காலத்திலேயே அதிகாரிகள் சரியாக நடவடிக்கை எடுத்திருந்தால், இந்தப் பிரச்சினை வராமல் தடுத்திருக்க முடியும். ஏன் இதைச் சொல்கிறேனென்றால், அந்த அதிகாரியை மாற்ற வேண்டுமென்று தொடர்ந்து முயற்சி செய்திருந்துங்கூட, சரியான நடவடிக்கை எடுத்திருந்தால், இவ்வளவு பெரிய நஷ்டம், பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்காது. இந்தப் போக்கினை நாம் உடனடியாகத் தடுத்து நிறுத்தவில்லையென்றால், அது மேலும் மோசமான நிலைமைக்குக் கொண்டு போய்விடும். ஆகவே, இன்னும் பதட்டமான நிலை அங்கு ஏற்படுமோ என்ற அச்சமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்க, சரியான போலீஸ் பாதுகாப்பு அங்கு செய்து தருவதோடு மட்டும் அல்லாமல், இந்த மனக்கசப்பைப் போக்க ஒரு சமுகமான நிலை ஏற்பட வேண்டிய நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல, இதனால், பல இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் அடைந்துள்ள வியாபாரிகள், சிறுசிறு வியாபாரிகளாக, ஜவுளிக் கடை, மற்ற கடைகள் வைத்திருக்கக்கூடிய வியாபாரிகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய நஷ்டத்தை ஈடுகட்டக்கூடிய முறையில் அரசாங்கம் ஏதாவது உதவி செய்ய வேண்டும்.

அது மட்டுமல்லாமல், இதற்கு மூலகாரணம் என்ன என்பதைக் கண்டறிந்து, இந்த மூல காரணத்தை முளையிலே கிள்ளி எறியாததன் காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து, அப்படி பொறுப்பான அதிகாரிகள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலம்தான், இந்த மாதிரி சம்பவங்கள் தமிழகத்திலே இனிமேல் நடக்காமல் தடுக்க முடியும். இது இங்கு மட்டுமல்ல, தமிழகத்திலே பல இடங்களிலே, இப்படி ஆங்காங்கு புகைச்சல், இந்த ஜாதி என்று நான் சொல்லவில்லை. ஒவ்வொரு ஜாதிகளுக்குள்ளே பலவிதமான மோதுதல்கள் ஏற்படுகின்றன. ஒரு ஜாதிக்குள்ளே இரண்டு பிரிவுகள் இருந்தால், அவர்களுக்குள்ளே சண்டைகள் ஏற்படுகின்றன. அதற்கெல்லாம் சமுதாயத்திலே பலவித மூலகாரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஜாதி சங்கங்கள், ஜாதி வெறியைத் தூண்டக்கூடிய நடவடிக்கைகள், அது மட்டுமல்லாமல், இன்னும் வேறுசில சக்திகளும் ஊடுறுவக்கூடிய நிலைமைகள் இருந்து கொண்டிருப்பதாக தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. ஆனால், பல இலட்சக்கணக்கான ரூபாய்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரி சம்பவங்கள் வேறு இடங்களிலே மேலும் நடக்காமல் இருக்க, அதைப்பற்றியெல்லாம் பூரணமாக விவாதித்து, தமிழகத்திலே இந்த மாதிரி ஜாதி

மோதல்கள் ஏற்படாமல் தடுக்கவும், ஆரம்ப காலத்திலேயே இதைத் தடுத்து, சம்பவங்கள் நிகழாமல் இருக்கவும், என்ன, என்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அதைப்பற்றி பூரணமாக தெரிந்துகொள்ள, அதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க இதைப் பற்றி விவாதிக்க வேண்டும்.

(முற்பகல் 10-20)

இன்னொன்றையும் நான் சொல்லவிரும்புகிறேன். இந்தச் சம்பவம் 24-ம் தேதி நடைபெற்றது. 27-ம் தேதி காலையில் நான் தீர்மானம் கொடுத்தால், அப்போது கூட அரசாங்கத்திற்குத் தகவல் வரவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு மிகப்பெரிய தீ விபத்துச் சம்பவம் 24-ம் தேதி நடந்து இருக்கிறது, 27-ம் தேதி காலை 10 மணி வரையில் தகவல் அரசாங்கத்திற்கு அனுப்பப்படவில்லை என்று சொன்னால்—இரண்டு நாட்கள் இடையில் இருந்து இருக்கின்றன—25, 26-ம் தேதி கொடுத்து இருக்கலாம்—அதுவும் சட்டமன்றம் நடந்து கொண்டு இருக்கின்ற நேரத்தில் கூட இது சம்பந்தமாக உடனடியாக தகவல் வரவில்லை என்று சொன்னால், எந்த அளவிற்கு சுறுசுறுப்பு அற்ற முறையில், எவ்வளவு மந்தமான முறையில் காவல் துறை செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நேரங்களில் அரசாங்கம் உடனுக்குடன் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்தால் எடுத்துக் கொள்வதற்காக வாய்ப்பான முறையில், காவல் துறை தகவல்களை சேகரித்துக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது. ஆங்காங்கு ஏற்படுகின்ற இப்படிப்பட்ட மோதல்கள் தடுக்கப்பட வேண்டும் என்று சொன்னால், அதற்காக என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் மனம் விட்டுப் பேசி, இப்படி ஜாதியின் பெயரால் நடந்து வருகின்ற கலவரங்கள் எப்படித் தடுக்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, 24—4—1981 ஆம் நாள் இரவு இரண்டு நபர்கள் குறிப்பாக கருப்புசாமி, மற்றும் இன்னாசி முத்து இடையே ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக ஜாதிக்கலவரம் தூண்டிவிடப்பட்டு, ஒரு மிகப்பெரிய விபத்து ஏற்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக 43 கடைகள் நொறுக்கப்பட்டன. பல லட்சம் ரூபாய் பெறுமான பொருள்கள் சேதப்படுத்தப்பட்டன. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டில் தொடர்ச்சியாக நடந்து வருவது வருத்தத்திற்குரியதாகும். குறிப்பாக சில இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய இனம் மற்ற இனத்தினரால் பாதிக்கப்படுகின்றது என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். எல்லாக்கட்சிகளும்

தங்களுடைய இனத்தை அலட்சியப்படுத்துகிறது என்று பேசுகிறார்கள். நாம் ஆண்ட பரம்பரை, ஆளத் தகுதி உடையவர்கள். தமிழ்நாட்டின் மொத்த ஜனத்தொகையில் நாம் 2½ கோடி ஜனத்தொகையாக இருக்கிறபோது மற்றவர்கள் நம்மை ஆள்வதற்கு அனுமதிக்க முடியாது என்று ஜாதியின் பெயரால் நடத்தப்படும் கூட்டங்களில் பேசுகிறார்கள். ஜாதியின் அடிப்படையில் ஒன்றுபடவேண்டும் என்று சொல்லி, சரித்திரத்தின் சக்கரத்தைப் பின்னுக்குத் தள்ளப்பார்க்கிறார்கள். இது அரசியல் கட்சிகளுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. சில அரசியல் கட்சித் தலைவர்களும், தங்கள் ஜாதியை தங்கள் கட்சிப் பக்கம் இழுக்க முயற்சிக்கிறார்கள். ஒரே கட்சியைச் சேர்ந்த இரு வேறு ஜாதியைச் சேர்ந்த தலைவரவர்கள் ஒரே சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறபோது முரண்பட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜாதி அடிப்படையில் செயல்படுவது தமிழ்நாட்டில் உள்ள அவல நிலையாகும்.

ஆகவே, ஜாதிமத அடிப்படையில் செயல்படும் எல்லா இயக்கங்களையும் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம். திருநெல்வேலி மாவட்டத்தில் பட்டிதொட்டிகளில் எல்லாம் சென்று ஒரு சினிமா நடிகர் ஜாதியின் பெயரில் நடத்தப்படும் பொதுக்கூட்டங்களிலும், மாநாடுகளிலும கலந்து கொண்டு வருகிறார். அவருடைய அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தான், அதனுடைய பின்னணிதான் இந்தக் கழுகுமலை சம்பவம் ஆகும்.

அது மட்டுமல்ல, கிராமத்தில் இருக்கும் நிலச்சுவான்தார்கள் இந்த ஜாதி உணர்வுகளை வளர்க்கிறார்கள். வர்க்கப் பின்னணியில் அங்கேயுள்ளவர்கள் வளர்வதை அவர்கள் விரும்பவில்லை. இதனால் அங்கே மக்களிடையே ஏற்பட்டுள்ள அந்த உணர்வுகளே பல பிரச்னைகளை உருவாக்கி, அதிலே ஏதாவது சிறு பொறி பட்டவுடன் அது வெடித்துக் கிளம்பும் நிகழ்ச்சி மாறிவிடுகிறது. இங்கே ஏற்கனவே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் பேசினார்கள், போலீஸ்காரர்களும் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதை உறுதியாக என்னால் சொல்ல முடியும். போலீஸ்காரர்கள் அப்படிப்பட்ட நேரங்களில் தக்க நடவடிக்கை எடுக்க முற்பட்டால் நிச்சயமாக இப்படிப்பட்ட சம்பவங்களைத் தடுக்க முடியும். இன்னும் சொல்லப்போனால், செங்கோட்டையில் ஜாதிக் கலவர அடக்கு முறை காரணமாக நூற்றுக்கணக்கான பேர் மதம் மாறி இருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட அவல நிலை தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக இருப்பது நமக்கு நல்லதல்ல. எனவே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை எப்படித் தடுக்கலாம் என்பது குறித்து விரிவாகப் பேசுவதற்கு,

ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பது குறித்துப் பேசுவதற்கு, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே மீண்டும் ஒரு வகுப்புக் கலவரம் ஏற்பட்டிருப்பது உள்ளபடியே வேதனை தரக்கூடியது ; நாம் எல்லாம் வெட்கப்படவேண்டியது என்பதை நான் முதலிலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னால் தான் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பித்து ஓரளவு அடங்கியிருக்கிற போது நெல்லை மாவட்டத்தில் இப்படி நடந்திருப்பது உள்ளபடியே கண்டிக்கத்தக்கது. கடந்த வாரம் கழுகுமலையில் நடந்த இந்த சம்பவம் இரண்டு தனிப்பட்ட மனிதர்களுக்கு மத்தியிலே ஆரம்பித்த சண்டையாகத் தொடங்கி, பின்னால் ஒரு பெரிய சமூகக் கலவரமாக, வகுப்புக் கலவரமாக உருவாகியிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னமாதிரி இந்த வகுப்புக் கலவரங்களை தமிழ் நாட்டிலிருந்து அடியோடு நீக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் வகுப்புக் கலவரம் ஆரம்பித்தபோது அரசின் கவனத்திற்கு, இந்த வரிசையில் இருக்கிறவர்கள் கொண்டுவந்தபோது, இந்த மாதிரியான கலவரம் நடைபெறாமல் இருக்க மாநில அளவில், மாவட்ட அளவில் எல்லாம் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களைக் கொண்ட குழு அமைத்து, ஆலோசனை நடத்தி, இந்த மாதிரி சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசுத் தரப்பில் உத்தரவாதம் தந்திருப்பதாக நான் கருதுகிறேன். அரசு அதில் உடனடியாக அக்கறை எடுத்திருந்தால் இந்தமாதிரி நிகழ்ச்சி மீண்டும் நடந்திருக்காது. ஆகவே, கழுகுமலையில் நடந்த நிகழ்ச்சியினால் பல இலட்சக்கணக்கான ரூபாய் சொத்துக்களுக்கு இழப்பு நேரிட்டிருக்கிறது. இன்னொரு செய்தி நாளேடுகளில் வந்திருக்கிறது. தீ விபத்து ஏற்பட்ட உடனே தொலை தூரத்திலிருந்து தி அணைப்பு வண்டி வரவேண்டியிருந்ததால் சேதம் அதிகமாக இருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. ஆகவே, கழுகு மலையில் ஒரு தீ அணைப்பு நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். மேலும் இந்தமாதிரியாக சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ளவும், ஏற்பட்ட சம்பவத்திற்கு என்ன காரணம் என்பதை விரிவாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவும், இப்படிப்பட்ட பல்வேறு விஷயங்களைப்பற்றி மனம்விட்டு பேசி தீர்வு காண வேண்டியிருப்பதால் இன்று மட்டும் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருநெல்வேலி மாவட்டம் கழுகு மலையில் 24—4—1981 அன்று இரவு சுமார் 9-00 மணியளவில் திரு. இன்னாசி முத்து * என்பவருக்கும் திரு. கருப்புசாமி * என்பவருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டது. திரு. இன்னாசிமுத்துவை திரு. கருப்புசாமி தாக்கியிருக்கிறார். அதன்பிறகு ** சிலர் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, திரு. கருப்புசாமியை தாக்க முயன்றனர். திரு. கருப்புசாமி அரிவாளைக் காட்டி மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்று விட்டார். பிறகு திரு. கருப்புசாமியும் மற்றும் சுமார் 20 பேர்களும் சேர்ந்துகொண்டு, மேரி தீப்பெட்டித் தொழிற்சாலையின்மீது கற்களை வீசிச் சேதம் ஏற்படுத்தினர். அங்கிருந்தவர்களை, அரிவாளைக் காட்டி மிரட்டினர். கடைகளுக்குத் தீ வைத்தனர். திரு. தங்கையா என்பவர் அரிவாளால் வெட்டப்பட்டு, கையில் காயம் அடைந்தார். தகவலறிந்த வுடன், கோவில்பட்டி உதவி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், காவல் துறையினர் மற்றும் தியணைப்புப் படையினருடன் சென்று, தீயை அணைக்க நடவடிக்கை எடுத்தார். பல இனத்தவர்களுக்கும் சொந்தமான 43 கடைகள் தீயினால் சேதமடைந்தன. சுமார் 4,87,500 ரூபாய் அளவிற்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. திரு. தேவநாயகம் என்பவர் கொடுத்த புகாரின்பேரில் கழுகுமலை காவல் நிலைய குற்ற எண் 30/81-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. திரு. கருப்புசாமி உட்பட 7 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும் 25—4—1981 அன்று சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டனர். பலத்த காவல் துறை பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நிலைமை அமைதியாக உள்ளது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல தனிப்பட்டவர் களுக்கிடையே ஏற்படுகிற தகராறு காரணமாக அவரவர்களுக்கு ஆள் சேர்க்க வேண்டுமென்று எண்ணுகிறபோது அந்த ஜாதியை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. அது மட்டுமல்ல, அரசியல் கட்சிகளையும் அவரவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சுயநல உணர்வு தலைதூக்கி வருகிறது. ஆகவே, இதில் எல்லா அரசியல் கட்சி களைச் சேர்ந்தவர்களும் ஜாதி பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற கருத்துடைய சமூக அமைப்புகளும் அத்தகைய நிகழ்ச்சிகளை விழிப்பாக கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1981 ஏப்ரல் 28]. [திரு. ச. இராமச்சந்திரன்]

(முற்பகல் 10-30)

யார் யார் அப்படி தங்களுடைய சுயநலத்திற்காக ஜாதியைப் பயன்படுத்தி அது சம்பந்தமாக காரியங்களில் ஈடுபடுகிறார்களோ, அவர்களைக் கண்காணிக்கவும் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசு தயங்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இப்போது நிலைமை அமைதியாக இருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு தங்கள் மூலமாக ஒரு கருத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விரிவான விளக்கத்தில் திரு. இன்னாசி முத்து * திரு. கருப்புசாமி * என்று ஜாதிப் பெயர்கள் இணைந்துவந்த காரணத்தால் அவை செய்திகளாக வரும் நோக்கில் மீண்டும் அதற்கான சில சூழ்நிலைகள் அரும்பக்கூடும். எனவே அவைக் குறிப்பிலே இருந்து அந்த ஜாதிப் பெயர்களைத் தவிர்ப்பது நலம் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஜாதிப் பெயர்கள் இருக்கத் தேவையில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜாதிப் பெயர்கள் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

3. அறிவிப்பு.

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1981) திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

4. கவன ஈர்ப்பு.

சென்னை பெரிய மருத்துவ மனையில் பருத்தி சூதாட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 4—4—1981 சென்னை பெரிய மருத்துவ மனையில் பெண் செவிலியர் உடைமாற்றும் அறையில் பருத்தி சூதாட்டம் நடத்தது சம்பந்தமாக பல பெரிய புள்ளிகள் என கருதப்படும் பலர் கைதாகி உள்ளனர். இது நாளொன்றுக்கு ரூ. 10,000 பெறுமானவரை பருத்தி சூதாட்டம் நடைபெற்று வருகிறது. தினமும் பெண் செவிலியர் உடை மாற்றும் அந்த அறையின் பின்புறம் ஏராளமான ஆண்கள் நடமாட்டம் ஏற்பட்டு உள்ளதால் அந்த செவிலியர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து திருவாளர்கள் நா. சுந்தரராஜ், கே. எம். தங்கமணி, இரா. தாமரைக் கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, 4—4—1981 சென்னை பெரிய மருத்துவமனையில் பெண் செவிலியர் உடைமாற்றும் அறையில் பருத்தி சூதாட்டம் நடத்தது சம்பந்தமாக பல பெரிய புள்ளிகள் என கருதப்படும் பலர் கைதாகி உள்ளனர். இங்கு நாளொன்றுக்கு ரூ. 10,000 பெறுமானவரை பருத்தி சூதாட்டம் நடைபெற்று வருகிறது. தினமும் பெண் செவிலியர் உடை மாற்றும் அந்த அறையின் பின்புறம் ஏராளமான ஆண்கள் நடமாட்டம் ஏற்பட்டு உள்ளதால் அந்த செவிலியர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 28] (டாக்டர் எச். வி. ஹண்டே)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

1. காவல் துறையின் தனிப்படையினர் சென்னை அரசு பொது மருத்துவ மனையைச் சார்ந்த சி 4 காவல் நிலையத்தினர் காவல்துறை தனிபடையின் (Special Squad) உதவியுடன் அம்மருத்துவமனையில் பருத்தி சூதாட்டம் ஆடிய 5 (ஐந்து) பொது மக்கள் நபர்களை கைது செய்தனர்.

(1) திரு. பியாரிலால்.

(2) திரு. ரவி.

(3) திரு. சுப்பிரமணி.

(4) திரு. சந்திரையா.

(5) திரு. மதன்லால்.

2. இவர்கள் அரசு பொது மருத்துவமனையையோ அல்லது சென்னை மருத்துவக் கல்லூரியையோ சார்ந்த ஊழியர்கள் அல்ல. இச்சூதாட்டம் அரசு பொது மருத்துவமனை பால்வினைத்துறையைச் சார்ந்த புல்வெளியில் மருத்துவமனையின் பின்புற சுவர் அருகாமையில் நடைபெற்றதாக தெரிய வந்துள்ளது. கைதானவர்களில் சிலர் குற்றத்தை ஒப்புக் கொண்டதாகவும் மேலும் அபராதம் கட்டியதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். ஒரு சிலரின் மேல் வழக்கு விசாரணையில் உள்ளது. கைது செய்யப்பட்ட நபர்கள் அனைவரும் வெளி ஆட்கள். இச்சூதாட்டம் மாலை 5 மணிக்கு மேல் நடைபெற்றிருக்கிறது. இத்தகைய சமூக விரோதிகளைக் கண்டால் இம்மருத்துவமனை ஊழியர்கள் வெளியே விரட்டி அனுப்பி விடுவர்.

3. இந்த பெண் செவிலியர் உடைமாற்றும் அறை (Stanley Viaduct) பாலத்தின் கீழுள்ளது. பொது மருத்துவமனை சார்ஜண்ட்டும் முதுநிலையி லுள்ள ஆண் செவிலியர்களும் இந்த சூதாட்ட நடவடிக்கைகளை தடுக்கும் பொருட்டும் பெண் செவிலியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பொருட்டும் ரோந்து வருகின்றனர்.

* திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, இங்கே விவர அறிக்கை ஒன்றை மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் அதிலே ஏதோ சாதாரண சம்பவம் நடைபெற்றதுபோல் கருத்து சொல்லப்பட்டு இருக்கின்றது. ஆனால் எனக்குக் கிடைத்த தகவலின்படி அங்கே நடை பெற்ற சூதாட்டம் செவிலியர்கள் உடை மாற்றுகின்ற அறையிலேயே நடை-

பெற்றிருக்கின்றது. அந்த இடம்தான் பாதுகாப்பான இடம் என்று கருதியோ என்னவோ அந்த இடத்திலே சூதாட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். ஆனால் இந்த சூதாட்டத்தைப் பொறுத்தவரையில் இதிலே ஈடுபட்டவர்கள் மதன்லால், ப்யாரி லால் என்ற பெரும் புள்ளிகளாவர். ஆகவே இவர்கள் சாதாரண சூதாட்டம் அதாவது 5 ரூபாய், 2 ரூபாய் என்ற அளவிலே சூதாட்டம் நடத்துவதற்கு வாய்ப்பு இல்லை. பல இலட்சக்கணக்கான ரூபாய் புழக்கத்திலே இருந்திருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக ஓரிரு கேள்விகள் மட்டும் கேட்க வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மேலும் அந்தப் பகுதியில் உள்ள காவல் நிர்வாகத்தினருக்கு வாரம் ஒன்றுக்கு 5,000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகை லஞ்சமாக அல்ல, அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருவதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அந்தச் சூதாட்டம் செவிலியர்களின் அறையிலே நடைபெறவில்லை. மேல் நர்ஸிங் அசிஸ்டன்ட்ஸ் என்பவர்களின் அறைக்குப் பக்கத்திலே அங்கே ஒரு கார்டன் மாதிரி இருக்கின்றது. அதற்கு வெளியே நடந்தது இது. இதுபற்றிக்கூட அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறு சூதாட்டம் நடப்பது பற்றிய தகவல் சில நாட்களுக்கு முன்பு சில நண்பர்களின் மூலமாக நான் அறிந்தேன். அந்தத் தகவல் கிடைத்த உடனே திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும், அதே நேரத்தில் ரகசியமாகவும் அவர்களைப் பிடித்துவிட வேண்டும் என்ற எச்சரிக்கையுடனும், பிடிக்கப் போவது தெரிந்து விட்டால் அவர்கள் தப்பித்துக்கொள்ளக்கூடும் என்கிற எண்ணத்துடனும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கின்றதோ அதே அளவுக்கு அக்கறை எனக்கும் இருக்கின்றது. அதன்படி நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். மேலும் இதைச் சாதாரணக் குற்றமாக அரசு கருதாது. இது பற்றி உடனடியாகக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற வகையில் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். இதிலே சம்பந்தப்பட்டவர்கள் எவ்வளவு பெரிய புள்ளிகளாக இருந்தாலும் அவர்கள் தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் செவிலியர்களின் அறை என்பதைப் பொறுத்த வரையில் மேல் நர்சிங் அசிஸ்டன்ட்ஸ் அறைக்குப் பக்கத்திலே இருக்கின்ற ஒரு இடத்திலேதான் இந்தக் குற்றம் நடந்திருக்கின்றது. பத்திரிகைகளிலே

1981 ஏப்ரல் 28] (டாக்டர் எச். வி. ஹண்டே)

கூட சரியாகத்தான் அனேகமாக போட்டிருந்தார்கள் என்று நினைக்கிறேன். ஆனாலும் செவிலியர் என்று தமிழிலே வரும்போது அப்படி அர்த்தமாகி விட்டது என்று நினைக்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, சில பல ஆண்டுகளுக்கு முன்பாக தமிழகத்திலே இந்தப் பருத்திச் சூதாட்டத்தை அடியோடு ஒழித்த இந்தக் காவல் துறை, தற்போது அது மீண்டும் தலைதூக்கி வேகமாக விரிந்து பரந்து செயல்படுகிற அளவிற்கு தற்போது அனுமதி அளித்து ஒததுழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்தச் சூதாட டத்தைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அதற்காக இந்த அரசும், இந்த அமைச்சரவையும், முனைப்பாக முயன்று நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இது பொதுவான கேள்வி. ஆனாலும் ஒன்றைமட்டும் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சூதாட்டத்திற்காக போலீஸ் துறை அனுமதி அளித்துக்கொண்டு வளர்த்து வருகிறது என்பதுபோல் கூறிய குற்றச்சாட்டை அந்தக் கருத்தை அவர் மாற்றம் செய்துகொள்ள வேண்டும் என்று கோரு கிறேன். ஏனென்றால் குற்றங்கள் எந்த ஆட்சி வந்தாலும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும். அவைகளைக் கண்டுபிடித்து உடனடியாக நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய எண்ணமாகும். அந்த அடிப்படையிலே இது கண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக் கிறது. இப்படிப்பட்ட செய்திகள் எங்கிருந்து வந்தாலும் நடவடிக்கை எடுக்கக்கூடிய நல்ல போலீஸ் துறை நம்மிடத்திலே இருக்கிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த அறிக்கையிலே, நடைபெற்ற இந்த பருத்திச் சூதாட்டத்தை ஸ்பெஷல் ஸ்குவாடு போலீசார் கண்டு பிடித்த தாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே அந்த மருத்துவ மனையிலே ஒரு தனி போலீஸ் பிரிவே இருக்கிறது. அதற்கென தனியாக இன்ஸ்பெக் டர்கள், காவலர்கள் என்று பிரிவே இருக்கிறது. அது மட்டும் அல்லாமல், டீன் அவர்களின் அறையின் வாயிலிலே ஒரு சார்ஜெண்ட் எப்போதும் காவல் இருக்கிறார். எனவே இப்படி ஒரு பெரும் தொகையைக் கொண்டு சூதாட்டம் நடைபெறுவது குறித்து ஏன் அவர்கள் இதுவரையில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்ல முடியாது. அக்கறை எடுத்துக் கொண்டதன் விளைவாகத்தான் கண்டுபிடித்திருக்கிறோம். எனவே, ஒரு

குற்றம் நடைபெறுகிறது என்று தெரிந்தவுடனே செய்தி வருகிறது, அதற்கென்று தனி ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டு, அதைக் கண்டு பிடித்து நடவடிக்கையும் எடுத்திருக்கிறோம் என்கிறபோது, அதை ஒரு பாராட்டுகிற நிகழ்ச்சியாகத்தான், வரவேற்கத்தக்க நிகழ்ச்சியாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, எங்களுக்குத் தெரிந்த தகவலின் படி; அங்கே இருக்கிற போலீஸ் துறையினருக்கும், சார்ஜெண்ட் போன்றவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் சொல்லியதைப்போல, நாள் ஒன்றுக்கு அவர்களுக்கு 10,000 ரூபாய் வரையில் வருமானம் வரக்கூடிய அளவில் அது நடைபெற்றிருந்ததாகவும், சமபவம் நடநத அன்று, அவர்களுக்குப் பங்கு பிரிப்பதில் தகராறு ஏற்பட்டதன் விளைவாகவே சண்டை ஏற்பட்டு, அவர்களே அதை போலீஸ் இலாகாவிற்கு தெரியப்படுத்தி, ஸ்பெஷல் ஸ்குவாடு வந்து பிடித்ததாகச் சொல்லப்படுகிறது. இங்கே ஐந்து பேர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் யாரும் அங்கே வேலை செய்யவில்லை என்றும் இருக்கிறது. அப்படியென்றால் அந்த 5 பேர்கள் யார்? எங்கே உள்ளவர்கள்? அவர்களுடைய நிலைமை என்ன? என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் போலீஸ் துறையினருக்கும், அவர்களுக்கும் ஏதோ பங்கு இருக்கிற மாதிரி, சம்பந்தம் இருக்கிற மாதிரி சொன்னார்கள். ஆனால் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வரக்கூடாது என்பதற்காகத்தான், ஸ்பெஷல் ஸ்குவாடுகளை அனுப்பி நீங்கள் நேரிடையாக கண்காணிக்க வேண்டும் என்று அரசு கேட்டுக் கொண்டது. அங்கே இருக்கும் போலீசார் இதில் தலையிட்டால், அவர்களுக்கு இதில் சம்பந்தம் இருக்கும் என்று சந்தேகம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் தான், நேரிடையாக ஸ்பெஷல் ஸ்குவாடுகளே சென்று அந்த இடத்தை கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவர்களும் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதில் எந்தவிதப் பிரச்னையும் இல்லை.

(முற்பகல் 10-40)

அதுமட்டுமல்ல. இந்த ஐந்து நபர்களில் இரண்டு பேர்கள் பார்க் டவுனில் இருக்கக்கூடியவர்கள் என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் முகவரி எல்லாம் இருக்கின்றன. ஐந்து பேர்களைப் பொறுத்து, The have been recognized and identified இன்னார் இன்னார், இந்த இந்த இடம் என்று ஐடேன்டிபை செய்துவிட்டோம்.

1981 ஏப்ரல் 28]

திரு. இரா. தாமரைக்கனி : சாதாரணமாக ஒரு ஆஸ்பத்திரிக்கு நோயாளிகளைப் பார்க்கப் போக வேண்டுமென்றால் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு யாரும் பார்க்கப் போக முடியாது. அங்குள்ள காவலாளர்கள், ப்யூன்ஸ் யாரையும் அனுமதிக்கமாட்டார்கள். எனவே எப்படி இவர்கள் தொடர்ந்து அங்கே போய் பருத்திச் சூதாட்டம் ஆடிக் கொண்டிருந்தார்கள். ஆகவே இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் என்று கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? செவிலியர் உடை மாற்றும் அறை ஒதுக்குப் புறத்தில் உள்ளது. ஆகவே அதைச் சரியான இடத்திற்கு மாற்றும் உத்தேசம் உண்டா ? நம் மாவட்ட, எல்லா மருத்துவ மனைகளிலும் இப்படி பருத்திச் சூதாட்டம் நடைபெறுவதாக எனக்கு தகவல் வந்துள்ளது. இந்தக் கோஷ்டியில், ஐந்து பேர்களில் ஒரு மார்வாரியும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த மார்வாரிகள் இப்படி சூதாட்டங்களை அதிகப்படுத்த ஒரு உத்தேசம் செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. இவர்கள் அமெரிக்காவில் உள்ள மார்ஃபியா போல் சூதாட்டம் நடத்துவதுமாதிரி திட்டம் இட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மார்வாரிகளை அரசாங்கம் கண்காணிக்குமா என்று கேட்பதோடு கூட

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும், அமைச்சர் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஒரு நிலைமையைக் கண்டு பிடித்தவுடன் எல்லா இடங்களிலும் இருக்கிறது என்று ஒட்டுமொத்தமாகச் சொல்வதற்கில்லை. மீண்டும் சொல்கிறேன். மேல் நர்ஸிங் அஸிஸ்டென்ட்ஸ் அறைக்கு எதிரில் இருக்கக்கூடிய பகுதியின் வெளிப்புறம் நடைபெற்றிருக்கிறது என்று அறிக்கையில் கொடுத்திருக்கிறேன். கண்டுபிடித்த டைம் 4—6. அது விஸிட்டேர்ஸ் டைம் மாலை 5 மணிக்கு கண்டுபிடித்திருக்கிறார்கள். கண்டு பிடித்த நேரம் விஸிட்டேர்ஸ் டைம். யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், யார் யாருக்கு பங்கு இருக்கிறது எந்தயிடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் விசாரித்து நல்லமுறையில் கண்டுபிடிக்க வேண்டும் என்று, இத்துடன் விட்டுவிடாமல் யார் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்ற அடிப்படையிலும் இதை கவனிக்கச் சொல்லி, நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும்.

6. வரவு-செலவுத் திட்டம் 1981-82 வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(ஆ) கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 1,94,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, சிற்றூர்களில் வருமானம் இல்லாத கோவில்களுக்கு புதுப்பிக்க ஆகும் செலவினங்களில் பொதுமக்கள் கொடுக்கும் தொகைக்கு ஈடாக அரசு மானியம் வழங்க வேண்டியதின் அவசியம் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 1,94,90,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் "

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய, விஜய நகர அரசர்கள் காலத்தில் கட்டப்பட்டும், பொதுமக்களால் லட்சக்கணக்கில் நிதி நிலங்களையும் கொடுக்கப்பட்டிருந்தும், அக்கோயில்களை அரசு எடுத்து நடத்துவதில் உள்ள சிக்கல்களை தீர்மானிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 1,94,90,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ".

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கோவில்களில் வேலை செய்யும் 1,000-க்கு மேற்கொண்ட கண்டிஜென்சி ஊழியர்களை நிரந்தரப்படுத்தி வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் அளிக்கப்படாதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 1,94,90,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ".

1981 ஏப்ரல் ■]

திரு. தி. கா. நல்லப்பன் : பொருந்துறை அப்பாச்சிமார்மடம் என்ற ஊரிலிருந்து வருடம் சுமார் லட்சத்திற்கு மேல் வருமானம் வரக்கூடிய மசிரியாத்தாள்-ராக்கியண்ணன் கோவிலை அரசு எடுத்துக்கொள்வதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் திர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறு கின்ற ரூபாய் 1,94,90,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ".

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீதான வேண்டுகோளையொட்டி அறநிலையத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு * ஒன்றை அச்சிட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த அவையில் தரப்பட்டிருக்கிறது. இதை நான் இந்த அவையில் பேசியதாக குறிப்பேடுகளில் பதிவு செய்வதற்கு தாங்கள் அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலைய மானியக் கோரிக்கைமீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்து அறநிலையத் துறைக்கு இந்த விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளதைத் தான் நான் இங்கே சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்து அறநிலையத் துறைக்கு ஒரு ஆணையரும், ஏழு துணை ஆணையர்களும், 16 உதவி ஆணையர்களும் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் ஒரு பொறியாளர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த ஏழு துணை ஆணையர்களும், 16 உதவி ஆணையர்களும் அறநிலையத் துறைக்கு இருக்கின்றபோது, இந்தத் துறைக்கு ஒரு பொறியாளர் மட்டும் எப்படி தமிழ் நாடு முழுவதும் உள்ள வேலைகளைக் கவனிக்க முடியும் என்று நான் கூற விரும்புகிறேன். ஒரு பொறியாளர் இருப்பதால்தான் வேலைகள் தாமதப் படுகிறது. எனக்குக் கிடைத்த தகவலின்படி, பல கட்டிட வேலைகள் நடை பெறாமல், பல வேலைகள் குந்தகம் அடைந்திருக்கின்றன. நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்கின்ற நேரத்திலேகூட, பொறியாளர் குறைவினால்தான் அந்த வேலைகளைப் பார்ப்பதற்கும், அதற்கு மதிப்பீட்டைப் போடுவதற்கும், மதிப்பீடு போட்டு சம்பந்தப்பட்ட பொறியாளர் வேலைகளைச் செய்வதற்கும் தடையாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது. எனவே, பொறியாளர் இல்லாத குறைபாடுதான் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

[* 163 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

அதே நேரத்தில், அர்ச்சகர்களை நியமிப்பது பற்றி இங்கே மகாராஜன் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜாதி சமய வேறுபாடற்ற முறையில் கோவில்களில் அரிசனங்களை அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையை எங்கள் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது அந்தத் திட்டத்தை அமுல் படுத்தினார்கள். உச்ச நீதிமன்றத்திலே இருப்பதாகச் சொல்கிறீர்கள். இன்னும் நீங்கள் அமுல்படுத்தவில்லை. இதற்காக நீங்கள் மத்திய அரசை வலியுறுத்த வில்லை. ஆனால், இந்த கமிட்டிக்கு நீடிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 3—7—1981 வரை நீடிப்பு கொடுத்துள்ளீர்கள். ஆனால், இந்த கமிட்டி எப்போது முடிவு பெறும் என்பது தெரியாது. இப்படித்தான் நீங்கள் பல நிறுவனங்களை நீடித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். மத்திய அரசை வலியுறுத்தி, ஏன் அரிசனங்களை அர்ச்சகர்களாகப் போடக் கூடாது என்றும், இந்தக் கொள்கையைத் துரிதமாக நிறைவேற்றுவதற்கு, மத்திய அரசை வலியுறுத்த ஏன் பயப்படுகிறீர்கள்? நான் இதைச் சொல்வதற்குக் காரணம், பல ஆண்டுகளாக இப்படிப்பட்ட நிலை இங்கே இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் எல்லாவற்றையும் அதே நேரத்தில் நீட்டித்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள். இதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோன்று, அறங்காவலர்கள் நியமிப்பதிலும், நீங்கள் தேர்தல் காலத்திலே நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தால், எப்படி எல்லாம் செய்வோம் என்று பல வாக்குறுதிகள் கொடுத்தீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலத்திலேதான், ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்களை அறங்காவலராக நியமிக்கிறார்கள், அராஜகம் செய்கிறார்கள் என்றெல்லாம் நீங்கள் தேர்தல் காலத்திலே சொன்னீர்கள். ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்தால், கட்சி சமய வேறுபாடின்றி, பக்தர்கள் எங்கு இருக்கிறார்களோ, அவர்களை அறங்காவலர்களாக நியமிப்போம் என்று தேர்தல் காலத்திலே சொன்னீர்கள். ஆனால், இன்று நடைமுறையில் என்ன நடக்கிறதென்றால் நிச்சயமாக அப்படியில்லை. எந்தக் கோவிலிலாவது கட்சி சார்பற்ற முறையில் போட்டிருப்பதாகச் சொல்வீர்களா? எனக்குத் தெரிந்த மட்டில், என் பகுதியில் பல கோயில்களில் ஆளுங் கட்சி அமைப்பாளர்களைத் தான் நீங்கள் அறங்காவலர்களாக போட்டிருக்கிறீர்கள். இதிலும், நீங்கள் இந்த தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதியிலே இருந்து தவறி விட்டீர்கள்.

அது மட்டுமல்ல. தமிழ்நாடு முழுவதும் கோயில்களிலே உள்ள சமய நிறுவனங்களில் 28,600 குருக்கள்களும் 53,000 பணியாளர்களும் பணி புரிவதாக கூறப்பட்டுள்ளது. நகர ஈட்டுப்படி, வீட்டுப்படி கொடுப்பதாகச்

சொல்லப்படுகிறது. ஆனால், இந்த நகர ஈட்டுப்படி, வீட்டுப்படி எவ்வளவு கொடுக்கப்படுகின்றது என்ற விவரங்கள் இதிலே தரப்படவில்லை. நிச்சயமாக அவர்களுக்கு கொடுக்கின்ற இந்த படிகள், சம்பளம் போதாது. எப்படி அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறதோ, அதைப்போல் ஆலைய ஊழியர்களுக்கும் சம்பளம், இந்தப் படிகள் தர வேண்டும். அது மட்டுமல்ல. இந்த ஆலைய ஊழியர்கள் சில நேரங்களில் இறந்துவிட்டால், எப்படி அரசு ஊழியர்களுக்கு அரசு மூலமாக ரூ. 10,000 தரப்படுகின்றதோ, அதேபோல் இந்த ஆலைய ஊழியர்களுக்கும் இந்த அரசு ரூ. 10,000 வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

(முற்பகல் 10-50)

கிராமப்படி ஐந்து ரூபாய் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது உள்ளபடியே அவர்களைத் திருப்திபடுத்துவதாக ஆகாது. குறைந்தது பத்து ரூபாயாவது அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கருணை இல்லங்களை நீங்கள் அன்பு இல்லங்களாக மாற்றியிருக்கின்றீர்கள். நீங்கள் பெயரை மாற்றுவதில் கை தேர்ந்தவர்கள். அந்த பெயரை மாற்றுவதற்கு அக்கறை காட்டினீர்களே தவிர இல்லங்களில் இருக்கிற குழந்தைகளுக்கு நலம் அளிப்பதற்கு அக்கறை காட்டவில்லை. நீங்கள் எதற்கெடுத்தாலும் பெயர்களை மாற்றுகிறீர்கள். பெயரை மாற்றுவதில் என்ன இருக்கிறது. குழந்தைகளுக்கு தேவையானதை வழங்குவதில் நீங்கள் அக்கறை காட்டுவதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லங்களில் இருக்கிற குழந்தைகளுக்காக ஒரு மாதத்திற்கு குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் 60 ரூபாய் செலவிடப்படுகிறது என்று சொல்கிறீர்கள். இது எந்தவிதத்திலும் குழந்தைகளுக்குப் போதாது. இப்போதிருக்கிற விலைவாசியில் எப்படி அந்த 60 ரூபாய் போதும். எனக்குப் புரியவில்லை. அந்தக் குழந்தைகளுக்கு அறநிலையத் துறை அரசு மூலமாக 25 சதவீதம் நீங்கள் கொடுக்கிறீர்கள். இந்த 25 சதவீதத்தை 50 சதவீதமாக மாற்றிக் கொடுத்தால் ஒவ்வொரு குழந்தைக்கும் 100 ரூபாய் கிடைக்கும் என்று கூறி, அதற்கு அரசு முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அறுபது ரூபாய் என்று கொடுப்பது ஏதோ ஒரு அரை வயிறு சாப்பாடு போடுவதைப் போல இருக்கிறது.

அடுத்தபடியாக நீங்கள் இன்னொன்றைச் சொல்லியிருக்கிறீர்கள். முடிவு பெறாத பணிகள் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளில் 315 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக என்னுடைய திருப்போரூர் தொகுதியில் அருள்மிகு கந்தசாமி கோயில் தேவஸ்தானத்தில்

1978-ல் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள் இதுவரையில் முடிவு பெறாமல் இருக்கிறது. இந்த வேலைக்கு தேவஸ்தான மதிப்பீடு ஒரு இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய். 1978-ல் எடுக்கப்பட்ட அந்த வேலை இன்றுவரை முடிக்கப்படவில்லை. இதுகுறித்து நான் விசாரித்தபோது, அங்கே அதிகாரிகள் இல்லை என்று சொல்கிறார்கள். ஸ்தபதிகள் இல்லை என்று சொல்கிறார்கள், நிதி இல்லை என்று சொல்கிறார்கள். இப்படி பல காரணங்களை காண்பித்து கோவில் வேலை பாதியிலேயே நிறுத்தப்பட்டிருக்கிறது. கோவில் வேலை களுக்காக போடப்பட்ட கூரைகள் மக்கி போய் காற்றிலே அடித்து போகின்ற அளவிற்கு நிலைமை இன்றையதினம் அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியம்மன் கோவிலுக்கு மதிப்பீட்டை போட்டு அந்தத் திட்டத்தை உருவாக்கி அங்கே கோவில் வேலைகளை எடுத்து, முடிவு பெறுகிற தருணத்தில் இருக்கிற நிலைமைகளை உருவாக்கி உள்ளவர் ? திருப்போரூருக்கு மட்டும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூரில் ஒரு விழா சமீபத்தில் நடைபெற்றிருக்கிறது. 12—4—1981 அன்று இந்த மலைக் கோவில் வாயில்படியை திறக்க மந்திரி அவர்கள் வந்திருக்கிறார்கள். மலைக்கோவிலை திறப்பதற்கு அறநிலைய அமைச்சர் அவர்கள் வரவில்லை. இருந்தாலும் நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள். அந்த விழாவிலே நான் கலந்துகொள்ளவில்லை. அந்த விழாவை ஏதோ தனிப்பட்ட கமிட்டி நடத்தியதோ என்பது தெரியவில்லை. அமைச்சர் அவர்களை கேட்கிற நேரத்தில் சொன்னார்கள். யார் அந்தத் தனிப் பட்டவர்களோ யார் விழா நடத்தினார்களோ எனக்கு தெரியாது. ஆனால் அந்த விழாவில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார், அறநிலைய ஆணையாளர் அவர்கள் கலந்து கொண்டார். எக்சிகியூட்டிவ் ஆபீசர் கலந்து கொண்டார். அரசு வாகனங்கள் பயன்படுத்தப் பட்டன. ஆனால் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு மட்டும் ஏனோ இதிலே விதிவிலக்கு இருக்கிறது. என்னை கூப்பிடாததற்கு நான் கவலைப்படவில்லை. மலைக்கோவில் வாயில்படியை அமைச்சர் அவர்கள் திறக்க வந்தது எப்படி இருக்கிறது என்றால் மூலவரை விட்டுவிட்டு முன்னவரை அபிஷேகம் செய்வதைப் போல இருக்கிறது. நமது. அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கோபுரம் வேலைகள் இன்னும் நடைபெறவில்லை; கோவில் கும்பாபிஷேகம் இன்னும் நடைபெறவில்லை. ஆனால் வாயில்படியை திறப்பதற்கு மந்திரி அவர்கள் வந்திருப்பது என்பது வேடிக்கையாகவும், விந்தையாகவும் இருக்கிறது. இதுவும் நாடகத்தில் ஒரு அம்சமாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, குடிநீர்ப் பிரச்சினை. திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி கோயிலினுடைய நிர்வாகம் சீராகச் செயல்படவில்லை. கிருத்திகைக் காலங்களில் வருகின்றவர்களுக்கு குடிநீர் கொஞ்சம்கூட கிடைப்பதில்லை. பல தடவை இதைப்பற்றி பேரூராட்சி ஆணையரிடம் எடுத்துச் சொல்லப்பட்டது, கோயிலினுடைய இ.ஓ.-விடம் எடுத்துச் சொல்லப்பட்டது, அந்தக் கோயில் நிதியிலிருந்தாவது அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடாதா என்று பல முறை கேட்டோம். இதுவரை தீர்க்கப்படவில்லை. திருப்போரூர் மட்டுமல்ல, பல இடங்களிலே உள்ள ஆலயங்களிலே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆளவந்தார் சேரிட்டிஸுக்கு 1,585 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலங்கள் ஏழைகளுக்குக் கிடைப்பதாக இல்லை. வசதி படைத்தவர்களுக்கு, ஆளுங்கட்சி சம்பந்தப்பட்டவர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை. இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறையப் பேர்கள் கோயில் நிலங்களிலே வீடுகட்டிக் கொண்டு பல ஆண்டுக் காலமாக வசித்து வருகிறார்கள். கோயில் வருமானத்தைப் பெருக்குவதற்காக அவைகளை அவர்களுக்கு பட்டா செய்து கொடுத்து அவர்களுக்கு உரிமம் ஆக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அறநிலையத் துறை ஊழியர்களுக்கும் பணியாளர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப் படுவதை போல் எல்லாவற்றையும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஆர். டி. கோபாலன்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்காக நான் நன்றி கூறி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். மதுரை மாவட்டம் கூடலூர் வனச்சரகம் வண்ணாத்திப் பாறை வன எல்லைக்குள் உள்ள சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்து நாயகன் சேரன் செங்குட்டுவனால் கற்புக் கடம் பூண்ட பொற்புடை கண்ணகியின் பத்தினிக் கோட்டம் மங்கல தேவி மலைமுகட்டில் கடல் மட்டத்திலிருந்து 5,000 அடிக்கு உயரத்தில் அமைந்துள்ளது. இதனை உறுதிப்படுத்தியே 11—10—1883 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வன இலாக்கா அரசு ஆணை குறிப்பு எண் 187-ல் கூறப்பட்டுள்ளது. அதனையொட்டியே இதுநாள் வரையிலும் தமிழக எல்லைக்குள் தான் உள்ளது என்பதை மாநில சர்வேயின் 18—4—1975 அறிக்கை உறுதிப்படுத்தியும், மத்திய கூட்டு சர்வே நியாயப் படுத்தியுள்ளபோதிலும் இம்முடிவுகளுக்குக் கட்டுப்படாமல் தன்னிச்சையான

ஒரு முடிவினை எடுத்து அக்கண்ணகி கோட்டம் கேரள அரசு தேவஸ்வம் போர்டின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கேரள ரெவின்யு போர்டு மெம்பர் திரு. கே. சி. சங்காநாராயணன் என்பவர் தவறான செய்தியை செய்தித்தாள் மூலமாக வெளியிட்டுள்ளார்.

இத்தோடு நில்லாமல் சங்கம் மருவிய காலத்தில் சேரப் பெருவேந்தன் செங்குட்டுவனால் எழுப்பப்பட்டு பின்னர் இயற்கையின் சீற்றத்தால் சிதையுண்ட கோட்டத்தை காலம் பல கடந்த பின்னர் திருமுறை கண்ட முதலாம் இராஜராஜனால் திருப்பணி செய்யப்பட்ட, குலசேகரபாண்டியன் மற்றும் சுந்தரபாண்டியன் போன்ற மன்னர் பெருமக்களால் பேணிப் பாதுகாக்கப்பட்ட தமிழரின் நாகரிகத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் வரலாற்றுத் தொன்மை மிக்க கண்ணகி கோட்டத்தை இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பூஞ்ஞாற்றுத் தம்பிரான் கட்டியதாகவும் திரு. கே. சி. சங்காநாராயணன் கூறியுள்ள கூற்று ஏற்றுக்கொள்ளக்கூடிய கூற்று அல்ல. சேரன் செங்குட்டுவனால் எழுப்பப்பட்ட கண்ணகி கோட்டத்தை சோழ வேந்தன் முதலாம் ராஜராஜன் திருப்பணிகள் செய்தமைக்கும், பின்னர் பாண்டிய மன்னர்களால் பேணிக்காக்கப்பட்டமைக்கும் மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் 1965-66 ஆம் ஆண்டின் ஆய்வறிக்கையில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் விரிவான அறிக்கை ஆன்யுவல் ரிப்போர்ட் ஆன் இண்டியன் எபிகிராபி பார் தி இயர் 1965-66-இல் தெளிவாகக் கூறப் பட்டுள்ளது. இக்குறிப்பு சம்பந்தமாக புத்தக வெளியீடு ஒன்றை தமிழக தொல்பொருள் துறையினரை ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். மத்திய தொல்பொருள் துறையினரின் வெளியீடு முற்றிலும் உண்மை என்பது மாண்புமிகு அறநிலைய அமைச்சரும் தமிழக தொல்பொருள் இயக்குநர் டாக்டர் நாகசாமி அவர்களும் வந்திருந்தபோது நடந்த ஆய்வு தெளிவுபடுத்துகிறது என்பதை மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களே தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

இந்நிலையில் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் நடப்பு ஆண்டு கூட்டத் தொடரிலும் கண்ணகி கோட்டம் தமிழகத்திற்கே சொந்தம் என்று உறுதிபடக் கூறியுள்ளது, தமிழர் தம் நாகரிகம், பண்பாடு, கலை இவைகளைக் கட்டிக்காப்பதில் தன்னுடைய உரிமைகளை நிலைநாட்டுவதில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் புனித ஆட்சி எடுத்துக்கொண்ட பெரும் முயற்சிக்கு கம்பம் தொகுதி மக்களின் சார்பாக நன்றியறிதலை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1981 ஏப்ரல் 28] [திரு. ஆர். டி. கோபாலன்]

(முற்பகல் 11-00)

கண்ணகி கோட்டத்திற்குச் சென்றுவர தமிழகத்தின் வழியாக நமக்குச் சொந்தமான சாலை வசதியின்மையால் கேரளச் சாலையில் சென்றுவர ஒவ்வொரு முறையும் கேரள அரசிடம் அனுமதி வாங்க வேண்டிய நிலை உள்ளது. எனவே, கோட்ட உரிமையை நிலைநாட்டி கோட்டப் பணிகள் துவங்கும்முன் சாலை போடுதல் பணியினைத் துவக்கவேணுமாய்ப் பணிவுடன் வேண்டுகிறேன்.

சென்ற 15—2—1981-ல் கேரள அரசு எக்ஸ்பர்ட் கமிட்டி ஒன்றைக் கேரள ரெவின்யூ போர்டு மெம்பர் திரு. கே. சி. சங்கரநாராயணன் என்பவரின் தலைமையின்கீழ் கண்ணகி கோட்டத்தைப் பார்வையிட அனுப்பியது குறித்து கம்பம் பகுதி வாழ் மக்கள் எங்கே தங்கள் பரம்பரை பாத்யதை கைவிட்டுச் சென்றுவிடுமோ என்கின்ற அச்ச உணர்வுடன் உள்ளார்கள். அவர்களின் அச்ச உணர்வினை அகற்றவும் தமிழகத்தின் தன்னுரிமையினை நிலைநாட்டவும் தமிழக அரசும் ஓர் உயர்மட்டக் குழு ஒன்றைக் கண்ணகி கோட்டத்தைப் பார்வையிட அனுப்பிவைக்க வேணுமாய் என் தொகுதி மக்களின் சார்பாக வேண்டுகிறேன்.

கம்பம் நகரில் நடுநாயகமாக அமைந்துள்ள கம்பராயப் பெருமாள் கோயிலுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்ய வந்த "ஃபேர் ரென்ட் கமிட்டி" 24—11—1977-இல் கோயிலுக்குச் சொந்தமான கடைகள் மற்றும் வீடுகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வதற்குப் பதிலாக அதற்குரிய அதிகாரத்தை மீறி மேல்கோப்பெல்லாம் வாடகைதாரருக்குச் சொந்தமெனவும், தரை வாடகைதான் கோயிலுக்குச் சொந்தமெனவும் தீர்மானம் செய்து அரசு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. வாடகை நிர்ணயம் செய்வதைத் தவிர வேறு அதிகாரம் இல்லாத இந்தக் கமிட்டி ஆலயச் சொத்துக்களை பாராதீனம் செய்து அனுப்பிய தீர்மானமும் அரசு ஒப்புதலும் ஜி. ஓ. எம். எஸ். நம்பர் 1813, 2—8—1978 மூலம் கிடைத்துள்ளது. இந்தத் தவறினை மாற்றிக் கோயிலுக்கு உள்ள பாத்யதையை நிலைநிறுத்தும் பொருட்டுப் பழைய தீர்மான வாசகத்தையும் மாற்றி 13—8—1979-ல் அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. இதற்கான உத்தரவு அரசிடமிருந்து இன்னும் வரவில்லை. எனவே, ஆலய நலன் கெடாத வகையில் விரைவில் 13—8—1979-ல் கம்பம் கம்பராயப் பெருமாள் கோயிலிலிருந்து அனுப்பப்பட்ட வாடகை நிர்ணயத்தை ஆலயச் சொத்திற்குப் பாதகமின்றி அரசு ஒப்புதல் அளிக்க வேணுமாய்ப் பணிவுடன் வேண்டுகிறேன்.

சுருளிமலை என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க மலை என்னுடைய கம்பம் தொகுதியில் உள்ளது. இங்குள்ள வேலப்பர் கோயில் கவனிப்பாரற்றுக் கிடந்த நிலையில் தனியார் ஆதிக்கத்திலிருந்ததை மாற்றி அரசு நிர்வாக அதிகாரியை நியமனம் செய்து அதனுடைய வளர்ச்சிக்கு வழிகோலியதைக் குறித்து இந்த அரசுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆலயத்தின் மேலே வரும் சுனைநீரில் விழும் இலைகளும் மற்ற மரங்களும் விழுந்த நிலையிலே பல மாதங்கள் இருப்பின் நீர் வழிந்து வரும் பாறையோடு பாறையாக மாறிவிடுகிறது. இதனை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்ய வேணுமாய் வேண்டுகிறேன். இவ்வாலயத்தைத் திருப்பணிகள் செய்து, வரும் பக்தர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தால் இதுவும் பழனி, திருச்செந்தூர் போலச் சிறப்படையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இக் கோயிலுக்குச் செல்கின்ற 2 கிலோமீட்டர் பாதை வன இலாக்காவுக்குச் சொந்தமாக உள்ளது. மேற்படி பாதையினைக் கோயிலுக்குக் கொடுத்தால் வழிபாட்டுக்கு வருபவர்களுக்குச் சாலை வசதி செய்து கொடுக்க ஏதுவாக இருக்கும். வன இலாக்காவும் மாண்புமிகு அறநிலைய அமைச்சரிடமே இருப்பதால் இது விரைவில் நடக்கும் என நம்புகிறேன்.

கம்பம் நகரிலுள்ள சுருளிவேலப்பர் என்ற சுப்ரமணியசுவாமி கோயில் பரம்பரை அறங்காவலரின் அக்கறையின்மையால் குறைபாடான நிர்வாகத்தால் ஆலய நிதி நிலைமை வளராமலும், சிறப்படையாமலும் உள்ளது. இதற்கு நிர்வாக அதிகாரி ஒருவரை நியமனம் செய்யவும், பரம்பரை அறங்காவலரோடு கூடுதலாக மூன்று நியமன அறங்காவலர்களையும் நியமனம் செய்து நல்ல நிர்வாகத்துக்கு வகை செய்ய வேணுமாய் வேண்டுகிறேன்.

கம்பம் நகருக்குத் தென்புறம் மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள பிரசித்திபெற்ற சாமாண்டி அம்மன் கோயில் பல இலட்சம் ரூபாய் பெறுமான நஞ்சையும், தென்னந்தோப்புகளும் இருந்தும் கவனிப்பார் இல்லாமல் உள்ளது. இதனை அரசு ஏற்று இந்தக் கோயிலை கம்பம்-கம்பராயப் பெருமாள் கோயிலோடு இணைத்துக் கோயிலை நல்லமுறையில் பராமரிக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இந்து அறநிலையத்துறை அரசின்கீழ் இயங்கிவருகிறது. பொதுவாக அரசின்கீழ் இயங்கும் அனைத்துத் துறையின் பணியாளர்களும் அரசு ஊழியர்கள். ஆனால் இந்த அறநிலையத்துறை ஊழியர்கள் மட்டும் அரசு ஊழியர்கள் அல்ல. அந்த நிலையை மாற்றி அவர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

மேலும் கம்பம் தொகுதியில் உள்ள சுருளி நீர்வீழ்ச்சியை சுற்றுலா மையமாக ஆக்கிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்திருக்கும் இந்திரா காங்கிரசின் சார்பாக பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன் பேசிய அருமை சகோதரர், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் குறிப்பிடும்பொழுது, அர்ச்சகர்களுக்கும், கோயிலிலே வேலை செய்பவர் களுக்கும் சர்க்காரிலே கொடுக்கப்படும் சம்பளத்தைப் போன்ற தொகைகளைக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதையே நான் ஊர்ஜிதம் செய்யும் வகையிலே தெரிவிக்கிறேன். இங்கு கொடுத்துள்ள புத்தகத்திலே, 28,500 அர்ச்சகர்களும் குருக்களும் இருப்பதாகவும், மேலும் 53,000 பேர்கள் கோயில்களில் வேலையாட்களாக இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட் டுள்ளார்கள். ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர்கள் வேலைசெய்யும் கோயில் சம்பந்தப்பட்ட காரியங்களிலே, சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுப்பது போன்ற சம்பளத்தை அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். பிராவிடன்ட் ஃபண்ட், மருத்துவ வசதி, படிக்க வசதி, வீட்டு வசதி, இறந்தால் ரூ. 10,000 போன்றவைகளை அவசியம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இரண்டு மாதங்களுக்கு முன் திருச்சி ஸ்ரீரங்கத்திலே அர்ச்சகர்கள் மாநாடு நடந்தது. அவர்கள் பல தீர்மானங்களை நிறைவேற்றி, மாண்புமிகு அமைச்சர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் மனதிலே கொண்டு, அர்ச்சகர்களுக்கும், குருக்களுக்கும், கோயிலிலே வேலை செய்யும் சிப்பந்திகளுக்கும் நல்லமுறையிலே சம்பளம் கொடுத்து, அவர்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் ஒரு கோயிலுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, என்ன, என்ன சொத்துக்கள் இருக்கின்றன என்பதைப் பற்றிக் கண்டறிய இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்மென்ட் போன்ற ஒரு குழுவை அமைக்கும்படி இந்தச் சமயத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டு மானால், கோயில்களுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஒரு சிலர் மட்டும் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, மற்றவர்களை தங்களது அடிமைகளைப் போல்

வைத்துக்கொண்டு, அதன் மூலமாக குத்தகை சாகுபடி செய்து, ஒருசிலர் மட்டும் பணக்காரர்களாக வாய்ப்பிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திருச்சி ஜில்லாவிலே, பட்டவாத்தில், மத்தியனேஸ்வார் கோயில் இருக்கிறது. ஏறக்குறைய ஆயிரக்கணக்கான ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன, அந்தக் கோயிலுக்குச் சொந்தமாக. மூன்று, நான்கு பேர்கள் மட்டும் அந்த நிலங்களைத் தங்களிடமே வைத்துக் கொண்டு, மற்றவர்கள் பேரில் குத்தகை இருக்கிறது என்ற போர்வையின் மூலமாக, தாங்கள் ஒரு சிலரே பணக்காரர் ஆகிற நிலைமைகள் அங்கே காணப்படுகின்றன. ஆகவே பினாமி குத்தகைதாரர்கள் யார் என்பதைக் கண்டறிய அரசாங்கம் ஒரு 'மூவை நியமித்து அதைக் கொண்டு நிலமற்ற ஏழை எளியவர்களுக்கும், பிற்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அந்த நிலங்களை வழங்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆக்ட் 16 ஆப் 1980 என்ற சட்டம் வந்திருப்பது நம் அனைவருக்கும் தெரியும். அந்தச் சட்டத்திலே 1973 முதல் 1978 முடிய ஐந்து வருஷக் குத்தகையிலே ஒரு வருஷக் குத்தகை கொடுத்தால் போதும், மற்ற வருடக் குத்தகைகள் தீர்ந்து விட்டதாகக் கணக்கு சரிசெய்து கொள்ளலாம் என்ற அந்தச் சட்டத்தின் பிரகாரம், கோயிலிலே இருக்கிற எக்சிக்யூடிவ் ஆபீசர்கள், முக்கியமான சிப்பந்திகள் கூட்டாக ஐந்து வருஷக் குத்தகைகளை தாங்கள் வசூல் செய்து கொண்டு, ஒரு வருஷக் குத்தகைக்கு ரசீது கொடுத்துவிட்டு, மற்ற வருஷக் குத்தகைகளைத் தாங்களே வைத்துக் கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மேலும், 1973-லிருந்து 1978 வரைக்கான குத்தகையை யார் யார் கொடுக்கவில்லை, எந்த எந்த எச்சிக்யூடிவ் ஆபீசர்கள் வசூல் செய்யவில்லை, வசூல் செய்யாததன் காரணம் என்ன, அந்தக் கோயில் குத்தகையை 1973-78-ல் வசூல் செய்யாததால் அரசாங்கத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, அந்த நஷ்டத்திற்கு யார் பொறுப்பு, அந்த நஷ்டத்திற்குக் காரணமாக இருந்த (Executive Officer) கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து, அவர்களிடமிருந்து வசூல் செய்யப்படுமா என்பதை இந்தச் சமயத்திலே அறிய விரும்புகிறேன்.

மேலும் எனது தொகுதியான கிருஷ்ணராயபுரத்தில் திருக்காம்புலியூர் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே இருக்கிற ஒரு கோயிலுக்கு சொந்தமாக நிலம் இருக்கிறது. அந்த நிலத்தை, 1975-லே சினிமா கொட்டகை வைத்துக் கொள்ள மூன்று வருஷத்திற்கு வருஷம் ஒன்றுக்கு சுமார் ரூ. 300 விதம் ஏலத்தின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது, 1978 ஆம் வருஷம் மீண்டும் ஏலம் விடவேண்டிய அந்த நிலம், ஏலத்திற்கு விடப்படவில்லை. ஒருவர்

1981 ஏப்ரல் 28] (திரு. பி. எம். தங்கவேல்ராஜ்)

ரூ. 2,000-க்கு மேல் ஏலத்திற்கு எடுத்துக் கொள்கிறேன் என்று உதவிக் கமிஷனர், கமிஷனர், மாண்புமிகு அமைச்சரிடம் கூட மனு கொடுத்திருந்தும் ஏலம்விட மறுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தும், ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்த பழைய ஏலக்காரருக்கே ஏலம் விடாமல் கொடுத்திருக்கிறார்கள். மீண்டும் ஏலத்திற்கு விடவேண்டிய நிலம் ஏலத்திலே விடப்படவில்லை. ஆகவே, அதற்கான காரணம் என்ன என்பதை இந்தச் சமயத்திலே அறிய விரும்புகிறேன். இதுபோன்ற மந்தமான நிலை, தெளிவற்ற நிலை, வேண்டியவர்களுக்குச் சலுகை இந்த அறநிலையத் துறையிலே இருக்கிறது. அருள்கூர்ந்து இதையெல்லாம் போக்கி, கோயில்களுக்கு நல்ல வருமானம் கிடைக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், நாம் அடிக்கடி பார்க்கிறோம், சிலை திருட்டு நாடு முழுவதும் நடந்து வருகிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு சிலையும் போட்டோ எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஆல்பம் இருக்கிறது, அந்த ஆல்பத்தை ஒவ்வொரு டிபார்ட்மெண்டுக்கும் நாங்கள் அனுப்பி மிகவும் நல்ல முறையிலே கண்காணித்து வருகிறோம் என்று. ஆனால், அதே போன்ற உண்மையான சிலையைப் போல் வேறு சிலையைத் தயார் செய்து அந்த மாற்றுச் சிலையை அந்த இடத்திலே வைத்து, உண்மையான சிலையைத் திருடுவது இந்த அரசுக்குக் நிச்சயமாகத் தெரியும். ஆகவே அது போன்ற திருடுகள் நடக்காவண்ணம் கண்காணிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டிரஸ்டிகள் நியமிக்கப்படுவதைப்பற்றி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இருக்கிற டிரஸ்டிகளைக் கணக்கெடுத்து பார்த்தால், ஏறக்குறைய 95 சத விகிதம் ஆளுங்கட்சியினரைக் கொண்ட டிரஸ்ட் போர்டுகள்தான் நாட்டிலே அமைந்திருக்கின்றன. ஆளுங்கட்சியில் இருப்பவர்களுக்கு மட்டும் அந்த டிரஸ்டு போர்டுகள் சொந்தம் அல்ல என்பதைக் கூறிக்கொண்டு, தெய்வ பக்தி உள்ள எல்லோரையும் சரி சமமாகப் பாவித்து, எல்லோருக்கும் டிரஸ்டு போர்டில் வாய்ப்பு கொடுக்க அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்களை அந்தந்த உறுப்பினர் தொகுதியிலுள்ள கோவில்களில் உள்ள அறங்காவலர் குழுக்களில் எக்ஸ் அஃபிஷியோ மெம்பர் போன்று மெம்பர் பதவிகளை ஏற்படுத்தி, சட்டமன்ற

உறுப்பினர்கள் கண்காணிப்பிலேயும் அந்தக் கோயில்கள் இருப்பது சாலச் சிறந்தது, அது நல்லமுறையில் நடக்க வாய்ப்பளிக்கும் என்று இந்தச் சமயத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-10)

அரிசன மக்களுக்கு அர்ச்சகர்கள் பணி செய்வதற்கு வாய்ப்பு கொடுக்கப் படும் என்று ஊரெல்லாம் சொல்லித் திரியும் இந்த அரசு, இங்கே கொடுக்கப் பட்டுள்ள அறநிலையத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் அதைப்பற்றி எந்தவிதமான குறிப்பும் கொடுக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, அரிசனங்களுக்கு அர்ச்சகர்கள் வேலை கொடுக்கும் சட்டத்தை நிறைவேற்ற இந்த அரசாங்கம் முன்வரவேண்டும் என்று இங்கே நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

கோவில் சொத்துக்கள் பல இடங்களில் வீணாகி இருப்பது அரசுக்குத் தெரியும். ஆகவே, அந்தக் கோவில்களின் சொத்துக்களைக் கொண்டு, ஆங்காங்கு ஒரு சிறுவர் விடுதியைக் கட்டி, அந்த விடுதியில் ஏழை, தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட வீட்டுப் பிள்ளைகளை வைத்து, அந்தப் பிள்ளைகளுக்கு உணவு, உடை, இருக்க இடம் கொடுத்து, அவர்களை பள்ளிக்கு அனுப்பச்செய்யலாம். இந்த முறையில் கோவில் சொத்துக்கள் பயன்படுத்தப் பட்டால் அது நல்லதொரு மக்கள் சேவையாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள், ஸ்ரீரங்கம் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது என்று. அந்தப் பகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தக் கும்பாபிஷேகம் குறித்து, அது நடந்து முடிந்த இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்னாலே தான் அழைப்பிதழ் கிடைத்தது. இது மட்டும் அல்ல, இதுபோன்ற விழாக்களுக்கு எல்லாமே இரண்டு மூன்று நாட்கள் கழித்துத்தான் அழைப்பிதழ் கிடைக்கிறது. ஆகவே, இந்த நிலைமை போக்கப்படவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னும் பல கோவில்கள் சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. அப்படிப் பட்ட பழைய கோவில்களைப் புதுப்பிக்கவேண்டும். குறிப்பாக, கடவூர் பெரியகோவில், தேவர்மலை கோவில், மாயனூர் செல்லபாண்டியம்மன் கோவில், வீரப்பூர் கோவில் ஆகியவை மிகவும் பழமை வாய்ந்தவை. அவற்றைப் புதுப்பிக்க அரசாங்கம் முன்வர வேண்டும். சில பழமைவாய்ந்த கோவில்களுக்கு போக்குவரத்து வசதி இல்லை. ஆகவே, அதையும் செய்து தா ..டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 28] (திரு. பி. எம். தங்கவேல்ராஜ்)

பல கோவில்களில் அர்ச்சகர்கள் தாக்கப்படுகிறார்கள். உதாரணமாக திருச்செந்தூரில் ஒரு ஆப்சர் கொல்லப்பட்டு இருக்கிறார். அது குறித்த வழக்கு கோர்ட்டிலே இருக்கிறது. ஆகவே அதைப் பற்றி இங்கே அதிக மாக விவாதிக்க முடியாது. இருப்பினும், இது போன்ற அசம்பாவிதங்கள் கோவில்களில் நடக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமல்ல, கோவில் சொத்துக்கள் காக்கப்பட வேண்டும். அதைப் போலவே, அரிசன மக்களுக்கு அர்ச்சகர்கள் வேலை கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் மானியம் மீது பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறநிலைய நிர்வாகம் முன்னைய ஆட்சிக் காலத்தை விட இப்பொழுது தான் சீரோடும் சிறப்பாகவும் செயல்பட்டு வருகிறது. ஆலய நிதிகளும் ஆலயத்தொடர்புப் பணிகளுக்குச் செலவிடப்படுவதும் இந்த ஆட்சியில் தான். இதற்கு முந்தைய ஆட்சி திருக்கோயில் நிதியைத் தங்கள் கட்சி வளர்ச்சிக்கு செலவு செய்துள்ளனர். அதற்குச் சான்று திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து தி.மு.க. வெள்ளி விழா மலருக்கு ரூபாய் பத்தாயிரம் கொடுக்கப்பட்டதாகும். நேரம் அதிகம் கொடுக்கப்பட்டால் நான் பல விவரங்கள் கொடுக்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பொறுப்பில் இத்துறை வந்தபிறகு, திறமையான ஆணையரின் நிர்வாகத்தில் 1980 ஆம் ஆண்டு மட்டும் 59 கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. மதுரையிலும், சமயபுரத்திலும் தங்கத் தேர் செய்யப்பட்டு ஓடுகிறது. அண்டசராசரங்களை எல்லாம் படைத்து ஆனந்தக் கூத்தாடிய தில்லை நடராஜருக்கு எந்தச் சொத்தும் இல்லை, வருமானமும் இல்லை என்று உலகை ஏமாற்றி வந்த தில்லை தீட்சதர்களின் கூற்றைப் பொய்யாக்கி அந்த அம்பலக் கூத்தனுக்கு ஆயிரம் ஏக்கர் பட்டா நிலமும் 2,878 ஏக்கர் கட்டளை நிலமும் இருக்கின்றன என்பதையும், ஆண்டு ஒன்றுக்கு நிலங்கள் மூலமாக ரூ. 40,000 குத்தகை வருமானத்தைக் கொண்டு வந்து காட்டியதின் மூலம் இது தீட்சதர்களின் கோயில் அல்ல, தீந்தமிழ் நாட்டு மக்கள் பொதுச்சொத்து என்று தமிழகத்திற்குக் காட்டிய மாண்புமிகு அமைச்சர் அவர்களை தமிழக மக்கள் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளார்கள். மொட்டைக் கோபுரமாக இருந்த ஸ்ரீரங்கம் ராயகோபுரத்தை முழுமை பெறச் செய்யும் வரலாறு புரட்சித் தலைவர் ஆட்சிக்குத்தான் கிடைத்துள்ளது.

இது கட்டி முடிக்கப்பட்டால் இந்தியாவில் உயர்ந்த வானளாவிய கோபுரமாக இதுதான் இருக்கும். ஏறத்தாழ ரூ. 14 கோடி அளவுக்கு திருப்பணிகள் கடந்த ஆண்டு முடிவுபெற்றுள்ளன என அறியும்பொழுது அறநிலையத் துறையின் வேகமான செயல்திறன் வெளியாகிறது. அது மட்டுமல்ல. ஆயிரக்கணக்கான சிற்பிகள், கட்டடக் கலை வல்லுநர்கள், ஏழைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இந்த அறநிலையத் துறை வழங்கியதன் மூலம் பெருமையடையலாம்.

சிதம்பரத்தில் சமீபத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நந்தனார் கோயிலைப் பார்வையிட்டதாகக் கேள்விப்பட்டேன். தில்லை நடராஜரை தீட்சிதர்களிடமிருந்தும், நந்தனாரை மடாதிபதிகளிடமிருந்தும் மீட்டு விரைவில் கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பெரிய பணக்காரர்கள் மடாதிபதிகள்தான். இந்த மடாதிபதிகளை ஒழித்தால்தான் நிலச் சீர்திருத்தம் கொண்டுவர முடியும். மடங்கள் பெயரால் நிலங்களை வைத்திருப்பது நிலச் சீர்திருத்த தத்துவத்தையே கேலி செய்வதாகும். எனவே இந்த நிலங்களை அரசு எடுத்துக்கொண்டு நஷ்டயீடாக கடன் பத்திரங்கள் கொடுக்கலாம். இதில் வரும் வட்டி வருமானத்தைக் கொண்டு மடாதிபதிகள் பிற மதத்தவர்களைப்போல் மத வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும். இந்து மதத்தில் மதம் மாறுவதைத் தடுக்க சமய பிரச்சாரம் செய்ய வேண்டும். பிற மதத்தினர் கண்டம் விட்டு கண்டம் சென்று மதப் பிரச்சாரம் செய்யும்போது இவர்கள் மடச் சொத்துக்களை கொள்ளையடித்து அனுபவித்துக் கொண்டிருப்பதை நிறுத்தி கிராமம் கிராமமாக மதப் பிரச்சாரம் செய்ய வேண்டும். இவர்கள் இப்படி மதப் பிரச்சாரம் செய்ய முன்வராவிட்டால் திருக்கயிலாய பரம்பரை திருக்கயிலாய மலையில் கூட இந்துசமயம் இருக்காது. இந்துசமயம் அழிந்து பிற மதங்கள்தான் வளரும். எனவே காலத்தை உணர்ந்து திருக்கயிலாய பரம்பரை தெருவுக்கும் வீதிக்கும் வந்து சமயப் பணி ஆற்ற வேண்டும்.

இரண்டு இலட்சம் வருமானத்திற்குமேல் நிகர வருமானமுள்ள ஆலயங்கள் ஆஸ்பத்திரிகளில் படுக்கை வசதி செய்து கொடுக்க வேண்டும். திருமண மண்டபம் கட்டிக் கொடுக்க வேண்டும். குற்றாலத்தில் திருமண மண்டபம் கட்ட வேண்டும். திருமலைக் கோயிலில் சகல வசதிகளுள்ள குடில்கள் கட்ட வேண்டும். பழுதடைந்த கோயில்களை பழுது பார்க்க ஆலய பொது நிதியிலிருந்து பணம் செலவு செய்ய வேண்டும்.

நெல்லை மாவட்டத்தில் ஆறுமுகமங்கலம் சுடலைமாட சுவாமி கோயிலுக்கு பல லட்ச ரூபாய் வருமானம் வருகிறது. இதை ஒரு பூசாரிக் குடும்பம் அனுபவித்து வருகிறது. அதை அரசு பொறுப்பிற்குக் கொண்டு வர வேண்டும். திருச்செந்தூர் தொகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தரிசனம் செய்யும் கற்றவேல் அய்யனார் கோவிலுக்கு சாலை வசதி செய்து கொடுக்க வேண்டும்.

நிர்வாகத் திறனை மேம்படுத்தவும், பாரபட்சமின்றி செயல்படுவதற்கு வசதியாக திருக்கோயில்களின் வருவாய் அதிகப்படுத்தவும் ஆண்டு ஒன்றுக்கு 20 இலட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய திருக்கோயில்களுக்கு துணை ஆணையர் அந்தஸ்தில் நிர்வாக அதிகாரிகள் நியமனம் செய்யப்பட வேண்டும். இதனால் திருச்செந்தூர் கோயிலின் திருப்பணிகள் வேகமாக நடைபெற ஏதுவாகும். காலதாமதம் தவிர்க்கப்படும். தேர்வுநிலை உதவி ஆணையர்களுக்கு துணை ஆணையர்களாக பதவி உயர்வு கொடுத்து ஆண்டு ஒன்றுக்கு 20 இலட்சம் வருமானம் வரக்கூடிய திருக்கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகளாக நியமிப்பதால் சம்பளவகையில் அதிக வித்தியாசம் ஏற்படப்போவதில்லை. அதே சமயம் பல ஆண்டுகளாக பதவி உயர்வுக்கு வழியின்றி பணியாற்றிவரும் உதவி ஆணையர்களுக்கு பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு ஏற்படும். ஆலய ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். அப்போதுதான் அரசு சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கும் என்று கூறி, எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் உபயோகமுள்ள சில உண்மையான விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தத் துறையிலே புகுந்துகொண்டிருக்கக்கூடிய பலர் 'காசேதான் கடவுளடா' என்ற மகத்தான கொள்கையை முன்வைத்துக்கொண்டு, இந்தத் துறைக்குள்ளே புகுந்துகொண்டு பணத்தை சூறையாடும் சக்திகளாக இருக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

ஆதலால்தான் இங்கே திரு ஆபரணங்கள் களவு போகின்றன. உண்டியல் பணம் திருட்டுப் போகிறது, சிலைகள் பல்லாண்டு காலமாக திருடப்படுகின்றன என்ற விவரங்களை அதிகமாகப் பார்க்கிறோம் இந்தத் துறையில்.

அடுத்து, இன்று எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய சில முற்போக்கான நல்ல கருத்துக்களை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்னும் அதிகமான கவனம் செலுத்தி இந்தத் துறையிலே நடைபெறுகின்ற மோசடிகளைத் தடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காலதேசவர்த்த மானத்திற்குத் தகுந்தவாறு இந்தத் துறையின் நிலைமைகளை மாற்றுவதற்கு அரசு பெருமுயற்சியை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்றையதினம் தமிழ் நாட்டிலே கணிசமான குத்தகைகாரர்கள் இந்த அறநிலையத் துறையின் நிலங் களிலேதான் இருக்கிறார்கள் நீண்டகாலமாக அந்த நிலத்தை நிர்வகித்து வரக்கூடியவர்களிடத்திலே இருந்து அறநிலையத் துறை தங்களுக்கு குத்தகை வரவில்லை என்று குறைபட்டுக்கொண்டு இருக்கின்றது. ஆனால் அவர்களோ மற்றவர்களுக்கு நிலம் சொந்தமாகிவிடக் கூடாது என்றும் தங்களுக்கே அந்த நிலம் சொந்தமாகவேண்டும் என்ற உணர்ச்சியிலே இருந்து வருகிறார்கள். இன்றைக்கு நாம் 75 : 25 என்று வாரம் வைத்து இருக்கிறோம். ஆகவே ஒரு சில ஆண்டுகளுக்குரிய குத்தகைகளைப் பெற்றுக் கொண்டு அந்த நிலங்களை அவர்களுக்கே உடைமையாக்கினால் நீண்ட காலத்திற்கு ஒரு வருவாயும் கிடைக் கும். அதே நேரத்திலே அதிலே பாடுபட்டுவருகின்ற நீண்டகாலமாக உழைத் துக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கும் அந்த நிலம் கிடைக்கும். ஆகவே இந்தத் துறையிலே அரசு மிகவும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று வைத்திருக்கின்ற இடைத்தரகர்கள் பற்றி நான் சொல்லவில்லை. 3 ஏக்கர் 5 ஏக்கர் என்று வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகள் விஷயத்திலே கவனம் செலுத்தி அவர் களுக்கு இந்த நிலம் உடைமையாகின்ற வகையிலே நடவடிக்கை எடுத்து அவர்களிடத்திலே இருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை கோவில் பெற்றுக் கொள்வது என்ற வகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, அரசின் முக்கியமான கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கோவில்களில் இருக்கக்கூடிய அர்ச்சகர்கள், பணியாளர் களைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 1 இலட்சம் பேர்கள் இருக்கிறார் கள். மிகக்குறைந்த வருவாயிலே அவர்களுடைய வாழ்க்கை நடந்து வரு

கின்றது. சமீபத்திலே தஞ்சையிலே ஒரு துயரமான நிகழ்ச்சி நடந்ததை அனைவரும் அறிவோம். அங்கே கல்யாணி குருக்கள் என்பவர் தற்கொலை செய்துகொண்டார். அந்த அளவுக்கு அவர்கள் வறுமையான சூழ்நிலையிலே இருக்கிறார்கள். இந்த ஊழியர்கள் தங்களை அரசின் கடைநிலை ஊழியர்கள் என்ற அளவுக்காவது நிர்ணயித்து ஊதியம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவர்களுக்கு ஒரு குறைந்தபக்ச சம்பளத்தையாவது நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றையதினம் சுண்டல் விற்பவர்களுக்குக் கூட ஒரு குறிப்பிட்ட கூலியை நிர்ணயிக்கலாம் என்று நாம் சர்ச்சை செய்துகொண்டிருந்தோம். அந்த நிலையிலே கோவிலில் இருக்கக்கூடிய இந்த ஊழியர்களுக்கு ஒரு குறைந்த பட்ச சம்பளத்தை நிர்ணயித்து அமல் நடத்தவேண்டும். அவர்களிலே கூட எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களும் அதற்கு மேலே படித்தவர்களும் இருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது உயர் பதவிகள் அங்கே காலியாக ஆகின்றபோது வெளியிலே இருந்து ஆட்களை கொண்டு வந்து நியமிக்க வேண்டாம். அவர்களில் படித்தவர்களுக்கே அந்த வாய்ப்பைக் கொடுக்கலாமே என்று கேட்கிறார்கள். அது குறித்தும் அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியா குமரி கோவிலைப் பற்றிய விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். 1959-லே நாம் கன்னியாகுமரியைப் பிரித்துக் கொண்டு வருகிறபோது, மத்திய அரசின் சட்டப்படி 13 இலட்ச ரூபாய் கிடைக்கின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதை நான் வரவேற்கிறேன். அப்படிப் பிரிந்து வந்ததற்குப் பிறகு நம்முடைய நிர்வாகத்திலே இருக்கின்ற கோயில்களில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஊதியத்தைப் பொறுத்தவரையில் திருவிதாங்கூர் தேவஸ்தானத்திலே உள்ள ஊழியர்களுக்குக் குக் கொடுக்கப்படுகின்ற ஊதியத்தை விட குறைவாக இருக்கின்றது. இதன் காரணத்தால் கன்னியாகுமரியிலே உள்ள கோவில் ஊழியர்களிடையே ஒரு மனப்புழுக்கம் இருக்கின்றது. ஆகவே அந்த ஊழியர்களுக்கு ஊதியத்தை சற்று அதிகமாகக் கொடுத்து அவர்களுடைய குறையைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவில் நிதியினைப் பொறுத்தவரையில் அவற்றை நல்ல காரியங்களுக்குச் செலவழிப்பதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். திருமண மண்டபங்கள் கட்டுவது, கல்வி, மருத்துவம் போன்றவற்றிற்கு அந்த நிதியைச் செலவழிப்பதோடு மட்டுமல்லாமல் நகர் சுகாதாரத்திற்குக் கூட

செலவழிக்கலாம். உதாரணமாக, பழனி போன்ற கோவில்களை எடுத்துக் கொண்டால் அங்கே ஏராளமானவர்கள் வருகின்றனர். மேலும் அந்தக் கோவில் அதிகமான வருவாய் வரக்கூடிய இடங்களில் ஒன்று. அதிகமான பேர் வருகின்றபோது நகரத்தின் சுகாதாரம் பாதிக்கப்படும். அப்போது நகர சபைகள் மட்டும் அந்த சுகாதாரத்தைக் காக்க முடியாது. ஆகவே கோவில் நிதியிலே இருந்தும் சுகாதாரத்தைக் கவனிப்பதற்காகச் செலவிடப்பட வேண்டும். அப்படி செலவழிப்பது கடவுளுக்கே கூட உகந்ததாகத்தான் இருக்கும்.

அடுத்து, நம்முடைய கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது தமிழகத்திலே இருக்கிற திருமடங்களைப் பற்றி, அதைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே விளக்கமாகக் கொடுத்திருக்கிறார்கள், அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாம் அதைப் பற்றி இந்த அவையிலே பல காலம் பேசியிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் அந்த திரு மடாலயங்கள் பற்றி பல தகவல்களை அப்போதெல்லாம் தருகிற போது, ஏதோ ஒரு திடுக்கிடும் துப்பறியும் நாவலைப் படிக்கிற மாதிரி, அதில் வரும் சம்பவங்கள் போன்ற சம்பவங்கள் இந்த மடாலயங்களில் நடைபெறுகின்றன என்பது தெரிகிறது.

திருவாவடுதுறை மட ஆதீனத்திற்கு 35 ஆயிரம் ஏக்கர் நஞ்சையையும், புன்செய்யும் இருக்கிறது என்று தெரிகிறபோது, அதனுடைய ஆண்டு வருமானம் எவ்வளவு? அதையெல்லாம் கண்காணிப்பது யார்? என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறது. இன்றைக்கு நம்நாட்டில் இருக்கக் கூடிய மக்களில் 65 சதவீதத்தினர் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், நாள் ஒன்றுக்கு 50 பைசா கூட வருமானம் இல்லாமல் ஏழை உழவன் அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும்போது, இந்த 35 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் வருகிற வருமானத்தைக் கூட கணக்கிட்டுப் பார்க்க முடியவில்லை என்ற நிலைமை ஜனநாயகத்திற்கே விரோதமானது. இவைகளை வைத்துக் கொண்டு சில தனி நபர்களும் காலாவதியாகிவிட்ட மடாதிபதிகளும் தங்களுடைய சுயநலங்களுக்காக தனி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் போக்கு தடுக்கப்பட வேண்டும்.

பெருந்துறையில் இருக்கும் மசிறி ஆத்தாள் ராக்கி என்னும் ஒரு அம்மன் கோவிலில் ஒரு தனி நபர் நோ அட்மிஷன் வித்தவுட் பெர்மிஷன் என்ற ஒரு போர்டை வெளியிலே வைத்துவிட்டு, யாரையும் உள்ளே விடாமல்

1981 ஏப்ரல் 28] (திரு. என். வரதராஜன்)

தானாகவே சர்வாதிகாரம் பண்ணக் கூடிய நிலையில் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறபோது, அங்கே அவர்களுக்கு எவ்வளம் அதிகாரம் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் தடுக்கும் வகையில் உடனடியாக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாகவாவது அதைக் கொண்டு வர அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும், ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய பல மடாலயங்களில் லட்சக்கணக்கான ரூபாய்கள், கோடிக்கணக்கான ரூபாய்கள், இப்படி தனிப்பட்டவர்களின் விருப்பங்களுக்கு இணங்க வீணாகச் செலவழிக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அந்தப் பணம் அந்த மடாலயங்களின் சிறப்பான நிர்வாகத்திற்கு செலவழிக்கப்படுவதில்லை, ஆண்டவனுக்கும் செலவழிக்கப்படுவதில்லை, மக்களுக்கும் செலவழிக்கப்படுவதில்லை, தனிப்பட்டவர்களின் சொந்த உபயோகங்களுக்கே போகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோவிலில் இருக்கக்கூடிய ஆபரணங்கள் திருடு போவதைத் தடுப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அந்த ஆபரணங்கள் எல்லாம் அந்தக் கோவில்களுக்கு ஆண்டிலே ஒரு முறை அல்லது இரு முறை விழாக்கள் காலத்தில்தான் தேவைப்படுகின்றன. ஆகவே, அந்த ஆலயங்களின் ஆபரணங்களையெல்லாம் ஒரு குறிப்பிட்ட இடத்திலே இங்கேதான் வைக்கப்பட வேண்டும் என்றும், தேவைப்படும்போது வந்து பெற்றுக்கொண்டு போய் திரும்பவும் விழாக்கள் முடிந்தவுடன் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும் என்னும் ஒரு நடைமுறையினைக் கொண்டு வந்தால், அந்த ஆபரணங்கள் கரைந்து போவதையும், காணாமல் போவதையும் தடுக்க முடியும். இல்லையென்றால் இப்படிப்பட்ட வேலைகளுக்காகவே அங்கே பெருச்சாளி கும்பல்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு மிக முக்கியமான பிரச்னை என்னவென்றால், உண்டியல்கள் எண்ணுகிறபோது ஏற்படும் சண்டைச் சச்சரவு, தகராறுகள். இப்போதெல்லாம் அது எல்லா இடங்களிலும் ஏற்படுகின்றன. தமிழகத்திலே மட்டுமல்ல, ஆந்திராவில் திருப்பதியில் உண்டியலை எண்ணும்போது கூட தகராறுகள் ஏற்பட்டு சிலர் கைது செய்யப் பெற்றது குறித்து நாம் பத்திரிகைகளிலே பார்த்தோம். ஆகவே, இப்படி உண்டியல்கள் எண்ணப்படுகிறபோது,

அதைக் கண்காணிப்பதற்காக ஒரு தனியாக ஒரு குழு, மக்கள் குழு, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழு, சர்வ கட்சியினர் அந்தக் குழுக்களில் இருந்தாலும் சரி, அப்படி ஒரு உயர் மட்ட அளவில் சற்று பெரியதாக ஒரு குழுவினை, இந்த உண்டியல்கள் எண்ணும்போது கண்காணிக்க நியமிக்க வேண்டும். அப்படிச் செய்தால், அவர்களுக்கு தாங்கள் கண்காணிக்கப் படுகிறோம் என்கிற அச்ச உணர்வு இருக்கும். அதில் திருட்டுகளோ பொய் பிரட்டுகளோ ஏற்படாமல் தடுக்கவும் முடியும். ஆகவே அரசு இதை சற்று ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோவில்களில் இருக்கும்படியான கடைகளை வாடகைக்கு விடுவது குறித்து. நீங்கள் எந்தக் கடைகளாக இருந்தாலும் ஒரே தொகை யைத்தான் நிர்ணயிக்கிறீர்கள். அது ஊசி விற்கக் கூடிய கடையாக இருந்தாலும், பாசி விற்கக் கூடிய கடையாக இருந்தாலும் அதே வாடகைதான். பெரிய அளவில் பெரிய பெரிய வியாபாரம் நடக்கும் கடையாக இருந்தாலும் ஒரே வாடகைதான் வசூலிக்கிறீர்கள். அது தவறு. மிகப் பெரிய கடைகள் எல்லாம் இருக்கின்றன. எனக்கு நன்றாகத் தெரியும். மதுரையில் கோவிலுக்குச் சொந்தமான இடங்களில் உள்ள கடைகளில் அப்படிப்பட்ட கடைகள் இருக் கின்றன. திண்டுக்கல்லில் இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட பெரிய கடைகளுக்கு கொஞ்சம் அதிகமாக வாடகையை உயர்த்தி வைக்க வேண்டும். சிறிய கடைகளுக்கு அதன் வாடகையைக் குறைக்க வேண்டும். ஏதோ வாடகை கட்டுப்பாடு சட்டத்திலே விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருப்பதாக சொல்கிறீர்கள். விதிவிலக்கு என்பதே இருக்கக் கூடாது என்பதுதான் எங்க ளுடைய கொள்கை. வாடகையை வசூல் செய்யுங்கள். அதை பெரிய கடை களுக்கு அதிகமாகவும், சிறிய கடைகளுக்கு தகுதிக்கேற்றவாறு குறைத்தும் வசூல் செய்யுங்கள் என்றுதான் சொல்கிறோம். அப்படிப்பட்ட வகையில் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

என்னைக் கேட்டால், சில இடங்களில் சில பணிகளையும் கூட, பொருள் களைப் போல ஏலம் விடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று சொல் வேன். உதாரணமாக பழனியிலே மொட்டை அடிக்கும் தொழில் இருக்கிறது. மொட்டை அடிக்க வரும் பொது மக்களையே மொட்டை அடித்துவிடுகிறார் கள். மொட்டை அடிக்க ஒரு ரூபாய் என்று கோவிலில் நிர்ணயம் செய்து இருந்தால் கூட, மொட்டை அடிக்கும் தொழிலாளி 2 ரூபாய், மூன்று ரூபாய் கொடுத்தால்தான் மொட்டை அடிப்பேன் என்று சொல்கிறார். அந்த

1981 ஏப்ரல் 28] (திரு. என். வரதராஜன்)

மொட்டை அடிக்கும் தொழிலாளர்கள், தங்களுக்கு கூடுதலாக கூலி வேண்டும் என்ற எண்ணத்தை வைத்து, தங்களை ஆலய பணியாளர்களாக நியமித்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

இந்த ஆண்டு முடிய ஏலம் போடுகிறதில், சென்ற ஆண்டை விட குறைந்த ஏலத்தில் போய் இருக்கிறது என்று தகவல். ஏலம் போடுவதில் கூட சாதாரணமாக நமக்கு இலாபம் வரக்கூடிய முறையில் இந்த ஏலம் இருக்க வேண்டும். ஏலம் போடும்போது உள் ஏலம் எடுத்து உள்ளுக்குள்ளே பேசி வைத்து சரியான வருவாய் கிடைக்காமல் இருக்கக்கூடிய நிலை பலயிடங் களில் இருக்கிறது. ஆகவே கோவில்கள் நியாயமான வருவாய் பெற முயற்சி செய்யவேண்டும்.

அடுத்து, அறங்காவலர்கள் போடுகிறார்கள். நான் கட்சிப் பிரச்னையாக இதை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் அந்தத் துறையில் நம்பிக்கை உள்ளவர்களை, நாணயம் உள்ளவர்களை, அப்படிப்பட்டவர்களாகப் பார்த்து அறங்காவலர்களாக நியமிப்பதுதான் நாம் நினைக்கக்கூடிய கொள் கையை அமலாக்குவதற்கு உதவியாகயிருக்கும். ஆகவே அதிலும் இத்துறை முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டு கடைசியாக ஒன்றை வற் புறுத்திக் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாடு வக்ப் போர்ட் இருக்கிறது. அதற்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. அறநிலையத் துறை பற்றி விவாதிக்கிறபோது அந்தச் சொத்துக் கள் பற்றிய விவரங்களைக் கொண்ட ஒரு குறிப்பை இந்தச் சபையில் கொடுத்தால் நம் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய அறநிலையத் துறையைச் சேர்ந்திருக்கக்கூடிய பல்வேறு பிரிவுகள் பற்றி—இந்து சமய அறக்கட்டளை என்பது ஒரு பிரிவு—இன்னும் பல்வேறு பிரிவுகள் பற்றி சட்டமன்ற உறுப் பினர்களாவது அவைபற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள முடியும். ஒரு அவலநிலை, பல்வேறு பொதுச் சொத்துக்கள் பொது காரியங்களுக்கு உப யோகப்படாத வகையில் பலருக்கு உபயோகப்படுவதின் காரணமாக அப்படிப் பட்ட விவரங்களை இந்த அவைக்கு அளிப்பது உபயோகமாக இருக்கும் என்று வலியுறுத்தி நான் விடை பெறுகிறேன்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கை எண் 12-யை வரவேற்று பாராட்டிப் போற்று கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறைக்கு ஆணையர் ஒருவரும், அவருக்கு துணை ஆணையர்கள் ஏழு பேரும், அதற்குப் பிறகு அறநிலையத் துறைக்கு தணிக்கை அதிகாரி ஒருவரும், அவருக்குத் துணையாக பலரும் சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடுகளைத் தயாரித்தும் மற்றும் அப்பணிகளையும், கட்டடப் பணிகளையும் மேற்பார்வையிட்டு கவனிக்க மேற்பார்வைப் பொறியாளர் ஒருவரின் தலைமையில் கோட்டப் பொறியாளர் ஒருவரும், இவர்கள் தலைமையின் கீழ் மாநிலம் பூராவும் மாவட்ட வாரியாகவும் இவர்கள் பணிகளை கவனித்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளதை வரவேற்று பாராட்டுகிறேன்.

இந்த நிறுவனங்களின் ஆண்டு வருமானம் சுமார் 16 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்து சமய நிறுவனங்களில் பரம்பரை அர்ச்சகர்கள் நியமிக்கப்படுவதை நீக்குவதாலும் சாதி சமய உட்பிரிவு அர்ச்சகர்கள் பாகுபாடின்றி அர்ச்சகர்களை நியமித்தலும் இந்த அரசு ஏற்றத்தாழ்வு இன்றி தகுதி வாய்ந்தவர்களுக்கு அர்ச்சகர் பொறுப்பு உண்டு என்று நிரூபித்துள்ள இந்தத் துறையைப் போற்றி பாராட்டுகிறேன்.

வாடகை வருமானம், சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள், மனைகள் குறித்த 7,536 இனங்களில் வாடகை 1980 ஆம் ஆண்டில் உயர்த்தப் பட்டதில் ஆண்டுதோறும் 11 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும் என்றும் கூறியுள்ளார்கள். ஆனால் இந்த வருமானத்தில் தமிழக முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்கள் பயன் அடையக் கூடிய விதத்தில் சமய நிறுவனங்களின் உபரி நிதியைக் கொண்டு மேற்கொள்ளப் பட்டுள்ள சமுதாய நற்பணிகள் தொடர்ந்து இதனால் செவிடர், ஊமையர் பள்ளி ஒன்றும், பிரிவு இல்லங்கள் மூன்றும், நூலகங்கள் 292 ம், சித்த பள்ளி ஒன்1ம், பிரிவு இல்லங்கள் மூன்றும், நூலகங்கள் 292-ம், சித்த அன்பு இல்லங்களும் நடத்தப்பட்டு வருகின்ற இந்த புரட்சித் தலைவர் அவர்களின் அரசைப் பாராட்டுகிறேன்.

பொதுமக்களுக்கான வசதிகள், பொதுவாக ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடும் ஆலயங்களில் ஆலயத் திருப்பணி, கல்யாண மண்டபம், தங்கும் விடுதி, தேவையான குடிநீர் வசதி, கழிப்பறைகள், குளியல் அறைகள் போன்ற பணி

களிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஆனால் இதன் அடிப்படையில் தென் ஆற்காடு மாவட்டத்தில் என்னுடைய குறிஞ்சிப் பாடி தொகுதியில் உள்ள வடலூர் அருகாமையில் உள்ள மருதூரில் வடலூர் ராமலிங்க அடிகளார் 1823 ஆம் ஆண்டு அக்டோபர் 5 ஆம் தேதி பிறந்தார். அவர் வடலூரில் சத்திய ஞான தருமச்சாலை ஏற்படுத்தி அங்கு வருகின்ற ஏழை எளியவர்களுக்கு அன்ன தானம் செய்து வந்திருக்கிறார்கள்.

வள்ளல் இராமலிங்க சுவாமிகள் சாதி மதம் இல்லை என்று பாடினார். கள்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று பாடினார்கள். கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக என்று பாடினார்கள்.

இப்படி கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பே தந்தை பெரியாருடைய கொள்கையைப் பரப்பியவர் வள்ளலார் பெருமான்.

அதற்குப் பிறகு வடலூர் அருகாமையில் உள்ள மேட்டுக்குப்பம் கிராமத் திற்குச் சென்றார். அங்கு ஒரு குடிசையில் 3—1—1874 ஆம் ஆண்டு அனை வரும் வியக்கத்தக்க முறையில் ஒரு குடிசைக்குள் புகுந்தவர் மாயமாய் மறைந் தார். மறைந்த அந்த வள்ளல் பெருமானுக்கு நம்முடைய தமிழக அரசு சார் பில் அவர் பிறந்த அக்டோபர் 5 ஆம் தேதியை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்றும், அவருடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக தயார் செய்து, அவருடைய சீர்திருத்தக் கருத்துக்களை தமிழக அரசு மக்கள் மத்தியில் வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். வடலூருக்கு வருகின்றவர்கள் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் மட்டுமல்லாமல், வெளி மாநிலங்களி லிருந்தும், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலிருந்தும் வருகின்றார்கள். ஆகையால், இந்த புகழ் பெற்ற வடலூருக்கு வருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு தங்குவதற்கு வேண்டிய இட வசதிகளும், மற்றைய வசதிகளையும் விரிவு படுத்தி, தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் மூலமாக இந்த வேலைகளைச் செய்து தரும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியில் கோவில்களில் சிலை திருட்டு இல்லை, உண்டிகள் கடத்தல் இல்லை. தெய்வீகத்திற்கு அளிக்கப்படும் பணங்கள் பாது காக்கப்படுகின்றன. மக்களின் தெய்வீக வழிபாட்டிற்கு கடுகளவும் மாசு கற்பிக்கப்படாது, மக்கள் மனம் பாராட்டும் அளவில் நடக்கும் புரட்சித் தலைவர் ஆட்சியைப் பாராட்டுகின்றேன். காடுகள் எல்லாம் அழிக்கப்பட்ட தால், நாடு மழையில்லாமல் பொய்த்தது. கவனிப்பாராற்று மரங்கள் வெட்டப்

பட்டு, கடத்தப்பட்ட நிலை தற்போதுள்ள தமிழக அரசு ஆட்சியில் இல்லை. நாணயம் மிக்க இந்த அரசைப் பாராட்டுகிறேன். லஞ்சம் என்ற எண்ணத்தில் எங்கள் அரசை குறை கூறுவோர் இந்த தமிழகத்தில் இல்லை ஏன் லஞ்சமே இல்லை.

ஆந்திரத்திலே விளைந்த செம்மரத்திற்கு தமிழகத்திலேயே ஊழல் என்று சொன்னார்கள். ஆதாரம் காட்ட முடியாமல் ஓடி ஒளிந்த நிகழ்ச்சியை இந்த சபை கண்டுள்ளது. குறை சொன்னால், குற்றப்படுத்தினால் இல்லை என்று ஆணித்தரமாக ஆதாரத்தோடு நியாயமாக மறுக்கும் சக்தி எங்கள் அமைச்சருக்கு உண்டு. தொன்றுதொட்டே வரலாற்றைப் பார்த்தால், கோவில் என்றால் சிலை கடத்தல் என்பார்கள். வனத்துறை என்றால் தடிகள் கடத்தல் என்பார்கள். இன்று அந்த நிலை அத்தனையும் மாற்றப்பட்டு விட்டது. இத்தகைய நல்ல ஆட்சியை மக்கள் விரும்புகின்றார்கள். மக்கள் விரும்பும் புரட்சித் தலைவரின் மக்கள் ஆட்சியை களங்கப்படுத்த நினைப்பவர்களை மக்கள் களங்கப்படுத்துவார்கள். இந்த நல்லாட்சியை மாசுபடிய செய்பவர்களை மக்கள் தண்டிப்பார்கள் என்று எச்சரித்து, இந்த மானியத்தை ஆதரித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய உற்சாகம் மிகுந்த செயல்பாடுகளினாலே பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவது கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம்; உள்ளம் நிறைவு கொண்டுள்ளோம். இன்று கோவில், குளங்கள் எல்லாம் நல்லமுறையிலே பராமரிக்கப்பட வேண்டுமென்று சொல்லுகின்ற இந்த எண்ணத்தின் காரணத்தினாலே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போகின்ற இடங்களில் எல்லாம், நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற செய்திகளை, நிகழ்ச்சிகளை துருவித் துருவி ஆய்ந்து, அதிலே தவறுகள் இருக்குமானால் ஆங்காங்கே கண்டித்து வருவதை நான் நேரிலேயே கண்டிருக்கிறேன். ஆக, தவறுகள் களையப்பட வேண்டுமென்று சொல்லுகின்ற ஆர்வத்தோடு இந்த அறநிலையத் துறை செம்மையாக நடந்து வருவதை, திட்டமிட்டபடி செயலாற்றிக் கொண்டு வருவதைக் கண்டு மேலும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு கிடைத்த வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து, சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 28] (திரு. குமரி அனந்தன்)

அறம் வெல்லும், பாபம் தோற்கும் என்பது இந்த நாட்டிலே இருக்கின்ற தத்துவம். அந்தத் தத்துவத்தின் அடிப்படையிலே அறிநிலையத் துறையை நடத்திச் செல்லவேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது; நாமும் விரும்புகிறோம். ஒரு காலத்தில் கோவில் எல்லாம் சிறந்த கலைக்கூடங்களாக இருந்ததோடு மட்டுமல்லாமல் பாதுகாப்பு இடங்களாகவும் இருந்திருக்கின்றன. பாதுகாப்பு இடங்களாக மட்டும் இருந்ததோடு மட்டுமல்லாமல் அவை பல கலைகளையும் வளர்க்கின்றவைகளாக இருந்திருக்கின்றன. இசைக் கலை, நாட்டியக் கலை, போன்றவைகளும், நாடகக் கலை போன்றவைகளும் அவைகளால் வளர்ப்பவையாக இருந்திருக்கிறது என்பதை நாம் தெரிந்திருக்கிறோம்.

(முற்பகல் 11-40)

நூல்கள் எல்லாம் இங்கே அரங்கேற்றப்பட்ட செய்திகள் எல்லாம் நமக்கு ஏற்கனவே அறிமுகமான செய்திகள். இப்போது நாம் அதைப்பற்றி எந்தளவிற்கு பெரு;மயோடு பேசுகிறோமோ அதைவிட பன்மடங்கு அருமையாக போற்றி பாதுகாக்கப்பட்டன. அந்த கலைகளைப் பற்றி இன்று நமது அறநிலைய அமைச்சர் அவர்களுக்கு சில கருத்துக்களை வைக்கவேண்டுமென்று கூறுவதற்காக அவர்களுடைய உள்ளத்தில் இருப்பது எங்களுடைய உள்ளத்திலும் இருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுவதற்காக சில செய்திகள் சொல்லுதல் வேண்டும். தாரமங்கலம் ஆவுடையார்கோவில், கிருஷ்ணபுரம் போன்ற கோவில்கள் எல்லாம் மிக சிறப்பு வாய்ந்த கோவில்களாக இருக்கின்றன. இங்கே இருக்கிற சிற்பங்களை பார்ப்போமேயானால் உலகத்திலேயே வேறு எந்த நாட்டிலும் காண கிடைக்காத அற்புதங்களாக அவை காட்சி அளிக்கின்றன. ஆனால் அந்த கோவில்கள் எந்தளவிற்கு பிரபலமாக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றன என்றால் அது போதிய அளவிற்கு இல்;ல. ஆதலால் நமது அறநிலையத் துறையிலேயே இப்படிப்பட்ட கோவில்களை பார்வையிடுவதற்கு, பக்தர்கள் சென்று அந்த காட்சிகளை மனத்தகத்தே கொள்வதற்கும் தேவையான அளவு பேருந்துகளை அறநிலையத் துறையால் ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை நமது அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அறநிலையத் துறையினால் கூட சுற்றுலா பேருந்துகள் விடப்படுமேயானால், 'பில்கிரிமேஜ்' என்கிற வகையில், இப்படிப்பட்ட சிற்பங்களை பார்ப்பதோடு மட்டுமல்லாமல், சித்தத்தை இறைவன் பால் செலுத்த விரும்புகிறவர்களுக்கும், சென்று பார்க்கிற வகையிலே அவை பயன்படும் என்று நான் ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவைகளை மாவட்டத்தின் உள்ளே செல்கிற பஸ்களாகவும் வைக்கலாம்; தமிழ்நாடு முழுவதும் சென்று வருகிற பேருந்துகளாகவும் வைக்கலாம். தனித்தனி கனிகளை

பார்த்து ரசிப்பது போலவும், அதே நேரத்தில் எல்லா கனிகளையும் கூட்டாக ரசிப்பது போலவும், நாம் பல கனிவர்க்கங்களை சுவைப்பது போலவே அங்கே தனித்தனி கோவில்களை பார்ப்பதற்கு செல்கின்றவர்களுக்கும், எல்லா கோவில்களையும் பார்க்க செல்கின்றவர்களுக்கும், எல்லா கோவில்களையும் பார்க்கிற விருப்பத்தை நிறைவு செய்கின்ற வகையிலே நாம் காரியம் ஆற்ற லாம்.

அண்மையிலே நமது அமைச்சர் அவர்கள் சீர்காழி பக்கத்திலே, ஒரு பெரிய கூட்டத்தில் பேசுகின்றபோது சொல்லியிருக்கிறார்கள். 'சிவன் சொத்து, குலம் நாசம்' என்று பேசியிருக்கிறார்கள். இறைவனுடைய சொத்துக்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்கள் அது பிறருக்கு பயன்படா வண்ணம் தனி உடமை போலவே ஆக்கிரமித்து கொண்டிருப்பதை கண்ட ஆத்திரத்திலே அங்கே அவர்கள் பேசியிருப்பது நியாயத்திற்கு ஒத்ததாக இருந்ததே தவிர, நியாயத்திற்குப் புறம்பானதாக இல்லை.

என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிற திருவொற்றியூர் தொகுதி மக்கள் என்னிடம் கொடுத்திருக்கிற மனுவை பார்க்கிற நேரத்தில் அது உண்மை என்றே தெரிகிறது. திருவொற்றியூரில் இருக்கிற தியாகராஜர் சுவாமி ஆலயம் மிக பழமையானது; தொன்று தொட்டு அங்கேயிருக்கிறது. இப்படிப்பட்ட ஆலயத்திலேதான் முற்றும் துறந்த பட்டினத்து அடிகள் அங்கே இறைவனடி சேர்ந்தார் என்று சொல்கிற செவிவழிச் செய்தியும் சொல்கிறது. அதுவரையில் மெய்க்கரும்பு அவருக்கு கசந்தது. திருவொற்றியூருக்கு வருகிற நேரத்திலே மெய்க் கரும்பு இனித்ததாகச் சொல்கிறார்கள். இப்போது அந்த கோவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிலையை பார்க்கிறபோது நல்ல கரும்பு கூட கசக்கும் போலவிருக்கிறது. அப்படி அங்கே நிர்வாகம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. 100 அடி இருக்கிற விண்ணை நோக்கி போகின்ற கோபுரம், கண்ணை கவர்கின்ற கோபுரம் அங்கே இருக்கிறது. வெளியிலே தெப்பக்குளம் ஒன்று இருக்கிறது. உள்ளே தடாகம் ஒன்று இருக்கிறது. இப்போது தெப்பக் குளத்திலும், தடாகத்திலும் தண்ணீர் வருவதற்கு வழிவகை செய்துவைக்கப் படவில்லை. தண்ணீர் இல்லாத காலங்கள் தான் அதிகமாக இருக்கிறது. தண்ணீர் இல்லாத காலங்களில் கழிப்பிடங்களாக மக்கள் அதை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கழிப்பிடங்களாக கோவில் குளங்கள் பயன் படுகிற ஒரு சூழ்நிலை இன்று திருவொற்றியூரிலே இருந்து கொண்டிருக்கிறது. இங்கு பிப்ரவரி மாதம் 10 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. அந்த திரு விழாவிலே ஆயிரக்கணக்கில் அல்ல, இலட்சக்கணக்கில் மக்கள் குவிகிறார்கள்.

இலட்சக்கணக்கிலே பணத்தையும் குவிக்கின்றார்கள். அவைகள் எல்லாம் நம் அறநிலைய துறையின் கட்டுப்பாட்டிற்குகீழ் வந்து கொண்டிருக்கின்றதா என்றால் இன்றுவரை வரவில்லை. இதையும் அமைச்சர் பெருமகனார் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இது மிகப் பெரிய கோவில், எல்லோராலும் போற்றி துதிக்கப்படுகின்ற கோவில். பக்தர்கள் எல்லாம் காணிக்கை செலுத்தி தங்களது வாழ்விலே அமைதி தேடுகின்ற இந்த கோவிலிலே வந்து கொண்டிருக்கின்ற வருமானம் எல்லாம் அரசு துறையின் கட்டுப்பாட்டிலே இல்லாத காரணத்தாலே, பொதுமக்களுக்கு பயன்படுகிற வகையிலே இல்லாமல் ஒருவருடைய தனிச் சொத்தாக போய்க் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன்.

அங்கு தேர் ஒன்றும் உண்டு. அந்த தேர் ரொம்ப நாளாக பழுதுபட்டு சன்னிதானத்திலே நின்றுகொண்டிருப்பதைப் போல சன்னதித் தெருவிலே நின்றுக்கொண்டிருக்கிறது. அந்த சன்னதி தெருவிலே நின்று கொண்டிருக்கிற தேரை சீர்படுத்துவதற்கு யாரையும் காணோம். அந்த தேர் போக்குவரத்திற்கு, கார் போவதற்கு இடைஞ்சலாக நின்று கொண்டிருக்கிறது. அதனை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றால் நீதிமன்றமும்கூட நமக்கு சரியான விடை கொடுக்கக்கூடிய நிலையிலே இன்றும் அந்தத் தேர் அந்தத் தெருவிலே தான் நின்றுகொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இவைகளையெல்லாம் வைத்து கோயிலை நடத்திக்கொண்டிருக்கிறவர்களுக்கு அவ்வளவு அக்கறை இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. 72 சத்திரங்கள் அந்தக் கோயிலைச் சேர்ந்தவை. 72 சத்திரங்கள் ஏன் அந்தக் கோயிலைச் சார்ந்தவையாக இருக்கின்றன என்றால் தொலை தூரத்திலிருந்து வருகின்ற மக்களும் அந்த திருவிழா முடியும் வரை தங்கிச் செல்லட்டும் என்ற தங்க குணம் படைத்தவர்கள் கட்டி வைத்த சத்திரங்கள் அவை. ஆனால் அந்தச் சத்திரங்கள் எல்லாம் தனிப்பட்டவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டு பெரும் பணம் வசூலிக்கப்படுகிறதே தவிர சத்திரங்களாக அவை பயன்படவில்லை. வெளியே இருந்து வந்திருக்கிறவர்கள் வந்து தங்கி பத்திரமாகப் போவதற்கான வழியில்லாமல் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கே இருக்கின்ற ஆண்டவன் ஆற்றலைப்பற்றியல்ல, அவனை நான் சொல்லவேண்டியதில்லை, அவருடைய திருவுருவமே நம் நெஞ்சங்களிலே நல்ல நினைவுகளை தோற்றுவிக்கின்ற அளவுக்கு இருக்கிறது. அப்படி ஒரு கோயில் 10 ஏக்கர் நிலத்திலே இருந்து

கொண்டிருக்கிற கோயில், பெரும் சொத்துடைய ஒரு கோயில், இன்று பராமரிப்பும் இல்லாமல் பாதுகாப்பும் இல்லாமல் பொதுமக்களுக்கும் பயன்படாமல் யாரோ ஒரு தனி நபருடைய சொத்தாக இருக்கிறது. இதை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடும் பணிவோடும் நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் சேலம் மாவட்டத்திலே ஆத்தூரிலே திரௌபதி அம்மன் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலிலே நீதிமன்றத் தீர்ப்புப்படி இரு சாரார் ஒருவருக்கொருவர் தங்களுடைய மனவிரோதத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்ற, உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இரு சாராரும் சேர்ந்து விழாவை நடத்தவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்ட பிறகும் கூட வல்லவன் வகுத்ததே வாய்க்கால் என்று சொல்லி வலியவர்களாக காட்சியளிக்கக்கூடியவர்கள் எளியவர்களை ஒதுக்கித் தள்ளிவைத்து போலீஸ் பாதுகாப்புடன் தங்களுடைய திருவிழா நடத்துகின்ற உரிமை கொண்டாடி வருகிற காரணத்தினால் அங்கே கலவரம் நடக்கிற சூழ்நிலை இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். அதைப்போல் தான் விருதுநகரிலே அண்மையிலே கோயில் திருவிழாவிலே ஏற்பட்ட ஒரு சிறிய பிரச்சினை பெரும் பிரச்சினையாக மாறியது. ஆகவே நீதிமன்றத்தினுடைய கட்டுப்பாட்டைக்கூட சில கோயில்களிலே இருக்கின்ற தர்மகர்த்தாக்கள் நிலை நிறுத்தமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதனையும் நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தக் கோயில் பற்றி நாம் தொலை தூரத்திற்கு சிந்திக்க வேண்டியது கடமை. ஆலைகளிலே எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்களோ அதைவிட அதிகமாக ஆலயங்களால் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். ஆலயங்களாலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற உண்மை ஒவ்வொரு ஆலயத்தையும் சென்று நாம் பார்க்கிறபோது நமக்குப் புரியும். அந்த ஆலயங்களிலே பணி செய்துகொண்டிருக்கின்ற ஆய்வாளர்கள், அறநிலையத் துறையைச் சேர்ந்தவர்கள் எந்தவிதமான விதிமுறைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்று தெளிவாக இன்னும் தெரியவில்லை. உதாரணமாக ஆய்வாளர்களுடைய அதிகாரங்கள் என்ன என்ன என்று இன்னமும் வரையறுக்கப்படவில்லை. அப்படி வரையறுக்கப்படாத காரணத்தினால் எந்த எந்தக் காரியங்களில் தாங்கள் தலையிட வேண்டும், எந்த எந்தக் காரியங்களிலே முடிவு எடுக்கவேண்டும் என்றும் தெரியாமல் இருக்கிறார்கள். எனவே அவர்களுடைய அதிகார வரம்பை இது, இதுதான் என்று வரையறுத்து தெளிவாகக் காட்டி விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஆலய வருவாயை பேணுவதிலே ஆலய நிர்வாகிகளும் கண்காணிப்

பாளர்களும் கூட்டுப் பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டும். அப்படிக் கூட்டுப் பொறுப்புடையவர்களாக இருக்கிற நேரத்திலே ஊழல்கள் பல நடக்காமல் தடுக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார்கள் சிலர் பொதுமக்களுடைய கோயிலை ஆண்டாண்டுகாலமாக பொது மக்களுக்காகப் பயன்பட்டு வந்த கோயிலை தமது என்று உரிமை கொண்டாடுகிற நேரத்திலே நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள் அரசாங்கத்தை எதிர்த்துக் கூட. அரசாங்க ஆணைகளை கூட அவர்கள் நிறைவேற்றுவதில்லை. இன்னொன்று, மாதவரத்திலே இருக்கின்ற ஒரு கோயிலில் கூட அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் தலையிட்டு அது பொது மக்களுடைய சொத்து என்ற காரணத்திற்காக பிறப்பித்த ஆணைகளைக்கூட மீறி அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், மாதவரத்திலே இருக்கிற அந்தத் தனியார்கள், அவர்கள் அப்படிச் செயல்பட்டுக் கொண்டிருப்பது மட்டுமல்ல, அவர்கள் நீதிமன்றத்திற்கும் கூட செல்கிறார்கள். சில சட்டங்களை நாம் உருவாக்கினால் தான் அந்த ஆலயங்களை நாம் நினைக்கிற வகையிலே நடத்த முடியுமோ என்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது. ஏற்கெனவே பல கோயில் நிர்வாகிகள் அல்லது தர்மகர்த்தாக்கள் என்று சொல்லப்படக்கூடியவர்கள் நீதிமன்றத்திலே அரசாங்கத்தை எதிர்த்து வழக்குப் போடுவதற்கு அவர்கள் அந்த ஆலயத்தினுடைய பணத்தை செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக ஆலயமே உங்களுக்குச் சொந்தம் இல்லை என்று அரசாங்கம் சொல்கிறபோது அந்த ஆலயம் தமக்கு சொந்தம் என்று சொல்வதோடு அல்லாமல் அந்த ஆலயத்தின் வருமானத்தை எடுத்தே அரசாங்கத்தை எதிர்த்து வழக்கு நடத்துவதற்கு பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னால் சட்டத்தின் மூலமாக அவைகளைத் தடுப்பதற்கான வழிவகை கண்டாக வேண்டும். இப்போது பல ஆலயங்களின் சொத்துக்களிலே பள்ளிக்கூடங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இப்போது அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு எல்லாம் வருடாவருடம் சிறிது சிறிதாக வாடகையைக் கூட்டிக்கொண்டே இருக்கிறார்கள். ஓரளவுக்கு அது நியாயம் என்றாலும்கூட கூட்டப்படுகிற வாடகைகளை பெற்றாக வேண்டுமென்றாலும் கூட வசதிகளைச் செய்து கொடுப்பதிலே மடாலயங்கள் இன்னும் சற்று அதிகமான கவனத்தைச் செலுத்தவேண்டும். பல இடங்களிலே பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. பள்ளிக்கூடங்கள் நடத்துவது நல்லதுதான். பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம் என்று பாடினானே. எனவே கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களிலே பள்ளிக்கூடங்கள் நடத்துவதில் தப்பு இல்லை. ஆனால் அந்தப் பள்ளிகளுக்கு வேண்டிய கழிவறைகள், அந்தப்

பள்ளிகளுக்கு வேண்டிய விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றை கொடுப் பதற்குரிய வசதி இருக்கின்ற மடாலயங்களாவது அவைகளைக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல கோயில்களிலே போனவுடனேயே அவர்கள் வடமொழியிலே தங்களுடைய மந்திரத்தைச் சொல்லத் தொடங்குகின்றார்கள். இது நீதி மன்றத்தைப்பற்றிய பிரச்னையாக இருந்தாலும்கூட, நான் இங்கே பணிவாகத் தெரிவித்துக்கொள்வேன். தெரிந்த மொழியிலே உடனடியாக அந்த வழிபாடு களை நடத்துவதிலே எந்தவிதமான தவறும் இல்லை. வேறொரு மொழியிலே அவர்கள் வழிபாடு வேண்டுமென்று விரும்பினால் அது வேறு விஷயம். ஆனால் போனவுடனேயே நின்று கொண்டிருக்கின்ற மக்களுக்குப் புரிகின்ற வகையிலே, தமிழிலே வழிபாடு வருவதற்குரிய வழிவகைகளை நாம் காண வேண்டுமென்று தான் இந்த அரசாங்கமும் விரும்பும்; இங்கிருக்கின்றவர்களும் விரும்புவார்கள்.

அங்கெல்லாம் நிச்சயமாக ஓதுவார்கள் இருத்தல் வேண்டும்; தேவாரத்தைப் பண்ணோடு இசைத்து, மிக அழகாக அதனை எடுத்துரைக்கின்ற அற்புதங் களை விளைவிக்கின்றவர்களெல்லாம் நம் நாட்டில் இருந்து கொண்டிருக்கிறார் கள். அந்த ஓதுவார்கள் தேனென, பாலென அவர்கள் பாய்ச்சுகின்ற அந்தத் தேனிசைக் கவிதைகளைக் கேட்கின்றபொழுது இறைப்பற்று தானே வருகின்ற அளவிற்குச் செய்யும் ஆற்றல் மிக்கவர்கள் பலர் இருக்கிறார்கள். எனவே, ஓதுவார்கள் இல்லாத கோயிலே இல்லை என்று சொல்லுகின்ற சூழ்நிலையை நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையிலே இலங்கை, மலேயா போன்ற பகுதிகளுக்குச் சென்றிருந்த பொழுது நமது கலாச்சாரத்தை, பண்பாட்டை, நாகரீகத்தைப் பாதுகாத்து வருவது அங்கிருக்கின்ற ஆலயங்கள்தான் என்று தெரிகின்றபொழுது, ஆத்ம சாந்திக்காகப் போய்க்கொண்டிருப்பவர்கள் மட்டுமல்லாமல், ஆத்மா லயிக்கின்ற இடம் ஆலயம் என்ற காரணத்திற்காக அங்கே போய்க்கொண்டு இருக்கின்ற வர்களெல்லாம் தமக்குத் தெரிந்த தாய்மொழியிலே ஓதுவார்கள் பாடுவதைக் கேட்பதற்கு விரும்புகிறார்கள்; இலங்கை, மலேயா போன்ற பகுதிகளிலே ஓது வார்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள்; அதிலும் தமிழகத்திலேயிருந்து கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே, ஓதுவார்களுக்கு என்று அதிகமான பள்ளிகளை நடத்தி, இசைப் பண்களை அவர்களுக்குச்

TRUTH ALONE TRIUMPHS

சொல்லிக்கொடுத்து, இளைஞர்களுக்கு வாய்ப்பளித்து அவர்களை அனுப்புகின்ற பணியினையும், அவர்கள் கேட்கின்ற நேரத்திலே கொடுக்கின்ற பணியினையும் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இசைமயமாக ஆனதுதான் பக்திப் பாடல்களெல்லாம், சமயப் பாடல்களெல்லாம். "ஏழிசையாய், இசைப் பயனாய்" நிற்பவன் இறைவன்; "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" என்று பாடினார்கள் பக்தர்கள். எனவே, அந்தப் பாடல்களுக்கெல்லாம் இசையமைத்து, இசைத் தட்டுக்களை அரசாங்கமே வெளியிட்டால் நன்றாக இருக்கும்; அறநிலைய அமைச்சகமே வெளியிட்டால் நன்றாக இருக்கும் என்கின்ற என்னுடைய கனிவான வேண்டுகோளை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல பாடல்களை, நல்ல பண்ணிலே, நன்றாகப் பாடுகின்றவர்களை வைத்துப் பாட வைத்து வெளியிடுவதன் மூலம் நல்ல பணியினைச் செய்தவர்கள் ஆவீர்கள் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைவிட மேலாக இன்னொரு பணிவான வேண்டுகோள் இருக்கிறது. ஆலயங்களைச் சுற்றிப் பல தத்துவங்கள் எழுந்திருக்கின்றன. சில சரியாக இருக்கும்; சில தவறாக இருக்கும். உதாரணத்திற்குச் சொல்லப்போனால், ஆலயங்களிலே ஏற்படுத்தி இருக்கின்ற சடங்குகளிலே எவையெல்லாம் விஞ்ஞான அடிப்படையிலே எழுந்தவை; எவையெல்லாம் மெய்ஞானத்தை வளர்ப்பதற்கென எழுந்தவை; எவையெல்லாம் அஞ்ஞானத்தாலே மூடப்பட்டிருக்கின்றன. ஆக மூன்றும் இருக்கின்ற ஆலயங்களிலே, பார்க்கின்றோம். விஞ்ஞானத்திற்கு எழுந்த சடங்குகள் இருக்கின்றன; மெய்ஞானத்தை வளர்ப்பதற்காக எழுந்த சடங்குகள் இருக்கின்றன; சுயநல வாதிகள் பலர் இவைகளையெல்லாம் மூடி மறைத்துத் திரை போடுவதற்கு என்று அஞ்ஞானத்தை அங்கே கொண்டு விட்டும் இருக்கின்றனர். அந்த அஞ்ஞானம் எது என்று கண்டு அதை வெட்டிவிட்டு, மெய்ஞானத்தை வளர்ப்பவை எவை, விஞ்ஞானத்தை வளர்ப்பவை எவை என்பதையெல்லாம் ஆராய்வதற்காக முத்தமிழும் கற்றவர்களும், இசைத் துறையிலே கற்றவர்களும், விஞ்ஞானத் துறையிலே கற்றவர்களும் அடங்கிய குழுக்களை நீங்கள் நியமித்து ஆராய்ந்து நல்ல முடிவுகளை வெளியிடுவதன் மூலம் அந்த ஆலயங்களிலே இருக்கின்ற மெய்மைத் தன்மைகளை வெளியே கொண்டு வர முடியும் என்கின்ற தகவலையெல்லாம் உங்களுக்குச் சொல்லி, இப்படிப்பட்ட நல்ல பணிகளிலே நீங்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பற்றிப் பேச வேண்டிய பொருள்கள் பல இருந்தாலும் கூட, நேரத்தின் அருமையினைக் கருதி—இன்று பல செய்திகளை நான் சொல்ல வேண்டுமென்று விரும்பினாலும்கூட இந்த அளவிற்கு மட்டும் என்னுடைய கருத்துக்களைச் சொல்லி, இவைகளிலேயெல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னைப் பேச அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

* திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தற்காலிகத் தலைவரவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாக மானியக் கோரிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் இந்த விளக்க நூலில் மிகத் தெளிவாக, விவரமாக, உண்மைகளைப் பெரும்பகுதி மூடி மறக்காமல் இந்த நூலில் கொடுத்திருக்கிறார்கள். நான் அதற்காக அமைச்சரவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஆனால் தஞ்சை மாவட்டத்தில், சீர்காழி தாலுக்காவில் உள்ள வைத்தீஸ்வரசுவாமிக்கு இருக்கக்கூடிய நகை 5 இலட்சம் ரூபாய் அளவிற்குத் திருட்டுப் போய் இருக்கிறது. அதை வைத்திருந்தவர் சுப்பிரமணியப் பிள்ளை. ஆனால் அவருக்கு என்ன தண்டனை? ஆனால், அவருக்கு என்ன தண்டனை கிடைத்திருக்கிறது என்று கேட்டால்,—ஒரு கோயிலின் சொத்து ரூ. 5 இலட்சம் என்று சொன்னால், யாரும் தனிப்பட்டவர்கள் சம்பாதித்த சொத்து அல்ல—நிலத்தின் பெயரால், வரக்கூடிய வரவு, பக்தர்கள் கொடுக்கக்கூடிய நிதி, பக்தர்கள் கொடுக்கக்கூடிய தங்கங்கள் இவைகளையெல்லாம் சேர்த்துத்தான் ரூ. 5 இலட்சம் நகைகள்; ஆனால் என்ன நடவடிக்கைகள் என்று கேட்டால்—மீண்டும் அந்த இலட்சக் கணக்கான சொத்தை அவரிடத்திலே ஒப்படைத்து, அவர் மாதச் சம்பளத்திலே கொஞ்சம், கொஞ்சமாகப் பிடித்துக் கொள்ளலாம் என்று மீண்டும் அவரிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்தால் தமிழகத்தில் இன்னும் ஆயிரக்கணக்கான கோயில்களில் இருக்கக்கூடிய சொத்துக்களையெல்லாம் மனித பெருச்சாளிகள் சாப்பிடுவதற்கு மேலும் வாய்ப்பிருக்கும். என்னுடைய தாழ்மையான கருத்து, இப்படி ரூ. 5 இலட்சம் சொத்து திருடு போயிருக்கும்போது அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்தக் குற்றம் தீருகிற வரையிலே, அவரை அந்த இடத்திலிருந்து நீக்கி வைக்கவேண்டும். இதன்மீது சர்க்கார் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 28] (திரு. பொ. உத்திராபதி)

அதேபோல், இப்பொழுது எதற்கெடுத்தாலும் அப்பீல்தான். சிதம்பரம் கோயிலிலே தீட்சிதர்—உடனே இப்பொழுது கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கிறார். திருவாடுதுறை ஆதினம் நியமனம்பற்றி உடனே அவர் அப்பீல் செய்கிறார். நெல்லை மாவட்டம் குடவங்குளம்—இனாம் ஒழிப்பு சம்பந்தமாக நிலத்தை எடுத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக உடனே கோர்ட்டிலே போய் ஸ்டே, இப்படி கோவில் மடம் அறக்கட்டளை சம்பந்தப்பட்ட அந்த தீட்சிதர், ஆண்டாண்டுகாலமாக அவர்களே அதை அனுபவித்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்கார் ஒரு நிலை எடுத்தால், உடனடியாக அவர்கள் அப்பீல் செய்வதும் ஸ்டே வாங்குவதும் என்றால், மீண்டும் பெருச்சாளிகள் போல் கொள்ளை அடிப்பதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொள்வதற்கும் இப்படி ஒரு நடவடிக்கை இருக்கிறது. ஆகவே, உடனடியாக அவைகளையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேமாதிரி, இனாம் ஒழிப்பு சம்பந்தமாக பட்டா கொடுப்பதற்கு நிலம் எடுத்தாயிற்று. எடுத்ததற்குப் பிறகு, அந்த ஆதினத்திலே உள்ளவர்கள் அதைத் தடுத்து நிறுத்தி, அந்த நிலத்தை மீண்டும் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே போல். இந்து அறநிலையப் பணிகளைப் போலவே, முகமதியர்களுடைய மத, பொது ஸ்தாபனங்களின் சொத்துக்களைப் பராமரிக்க வக்ஃப் போர்ட் ஒன்றிருக்கிறது. அதைப் போல, மற்ற ஸ்தாபனங்களும் நிறைய சொத்துக்களைத் தமிழகத்திலே வைத்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கை பற்றி இந்தச் சட்டமன்றத்திலே கூட வந்திருக்கிறது. அது சம்பந்தமான குறிப்புகளையும் இந்த அவையில் வைத்து விவாதித்து, அந்தப் பொதுச் சொத்துக்களையும் எப்படி பராமரிப்பது என்று முடிவு செய்ய அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும்.

அதேமாதிரி, அப்பச்சியார் மடம் என்பது பற்றி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே அவையிலே விவாதத்திற்கு வந்தது. அவர் காரிலே போகும்போது ஜனங்கள் அவர் காலிலே விழுகிறார்கள் என்று சொன்னால், எங்கேயோ ஒரு காலத்திலே சர்வாதிகாரம் இருந்தது, வெள்ளை ஏகாதிபத்தியம் இருந்த காலத்திலே. இப்பொழுது ஜனநாயக நாட்டிலே மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி வந்த பிறகு இப்படி ஒரு கொடுமையான நடவடிக்கை இருக்கிறது என்று சொன்னால், உடனடியாக அது அற்றப்பட வேண்டும். 1953 ஆம் ஆண்டிலிருந்து அந்தக் கோயிலுக்கு வரக்கூடிய வருமானங்கள், அந்த 50 ஏக்கர் நிலத்திலே இருக்கக்கூடிய

வருமானங்கள், இத்தனையையும் ஒரு நபர் ஆட்சியையும் மிரட்டி, அங்கேயிருக்கக்கூடிய அதிகாரிகளையும் மிரட்டி, மக்களும் தனக்கு அடிபணியக் கூடிய அளவுக்கு ஒரு நபர் வைத்திருக்கிறார் என்று சொன்னால், அதை உடனடியாகக் கவனித்து. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதே போல், இப்படி கொள்ளை அடிக்கிறார்கள், கோயில் சொத்தை எடுத்துக்கொள்கிறார்கள், அந்தச் சொத்தை எடுக்க வேண்டாமென்று சொன்ன ஒரு நல்ல அதிகாரியைக் கொலை செய்கிறார்கள். இப்படியெல்லாம் எடுத்ததற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், ஒன்று சொல்கிறேன், விவசாயிகள் ஏதாகிலும் குத்தகை பாக்கி என்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் உடனடியாக ரெவின்யூ கோர்ட்க்குப் போகிறார்கள், ஜப்தி நடவடிக்கை எடுக்கிறார்கள். அதற்காக, வழக்கறிஞர்களும், அதிகாரிகளும் போய் வருவதற்கு இலட்சக்கணக்கான ரூபாய், கோயிலுக்கு வரும் வருமானம் செலவாகிறது. அதே போல் விவசாயிகளுக்கும் செலவாகிறது. அதைப் போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதனாலேதான், தர்மகர்த்தா போடும்போது, எல்லா கோயில்களிலும் போட்டி வருகிறது. தர்மகர்த்தாவாக வருவதற்கு இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்கிறார்கள். அந்த டிரஸ்டிகளாக வருவதற்கு விலை கொடுத்து வாங்குகிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் ? விவசாயிகள் கொடுக்கக்கூடிய வருமானம், பொதுவாக வரக்கூடிய வருமானங்கள், இவைகளையெல்லாம் பங்குபோடத்தான், தர்மகர்த்தா பதவிகளுக்கு போட்டி வருகிறது. ஆகவே, அவைகளை யெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

நான் பணிவோடு கேட்டுக்கொள்வது, 5 இலட்சம் ஏக்கர் நிலம், 23,30,00,000 ரூபாய் பாக்கி இருப்பதாக அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது எங்கிருந்து வருகிறது ? வறட்சி, வெள்ளம், புயல், பருவ மழை பாதிப்பு, கடன் தொல்லை, குத்தகைப் பாக்கி இப்படிப்பட்ட தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிற விவசாயிகள்மீது குத்தகைக் கட்ட தவறியதன் காரணமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால்கூட அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் நேரடியாக விரோதம் வளருகிறது ; விவசாயிகளுக்கும் அரசாங்கத்திற்கும் நேரடியாக பகைமை வளருகிறது. இதைப் போக்க முன்னாள் முதலமைச்சர் மதிப்பிற்குரிய பக்தவத்சலம் அவர்களும் சேலத்தில் கூடிய பிராமணர்கள் மாநாட்டில் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். . தெய்வத்தின் மேல் நூற்றுக்கு நூறு அக்கறை படக்

1981 ஏப்ரல் 28] (திரு. பொ. உத்திராபதி)

கூடிய பிராமணர்கள் சேலத்தில் கூட்டிய மாநாடு அது. "கோவிலுக்கு இருக்கக்கூடிய நிலத்தை குத்தகை விவசாயிகளுக்' சொந்தமாக்க வேண்டும் என்று. நான் கேட்டுக்கொள்வது 75—20 வாரத்தின் அடிப்படையில் 25 வாரத்திற்குரிய ஆறு ஆண்டுக்குரிய பணததை அந்த நிலத்திற்குரிய விலை யாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; அந்தப் பணத்தை தேசியமயமாக்கப் பட்ட வங்கியிலே பிக்சட் டிபாசிட் செய்து, அதிலிருந்து வரக்கூடிய பணத்தை இந்த கோவில் காரியங்களுக்குச் செலவிட வேண்டும்; அப்படிச் செய்தால் அதிகமான அதிகாரிகள் தேவையில்லை; வழக்குத் தேவையில்லை; நீதி மன்றத்திற்குப் போக வேண்டியதில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த கூட்டத்தில். இதனால் பெரும் கொள்ளை அடிப்பதைக் கூட தடுக்க முடியும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல ஆதி திராவிட மக்கள், ஏழை எளிய மக்களுக்கு கோவில் மனைகளை எடுத்துக்கொடுப்பதிலே கூட கோவில் அதிகாரிகள் கொடுக்க முன்வருவதில்லை. என்னுடைய தொகுதியில் கொரட்டூரில் 1972-ல் ரோட்டுக்கு அருகாமையில் தரிசாக கிடந்த நிலத்தை அரிசன மக்களுக்குக் கொடுக்க அரிசன நல இலாகா சர்வே செய்தார்கள். அந்த நிலத்தை இன்னும்கூட கொடுக்க முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அந்த அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு எல்லாம் அந்த இடத்தை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி தரிசாக இருக்கிற இடம், கோவிலுக்குத் தேவையில்லாத இடம் எங்கிருந்தாலும் அதை மனை இல்லாத மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு கொடுப்பதில் அந்த அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இல்லாமல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல அறநிலையத்துறை ஊழியர்களைப்பற்றி ஒன்று கூறப் பட்டிருக்கிறது. ரூ. 2.50லிருந்து ரூபாய் 7.50 வரையில் குடும்ப நல நிதிக்கு பங்குத்தொகை செலுத்த வேண்டும். 2,000 முதல் 5,000 வரை உதவிப் பணமாக இறந்துவிட்டவர் குடும்பத்திற்கு அந்த கோவில் அதிகாரி என்ன நிர்ணயிக்கிறாரோ அதைக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. இலட்சக் கணக்கான ஊழியர்கள் இந்த தெய்வ பக்தியின் அடிப்படையில் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய சம்பள வித்தியாசத்தைப் பார்க்காமல், வருமானத்தைப் பார்க்காமல் ஊழியர் ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்திற்கு, அரசு ஊழியர் இறந்து விட்டால் அவருடைய குடும்பத்திற்குக் கொடுக்கப்படுவதைப் போல் 10,000 ரூபாய் உதவித் தொகை எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் வழங்க வேண்டும்.

அதேமாதிரி அரசு ஊழியர்களுக்கு விலைவாசி உயர்வு புள்ளிவிவர அடிப் படையில் சம்பள உயர்வு அளிக்கப்படுவதைப்போல அறநிலையத்துறை ஊழியர்களுக்கும் கொடுக்க வேண்டும். கோவில் பணியாளர்களுக்கு இன்றைக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறது. அவர்களை எல்லாம் ஒட்டுமொத்தமாக அரசு ஊழியர்களாக விரைவில் மாற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்த வருமானம் உள்ள கோவில் ஊழியர்களுக்கு குறைந்த சம்பளம், அதிக வருமானம் உள்ள கோவில் ஊழியர்களுக்கு அதிக சம்பளம் என்று வழங்கப்படுகிறது. ஆனால் விலைவாசி ஏற்றம் என்பது எல்லோருக்கும் ஒரேமாதிரிதான் இருக்கிறது. ஆகவே, கோவில் வருமானக் கணக்கைப் பார்க்காமல் தமிழ்நாடு பூராவும் பணிபுரியக்கூடிய எல்லா ஊழியர்களுக்கும் தகுதிக்கு ஏற்ப ஒரேமாதிரியான சம்பளம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சம்பளத்தைப் பொறுத்தவரையில் எங்கள் மாவட்டத்தில் 4 கலம், 5 கலம், 6 கலம் என்று நெல்லாக கொடுக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் பணமாகக் கொடுக்கிறார்கள். ஆகவே, சம்பளத்தைப் பொறுத் தவரையில் அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற நடைமுறைக்கு ஏற்ப கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, தகட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு வயிரன்கோவிலிலிருந்து 15,000 ரூபாய் கொடுக்க முடிவு செய்து, மத்திய வங்கி டிராப்டு கொடுப்பதாகச் சொல்லி, அதை ஸ்டேட் பாங்கில் மாற்றிக்கொள்ளச் சொன்னார்கள். ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால் அந்தப் பள்ளிக் கட்டிடம் கட்ட முடியவில்லை. தகட்டூர் வேதாரணியம் தாலுகாவில் இருக்கிறது.

அந்தப் பகுதிக்கு 17—8—1980 அன்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கும் கூட விவரம் தெரியும். ஆகவே உடனடியாக அந்தத் தடையை நீக்கி அந்தப் பள்ளிக் கட்டிடத்திற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆலயங்களிலே பெரும்பாலான வருமானம் கிடைக்கின்றது. அதிகமான பக்தர்கள் நிதியினை அள்ளி அள்ளித் தருகிறார்கள். இந்த நிதியினைப் பாதுகாக்க

வேண்டும். தமிழகத்திலே இருந்து வெளிநாடுகளுக்கு யாராவது செல்ல வேண்டும் என்றால் பாஸ்போர்ட் பெறுவதற்காக பல மாதங்கள் காத்துக் கிடக்கவேண்டி இருக்கின்றது. சமீபத்திலே கூட ஆந்திராவிலே இரயில் விபத்திலே சிக்கிய ஒரு முஸ்லிம் பிரமுகர் ஒருவர் தன்னுடைய உயிரை விட மேலானது பாஸ்போர்ட் என்றும் அது தொலைந்துவிட்டதே என்றும் கவலைப் பட்டு இருக்கிறார்கள். அப்படி பாஸ்போர்ட் இல்லாமல் யாரும் வெளிநாடு களுக்குச் செல்ல முடியாத நிலையில் தமிழகத்திலே உள்ள நடராஜர் சிலை களும், மற்ற சிலைகளும் பாஸ்போர்ட் இல்லாமலே வெளிநாடுகளுக்கு கடத்தி விடுகின்றனர் பெரிய கொள்ளைக்கூட்டத்தினரும், பெரும் பெருச்சாளிகளும். அதிகாரிகளைத் தங்களது கையிலே வைத்துக்கொண்டு அவர்கள் அமெரிக்கா, லண்டன் போன்ற இடங்களுக்கெல்லாம் சிலைகளைக் கடத்திவிடுகிறார்கள். அதுமட்டுமல்ல நேர்மையாக நடக்கவேண்டுமென்று கருதிய அதிகாரி கூட திருச்செந்தூரிலே கொலை செய்யப்பட்டிருக்கிறார். இதனால் தமிழகமே பரபரப்பாகி இருக்கின்றது. இது குறித்து இன்னும் சரியாக நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட கொள்ளைகளிலிருந்து கோவில் சொத்தைப் பாதுகாக்க எதிர்காலத்திலே சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பினாமி நிலங்களை எடுத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும் உண்மையான விவசாயிகளுக்கும் அவற்றைச் சொந்தமாக்குகின்ற வகையிலே நடவடிக்கை எடுப்பதுடன் கோவில்களைத் திறம்பட நடத்தக்கூடிய வகை யிலே அதாவது கோயில் சொத்துக்களை பாதுகாக்கக்கூடிய வகையிலே நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கா. வே. கந்தசாமி: மாமன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, அறநிலையத்தின் மானியக் கோரிக்கை பற்றி என்னையும் பேச அழைத்த தற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். தமிழகத்திலே பல இலட்சக்கணக்கான நிலங்களைப் பொறுத்தவரையில் அதாவது தமிழகத்திலே இருக்கக் கூடிய தனி நபர்களிடத்திலே இருக்கக்கூடிய சொத்துக்களில் நான்கில் ஒரு பங்கு ஆலயங்களின் சொத்துக்களாக இருக்கின்றன. அந்த சொத்துக்கள் எல் லாம் மண் தோன்றிய காலத்திலே இருந்து பரவலாக மன்னர்களாலும், பக்தர்களாலும் வாரி வாரி கொடுக்கப்பட்டு, இன்றைக்கு அந்த சொத்துக்கள் எல்லாம் தனி நபர்களின் கைகளிலே சிக்கிக்கொண்டு இருக்கின்றன. அதனால் ஆலயங்களுக்கும் வருவாய் வருவதில்லை. தனிப்பட்டவர்கள்தான் அவற்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு குத்தகை என்ற ஒரு

சட்டத்தை வைத்துக்கொண்டு அந்த சொத்துக்கள் மூலமாக பணத்தை எல்லாம் வசூல் செய்ய முடியவில்லை. அந்தப் பணத்தைக் காப்பாற்று வதற்கும் யாரும் முன்வருவதில்லை. ஆகவே அந்த நிலங்கள் பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கோடிக்கணக்கான சொத்துக்கள் இன்றைய தினம் பாழாகிக் கொண்டு இருக்கின்றன. அவை காடுகளாகவும் தரிசு நிலங்களாகவும் கிடக்கின்றன. அந்தக் கோயில்களைப் பராமரிப்பதற்குக் கூட பணம் இல்லாத நிலை இருக்கின்றது. அதே நேரத்திலே கோயில் நிலங்களை குத்தகைக்கு எடுத்திருப்பவர்கள் அவற்றைச் சரியாக வைத்திருக் கின்றார்களா என்றால் அதுவும் இல்லை. ஆகவே கோயில் நிலத்தை ஆங்காங்கே வைத்துக் கொண்டிருப்பவர்களைப் பொறுத்தவரையில் அந்த நிலங்களைக் குறிப்பிட்ட ஒரு விலைக்கு அவர்களுக்கோ அல்லது அதற்காக ஒரு சட்டத்தை கொண்டு வந்து அவர்களிடத்திலே இருந்து அவற்றைக் கைப்பற்றக்கூடிய வகை யிலேயோ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோவில்களுக்கு அறங்காவலர்களை நியமிப்பதைப் பொறுத்த வரையில் தவறுகள் நடந்துவிட்டதாகச் சொல்கிறார்களே, இது குறித்து இந்த மாமன்றத்தின் தலைவர் அவர்கள் ஒரு கணம் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரையை எடுத்துக்கொண்டால் அங்கே கோவில் சொத்தைப் பாதுகாப்பவர் யார் என்று பார்த்துத்தான் அறங்காவலராக திரு. சிதம்பரம் செட்டியார் அவர்களை நியமித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேமாதிரி பழனியிலே எடுத்துக் கொண்டால், அங்கே ராதா தியாக ராசன் என்ற ஒரு பெண்ணை அறங்காவலர் தலைவராக போட்டிருக் கிறார்கள். இப்படி புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எப்படிப் பட்டவர்களை, கோவில்களுடைய தலைவராக போட வேண்டும்; எப்படிப் பட்டவர்களைப் போட்டால் அந்தக் கோவில்களுடைய நடைமுறைகளை நல்ல முறையில் பாதுகாக்க முடியும்; எப்படிப்பட்டவர்களைப் போட்டால், அந்தக் கோவில்களுடைய சொத்தை சுரண்டலிலிருந்து பாதுகாக்க முடியும் என்பதைப் பார்த்து, அப்படிப்பட்டவர்களை அறங்காவலர்களாக புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு போட்டிருக்கிறது.

எனவே, தமிழகத்தில் இதுவரையில் இல்லாத அளவு கோவில்களுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு கோவில்களின் சொத்துக்கள் பாதுகாப்பு இல்லாமல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 28] (திரு. கா. வே. கந்தசாமி)

இருந்தது. இன்றைக்கு அவைகள் பாதுகாப்பாக இருக்கின்றன என்று சொன்னால், யாரிடத்திலே எந்த வேலையைக் கொடுத்தால் அது சரியாக நடைபெறும், பாதுகாப்பாக இருக்கும், நல்லமுறையில் செயல்படும் என்பதைப் பார்த்தே, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, அந்தந்த நிர்வாகத்தை யார்யாரிடத்திலே கொடுக்க வேண்டுமோ அப்படி கொடுத்திருக்கிறார்கள் என்றும், அதுதான் முக்கியமான காரணம் என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று தமிழகத்திற்கு வருகை தருகிற வெளிநாட்டவர்கள் கூட இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் நல்லமுறையில் கோவில்களின் நிர்வாகமும், கோவில் சிலைகளும் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால் சென்ற ஐந்து, ஆறு ஆண்டுக் காலங்களுக்கு முன்பாக, இப்படிப்பட்ட சிலைகள் தமிழகத்தின் புராதன பழமையான அழகிய சிலைகள் திருட்டுப்போகின்ற நிலைமையில் அதிகமான அளவில் இருந்தன. எந்தக் கோவில்களில் பார்த்தாலும், சிலைகள் கடத்தப்பட்டு, வெளிநாடுகளுக்கு அவைகள் பல இலட்சக் கணக்கான ரூபாய்களுக்கு விற்கப்பட்டன. ஆனால் இன்றைக்கு, கோவில்களின் சிலைகள் பாதுகாப்பாக இருக்கின்றன, கோவில்களின் சொத்துக்கள் பாதுகாப்பாக இருக்கின்றன என்று சொன்னால், அது மிகையாகாது என்றும், அப்படி ஆலய சொத்துக்களுக்கு சரியான முறையில் பாதுகாப்பு கொடுத்திருக்கிற பெருமை, நமது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைச் சாரும் என்றும் சொல்லிக்கொண்டு, எனக்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டின் அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, இந்த மானியத்தை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகளைப் பேச சந்தர்ப்பம் அளித்ததற்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறிய பிறகு, அந்த ஆட்சிக் கட்டிலின் ஒரு அங்கமான நமது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகுதான், ஆலயங்களிலே வழிபாடுகள் எல்லாம் காலாகாலத்தில் முறையாக நடைபெறுகின்றன. அறக்கட்டளைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இன்றையதினம் தமிழகத்து மக்கள் பெருமளவில் தங்களிடம் இருக்கும நிதிகளை ஆலயங்களுக்கு நன்கொடையாக அளித்து வருகிறார்கள். அதன மூலமாக பல ஆலயங்களில் திருப்பணிகள் மிகப் பெரிய அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆலயங்களுக்கென்று இந்த ஆண்டு கிட்டத் தட்ட 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, இந்த அரசு ஆலயங்களைப் பாதுகாப்பதிலே எந்த அளவு அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது என்பதை மக்களும் அறிவார்கள். நாமும் அறிவோம். ஆனால் இதற்கு முன்னாலே இருந்த அரசு 1 கோடி ரூபாய் அல்லது 1.12 லட்சம் ரூபாயேதான் ஒதுக்கியிருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டிலே. அன்றையதினம் 26,241 ஆலயங்கள் அரசினுடைய நிர்வாகத் திலே இருந்தன. ஆனால் இன்றையதினம் கிட்டத்தட்ட 31,423 ஆலயங்கள் அரசினுடைய நிர்வாகத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆலயங்களின் ஆண்டு வருமானம் கிட்டத்தட்ட 16 கோடி ரூபாய் என்று அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு இன்றையதினம் ஆலயங்களின் வருமானம் பெருகியிருக்கிறது என்றால், அது அமைச்சர் அவர்களுடைய பணியின் சிறப்பையே குறிக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், நம்முடைய அமைச்சர் அவர்கள், ஆலயங்களின் பணி சிறப்பாக நடைபெறவேண்டும் என்பதற்காகவும், ஆலயங்கள் நல்ல முறையில் இயங்க வேண்டும் என்பதற்காகவும், கணணும் கருத்துமாக அதைக் கண்காணித்து வருகிறார்கள். சிறு சிறு இடங்களிலே கூட ஏற்படும் சிறு சிறு பிழைகளையும், கண்டுபிடித்து அந்தப் பிழைகளைக் களைவதற்கு, தீவிர மாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

ஆலயங்களில் அறங்காவலர்களை நியமிப்பதற்காக நான்கு வகையாக நான்கு பிரிவுகளாகப் பிரித்து அவரவர்களுக்கு அந்தந்தப் பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். ரூ. 10,000-க்கு குறைவாக வருமானம் உள்ள ஆலயங் களாக இருந்தால் உதவி ஆணையாளர் பொறுப்பிலும், ரூ. 10,000-லிருந்து ரூ. 50,000 வரை வருமானம் உள்ள ஆலயங்களாக இருந்தால் துணை ஆணை யாளர் பொறுப்பிலும், ரூ. 50,000-ல் இருந்து ஒரு லட்சத்திற்குக் குறைவாக உள்ள அளவிற்கு வருமானம் உள்ள ஆலயங்களாக இருந்தால் ஆணையாளர் பொறுப்பிலும், ஒரு லட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள ஆலயங்களாக இருந்தால் அரசும் கோவில்களில் ட்ரஸ்டிகளை நியமிக்கலாம் என்ற முறையில் நான்கு வகையாக 1979-ல் பிரித்திருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 28] (திரு. வெ. அரங்கராசன்)

என்றால் அரசு அந்தளவிற்குப் பணிகளை விரைவாக முடித்துச் செயல்பட வேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாக இருக்கிறது என்பதை எடுத்துச் காட்டுகின்றது.

மேலும், இந்த அரசு 1—9—1980 முதல் குடும்ப நலத்திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி அவர்கள் சம்பள அடிப்படையில் குறைந்தது ரூ. 2.50-ல் இருந்து ரூ. 7.50 வரை பங்குத்தொகை வசூல் செய்து பணியாற்றுகிற காலத்தில் அவர்கள் இறந்துவிட்டால் ரூ. 2,000-ல் இருந்து ரூ. 5,000 வரை அவர்கள் குடும்பத்திற்கு நிதி வழங்குகிறது. பணி பார்க்கிற நேரத்தில் அகால மரணம் அடைந்துவிட்டால் அரசாங்கம் ரூபாய் 2,000-த்தில் இருந்து ரூபாய் 5,000 வரை ரொக்கத் தொகை அவர்கள் குடும்பங்களுக்குக் கொடுக்கிறது. இந்தத் திட்டம் தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

1980-81-ம் ஆண்டில் கோவில்களில் சிலைகள் திருட்டு போகாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கவும், கோவில் திருப்பணிகளுக்காகவும் கிட்டத்தட்ட இருபது இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. சிலைத் திருட்டை ஒழிக்க வேண்டும் என்ற வகையில் மிகத் தீவிரமாக எல்லா ஆலயங்களிலும் சிலை பாதுகாப்பிற்காக பாதுகாப்புச் சுவர் எடுப்பதிலும் கெட்டிக் கட்டடம் அமைப்பதிலும், தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள்.

இன்றையதினம் ஸ்ரீரங்கம் ஆலயமும் சமயபுரம் ஆலயமும் ஒரே நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகின்றன. சமயபுரம் ஆலயத்திற்கு வருமானம் அதிக அளவில் இருப்பதால் அதைக் கொண்டு ஸ்ரீரங்கம் ஆலயம் நடைபெறவேண்டும் என்ற நிலை இருப்பதால் இரண்டையும் தனித்தனியாகப் பிரித்து இரண்டு ஆலயங்களுக்கும் நிர்வாகக் குழுவை தனியாகவே போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒரு லட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள கோவில்களில் கிட்டத்தட்ட 82 புலவர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். இதனால் தமிழ்ப் புலவர்களிடையே வேலைவாய்ப்பு அதிகரித்திருக்கிறது. ஆகவே இதே போல் மற்ற பல ஆலயங்களிலும் உடனடியாக புலவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருசில குறிப்பிட்ட ஆண்டுகள் போனால், மூன்றாண்டுகள் ஆனால் கடன் பத்திரங்கள் காலாவதியாகின்றன என்று சொல்வதுபோல் குத்தகை பாக்கி வசூல் பொறுத்தும் தள்ளுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி தனியாக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து கோவில் மூலம் குத்தகைக்குவிடும் நிலங்களில் குத்தகை பாக்கி இருந்தால் அதை வசூல் செய்ய வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன்: அவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக் கட்டளைகள் நிர்வாகம் என்ற இந்த மானியக் கோரிக்கைமீது பேசுகிற வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் ஏறத்தாழ சமய நிறுவனங்கள் 33,455 இருப்பதாக அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் இருந்து வருகிற ஆண்டு வருமானம் ஏறத்தாழ 16 கோடி ரூபாய். ஆலயங்கள் 31,423. மற்றும் மடங்கள் மடங்களைச் சார்ந்த கோவில்கள், அறக்கட்டளைகள் மற்றவை எல்லாம் எஞ்சியவையாகும். இப்படிப்பட்ட ஒரு பிரமாண்டமான அமைப்பாக இது இருந்துவருகிறது. இதில் ஏறத்தாழ அர்ச்சகர்களாக சுமார் 28,500 பேர்கள் வேலை பார்க்கிறார்கள். இதர பணியாளர்கள் 83,999-க்கு மேல் இருக்கிறார்கள். இவ்வளவு பெரியதொரு அமைப்பு இந்தியாவில் மற்ற எந்த மாநிலத்திலும் நிச்சயமாக இல்லை.

(பிற்பகல் 12-20)

தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, அறநிலையத் துறை என்பது ஒரு சீரான பராமரிப்பிலே தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. ஆனால், அது மட்டும் போதாது. இதை மேலும் செம்மைப்படுத்துவதற்கு, முஸ்லீம்களுக்கு வக்ப் போர்டு இருப்பதைப்போல், கிறித்துவ சமயத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளுக்கும் தனி நிர்வாக அமைப்புகள் இருப்பதைப்போல், இதற்கு என்று ஒரு அடானமல் பாடி போன்ற ஒரு அமைப்பு இருக்கவேண்டுமென்று பல்லாண்டு காலமாக வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அதையே நான் வற்புறுத்த விரும்புகிறேன். அதைப்போன்ற ஒரு குழு அமைப்பை இந்த இந்து சமய அறநிலையத் துறைக்கும் நாம் அமைக்க வேண்டும். நம்முடைய வணக்கத்திற்குரிய சங்கராச்சாரிய சுவாமிகள், வாரியார் சுவாமிகள் போன்றவர்களை உள்ளடக்கிய இத்தகைய அமைப்பு ஒன்றை நாம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்த விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 28] (திரு. ப. நெடுமாறன்)

அடுத்து, அங்கே இந்த இந்து சமய நிறுவனங்களிலே சுமார் 5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் ஆலயங்களுக்கும், மடங்களுக்கும், மற்றும் அறக்கட்டளை களுக்கும் சொந்தமாக இருக்கிறது என்று தெரிகிறது. இதற்கு குத்தகை பாக்கி மட்டும் 23.30 கோடி ரூபாய் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப் பிலே இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியா பூராவிலும், நிலச் சீர்திருத்தச் சட்டத்தை வெகுவேகமாக அமுலாக்கிக் கொண்டு வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதிலும், தமிழகத்திலே இந்த அரசைப் பொறுத்த வரையிலும், எதிர்க் கட்சிகளைப் பொறுத்தவரையிலும், அனைவருக்கும் இன்னும் வெகு வேகமாக இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் நிலச் சீர்திருத்தத்தை உண்மையிலேயே அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது, அதற்காகப் பாராட்டுகிறேன். இந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஆலயங்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமான நிலங்களுக்கு எதிர்காலத்திலே விதி விலக்கு அளிக்க முடியாது. அப்படி அளிப்பது நியாயமாக இருக்க முடியாது என்ற நிலை இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மற்ற உறுப்பினர்கள் இதை இங்கே சுட்டிக் காட்டினார்கள். ஆனால், இந்த ஆலயங்களுக்கும், மடங்களுக்கும் அளிக்கப்பட்ட நிலங்கள், அது மன்னர்களால் அளிக்கப்பட்ட நிலமாக இருந்தாலும், தனிப்பட்டவர் களால் அளிக்கப்பட்ட நிலமாக இருந்தாலும், விதிவிலக்கு அளிக்கக் கூடாது, அப்படி அளிப்பது தவறு. ஆனால், ஆலயங்களிலே பூசைகள் நடத்துவதற்கும், அதைப்போல் மடங்களிலே சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்வதற்கும், இந்த நிலங்களை நம் முன்னோர்கள் அளித்து விட்டுப் போயிருக்கிறார்கள். இந்தக் காரியங்களுக்கு எந்தவிதமான குந்தகமும் வந்துவிடக் கூடாது. அதே நேரத்திலே அரசாங்கத்தின் நிலச் சீர்திருத்தக் கொள்கைக்கும் எந்த விதமாக குந்தகமும் வந்துவிடக் கூடாது. இதை மனதிலே கொண்டு, அந்த நிலங்களையெல்லாம் யார் யார் அதில் உழுது பயிரிட்டுக் கொண்டிருக்கிறார் களோ, அந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு அளித்து, அதற்குப் பதில் அதற்கான நஷ்ட ஈடு பெற்று, அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை அரசாங்கம் பிக்செட் டெபாசிட்டிலோ அல்லது அரசு பத்திரங்களிலோ முதலீடு செய்து, அதிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கக்கூடிய வருவாயைக் கொண்டு, ஆலயங் களிலும், மடங்களிலும் செய்யப்பட வேண்டிய காரியங்களை, எந்தவிதமான தடையும் இன்றி செய்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள முன்வர வேண்டும். இதிலே அரசாங்கத்திற்கு எந்தவிதமான

(திரு. ப. நெடுமாறன்) [1981 ஏப்ரல் 28

ஊசலாட்டமும் தேவையில்லை. ஆலயங்களில் நிலங்களை எடுப்பதினாலே பல சங்கடங்கள் வருமோ, எதிர்ப்பு வருமோ என்ற அச்சம் வேண்டியதில்லை. காரணம், அநேகமாக இன்றைக்கு நிலச் சீர்திருத்தத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை யாரும் தடுக்க முடியாது. ஆனால், ஆலயங்களின் நிலங்களை, மடங்களின் நிலங்களை எடுக்கின்றபோது, அதற்கான நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்று, அந்தத் தொகைகளை அரசு பத்திரங்களில் முதலீடு செய்லோ அல்லது வேறு வகைகளிலே முதலீடு செய்தோ, அவற்றிலிருந்து, கிடைக்கக்கூடிய வட்டி வருமானத்தைக் கொண்டு, இந்த பூசை, மற்ற காரியங்கள் முறையாக நடப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு செய்தால், இந்தப் பிரச்சினைக்கு பரிகாரம் காணமுடியும். இல்லாவிட்டால், நிச்சயமாக இதைச் செய்ய முடியாது. பல கோயில்களிலே புகார்கள் இருப்பதற்குக் காரணம், பல கோயில்களிலே இதைச் சரிவர நிர்வகிக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மத்திய அரசாங்கம் அமைத்த சர் சி. பி. இராமசாமி அய்யர் குழுவும் இதையே வற்புறுத்தி இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே அரசாங்கதிற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, இன்னொரு முக்கியமான, கொள்கை ரீதியான முடிவை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும். சில ஆலயங்களிலே நிறைய வருமானம் வருகின்றது. உதாரணமாக, பழனி, திருச்செந்தூர், திருத்தணி போன்ற கோயில்களிலே நிறைய வருமானம் வருகின்றது.

பல கோவில்களுக்கு இன்று வருமானம் இல்லாத நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. ஆலயங்களில் கடந்த கால சேமிப்புக் கொஞ்சம் கொஞ்சமாக குவிந்து அதன்மூலம் நிறைய நிதி அங்கே இருக்கிறது. அதேபோல நடப்பு வருமானத்திலே ஒவ்வொரு ஆண்டும், உண்டியல் நிதியில் மற்றும் செலவானத் தொகை போக பெருந்தொகை பல பெரும் ஆலயங்களில் மீதமாகிறது. இந்த சர்ப்ளஸ் பண்ட்—மீதமிருக்கக்கூடிய தொகையை—எப்படி பயன்படுத்துவது என்ற பிரச்சினை எழுகிறது. ஏற்கெனவே நம்முடைய ((Madras Hindu Religious and Chairtable Endowments Act, 1959 சட்டத்திலே செக்ஷன் 97 பிரிவிலே இதற்கு வழிவகை சொல்லப்பட்டிருக்கிறது.

The Commissioner had been empowered to create a fund called the Hindu Religious and Charitable Endowment Common Good Fund, out of the voluntary contributions by the religious institution from the surplus fund

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஆலயங்களிலே அறக்கட்டளைகளிலே மிஞ்சுகிற அந்தப் பணத்திலேயிருந்து அவர்களாகவே முன்வந்து கொடுக்கிற ஒரு நிதியை ஆணையாளர் ஏற்படுத்துகிறார்கள். இதிலேயிருந்து மற்ற செலவுகளைச் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது போதாது. அவர்களாகவே முன்வந்து கொடுக்கிற அந்த நிலைமையை மாற்றி, ஆலயங்கள் செலவிடுகிற தொகை போக, ரிசர்வ் பண்ட் என்று வேண்டுமானால் ஒரு தொகையை எடுத்துக்கொள்ளட்டும். மீதம் இருக்கக்கூடிய எல்லாத் தொகையையும் கட்டாயமாக இந்த சர்ப்ளஸ் பண்டிலே கொண்டுவந்து சேர்க்கிற நடவடிக்கையை இந்த அரசாங்கம் துணிந்து செய்ய வேண்டும். எந்த நோக்கத்திற்கு அந்த ஆலயங்களுக்கு மன்னர்களும், மக்களும் அந்த நாளிலும் சரி, இந்த நாளிலும் பணமாகவோ வேறு வகைகளிலோ அளிக்கிறார்களோ அந்த நோக்கம் முற்றிலும் நிறைவேறுவதில்லை. அந்த பணங்கள் குவிந்து எங்கோ வங்கிகளிலே முடங்கி கிடப்பதைவிட அது மக்களுக்கு, இந்து மதத்தினுடைய வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய சகல நடவடிக்கைகளுக்கும் அந்த சர்ப்ளஸ பண்ட்டை உபயோகப்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். வாலண்டரி கான்ட்ரிபியூஷன் என்ற நிலைமையை மாற்றி மிச்சம் இருக்கக்கூடிய பணம் பூராவும், நிதி பூராவும் அவர்கள் ரிசர்வ் நிதி போக பாக்கியை எடுத்து வந்து அதை ஆணையாளரின் சர்ப்ளஸ் பண்டிலே சேர்க்க வேண்டும். இதிலே மதக் கல்விக்கான கல்லூரிகள், பள்ளிகள் போன்றவை அமைக்கப்பட வேண்டும். அர்ச்சகர்கள், குருக்கள், ஓதுவார்கள், கோவில் பணியாளர்கள் போன்றவர்களுக்குப் பயிற்சி நிலையங்களை இந்த நிதியிலிருந்து அமைக்கலாம். அதே போல சிதிலம் அடைந்த கோவில்களைப் புனரமைக்கவும், திருப்பணி செய்யவும் இந்த நிதியை பயன்படுத்த வேண்டும். ஆங்காங்கே சமய சொற்பொழிவுகள், கதாகாலசேஷபம் நடத்துவதற்கு இந்த நிதியிலிருந்து பணம் ஒதுக்கலாம். ஆலயங்களுக்கு வரக்கூடிய யாத்ரீகர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்கு இந்த நிதியைப் பயன்படுத்தலாம். அநாதை இல்லங்கள் ஏற்படுத்துவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்தலாம். சித்த மருத்துவத்திற்கு ஆராய்ச்சி நிலையங்கள், ஆயுர்வேத மருத்துவத்திற்கு ஆராய்ச்சி நிலையங்கள் போன்றவை ஏற்படுத்துவதற்கு இந்த நிதியை உபயோகிக்கலாம். சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம் முதலியவற்றிற்கு பள்ளிகள் ஏற்படுத்துவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும். கோவில்களின் வரலாறுகள் சமய இலக்கியங்கள், தேவாரம், திருவாசகம் போன்றவை அச்சடித்து இலவசமாக வெளியிடுவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும். அர்ச்சகர்கள், கோவில் பணியாளர்கள்

போன்றவர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பதற்கும் அவர்களுக்கு வேண்டிய பல்வேறு காரியங்களைச் செய்வதற்கும் இந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும். அதேபோல ஆலயங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் நந்தவனம், போன்றவை களை அமைப்பதற்கு இந்த நிதியைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு ஆலயத் திலேயும், குறிப்பாக பெரிய ஆலயங்களிலே சமய இலக்கியங்களை கொண்ட நூல் நிலையம் அமைப்பதற்காகவும் இந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும்.

அதுமட்டுமல்ல, உலகத்திலே பல்வேறு நாடுகளில், குறிப்பாக 13 நாடு களில் தமிழ் மக்கள், இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் வசித்து வருகிறார்கள். இலங்கை, மலேசியா, மொரிஷஸ், தென் ஆப்பிரிக்கா போன்ற பல நாடுகளிலே வாழக்கூடிய அந்த மக்கள் பல நூறு ஆண்டுகளாக அங்கே குடியேறி கொஞ்சம், கொஞ்சமாக நம்முடைய மதத்தை, சமய உணர்வுகளை இழந்து கொண்டிருக்கக்கூடிய நிலைமை அங்கே இருக்கிறது. அதைப் போக்குவதற்கு இந்த சர்ப்ளஸ் நிதியிலிருந்து அங்கேயெல்லாம் சமயப் பிரச்சாரங்களை நடத்துவதற்கும் அங்கேயெல்லாம் இந்து ஆலயங்களை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை இந்த அரசு, இந்த நிதியிலிருந்து செய்ய வேண்டும்.

(பிற்பகல் 12-30)

திருப்பதி கோவிலிலேகூட அவர்கள் மிச்சம் இருக்கிற ஏராளமான நிதியி லிருந்து அமெரிக்காவில் திருப்பதி வெங்கடாசலபதி கோவிலைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். அதைப்போல் நாமும் செய்வதற்கு முன் வரவேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்பு கிறேன். மடங்களைப் பற்றிய சிலப் பிரச்சினைகளையும் நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். நம்முடைய மடங்கள் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்பட்டன. ஆதிசங்கரர் தோற்றுவித்த மடத்திலிருந்து இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய சகல மடங்களும் அதை யார் தோற்றுவித்திருந் தாலும், இந்து சமய பிரிவுகளை, ஒவ்வொரு பிரிவையும் பரப்புவதற்காகத்தான் அந்த மடங்களைத் தோற்றுவித்தார்கள். த்வைதம், அத்வைதம், வேதாந்தம் சித்தாந்தம், விசிஷ்டாத்வைதம் போன்ற பல கோட்பாடுகளை மக்கள் மத்தி யிலே பிரச்சாரம் செய்வதற்காகவும் அவற்றை மக்கள் மத்தியிலே நிலை நாட்டு வதற்காகவும்தான் அந்த மடங்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்த மடங்கள் மதக் கல்வி நிறுவனங்களாகத்தான் உருவாக்கப்பட்டன என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது எந்த நோக்கத் திற்காக அந்த மடங்களை அந்த உன்னத மகாபுருஷர்கள் உருவாக்கினார்களோ

1981 ஏப்ரல் 28] (திரு. ப. நெடுமாறன்)

அது நடைபெறாமல் இருக்கின்ற நிலைமையைப் பார்க்கிறபோது வருந்தத்தக்க சூழ்நிலைதான் அங்கே இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏதோ ஒன்றிரண்டு மடங்களைத் தவிர, மற்றவற்றின் மடாதிபதிகள் எந்த நோக்கங்களுக்காக அந்த மடங்கள் உருவாக்கப்பட்டனவோ அதை மறந்து செயல்படுகின்ற நிலைமைக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நோத்திலே மக்கள் மத்தியிலே சிறந்த முறையிலே தொண்டாற்றி வருகின்ற மடங்களையும் மடாதிபதிகளையும் ஊக்குவிப்பதற்காக தைரியமாக அரசாங்கம் முன்வர வேண்டும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் முதலமைச்சரைப் பொறுத்தவரையில் வணக்கத்திற்குரிய சங்கராச்சாரியார் அவர்கள் மீது எவ்வளவு பெரிய மரியாதையை வைத்திருக்கிறார் என்பது எல்லோரும் அறிந்தது. உலகத் தமிழ் மாநாட்டிலே அவர்கள் பெருமையோடு அதைச் சொன்னார்கள். சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன்தான் இந்த மாநாட்டுப் பணிகளை தொடங்கினேன் என்று சொன்னார்கள். சங்கர மடம் இன்றைக்குப் பல திட்டங்களை வகுத்து ஆந்திர மாநிலத்திலேயும் குஜராத் மாநிலத்திலேயும் செயல்பட்டு வருகின்றன. அதை நாமும் செய்ய வேண்டும். செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ஆண்டிலே 15 நாட்கள் நீதிபோதனை பற்றிய ரெபரஷர் கோர்ஸ் சங்கர மடத்தின் சார்பாக தனியாக கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டியின் சார்பிலே அந்த ரெபரஷர் கோர்ஸ் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்காக நடத்தப்படுகிறது. ஆந்திர அரசு அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது, குஜராத் மாநில அரசு அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது. சங்கர மடத்தின் ஆதரவோடு அந்த மாநிலம் பூராவும் உள்ள ஆசிரியர்களுக்கு அந்த போதனை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அதைப்போல் நம்முடைய தமிழகத்திலே நம்முடைய அரசும் செய்வதற்கு முன்வரவேண்டும். அதைப்போலவே அர்ச்சகர்கள், ஓதுவார்கள், கிராமப் பூசாரிகளுக்கும் அதுபோன்ற ரெபரஷர் கோர்ஸ் நடத்துவதற்கு சங்கர மடத்தின் துணையோடு நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குப் பல்வேறு ஆலயங்களிலே பசுக்கள், அந்த ஆலயங்களுக்கு வருகின்ற பக்தர்களினாலே காணிக்கையாக அளிக்கப்படுகின்றன. அந்தப் பசுக்களும், காளைகளும் என்ன ஆகின்றன என்றால் கேரளாவுக்கு விற்பனை செய்யப்படுவதற்காக மொத்தமாக ஏலத்திலே அடிமாடுகளுக்காக விற்கப்படுகிற பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. அந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக சங்கர மடத்தின் சார்பாக மாவட்டந்தோறும் மக்கள் குழுக்களை அமைத்திருக்

(திரு. ப. நெடுமாறன்) [1981 ஏப்ரல் 28

கிறார்கள். அந்தக் குழுக்களிடம் இந்தப் பசுக்களை, காளைகளை நியாயமாக விலைக்குக் கொடுத்து அவைகளைப் பராமரிக்கக்கூடிய முறையிலே அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக சிறு கோயில்கள் தமிழகம் பூராவும் நிறைய இருக்கின்றன. ஒரு நிர்வாக அதிகாரியிடம் 7 முதல் 10 கோயில்கள் சில நேரங்களிலே அதற்கு மேலாகக்கூட பராமரிப்பிலே விடப்படுகின்றன. ஆனால் அவர்கள் சரிவர அந்த ஆலயங்களுக்குச் செல்வதில்லை, கண்காணிப்பதில்லை. அதன் காரணமாக பல சிறு கோயில்களில் சாதாரணமாக செய்யப்படக்கூடிய பூஜை காரியங்கள்கூட ஒழுங்காக நடைபெறுவதில்லை. அர்ச்சகர்களுக்கு மாதச் சம்பளமோ வெறும் 30 ரூபாய் தான். அந்த 30 ரூபாய்கூட 6, 7 மாதம் கொடுக்கப்படாமல் நிலைமை இருக்கிறது. தீவிரமாக, துரிதமாக முடுக்கிவிட்டு அந்தக் கோயில் காரியங்கள் ஒழுங்காக நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.

சிறு கிராமங்களில் இருக்கின்ற கிராமக் கோயில்களையும்கூட அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது அல்ல. அவற்றை அந்தந்தக் கிராமங்களிலே இருப்பவர்களிடமே ஒப்படைத்து, அவர்களுடைய கண்காணிப்பிலேயே விட்டு, ஆடிட் வேலையை மட்டும், கோயில் கணக்குகளை ஒழுங்குபடுத்துகின்ற முறையை மட்டும் அரசு வைத்துக்கொண்டால் போதும். அதன் மூலமாகக் கிராம மக்கள் அந்தக் கோயில்களை ஒழுங்காகப் பராமரிக்கும் நிலைமைகள் ஏற்படும். கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்கும் ஒரு பொறுப்பும் இருக்கும். எனவே, இதைப்பற்றியும் நமது அமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலூர் கோவிலைப்பற்றியும் ஒரு வார்த்தையை நம்முடைய அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த ஆலயம் 200 ஆண்டுகளுக்கும் மேலாக வழிபாடு இல்லாது இருந்த ஆலயம். இன்றைக்கு வழிபாடு செய்வதற்காக மக்களே தொடங்கி நடத்தி வருகிறார்கள். ஆர்க்காலஜி துறை அதற்கு ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. ஆனால் சர். சி. பி ராமசாமி அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட குழு அளித்துள்ள அறிக்கையில் ஒன்றைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

The Archaeological Department may well take charges of the archaeologically significant temples and at the same time allow worship to be conducted with such minimum precautions as they

1981 ஏப்ரல் 28] (திரு. ப. நெடுமாறன்)

consider necessary to preserve the archaeological and artistic aspects of the temple Witneses have also been at pains to point out to us that the Hindu temples and shrines may well be treated with the same amount of meticulous attention to their structural and other aspects as is now in a very praiseworthy manner best towed upon Jumma Masjid, Taj, Sanchi, Bodh Gaya and other places.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே, பாதுகாப்பு என்பது வேறு; அந்த ஆலயங்களிலே இறைவனை வழிபடுவது என்பது வேறு. இரண்டுக்கும் சம்பந்தம் இல்லை. நீங்கள் அந்த வேலைகளைச் செய்யுங்கள்; இந்த வேலையை அறநிலையத் துறை செய்யட்டும். இப்படி இரண்டும் சேர்ந்துதான் காரியங்களை நடத்த வேண்டுமே தவிர, ஆர்க்காலஜிகல் பாதுகாப்பிலே இருந்தது என்று சொல்லி இன்றைக்கு வழிபாடே கூடாது என்று சொல்வது எந்தவகையிலேயும் பொருத்தமானது அல்ல.

குஜராத் மாநிலத்திலே உள்ள மிகப் பிரசித்திபெற்ற சோமநாதர் ஆலயம் கஜினி முகமதுவால் பாழ் அடிக்கப்பட்டு, பல நூற்றாண்டுக் காலமாக வழிபாடு இல்லாமல் இருந்தது. இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் பாதுகாப்பிலே இருந்த அந்த ஆலயத்தில் அன்றையதினம் மத்திய உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் படேல், அன்றையதினம் உணவுத் துறை அமைச்சராக இருந்த திரு. கே. எம். முன்ஷி ஆகியோர் அன்றையதினம் குடியரசுத் தலைவராக இருந்த இராசேந்திர பிரசாத் அவர்கள் தலைமையிலே குடமுழுக்கு நடத்தி அந்த ஆலயத்திலே லிங்கத்தை பிரதிஷ்டை செய்தார்கள். அங்கே இன்றளவிலும் வழிபாடு தொடர்ந்து நடந்து வருகிறது. ஆகவே, இன்றைக்கு வேலூர் கோயிலிலே வழிபாடு நடத்துவதற்கு ஆட்சேபணை செய்வது என்பது சரியானது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது திருமோகர் கோயில் அழகர் கோயிலோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அது ஆழ்வார்களால் பாடப்பட்ட புண்ணிய தலம். அது அழகர் கோயிலோடு இணைக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் இன்றைக்குச் சரிவர பூஜைகள் இல்லை, வழிபாடு இல்லை, (மணியடிக்கப்பட்டது) மார்ச் 1 முதல் 7 ஆம் தேதி வரையிலும் அந்தக் கோயிலிலே பூஜைகள் சரிவர நடைபெறவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(திரு. ப. நெடுமாறன்) [1981 ஏப்ரல் 28

திருநெல்வேலி ஆலயத்திலே கலைக்கூடம் அமைப்பதற்காக 2,80,000 ரூபாய் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டும், அந்த வேலை பாதியிலேயே நிற்கிறது. 1974 ஆம் ஆண்டுக்குப் பிறகு எந்த வேலையும் அங்கே நடைபெறவில்லை என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள தீர்த்தமலை திருக்கோயில் புகழ் பெற்ற இராஜேந்திர சோழனால் எழுப்பப்பட்ட கோயில். அந்தக் கோயிலை மாண்புமிகு அமைச்சரவர்கள் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு அந்தக் கோயில் மிகவும் சீர்கேடாக இருக்கிறது. அங்கே திருப்பணி செய்யப் பட வேண்டும். அந்த மலைக்குச் செல்வதற்குச் சாலை அமைக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்பதையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்திலே அறநிலையத் துறைக்கு ஒரு தீவிரமான செயல் திட்ட வடிவத்தைக் கொடுக்கவும், அதே நேரத்தில் அதைச் சுய ஆதிக்கம் உள்ள அமைப்பாக ஆக்கி அட்டானமஸ் அந்தஸ்து அளிக்கவும் இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

*திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீது கலந்து கொண்டு பேசுகின்ற வாய்ப்பினை பெற்றதற்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை நான் முதலிலே தெரிவிக்க ஆசைப்படுகிறேன். கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. ஆனால், பெரியாருடைய சீர்திருத்தக் கொள்கைக்கு இன்று தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் ஐயா, பெரியாருடைய கொள்கைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்தாலும், மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகையும் மணம் பரப்பும் என்கின்ற பேரறிஞர் அண்ணாவினுடைய வாக்கிற்கு ஏற்ப ஆத்தீகப் பெருமக்களுடைய இதயங்கள் எல்லாம் வாழ்த்துகின்ற அளவிற்கு, இன்று தமிழகத்திலேயிருக்கிற திருக்கோயில்கள் எல்லாம் செம்மையான முறையிலே, சீரான முறையிலே நிர்வாகத்தை நடத்துவதற்கு இன்று நம்முடைய மதிப்பிற் குரிய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பாடு

1981 ஏப்ரல் 28] (திரு. சி. கோபால்)

பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை, அந்தக் கருத்தினை, யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இம்மாநிலத்திலே சில மடங்கள் செயல்படுவதில் முறைகேடுகள் காணப் படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து, தனிப்பட்ட புலனாய்வு நடத்தும்பொருட்டு, துணை ஆய்வாளர் ஒருவரும், அவருக்கு உதவி புரிவதற் கென தனி பணியாளர்களும் நியமிக்கப்பட்டிருப்பதை இந்த நேரத்திலே நான் வாழ்த்தி, வரவேற்கிறேன். அதே நேரத்திலே, 1969 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டிலே பல கோயில்களிலே, இந்து கோயில் களுக்குச் சம்பந்தப்பட்ட பணங்களெல்லாம் முறைகேடாக, பல வகையிலே நடத்தப்பட்டதாகப் பல புகார்கள் அரசுக்கு வந்திருப்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட புகார்களையும் இன்று அதிகாரிகள் விசாரணை செய்ய வேண்டு மென்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று சாகும்போது கூட தமிழ் படித்துச் சாக வேண்டும், சாம்ப லிலும் தமிழ் மணம் கமழ வேண்டும், அதே நேரத்திலே, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது என்பதற்கொப்ப தமிழகத்திலே ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானமிருக்கிற கோயில்களில் எல்லாம் தமிழ்ப் புலவர்களை அமர்த்த வேண்டுமென்ற ஒரு கொள்கையை அறிவித்திருப்பது. இந்தத் தமிழ் மாநிலத்திற்கு, தமிழ் இனத்திற்கு, தமிழின மக்களுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, புரட்சித் தலைவர் அரசு தமிழுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்து வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே, தமிழகத்திலிருக்கிற கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களிலேயிருந்து குத்தகையாக, ஏறக்குறைய ரூ. 23.30 கோடி வரவேண்டு மென்றும் அதைச் சரியான முறையிலே வசூலிக்க முடியாத ஒரு நிலைமை தமிழகத்திலே இருந்து வருகிறது என்பதையும் நினைக்கும்போது, உண்மை யிலே எங்களைப் போன்றவர்கள் எல்லாம் வேதனை அடைகிறோம். கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதவர்கள் எல்லாம் இந்த நாட்டிலேயிருக் கிறார்கள். குறிப்பாக இங்கு எடுத்துக் கொண்டாலும், இந்தக் கோயில்களு டைய நிலங்களைக் கூட குத்தகையாக எடுத்துக்கொண்டு, கோயில்களை நிர்வாகம் செய்ய முடியாத அளவிலே அந்தப் பணத்தைக் கொடுக்காதவர்கள் கூட, அப்படிப்பட்டவர்கள் கூட பெரும்பாலும் தமிழகத்திலேயிருக்கிறார்கள். அவர்கள் கோயில்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி என்ன? எத்தனை

(திரு. சி. கோபால்) [1981 ஏப்ரல் 28

ஆண்டுகளாகக் கோயில்களுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பதை எல்லாம் நம்முடைய அரசு பத்திரிகைகளிலே வெளியிட்டு, எந்த அளவிற்கு ஆத்திகப் பெருமக்களுடைய மனதையெல்லாம் அவர்கள் புண்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமையை எடுத்துக் காட்ட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்று அறநிலைய ஊழியர்களுக்கு இதற்கு முன்னால் ஆண்டுகொண்டிருந்த அரசுகள் எல்லாம் நினைத்துப் பார்க்கக்கூட முடியாமல் இருந்தபோது, இன்றைக்குப் புரட்சித் தலைவர் அரசு பல சலுகைகளை அளித்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது, மறைக்க முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கோவில்களில் பணியாற்றுகிறவர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டம் 1980 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்ற ஒரு புரட்சிகரமானத் திட்டமாகும். அந்த வகையிலே கோவில் பணியாளர்களுக்கு பல சலுகைகள் அளித்திருந்தாலும்கூட முதன் முதலாக ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வருகின்ற கோவில் ஊழியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு அளிக்கின்ற அந்த சலுகைகளை அளிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இந்த நேரத்திலே நான் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவில் பணியாளர்களுக்கு 22 நாட்களுக்கு ஒருநாள் ஈட்டிய விடுப்பு அளிக்கப்படுகிறது ; அதை 11 நாட்களுக்கு ஒருநாள் என்று மாற்றியமைக்க வேண்டும். தற்போது 90 நாட்கள் மருத்துவ விடுப்பு என்று இருக்கிறது. இதை அந்தப் பணியாளர்களுக்கு 180 நாட்கள் அளிக்க வேண்டுமென்ற கருத்து வரவேற்கத்தக்க கருத்தாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கோவில் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் வரவு-செலவு கணக்குகளையும் பணம் ஒழுங்காக செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்காணிக்கவும் தணிக்கை செய்வதற்கு தனி அதிகாரிகளை அரசு நியமித்திருக்கிறது என்று சொன்னாலும் கூட ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிற கோவில்களில் அறங்காவலர் குழுத் தலைவருக்கு பொறுப்புகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், நிர்வாக அதிகாரிகள் வரவு-செலவு கணக்குகளை நிர்வகித்து வந்தாலும், மாதந்தோறும் கூட்டம் கூட்டி, குழுவிலே பரிசீலனை செய்கிறார்கள் என்ற நிலை இருந்தாலும்கூட, அந்த வரவு-செலவுகளைக் குறிக்கின்ற குறிப்பேடுகளில் அந்தக் குழுவின் தலைவராக இருக்கின்றவர் தினந்தோறும் தினசரி கணக்குகளைப் பார்வையிட்டு, அந்த ஏட்டிலே தன்னுடைய கையெழுத்தைப் போடுகின்ற நிலைக்குச் சட்டம் இடம் கொடுக்க

வில்லை என்றாலும் அதற்கு ஒரு சர்க்குலர் அல்லது ஒரு சுற்றறிக்கை அனுப்பி வைத்து வரவு-செலவுக் கணக்கு பேரேட்டிலே குழுத் தலைவர் தினந் தோறும் கணக்குகளைப் பார்த்து கையெழுத்து போட வேண்டுமென்ற ஒரு நிலைமையை உருவாக்கித் தந்து, முறைகேடுகள் நடைபெறுவதை தவிர்ப்ப தற்கு வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய சோளிங்கர் தொகுதியில் கண்டபாளையம் கிராமத்தில் வரலாற்று புகழ் வாய்ந்த இரண்டு மலைகள் இருக்கின்றன. ஒன்று, அருள்மிகு நரசிம்மசாமி மலை. இது 1,300 அடி உயரம். அடுத்தது ஆஞ்ச நேயர் மலை. இது சுமார் 600 அடி உயரம். குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து பக்தர்கள் திருப்பதிக்குச் செல்லுகின்றவர்கள் திருத்தணிக்கு வந்து, அங்கிருந்து சோளிங்கரில் இருக்கிற இந்த இரண்டு கோவில்களுக்கும் வந்து போகிறார்கள்.

சோளிங்கரில் இருக்கிற இந்த இரண்டு மலைகளைப் பொறுத்தவரையில் அவை வரலாற்று முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் அங்கே வருகின்ற பக்தர் களுக்கு நல்ல வசதிகளை உருவாக்கித் தருகின்ற சூழ்நிலை இல்லாத காரணத் தால் நம்முடைய கோவில்களுக்கு வருகின்ற வருமானம் சரியாக வரவில்லை. ஆகவேதான் இன்று உணவுக்கு வேலை கொடுக்கும் திட்டத்திலே அங்கிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லி, 600 அடி உயரத்தில் இருக்கிற ஆஞ்சநேயர் மலைக்கு 2 கிலோமீட்டர் தூரத்திலே 'எர்த் ஒர்க்' செய்யப்பட்டு, ஒரு சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் கருணை வைத்து இந்த பட்ஜெட்டிலே சரியான நல்ல நிரந்தரமான பாதை போட வாய்ப்பினை உருவாக்கித் தந்தால் நேரடியாக பேருந்துகள் சென்று, பக்தர் களுக்கு நல்ல வசதிகளை ஏற்படுத்தித் தரலாம் என்று சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

இறுதியாக திருப்பதி கோவிலைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்பு கிறேன்.

(பிற்பகல் 12-50)

தமிழகமும் ஆந்திரமும் ஒன்றாக இருந்த நேரத்திலே திருப்பதி கோவிலிலே தமிழகத்திற்கு என்று ஒரு பொறுப்பு இருந்து வந்தது. இப்போது குன்றுகள் தோறும் குமரன் இருக்கிறான் என்றுதான் நாம் கூறுகிறோம். ஆனால் திருப்பதியிலே இருப்பது எந்தச் சாமி என்பதல்ல நமக்கு முக்கியம். ஆனால்

தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் அங்கு சென்று வணங்குகின்றபோது அவர்களுக்கு உரிய மரியாதையும் மதிப்பும் கிடைப்பதில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுகிறேன். ஆகவே இது குறித்து மத்திய அரசினிடத்திலே சொல்லியாவது தமிழக மக்களின் நன்மையைக் கருதி தமிழக அரசின் சார்பிலே அங்கே ஒரு பிரதிநிதியை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கோரி இருக்கின்ற இந்த மானியத்தின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற என்னைப் பணித்தமைக்காக நான் உங்களுக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவரின் ஆட்சியிலே ஒவ்வொரு துறைக்கும் யார் யாரை நியமிக்க வேண்டும் என்று நிதானமாக யோசித்துத்தான் நியமித்திருக்கிறார்கள். அந்த வகையிலே அறநிலையத்துறையைப் பொறுத்தவரையிலே

"வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்"

ஒருவன் ஒரு தொழிலைச் செய்வதற்கு உரியவனாக இருப்பதை ஆராய்ந்த பிறகு அவனை அந்தத் தொழிலுக்கு உரியவனாகும்படி அமர்த்தவேண்டும் என்ற வகையிலே அறநிலையத்துறையினை நமது அறநிலையத்துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள்.

அறநிலையங்களைப் பொறுத்தவரை அந்தக் காலத்திலே அவை அறநிலையங்களாக இல்லாமல் அறை நிலையங்களாக இருந்து கொண்டு வந்தன. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றை எல்லாம் அறநிலையங்களாக மாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

அடுத்து கோயில்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் 16 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். அந்தக் கோவில்களிலே வரவேண்டிய நிலுவைகள் ஏறக்குறைய 23.30 கோடி இருக்கின்றது. ஆகவே வருவதை விட வரவேண்டியவை மிகவும் அதிகமாக இருப்பதற்குக் காரணம் அறநிலையங்களிலே பல பேர் சென்று அறநிலையத்திற்குரிய சொத்துக்களை எல்லாம் ஆக்கிரமித்துக்கொண்டு திரும்பக் கோயில்களுக்குக் கொடுக்காமல் இருப்பது தான் என்று நான் இந்த நேரத்திலே தெள்ளத் தெளிவாகச் சொல்லிக்கொள்

1981 எப்ரல் 28] (திரு. க. பாலசுப்பிரமணியன்)

கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் "சமுதாயத்தைச் சுரண்டுகிறவன் சாமிக்குச சுண்டல் . படைக்கிறவன், கொள்ளை லாபம் அடிக்கிறவன் கடவுளுக்கு வெள்ளி வாகனம் செய்கிறான், அண்டி கெடுக்கிறவன் ஆண்டவனுக்கு அபிசேகம் செய்கிறான், குடி கெடுப்பவன் கடவுளுக்கு கும்பாபிசேகம் செய்கிறான், கன்னிப் பெண்களின் கற்பைச் சூறையாடுகிறவன் கடவுளுக்கு கற்பூரம் கொளுத்துகிறான்", என்று சொன்னார்கள்.. அணணா அவர்கள் காலத்திலே எப்படி இருந்ததோ அந்த நிலைமைதான் அண்ணா அவர்களுக்குப் பிறகும் சமீப காலத்திலேயும் அப்படியேதான் தொடர்ந்து துரதிஷ்டவசமாக இருந்து வந்தது. அதை மாற்றவேண்டும் என்ற வகையிலே அண்ணா அவர்கள் கண்ட கனவை நனவாக்குகின்ற வகையிலே மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அறநிலையங்கள் எல்லாம் முறையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அறநிலையங்கள் தமிழகத்திலே எதற்காக இருக்கின்றன அந்தக் காலத்திலே இருந்த மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றியும், அந்த மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும், அவர்கள் கடைப்பிடித்த நெறி முறைகள் பற்றியும்தான் அந்த நிலையங்களிலே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட நிலையங்களை முறையாகக் காப்பாற்றி வருங்கால சந்ததியினருக்கு, அதை எடுத்துக்காட்டுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முறையாகவும் செம்மையாகவும் இன்றையதினம் நல்ல பணியைச் செய்துகொண்டு வருகிறார்கள்.

அடுத்து பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் வழி வந்தவர்கள் இப்படி அறநிலையங்களை அதிகமாக ஏற்படுத்தி அவற்றிற்கு கும்பாபிஷேகம் செய்து வருகிறார்களே என்று கூடச் சொல்லலாம். அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். நாங்கள் அப்படிப்பட்ட கருத்தினை உடையவர்களாக இருந்தாலும் கூட நம்முடைய நாட்டிலே உள்ள பெரும்பான்மையான மக்கள் எந்த நோக்கத்திற்காக அற நிலையங்களை வைத்திருக்கிறார்களோ அந்த மக்களுடைய எண்ணம் புண்படக்கூடாது என்பதற்காகத்தான் அறநிலையங்களின் திருப்பணிகள் முறையாகச் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, இங்கே பேசிய பலர் சொன்னார்கள், எனக்கு நேரம் அதிகமாக இல்லை. என்னுடைய தொகுதியிலே உள்ளதுதான் வைத்தீஸ்வரன் கோயில். அந்த வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ளவர் வைத்திய நாதர். அவருடைய மனைவியார் பெயர் தையல் நாயகி. ஆனால், அந்த வைத்தியநாதருக்கே வைத்தியம் பார்த்து விட்டார்கள். அந்தக் கோவிலுக்கு சொந்தமான ஐந்து லட்சம் ரூபாய் பெருமான நகைகளை அபேஸ் செய்து

விட்டார்கள். அந்தக் கோவிலிலே எட்டு லட்சம் ரூபாய் பெறுமான நகைகள் இருந்தன. அதிலே மூன்று லட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள நகைகள் கல் நகைகள். மீதி ஐந்து லட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள நகைகள் சுத்த தங்க நகைகள். என்ன செய்தார்கள் என்றால், தரம் பார்த்து பிரித்து, கல் நகைகளை ஒதுக்கி வைத்து, அந்த தங்க நகைகளை மட்டும் அபேஸ செய்திருக்கிறார்கள்.

ஆனால் அதை அபேஸ் செய்தவர்கள் யார் என்றால், இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பேட்டிலே கூட கொடுத்திருக்கிறார்கள், சுப்பிரமணிய பிள்ளை என்ற ஒருவர் 1979-லே, தங்க உத்திராட்சத்தைக் களவாடியதாக, அவருடைய சம்பளத்திலே இருந்து கூட பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய கையிலேதான் சாவி இருக்கிறது. அன்றையதினம் சாமி புறப்பாட்டுக்கு காலையிலே நகையை எடுத்துக் கொடுக்கிறார்கள். மறுபடியும், மாலையிலே அந்த நகையைப் போட வேண்டும் என்று போகும்போது, அந்த நகை இல்லை. இதிலே என்ன ஒரு வேடிக்கை என்றால், சென்ற 16 ஆம் தேதி மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சீர்காழிக்கு வந்தார்கள். சர்பிரைஸ் விஸிட் என்று சொல்வார்களே, அதுபோன்று திடீர் விசிட் ஒன்று செய்தார்கள் வைத்தீஸ்வரன் கோவிலுக்கு. அப்போது அங்கே இருக்கக் கூடிய பெரிய கட்டளையிலிருந்து, சாதாரண சிப்பந்தி வகையில் மலர்ந்த முகத்தோடு வரவேற்று, மலர்ந்த முகத்தோடேயே இந்த விஷயங்களை எல்லாம் சொன்னார்கள். இதிலேயிருந்து என்ன தெரிகிறது என்றால், அவர்களுக்கு அந்த நகை போனதைப் பற்றி கவலையே இல்லை. காரணம் காணாமல் போன அந்த நகை அவர்களிடத்திலேதான் இருப்பதாகப் பொதுமக்கள் சந்தேகப்படுகிறார்கள். இதிலே மேலிடத்திலிருந்து கீழே வரையில் எல்லோரும் உடந்தையாக, ஒற்றுமையாக கபளீகரம் செய்து, எங்கோ பாதுகாத்து வைத்திருப்பதாக சொல்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால், நேற்றைக்கு முன் தினம், திராவிடக் கழகத்தினர், மாயவரத்திலும், சீர்காழியிலும் கூட்டம் போட்டு, இப்படிப்பட்ட காரியங்களைப்பற்றி பிரச்சாரம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், ஆலயங்கள் முறையாக பரிபாலனம் செய்யப் படவேண்டும். அதற்கு அர்ச்சகர்கள் பதவியிலோ, அல்லது வேறு ஆலயப் பதவிகளிலோ பொறுப்பேற்று செல்பவர்கள் முறையாக செயல்படவேண்டும். ஆகவே, அறங்காவலர்கள் நல்லவர்களாக வல்லவர்களாக, ஒழுக்கம் உள்ளவர்களாக, நிர்வாகத் திறமை உள்ளவர்களாக அதேநேரத்தில் கடவுள் பக்தி உள்ளவர்களாக, இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான், அப்படிப்

1981 ஏப்ரல் 28] (திரு. க. பாலசுப்பிரமணியன்)

பட்ட அறங்காவலர்களை ஆலயங்கள்தோறும் தமிழக அரசு நியமித்துக் கொண்டு வருகிறது. ஆனால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்கெனவே இருந்த காலத்தில் மாறியதன் காரணத்தினால்தான், இன்றைக்குப் பல களவுகள் நடைபெறுகின்றன.

இன்றைக்குப் பல கோயில்களில் இருக்கிற விக்கிரங்களே உண்மையான விக்கிரகங்களாக இல்லையா என்ற சந்தேகம் வருகிறது. இருக்கிற நகைகள் கூட உண்மையான தங்க நகைகளா அல்லது கவரிங் நகைகளா என்ற சந்தேகம் கூட வருகிறது. அப்படி திட்டம் போட்டு செய்திருக்கிறார்கள். யாரோ, எங்கோ பாடினார்களே, "திட்டம் போட்டு திருடறக் கூட்டம் திருடிக் கொண்டே இருக்கிறது" என்று அதைப்போல, திட்டம் போட்டு திருடிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்களுடைய தொகுதி வைத்தீஸ்வரன் கோவில். கடவுளுக்கு அந்தப் பெயர் வந்ததற்குக் காரணம் அவர் மக்களுக்கு அந்தக் காலத்திலே வைத்தியம் செய்து கொண்டிருந்தார். அதனால்தான் ஏராளமான நிலங்களையும் சொத்துக்களையும் இந்தக் கோவிலுக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த வைத்தியநாதருக்கே இப்பொழுது நாம் வைத்தியம் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால், மக்கள் என்ன நினைப்பார்கள்? ஆகவே, அறநிலையத் துறை அந்தப் பழைய சீர்கேடுகளை களைந்து எறிந்து முறையாகச் செயல்பட்டாக வேண்டும். ஆலயங்களின் சொத்துக்கள் முறையாக வைக்கப்பட வேண்டும், அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு செயல்படுத்த வேண்டும், செயல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

கடைசியாக, அறநிலையங்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான நிலங்களை பலபேர், தன்னிச்சையாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது முறைப்படுத்தியாகவேண்டும். அதற்கென்று ஒரு சட்டம் இருக்கிறது. பப்ளிக் டிரஸ்ட் ஆக்ட் என்று அந்தச் சட்டத்திலே ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் தான் ஆலய நிலங்களை வைத்திருக்க வேண்டும் என்று. அது அவர்கள் சொந்த நிலம் உட்பட. ஆனால் 50 எக்கர்களுக்கு சொந்தக்காரர்கள் கூட, அந்த நிலங்களை பல பெயர்களிலே, பினாமி பெயர்களிலே எழுதி வைத்துவிட்டு, இந்த ஆலயங்களின் சொத்துக்களையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நபர்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் இருக்கும் அதிகமான நிலங்களை எடுத்து, ஏழை எளியவர்களுக்கு கொடுப்பதன் மூலமாக அந்த ஏழை வயிறார சாப்பிடக்கூடிய நிலைமையை ஏற்படுத்த முடியும்.

ஏனென்றால் பெரிய முதலாளிகள், பணக்காரர்கள் தங்கள் சொந்த நிலங்களை பினாமி பெயர்களில் எழுதிவிட்டு, கோவில் நிலங்களை வைத்துக் கொண்டு தின்று கொண்டிருப்பதைவிட, இந்தச் செயல் அந்த ஏழை எளியவர்கள் வாழ வகை செய்யும். அத்தகைய நிர்வாக சீர்திருத்தத்தை அமைச்சர் அவர்களும், அந்தத் துறையும் தீவிரமாக செயல்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நேரம் அதிகம் இல்லாத காரணத்தால், குறிப்புகள் என்னிடத்தில் அதிகமாக இன்னும் பேசுவதற்கு இருந்தாலும், நேரத்தைக் கருதி, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-00)

* திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். நம் அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பது குறித்து நான் பாராட்டுதல்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆலயங்களின் பெயரால், மடங்களின் பெயரால் ஒரு காலத்தில் நாட்டில் நல்லவையாக நடக்கவேண்டும் என்று, மக்களுக்கு நல்ல பல பணிகள் செய்யவேண்டும் என்ற ஒரு காலம் இருந்தது. அந்தக் காலத்தில் ஆலயங்களுக்கு மன்னர்களும் மக்களும் வாரி வாரி வழங்கினர்கள். அப்போது அந்தச் சொத்துக்களை பராமரிக்க நல்ல எண்ணம் உள்ளவர்கள் இருந்தார்கள். தெரிந்தோ தெரியாமலோ அரசியல்வாதிகளும், ஆண்டவன் பெயரில் நம்பிக்கையற்றவர்களும் செய்து வந்த பிரச்சாரத்தினால் மனிதன் இன்று ஆண்டவனுக்கும் பயப்படவில்லை, சட்டத்திற்கும் பயப்படவில்லை, நாம் யாரை நம்பி அறங்காவலர்களாக நியமிக்கறோமோ, அதிகாரிகளை நியமிக்கிறோமோ அவர்களே மதிக்காமல் அந்த நிலையில் நாடு நடந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே அரசாங்கம் ஒரு தெளிவான முடிவிற்கு வரவேண்டும். தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முக்கிய கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

நமது அமைச்சர் அவர்கள் நீர்க்கமாக யோசித்து நல்லதொரு நிலையை உருவாக்க எண்ணுகிறார்கள். இன்றைக்கு அறக்கட்டளைகளை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாகத்தான் இருக்கிறது. ஸர் சி. பி. இராமஸ்வாமி ஐயர் அவர்கள் ரிப்போர்ட்டை எடுத்துக்கொண்டால் கூட, மத்திய அரசு சட்டம் கொண்டுவர எண்ணியபோதும்கூட மத்திய அரசு இது சம்பந்தமாக மாநில அரசு எடுக்கிற முடிவுகளுக்கு அவர்கள் உதவி

1981 ஏப்ரல் 28] (திரு. எல். இளையபெருமாள்)

செய்வதாகத்தான் கூறியிருக்கிறார்கள். நீதித் துறை, நிர்வாகத் துறை என்று வைத்துக்கொண்டு அதை மத்திய அரசு செய்யவேண்டியதாக இருந்தாலும் மாநில அரசு செய்யவேண்டியதாக இருந்தாலும் அறக்கட்டளைகள் நிர்வாகம் பொறுப்பு மாநில அரசைச் சார்ந்திருக்கிறது.

இன்று ஆலயங்களுக்கு, மடங்களுக்கு, மடாலயங்களுக்கு மக்களால் வழங்கப்பட்டிருக்கிற சொத்துக்கள், மன்னர்களால் வழங்கப்பட்டிருக்கிற சொத்துக்கள் பொறுத்து இன்றிருக்கிற சட்ட நிலையில் நமக்கு கஷ்டங்கள் இருந்தால் பரிபூர்ணமாக சட்ட வல்லுநர்களைக் கொண்டு தீர்க்கமாக முடிவு செய்து ஒரு குறிப்பான சட்டத்தை உருவாக்க முன்வரவேண்டும் என்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன். நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி சார்பில் சொல்கிற யோசனை, நீங்கள் போடுகிற அதிகாரிகள், நியமிக்கிற அறங்காவலர்கள்—நான் கட்சிக்காகச் சொல்லவில்லை—என்றில்லாது அங்குள்ள மக்களை அணுகி மக்கள் குழுவாக அமைத்தால் நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும். இன்று மடங்களின் பெயரால் உள்ள நிலங்கள் பினாமியாக இருப்பது அரசுக்கும் தெரியும், அரசாங்க அதிகாரிகளுக்கும் தெரியும். ஆனால் தேர்தல் என்ற பாவ காரியத்தை மனதில்கொண்டு நமக்கேன், நமக்கேன் என்று கடந்த 33 ஆண்டுகளாக இதை தள்ளிவைத்துக் கொண்டிருப்பது ஒரு மிகவும் பாவமான காரியம். இதற்கு ஒரு முடிவு கட்டி மக்கள் குழு நியமித்து கேட்கத் துணிந்தால் நிச்சயமாக பினாமி நிலங்களை அவைகள் யாரிடம் இருக்கின்றன, ஆலயங்கள் நிலம், மடங்களின் நிலம் யார் யாரிடம் இருக்கின்றன என்று தெரிந்துகொள்ளமுடியும். இது கஷ்டமான காரியமல்ல. இன்னும் இதில் காலம் கடத்துவது என்றால் வேண்டுமென்றே காலம் கடத்துகிறோம் என்ற கெட்ட பெயரை அரசு வாங்கக் கூடாது. அமைச்சர் அவர்கள் இதில் தீர்க்கமாக ஒரு முடிவு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

குறிப்பாக நம்மிடம் ஆலயங்கள், மடங்கள் சம்பந்தமான நிலங்கள் ஐந்து இலட்சம் ஏக்கர்கள் இருப்பதாக கொடுத்திருக்கிறார்கள். இந்த ஐந்து இலட்சம் ஏக்கருக்கு அதிகமாகக் கிடைக்கும். திட்டவட்டமான ஒரு முடிவு எடுப்பார்களானால் ஆலயங்களுக்கு, சிறப்பாக மக்களாலும், மன்னர்களாலும் வழங்கப்பட்ட நிலங்கள் உள்ள ஆலயங்கள் இருக்கிற இடங்களில் மக்கள் குழுக்களை நிறுவி அல்லது சர்வகட்சிக் குழுக்களை நிறுவி தீர்க்கமாக விசாரணை செய்தால் இதற்கு மேல் உங்களுக்கு நிலங்கள் கிடைக்கும்.

மேலும் குத்தகை நிலங்கள் இருந்தால், குத்தகை பெயரால் நிலங்கள் இருந்தால் இன்றுள்ள சட்டங்கள் குறித்து ஒரு முடிவு எடுத்து ஒன்று தள்ளுபடி செய்யவேண்டும் அல்லது வசூல் செய்யவேண்டும் என்ற முடிவுக்கு

வாருங்கள். அப்படி வசூல் செய்கிறபோது உண்மையிலேயே ஒரு பத்து ஆண்டு களுக்கு முன்பாக அந்த நபரின் சொத்து என்ன, பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு அந்த நபரின் சொத்து எவ்வளவு என்றும், அந்த ஆலய அல்லது மட நிலங்களை பயிரிடுகிறவர்கள் வறுமையில் இருக்கிறார்களா அல்லது நல்லபடி வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா என்பதையும் விசாரிக்க வேண்டும். உண்மையிலேயே அவர்கள் வறுமையிலே இருப்பார்களானால், அதைத் தள்ளுபடி செய்ய வேண்டும்; அதேபோல் அவர்கள் வசதி படைத்தவர்களாக இருப்பார்களானால், அதை வசூல் செய்ய வேண்டும் என்றும், இதற்குக் கண்டிப்பாக மக்கள் குழு அமைத்தோ அல்லது அரசாங்கம் ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலமோ அல்லது சட்டத்தின் மூலமோ ஒரு தீர்க்கமான முடிவை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்பதை என்து இரண்டாவது யோசனையாகச் சொல்லுகிறேன்.

மூன்றாவதாக, இளையபெருமாள் என்று என்னையே வைத்துக் கொள்ளுங்கள். நான் சிதம்பரத்தைச் சேர்ந்தவன். எனக்கு அங்கே பல வகைகளிலே செல்வாக்கு இருக்கிறது. ஆகவே, என் உறவினர்கள் பெயரிலும் அல்லது என்னுடைய வேலையாட்கள் பெயரிலும் ஐந்து ஏக்கர்கள், பத்து ஏக்கர்கள் என்று எடுத்துக்கொண்டு, பரம்பரையாக அப்படி வைத்துக் கொண்டு, இன்னும் 50 ஏக்கர்கள் பயிர் செய்கின்ற நிலைமையும் இருந்து வருகிறது. அது தஞ்சையிலே இருந்தாலும் சரி, ஸ்ரீரங்கத்திலே இருந்தாலும் சரி, சிதம்பரத்திலே இருந்தாலும் சரி அல்லது மதுரையிலே இருந்தாலும் சரி அல்லது சென்னையிலே உள்ள கபாலீஸ்வரர் ஆலயத்திலே இருந்தாலும் சரி அல்லது பெரம்பூரிலே உள்ள காசி விஸ்வநாதர் ஆலயத்திலே இருந்தாலும் சரி, அதற்கு உடந்தையாக அரசாங்க நிர்வாகத்திலே உள்ளவர்களும், அதிகாரிகளும், அறங்காவலர்களும் 100-க்கு 99 பேர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது; அப்படி மறந்து விடுவதில் பயனில்லை. அரசியல் காரணங்களை எல்லாம் புறக்கணித்து, அதிலே இறங்காமல், மன்னர்களாலும், மக்களாலும் அன்றைக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்த நல்ல எண்ணத்திலே இதற்கு நிரந்தரமான ஒரு முடிவைச் செய்ய வேண்டு மென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த நிர்வாகத்திலே, ஆலையங்களிலே பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கத் தவறினால், அவர்கள் வறுமை தாங்க முடியாமல், திருடுகிறார்கள்; இந்தத் திருட்டுத் தொழிலுக்கு வருகின்றவர்களுக்குத் துணை நிற்கிறார்கள்;

திருடுகின்றவர்களைக் காட்டிக் கொடுக்க, சாட்சி சொல்ல, ஆதாரம் தர பயப்படுகிறார்கள். உதாரணமாக, எனக்கு முன்பு பேசிய சகோதரர் பாலசுப்பிரமணியம் அவர்கள், வைத்தீஸ்வரன் கோயிலைப் பற்றிச் சொன்னார்கள். அவரது சித்தப்பா நந்தனார் மடத்தை நிர்வகித்தவர்கள் ; சந்நியாசியாக இருந்து பணியாற்றியவர்கள். ஆகவே, அவர்கள் அப்படிச் சொன்னார்கள். நான் அவருக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவரைப் போன்றவர்கள் அமைச்சர் அவர்களுக்கு துணைநின்று, உதவினால், நிச்சயமாக இந்த நிர்வாகத்தில் வெற்றி பெறுவார்கள் என்பதை நான் அவருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் தீர்க்கமாக இருக்கின்றபோது, மக்கள் குழுவை அமைத்து விட வேண்டும்.

ஆலயங்களின் நிலங்களை எடுக்கின்றபோது, ஐந்து ஏக்கர்களுக்கு மேல் இருக்குமானால், அவர்களுக்கு ஆலைய நிலங்களை குத்தகைக்கு விடக் கூடாது. இன்று திருச்சி ஜில்லா, உடையார்பாளையம் தாலுகா ஜெயங்கொண்டத்தில் காலை 11 மணிக்கு ஏலம் நடக்கிறது. அந்த ஏலத்திலே என்ன சொல்லுகிறார்கள். ஏழை அரிசன மக்கள், ஏழை பின்தங்கிய மக்கள் பயிரிட்ட நிலங்களிலே எல்லாம், அவர்கள் கொடுத்த நெல்லுக்கு ரசீது கொடுக்காமல் இருந்ததோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு அதை ஏலத்திலே விடுகிறார்கள். அப்படி ஏலம் விடுவார்களானால், பின்தங்கிய மக்களும், ஏழை மக்களும், காலம் காலமாக பயிரிட்டு வரும் ஆதித்திராவிட மக்கள் அல்லது விவசாயத் தொழிலாளர்கள் அல்லது சிறு விவசாயிகள் எப்படி நிலச்சுவான் தார்கள் மத்தியில், பணக்காரர்கள் மத்தியில் அல்லது பாரம்பரியமாக ஏய்ப்பு செய்து பினாமி நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களோடு அவர்கள் போட்டி போட முடியும், எப்படிக் கொடுக்க முடியும் என்பதை நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு, ஐந்து ஆண்டு களுக்கு மேலாக இப்படிப்பட்ட மடங்களின் நிலங்களாக இருந்தாலும், கோயில்களின் நிலங்களாக இருந்தாலும், தொடர்ந்து பயிரிட்டுக் கொண்டிருப் பார்களானால், அவர்களுக்கே கொடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் போட்ட குத்தகைச் சட்டத்தை நாம் மதித்தவர்கள் ஆவோம். அறநிலையத் துறை நிர்வாகத்தையும் நாம் ஒன்றுபடுத்தி, ஒரு முடிவுக்குக் கொண்டு வரமுடியும். இல்லையானால், அந்தக்குத்தகை வேறு, இந்தக் குத்தகை வேறு என்ற நிலைமை ஏற்படும். ஒரு தனிப்பட்ட முதலாளி வைத்திருக்கும் நிலத்திற்கு மட்டும் ஒரு சட்டம் போட்டுவிட்டு, நம்முடைய துறையிலே இருக் கின்ற குத்தகைதாரர்களை போட்டாப் போட்டிக்கு விட்டால், உழைக்கின்ற உழைப்பாளி, பணக்கார குத்தகைதாரர்களோடு போட்டி போட முடியாமல்

அம்பலமாகி, நிரபராதியாகி, நடுத் தெருவிலே நிற்கின்ற நிலை ஏற்படும். அந்தச் செயலுக்கு நம் அரசு இடம் கொடுக்காமல், நிர்வாகத் துறையிலே உள்ளவர்களுக்கு, நிர்வாக அதிகாரிகளுக்கு உடனடியாக தாக்கீது கொடுத்து, அவர்களால் அரசுக்கு அல்லது ஆலயத்திற்கு அல்லது மடத்திற்குச் சேர வேண்டிய பாக்கியிருக்குமானால், அதை நிச்சயமாக வசூலிக்கலாம்; அதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், இதைச் செய்யாமல் விட்டுவிட்டால், அவர்கள் பிழைப்புக்கு மிகவும் அவலநிலை ஏற்படுகின்ற நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்றைக்கு கிட்டத்தட்ட இந்த நிர்வாகத்திலே 33,455 சமய நிறுவனங்கள் இருக்கின்றன, இந்த நிறுவனங்களில் 31,423 கோயில்கள் இருக்கின்றன; சமண சமய நிறுவனங்கள் 17; அறக்கட்டளைகள் 1,706; சமண சமய அறக்கட்டளைகள் 191 என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல், குருக்கள் 28,500 என்று சொல்லுகிறார்கள், பணியாளர்கள் 53,000 பேர்கள் என்று சொல்லுகிறார்கள். நான் பணியாளர்களைப்பற்றி மட்டும் எடுத்துக் கொள்கிறேன். குருக்களுக்கு வரவில்லை. குருக்கள் என்று சொல்லுகிறபோது, ஓரளவுக்குப் படித்து, மத சம்பந்தமான ரீதியிலே பிரச்னைகளைப் புரிந்தவர்கள்தான் குருக்களாக வைக்கப்படுவார்கள்.

(பிற்பகல் 1-10)

ஜாதி என்ற காரணத்திற்காக யாரையும் வைத்துவிடுவது என்று சொல்வது அவ்வளவு சிறந்ததாகாது. ஜாதி பெயராலே அந்த நிலைமைகள் இல்லாமல் தவிர்ப்பது அரசினுடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். ஆனால் பணியாளர்கள் கடந்த காலங்களில் ஆதித்திராவிட சமுதாய மக்களுக்கு அரசியல் சாசன சட்டத்தில் சட்டம் இருந்தாலும், இடமிருந்தாலும் கொடுக்காமல் நிறுத்தப்பட்டது. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய உத்தியோகங்கள் கொடுக்கப்படவில்லை. சாதாரணமாக கூட்டுகிற தொழிலை தண்ணீர் எடுக்கின்ற தொழிலை, மடப்பள்ளி கூட்டுகின்ற தொழிலை கொடுத்தால் கூட நாங்கள் இந்த அரசு தீண்டாமை ஒழிப்பதற்காக ஒரு டெப்டி ஜெனரல் சூப்பரெண்டென்டை போட்டும், ப்ளையிங் ஸ்குவாடு போலீஸ் போஸ்டிங்ஸ் போட்டும் அவைகள் எல்லாம் செய்ய முடியாத ஒரு காரியத்தை மதத்தைச் சார்ந்தவர்கள் வருகின்ற இடத்திலே தண்ணீர் தூக்குகின்ற தொழிலை கொடுத்தால் உண்மையிலேயே அரசாங்கம் தீண்டாமை ஒழிப்பிலே நம்பிக்கை உடையதாக இருக்கிறது என்று நல்ல பெயர் எடுக்கிற வாய்ப்பு உண்டாகும். அதோடு மட்டுமல்லாமல் நாம் உருவாக்கிய சட்டத்தை நாம் மதித்திருக்கிறோம் என்ற பெருமையும் உங்களுக்கு வரும்.

1981 ஏப்ரல் 28] (திரு. எல். இளையபெருமாள்)

புதுக்கோட்டையிலே மன்னர்கள் காலத்திலே ஆதி திராவிட சமுதாய மக்களுக்காக அங்குள்ள சிவாலயத்தின் முன்னாலே நிலங்கள் கொடுக்கப் பட்டன. அந்த நிலங்களை அங்குள்ள ஜாதி துவேஷம் படைத்தவர்கள் அவர்களை அப்புறப்படுத்தினார்கள். கோர்ட்டிற்கு சென்றார்கள். கோர்ட்டு அவர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு அளித்தது. அப்படி கோர்ட் தீர்ப்பளித்தும் கூட அந்த மக்கள் அவர்கள் தங்குவதற்கு சமய பிரசங்கத்தைப் பேசுவதற்கு இன்னும் அனுமதிக்கப்படவில்லை. இது சம்பந்தமாக அங்கே இருக்கிற ஆதி திராவிட மக்கள் அரசாங்கத்திற்கு எழுதியதில் என்ன முடிவு எடுக்கப் பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. அருமை சகோதரர் நெடுமாறன் அவர்கள் தனி வாரியம் அமைக்கவேண்டும் என்று சொன்னார்கள். நிச்சயமாக நான் அவரைப் பாராட்டுகிறேன். ஆனால் அதே சமயத்தில் மதத்தை சேர்ந்த பெரியவர்கள் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். இன்று அவர்களுக்கு நான் வேண்டுகோளாகச் சொல்கிறேன். மதத்தைச் சேர்ந்தவர்களைச் சேர்த்து விடுவதிலே தன் மதத்தைச் சேர்த்துக் கொள்ளவில்லை என்று நான் சொல்ல வில்லை. இந்தச் சமுதாய மக்களுக்கு, இந்து மதத்திலே இருக்கிற கேடான கொடுமைகள் நீக்குவதற்கு அவர்கள் நேரடியாக இறங்காமல் இருக்கிறார்களே என்பதை கூறுகிறேன். அவர்கள் பற்று அற்றோர்கள். அவர்கள் எல்லாப் பற்றையும் விட்டதால் ஜாதிப் பற்றையும் விட்டுவிட்டோம் என்று சொல்லி விட்டு இந்த மக்களுக்கு வருகிற கொடுமைகளுக்கு அவர்கள் முன்வராததால் சகோதரர் நெடுமாறன் அவர்கள் இதை சீர்க்க யோசிக்கவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களை வைப்பதிலே ஆண்டவன் நம்பிக்கை பெற்றோர் நிலைமையும் சேர்த்து இந்த சமுதாய மக்கள் கோடிக்கணக்கான மக்களுடைய தீண்டாமை கொடுமையை எடுப்பதற்கான நிலையை உண்டாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய இளையபெருமாள் அவர்கள் கூட அமைப்பிலே இருக்கலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவர் அவர்களே, நான் மதத்தலைவர்கள் நமது மதத்திலே முக்கியமான பங்கெடுக்கவில்லை என்ற ஒரு மனக்கசப்பைத் தான் சொன்னேனேத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன் இந்து மதத்திற்கு மட்டும் இப்படி சட்டம் கொண்டு வந்து விட்டு இருக்கிறீர்களே ? அது மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, கிறிஸ்துவ

சமுதாயத்திற்கு இன்றைக்கு பணம் கிடைக்கின்றது. வெளிநாட்டிலே இருந்து வருகிறது என்ற பெயரிலே பணம் கிடைக்கின்றது. அதுவும் மற்ற காரியங்கள் என்ற பெயராலே வந்து கொண்டிருக்கிறது. இது மத்திய அரசுக்கு கூட மாநில அரசு எழுத கடமைப்பட்டிருக்கிறது. எழுதியதா என்பது எனக்குத் தெரியாது. இவர்கள் கூட பினாமி என்ற பெயரிலே வைத்திருக்கிறார்கள். அதைப்போலவே இஸ்லாமிய சமுதாயம், அவர்களுக்கு நான் விரோதமாக சொல்லவில்லை. அவர்களுக்கும் மொகலாய மன்னர்களும், மற்றவர்களாலும், பொதுமக்களாலும் கொடுக்கப்பட்ட சொத்துக்கள் இருக்கின்றன. அவைகளை விவாதிப்பதற்கு வரவில்லை. ஏன் வரவில்லை, என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது நான் சிதம்பரத்தைச் சேர்ந்தவன் என்ற அளவிலே ஒன்றைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சபாநாயகர் ஆலயம், சிதம்பரத்திலே இருப்பது ; பராந்தகச் சோழன் பொன் ஓடு வேய்ந்தான் ; அதைப்போலவே ஜமீன்தார்கள் நிலம் கொடுத்தார்கள். நிலச்சுவான்தார்கள் நிலம் கொடுத்தார்கள். கிருஷ்ண தேவராயர் என்ற அரசர் வடக்கு கோபுரத்தை கட்டிக் கொடுத்தார். அப்படிப் பட்டவர்களுக்கு மூவாயிரத்தி சில்லறை ரூபாய் தான் வருஷ ரூபாய் என்று இந்த குறிப்பிலே பார்ப்பது மிக வேதனையாக இருக்கிறது. நான் அந்த நகரத்தைப்பற்றி அறிந்தவன். நிச்சயமாக இன்று இருக்கிற பேக்வேர்ட் கிளாஸ் டைரக்டர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் அறநிலையத் துறை ஆணையாளராக இருந்தபோது அந்த ஆலயத்திற்கு சுமார் 1,000 ஏக்கருக்கு மேல் இருக்கின்றன. என்பதைக் கண்டு சொல்லியுள்ளார்கள். அங்கு அறக் கட்டளை சரியாக நடத்தப்படவில்லை என்று தெரிந்து தான் நம்முடைய அரசாங்கம் அறங்காவலர்களை நியமித்தார்கள். ஆனால் நீதி வேறு, நிர்வாகம் வேறு என்ற பாவச்சுமையிலே நல்லது வரும் என்று எண்ணப்போய்—இந்த துறையிலே குறை கூறவில்லை. ஆனால் இன்று உலகத்திலே என்ன நடக்கிறது ? சமுதாயத்திலே என்ன நடக்கிறது; ஆலயங்களில் என்ன நடக்கிறது ? வைத்யநாதன் கோவிலிலேயே கொள்ளையடித்தவனுக்கு இன்றைக்கு ஜாமீன் கொடுப்போம் ; அடித்தால் அந்த பூசாரி செத்து விடுவான் என்று விட்டுவிட்டோம் அதே பூசாரியை வைத்துக் கொள்வது, அதே பொருள்கள் காப்போரை வைத்துக் கொள்வது ; அவர்கள் கேட்டாலும் பின்னால் ஸ்டே ஆர்டர் கொடுப்போம் என்று படித்த மேதைகள் இருக்கிறார்கள். நான் சட்டத்தை குறை கூறவில்லை. இன்றைக்கு இருக்கிற அரசாங்க வழக்கறிஞர்களை குறை கூறவில்லை. அவர்களுடைய தரத்தை நான் குறைத்துச் சொல்லவில்லை. ஆனால் அரசாங்க வக்கீல் என்று

வைக்கிறபோது ஆயிரக்கணக்கான கேஸ்கள் அவர்களுக்கு வருகின்றன, போதிய சமயத்தில் தங்களுடைய வாக்குவாதங்களை அவர்கள் எடுத்துவைக்க வாய்ப்பு இல்லை. இதுபோன்ற விஷயங்களை நிர்வாகத்திலே உள்ளவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—உத்தியோகஸ்தர்களாக இருக்கிறவர்கள் யாரும் சந்யாசியாக இல்லை—அவர்கள் கேட்கிற குறிப்புகளை தொடுக்க மறுத்துவிடுகிறார்கள். ஆகஸ்டு மாதத்திற்கு அல்லது 85-வது ஆண்டுக்கு ஒத்திவைக்கக்கூடிய நிலைமையை உருவாக்காமல் அதற்காக சட்ட வல்லுநர்களை,* சட்ட ஆலோசகர்களை, வழக்கறிஞர்களை தனியாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சுசீந்திரம் என்ற ஆலயத்திலே ஒரு ஆதி திராவிட சகோதரர் ஈ.ஓ.-வாக வந்த காரணத்தினாலே அத்தனைக் கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் சேர்ந்து தீர்மானம் போட்டு ஒரே ஒரு பியூன் அவர் போட்டார் என்ற காரணத்திற்காக அவரை ஊரை விட்டே மாற்றினார்கள். தீண்டாமை ஒழிக்கப்படவேண்டுமென்று பேசுகிறோம், சர்வ சமயம் என்று பேசுகிறோம், ஆலயத்திலே நிர்வாகம் நல்ல முறையிலே நடக்கவேண்டுமென்று சொல்கிறோம், இந்த நிலைமையிலே அமைச்சர் அவர்களும் கவனித்து வருகிற காலத்திலாவது இப்படிப்பட்ட கெட்ட காரியங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு அனுமதியளித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-இல் ஆட்சியைக் கைப்பற்றிய நேரத்திலே பகுத்தறிவுவாதிகள் குறிப்பாக தந்தை பெரியாரின் பிரதம சீடர் ஆள வந்திருக்கிறாரே, ஆலயங்கள் இருக்குமா ? ஆறு கால நெய்வேத்தியங்கள் நடக்குமா ? ஆண்டவர்கள் வீதி உலா வருவார்களா ? என்று சில சனாதனிகள் சந்தேகத்தைக் கிளப்பினார்கள். ஆனால் அண்ணா அவர்கள் அந்தச் சனாதனிகள் சந்தேகத்திற்கு ஆதாரம் இல்லை என்று நிரூபித்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் துவக்கப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைக்கப்பட்டதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் காலத்திலே இந்த அறநிலையத் துறை, இந்து சமய மடங்கள் எல்லாம் மிகவும் பொற்காலத்திலே நடப்பதைப் பார்க்கிறோம். 33 ஆயிரத்திற்கு மேற்பட்ட சமய நிலையங்களும் 31 ஆயிரத்திற்குக் குறையாத ஆலயங்களும் 64 மடங்களும் அவர்களிடமிருந்து வருகிற கிட்டத்தட்ட

16 கோடி ரூபாய் வருமானம், அவைகளிலே பணிபுரிகின்ற ஒரு லட்சம் தொழிலாளர்களும் இப்படி இருக்கிற மிகப் பெரிய நிர்வாகம் ஆகும். அதை அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். இவ்வளவு சொத்துக்களிலிருந்து வருகின்ற வருமானம் 16 கோடி ரூபாய் என்று சொன்னால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னால் கிட்டத்தட்ட 16 கோடி ரூபாய்க்கு பல்வேறு கோயில்களிலே இராமேஸ்வரத்திலிருந்து திருத்தணி வரையில் சிதம்பரம் உள்பட பல்வேறு திருப்பணிப் பணிகள் நடைபெறுவதும் குறிப்பாக மதுரையிலே தங்கத்தேர் விட்டதும், பழனியில் இரண்டாவது இழுவை ரயில்விட்டதும், திருத்தணியில் பயணிகள் செல்வதற்கு வசதியாக இரண்டாவது பாதை அமைத்ததும் குறிப்பிடத் தக்கவையாகும். அது மாத்திரமல்ல, பிரகதீசுவரர் ஆலயம் யார் காலத்திலே கும்பாபிஷேகம் செய்யப் படும் என்று பிராணிகளும்கூட சந்தேகமாகவும் விடுகதையாகவும் கேட்டு இன்றைக்கு பிரகதீசுவரர் ஆலயம் புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிற்பாடு கும்பாபிஷேகம் நடப்பது என்பதும் சிதம்பரம் நடராஜருடைய கோபுரங்கள். நான்கு கோபுரங்களும் ஒவ்வொருவர் காலத்திலே ஒவ்வொரு அரசர் காலத்திலே பல்லவர் காலத்திலே, சோழப் பேரரசர் காலத்திலே, பச்சையப்ப முதலியார் காலத்திலே, என்று பல்வேறு அரசர்கள் காலத்திலே வள்ளல்கள் காலத்திலே, பல நூற்றாண்டுகளில் கும்பாபிஷேகம் நடந்ததற்கு மாறாக புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே நான்கு கோபுரங்களும் ஏக காலத்திலே கும்பாபிஷேகம் நடத்துவது என்பதும் இதற்காக கிட்டத்தட்ட இதுவரையில் செலவாகியிருக்கிற 25 லட்ச ரூபாயில் 12½ லட்சம் ரூபாயை இந்த அறநிலையத்துறை கொடுத்திருக்கிறது என்பது வரவேற்கத்தக்கதாகும். அது மாத்திரமல்ல, ஆண்டவனுக்கு மாத்திரம் இவ்வளவு கோடி செலவு செய்கிறார்களே நடமாடும் தெய்வங்கள் கோயில்களிலே பணியாற்றுகிறவர் களுக்கு யாதும் செய்யவில்லையா என்று கேட்பதற்குப் பதில் அளிப்பதுபோல் பல்வேறு நல்ல திட்டங்களைப் போட்டு அவர்களுடைய சம்பள விகிதத்தை திருத்தியமைத்ததோடு அகவிலைப்படி, வீட்டுப்படி, நகர ஈட்டுப்படியோடு, குடும்ப நல நிதித் திட்டம், இவைகளை விஸ்தரித்து பண்டிகைக்கு 400 ரூபாய் முன்பணம் பெறவும் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள கோயிலில் ஒரு மாத சம்பளத்தை போனசாகப் பெறுகிற அருமையான திட்டத்தையும் இன்றைக்கு அறநிலையத்துறை வெளியிட்டிருப்பதை ஆலயத் தொழிலாளர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

1981 ஏப்ரல் 28] (திரு. வி. வி. சுவாமிநாதன்)

(பிற்பகல் 1-20)

அம்மாதிரி பல்வேறு பெரிய ஆலயங்கள் மாத்திரமல்ல; முதன் முதலாக ஆதி திராவிடர்கள் குடியிருக்கின்ற பகுதிகளுக்கு, 1981-82 ஆம் ஆண்டுக்கு சிறு கோயில்கள் திருப்பணிக்கு 12 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கின்ற இந்த அரசை, அறநிலைய இலாக்காவை, அமைச்சரை நாம் மனதாரப் பாராட்ட வேண்டும்.

வெந்தவெயிலில் நான் ஓட்டுக் கேட்டபொழுது ஆதித்திராவிடக் குடியிருப்புகளில் தங்கத் தாய்மார்கள், சமூகத்தில் சமத்துவம் பெறாத சகோதரிகள் சிறு கோயில்கள் கட்டப் பணம் வேண்டுமென்றார்கள். இன்னும் பல கோயில்களில் ஜாதி இந்துக்கள் உள்ள இடங்களில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஆண்கள் மட்டுமல்ல, பெண்களேகூடப் போக முடியவில்லை என்பதை நான் மூடி மறைக்க விரும்பவில்லை. அந்த அளவிற்கு மூடப் பழக்க வழக்கங்கள் இன்னும் கிராமங்களில் மண்டிக் கிடக்கின்றன. அப்படிப் பட்ட சகோதரிகள் தாங்கள் பெற்ற மகவைகளோடு, தங்களுடைய கணவரோடு, தங்களுடைய சகோதரர்களோடு, தாங்கள் வசிக்கின்ற பகுதிகளிலே இருக்கக்கூடிய மாரியம்மன் கோயில், முருகன் கோயில் என்று சிறு சிறு கோயில்களாக இருந்தாலும்கூட அந்தக் கோயில்களை கட்டி முடிக்க முடியாமல் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் இருக்கின்ற கோயில்களுக்கு 1981-82 ஆம் ஆண்டுக்கு 12 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்றாலும் மாண்புமிகு அமைச்சரவர்கள் மேலும் சில இலட்சம் ரூபாய்களை ஒதுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினரவர்கள் பேசும்பொழுது தன்னுடைய தொகுதியில் தன்னை அழைக்கவில்லை என்றும், அறநிலையக் குழுக்களில் போடவில்லை என்றும் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, உள்ளூர்க் கிளையிலே பொறுப்பு வகிக்கின்ற மாரிமுத்து என்பவரையும், சிதம்பரம் தொகுதியிலே பெருங்காலூர் என்ற ஊரில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர், அந்த ஊர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், அவரை அந்த ஊர் கோயிலின் அறங்காவலர் குழுவிலே போட்டிருப்பதையும் நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

என்னுடைய எதிரே வீற்றிருக்கின்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் என்னுடைய தொகுதியில் பிறந்து வளர்ந்தவர்கள். ஆனால் காட்டுமன்னார்கோயில் தொகுதியிலே நின்று

வெற்றி பெற்றிருக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு மாண்புமிகு அமைச்சரவர்கள் புவனகிரி தொகுதியிலே உள்ள வள்ளல் இராமலிங்க அடிகளின் பிறந்த ஊரைப் பார்வையிட வருகின்றபொழுது—அங்கு அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென்ற திட்டத்தை எப்படி அமல்படுத்த வேண்டுமென்று யோசிக்கும்பொழுது முதன்முதலாக அழைப்பு விடுத்ததே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்களுக்குத்தான் என்பதையும், எங்களை வரவேற்றதும் அவர்கள்தான் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சிதம்பரத்திற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் சில நாட்களுக்கு முன்பு வந்தார்கள். நந்தனார் கோயில் என்று தமிழகத்திலே வேறு எங்குமே கிடையாது ; 63 நாயன்மார்களில் ஒருவரான திருநாளைப்போவார் என்ற அந்தப் பெரிய தீர்க்கதரிசிக்கு, தங்களுடைய சமூகம் கோயிலுக்குள் போக வேண்டுமென்பதற்காக அந்தக் காலத்திலேயே கோயிலுக்குள் நுழைய தீக்குளித்த அந்தத் தியாகியின் திருவுருவத்தை நேரிலே தரிசித்து, அந்தக் கோயிலைப் பெருமையுடையதாக ஆக்க வேண்டுமென்பதற்காக வருகை தந்த பொழுது இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த, ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த தலைவர் திரு. இளையபெருமாள் அவர்கள் வந்திருந்து அமைச்சரை வரவேற்றிருக்கிறார்கள் என்பதையும், அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டதையும் என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. எனவே, எங்கேயாவது இங்கொன்றும் அங்கொன்றுமாக யாரையாவது போட முடியாமல் இருந்திருக்க முடியுமே தவிர, இந்த அரசுக்குக் காழ்ப்புணர்ச்சி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

1971-72 ஆம் ஆண்டுக்கு பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த பொழுது துவக்கப்பட்டு, அவர்களால் தொட்டுவிடப்பட்ட பல்வேறு வேலைகள், கிட்டத்தட்ட 220 வேலைகள் என்று கருதுகிறேன். 88 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பல்வேறு கோயில் திருப்பணிகளையும், திருமண மண்டபங்களையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்டபிறகுதான் கட்டிமுடித்திருக்கிறது என்பதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆனால் இந்த நேரத்திலே ஆதி திராவிட பெருங்குடி வகுப்பினர் உள்ள பகுதியிலே உள்ள கோயில்களுக்குப் பல இலட்சம் ரூபாய்களை ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன். அவர்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள், அதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். காரணம்,

1981 ஏப்ரல் 28] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

சிலபேர் இலட்சம் இலட்சமாக ரூபாய்களைக் கொண்டுபோய்ப் பெரிய கோயிலுக்கு கொடுத்தாலும் அங்குள்ளவர்கள் நன்றியுடையவர்களாக இல்லை.

குறிப்பாக, தில்லை நடராஜர் கோயிலுக்கு இதுவரையில் 25 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது என்றால், 12½ இலட்சம் ரூபாயைத் தமிழக அரசு அந்தக் கோயிலுக்குக் கொடுத்தும், அந்தக் கோயிலின் நிர்வாகம் சரிவர நடத்தப்படவில்லை. இந்தக் கோயிலில் உள்ளவர்கள், தங்களுக்குத் தான் இந்தக் கோயில் சொந்தம்; தங்கள் இஷ்டப்படிதான் இந்தக் கோயிலிலே நிர்வாகம் நடக்கும் என்று நினைக்கிறார்கள். பாவம், அரசாங்கத்திற்குப் பயப்பட வேண்டியதில்லை; ஆனால் அவர்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பைக்கூட ஏற்க மறுக்கிறார்கள். ஹைகோர்ட்டு, இந்தத் தில்லை சபாநாயகர் கோயிலைப்பற்றி 1936 ஆம் ஆண்டு ஒரு திட்டம் ஸ்கீம் வகுத்து அந்த ஸ்கீமின் பிரகாரம் அந்தக் கோயிலுக்குக் கௌரவப் பார்வையாளர்கள் வேண்டுமென்று உத்தரவிட்டது. ஆனால் அந்தத் தீர்ப்பை எதிர்த்தே வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். எந்த உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை அளித்ததோ அதே தீர்ப்பை அரசு அமுல் செய்ய முயன்றபொழுது அதே உயர்நீதிமன்றம் தம் தீர்ப்பை அமலாக்க விடாமல் தடை செய்துள்ளது விந்தையாக இருக்கிறது.

தில்லை சபாநாயகர் கோயிலிலுள்ள தீட்சிதர்கள் தங்களைத் தெய்வப் பிறவிகளாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மாபெரும் கோயிலைக் கட்டியவர்கள், மாபெரும் கோபுரங்களை எழுப்பியவர்கள், மாடவீதிகளை அமைத்தவர்கள் தமிழ் மன்னர்கள். தமிழ் மன்னர்கள் மட்டும் அல்லாமல், மன்னர்களுடைய சகோதரிகள், மன்னர்களுடைய வாரிசுதாரர்கள் விலைமதிப்பில்லாத நகைகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அந்தக் கோயிலுக்குச் சொந்தமான பட்டா நிலங்கள் மட்டும் ஆயிரம் ஏக்கர் நிலங்கள். அந்தக் கோயிலுக்குச் சொந்தமான அறக்கட்டளை நிலங்கள், கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் இருந்தும் அந்தக் கோயிலை நடத்துகிற தீட்சிதர்கள், மதிப்புள்ள நண்பர்கள், சென்ற வருஷ வருமானம் ரூ. 3,008 தான் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சென்ற வருஷ வருமானம் அந்த நிலங்களிலிருந்து மாத்திரம் அறநிலையத் துறையிலே உள்ள வருவாய்த் துறை அதிகாரி பாங்கிலே போட்டிருப்பது ரூ. 39,000 என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவும் அந்த நிலங்களிலிருந்து வந்த வருமானம்.

இதுவரை, அமைச்சருக்கும் தெரியாது என்று கருதுகிறேன், அறநிலைய ஆணையருக்கும் தெரியாது என்று கருதுகிறேன், கோயிலைப் பற்றிய ஒரு பெரிய சிதம்பர ரகசியத்தை நான் தெரிவிக்கிறேன். அந்த கோயிலுக்கு எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்பதும், அந்தக் கோயிலுக்கு எவ்வளவு பெரிய வருமானம் வருகிறது என்பதையும் இந்த நிர்வாகத்திலே ஈடுபட்ட தீட்சிதர்களும் உயர்நீதிமன்றத்திற்கு, அல்லது உச்ச நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல் விட்டு விட்டார்கள். முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டபொழுதும், இன்றையதினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலேயிருக்கிற பொழுதும் இந்தச் சபாநாயகர் கோயிலுடைய முன்னாள் செயலாளரே மனு கொடுத்திருக்கிறார். அவருடைய மனுவின் கண்டபிரகாரம், ஆண்டு ஒன்றுக்குச் சிதம்பரம் நடராஜர் கோயிலில் ஒரு வட்டம்வீதம், 18 தடவைகள் நடராஜர் சன்னதி உள்பட 14 சன்னதிகளை ஏலம் விடுவதன்மூலம் குறைந்தது ரூ. 1 இலட்சத்திற்கு வருமானம் வருகிறது. ஒரு வட்டத்திற்கு ரூ. 6,000 வீதம் 18 வட்டத்திற்கும் ரூ. 1 இலட்சம் வருஷப் பிரதிவருஷம் வருமானம் வருகிறது.

அது மாத்திரமல்ல, பிரசாத விற்பனை ஒவ்வொரு வருஷத்திற்கும் ஏலம் விடப்படுகிறது. நடராஜர் சன்னதி 40 நாளைக்கு குத்தகை விடப்படுகிறது. அதனால் ஆண்டிற்கு ரூ. 13,000-க்குக் குறையாமல் வருகிறது. இந்த வருமானத்தைக் காட்டாதது மட்டும் அல்ல, 1955 ஆம் ஆண்டு நடராஜர் கோயிலுக்கு நடந்த கும்பாபிஷேகத்தின்பொழுது, பவுன் கவசம் செய்த வகையில் 16 பவுன் நகை காணாமல் போய்விட்டது. இது அரசாங்கத்திற்குப் புகார் செய்யப்படவில்லை. ஒரு வெள்ளி சொம்பினுடைய எடை அரை கிலோ வீதம், 13 அல்லது 14 வெள்ளி சொம்புகள் காணாமல் போய்விட்டன. அந்தக் கோயிலில் பல்வேறு சீர்கேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. கௌரவப் பார்வையாளர்களைப் பொறுத்தவரை நீதிமன்றத்தின் தீர்ப்புப் பிரகாரம், The Board shall appoint the Honorary Visitors. என்று இருக்கிறது. அந்தக் கௌரவப் பார்வையாளர்களுடைய கடமை, அந்தக் கோயிலிலே ஒழுங்காகக் கட்டளைகள் நடைபெறுகிறதா என்று பார்ப்பது. அந்தக் கோயிலிலே 'காஷ் பாலன்ஸ்' அதைச் செக் செய்ய வேண்டியதும் கௌரவப் பார்வையாளர்கள் கடமைதான். அத்துடன், கட்டளைகள் சரியாக நடத்தவில்லை, அல்லது, கோயில்களில் ஏதாவது முறைகேடுகள் நடந்தால், அதை அறநிலைய இலாகாவினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதும் அந்தப் பார்வையாளர்களுடைய கடமைதான். அந்தக் கௌரவப் பார்வையாளர்கள் யார்? மாண்புமிகு இளையபெருமாள் போன்ற

1981 எப்ரல் 28] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

வர்கள், திருமதி கைலாசம் போன்றவர்கள், ஜஸ்டிஸ் சதாசிவம் போன்றவர்கள், இவர்களைத்தான் நியமித்திருக்கிறார்கள். அந்தக் காலத்திலே நந்தனாரை வரக்கூடாது என்றார்கள். இன்றையதினம் கௌரவப் பார்வையாளர்களை யும் கூட வரக்கூடாது என்கிறார்கள். நந்தனார் வந்ததாகச் சொல்கிறார் களே தவிர, நந்தனார் எந்தப் பாதை வழியாகச் சென்று, அந்த நடராஜரைத் தரிசித்ததாகச் சொல்கிறார்களோ, அந்தப் பாதை இன்று மூடப்பட்டிருக் கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன், அந்தப் பாதை திறக்கப்பட வேண்டும். அந்தப் பாதை திறக்கப்படாமல் இருந்தால், அந்தக் கோயில் இன்னும் தீண்டாமையை அனுஷ்டிக்கிறது என்றுதான் பொருள். அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. சோழப் பேரரசன் கடல் கடந்து படையோடு சென்று, மேலை நாடுகளிலும், கீழை நாடுகளிலும் வெற்றி பெற்று, வெற்றிக் கொடியுடன் தமிழ்நாட்டிற்கு வந்து மேலைக் கோபுரத்தில், தமிழ்ப் பாசுரங்கள், நால்வர் பாடிய பாடல்கள் ஓர் அறையிலே பூட்டப்பட்டிருக்கிறது, அதைத் தாருங்கள் என்று கேட்ட பொழுது அந்தத் தீட்சிதர்கள் கொடுக்க மறுத்து விட்டார்கள். மறுத்தது மாத்திரமல்ல, அந்த மாமன்னனிடம் சொன்னார்கள். எந்த நால்வர்கள் அந்தப் பாசுரத்தை எழுதி வைத்தார்களோ, அவர்களே வந்தால்தான் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். நினைத்திருந்தால் மாமன்னன் மத யானையைவிட்டு அந்த அறையின் கதவை உடைத்திருப்பான். ஆனால், வீரத்திற்கு மாத்திரமல்லாமல், விவேகத்திற்கும் பெயர் போனவன் என்பதை நிரூபிப்பதற்காக சற்று பொறுங்கள், கொஞ்ச நேரத்திலே நால்வருடன் வரு கிறேன் என்று சொன்ன மாமன்னன், நால்வருடைய சிலைகளுடன் அங்கு வந்து நின்றான். மேலைக் கோபுரத்தில் தீட்சிதர்களைக் கூப்பிட்டான், நால்வர்களுடன் வர வேண்டுமென்றீர்களே, நால்வரும் வந்திருக்கிறார்கள், என்ன சொல்கிறீர்கள், என்று கேட்டான். அந்த நால்வரும் சிலை என்று சொன்னால், உள்ளேயிருக்கிற ஆண்டவனை எவனாவது விதண்டாவாதக் காரன் சிலை என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று திகைத்து தீட்சிதர்கள் தப்ப முடியாது என்று நினைத்து, உடனே வாருங்கள் ஐயனே, கதவைத் திறக்கிறோம் என்று சொல்லி, அந்தப் பாசுரங்களைக் கொடுத் தார்கள்.

சேக்கிழார், அந்த நடராஜர் சன்னதியிலே பெரிய புராணத்தைப் பாடிய தற்கு 'உலகெலாம் உணர்ந்தோதற்கு அரியவன்' என்று ஆண்டவனே அடி எடுத்துக் கொடுத்தது தமிழில்தான் என்று சொல்கிறார்கள். பெரிய புராணம் அங்குதான் அரங்கேற்றப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

மது மாத்திரமல்ல, மாணிக்கவாசகர் திருவாசகத்தைச் சொன்ன பொழுது, ஆண்டவனே உட்கார்ந்து அந்தத் தேனினும் இனிய வாசகத்தைக் காதால் கேட்டு, அவரே கைப்பட எழுதி, மறுநாள் காலையில் தீட்சிதர் நடராஜர் கோயிலைத் திறக்கும்போது, "எழுதியது சிற்றம்பலத்துடையோன்" என்று அதிலே எழுதியிருந்தது என்றும் தீட்சிதர்களே சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-30)

திரு. வி. வி. சுவாமிநாதன் : தமிழில் ஆண்டவன் அடி எடுத்துக் கொடுத்தது மாத்திரம் அல்லாமல் திருவாசகத்தையே தமிழிலே எழுதி அவர் தமிழுக்கும் தனக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று காட்டிய பிற்பாடும் இன்றையதினம் தமிழ் என்று நாம் பேசுகிறோம், தமிழ் ஆட்சி மொழி ஆகவேண்டும் என்று சொல்கிறோம், தமிழ் இசை வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் தில்லை நடராஜர் கோயிலிலே நடராஜர் சன்னதிக்கு முன்பு தமிழிலே எந்த ஓதுவாரும் பாட முடியாது என்பதை மிக வருத்தத்துடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் சொன்னார்கள், ஜாதிபேதமற்ற முறையில் அர்ச்சகர்களை நியமனம் செய்யவேண்டும். அதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு நடவடிக்கை எடுத்தது என்று சொன்னார். உச்ச நீதி மன்றம் அந்த நடவடிக்கை சரியில்லை என்று தீர்ப்பளித்தது. ஆனால் அந்தத் தீர்ப்பையே சரிப்படுத்தி அந்தத் தீர்ப்பிலே எடுத்துக் காட்டப்பட்ட குறைகளைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு சரிசெய்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. அந்தக் குறிப்பிட்ட சட்டத்திலே ஒரு விதியை மாற்றிய பிற்பாடுதான் நீங்கள் இப்படிக் கொண்டு வரலாம் ; சட்டத்திலே உள்ள பெரிய விதியைத் திருத்தாமல் இப்படிக் கொண்டு வரமுடியாது, என்றுதான் உச்ச நீதிமன்றம் எடுத்துக் காட்டியது. அந்த உச்ச நீதி மன்றம் எடுத்துக் காட்டிய குறையைப் போக்குவதற்கு உரிய அளவிலே இன்றையதினம் மகாராஜன் தலைமையிலே ஒரு குழுவைப் போட்டு ஜூலை மாதம்—இன்னும் 2, 3 மாதங்கள்தான் இருக்கின்றன—அந்த மாதத்திற்குள் அந்த அறிக்கையைப் பெற்று, நாம் எல்லாம் நிச்சயம் பார்க்கப் போகிறோம்—அடுத்த ஆண்டு தமிழகத்தில் ஜாதி

பேதம் அற்ற முறையில் அர்ச்சகர்கள் ஆலயத்திலே நியமிக்கக் கூடிய வழிமுறைகளை இந்த அரசு செய்யும் என்பதை நான் நிச்சயமாக மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர்கள் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்பேற்ற பிற்பாடு கோயிலுக்குச் சொந்தமான பல்வேறு நிலங்களை இதுவரையில் கையகப்படுத்தாத நிலங்களை, இதுவரையில் குத்தகைக்கு விடாத நிலங்களை குத்தகைக்கு எடுத்து, ஏற்கனவே குறைந்த குத்தகைக்கு விட்ட நிலங்களை அதிகக் குத்தகைக்கு விட்டு அதனால் இந்தக் கோயில்களுக்கு 7 லட்சம் ரூபாய் அதிக வருமானமும், கோயில் இடங்களைக் குறைந்த குத்தகைக்கு விட்டு இருந்ததை அதிகமான வாடகைக்கு விட்டு அந்த வகையில் மேலும் ஒரு 11 லட்சம் ரூபாயும், இந்தத் துறைக்கு ஈட்டித் தந்திருக்கிறார்களே அதற்கு அவருக்கு மாற்றுக் கட்சித் தோழர்கள் கூட சபாஷ் பட்டம் கொடுக்க வேண்டும்.

நான் மிகப் பணிவோடு இந்தத் துறைக்கு ஒரு ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். வசதியுடைய கோயில்கள் தங்கள் கோயில்களின் உபயோகத்திற்குத் தேவையான சாம்பிராணி, சூடம், ஊதுபத்தி போன்றவைகளை அவர்களே தயாரித்து, மற்ற கோயில்களுக்கும் விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். முடியுமானால், தனியார், பக்தியாளர்கள் யார் யார் கேட்டாலும் இந்த ஆலயங்களிலே தயாரித்த சாம்பிராணி, சூடம், ஊதுபத்தி ஆகியவைகளை அவர்களுக்கு விற்கவேண்டும்.

வருவாய்த் துறைக்காக தனியாக ஆய்வாளர்களைப் போட்டிருக்கிறார்கள். ஏற்கனவே 131 ஆய்வாளர்கள் இருந்தார்கள் என்றும் இப்போது 35 பேரை அதிகமாகப் போட்டிருக்கிறோம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வழக்குகள் அதிகமாக இருக்கிற காரணத்தால் அவற்றைக் கவனிப்பதற்காகத் தனியே மேலும் 16 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகக் கூடுதலாக, இப்போது 51 ஆய்வாளர்களைப் போட்டிருக்கிறார்கள். இவ்வளவு அருமையாகப் போட்டிருப்பவர்களைப் போல் ஆலயங்கள் அதிகமான வருவாயை ஈட்டுவதற்கு ஏதுவாக கடைகள் கட்டுதல், புதிதாகக் கட்டிடங்கள் கட்டுதல், திருமண மண்டபங்கள் கட்டுதல் முதலான பல்வேறு வருவாய் ஈட்டும் இனங்களைக் கண்டறிந்து வருவாயைப் பெருக்குவதற்கு தனியாக ஒரு பிளானிங் அன்ட் என்டர்பிரைசஸ் "விங்" என்று சொல்லக்கூடிய ஒரு திறமையான பிரிவையும் தனியாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1981 ஏப்ரல் 28

ஆலயத் தொழிலாளர்கள் இன்றைக்கு லட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களை நம்பி 5 லட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் குறைகளாக 30 கோரிக்கைகளை அமைச்சர் அவர்களுக்கும் அறநிலையத் துறை ஆணையாளர் அவர்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறநிலையத் துறைத் தொழிலாளர்கள் சங்கத் தலைவராக நம்முடைய ஸ்ரீரங்கம் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராஜன் இருக்கிறார். அவர்களுடைய முப்பது கோரிக்கைகளையும் முடிந்த விரைவில் தங்களுக்குச் சௌகரியப்பட்டபடி தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அவைகளில் முக்கியமானவை மூன்று. அவையாவன, (1) தொழிலாளர்கள் இதுவரையில் 12 கிரேடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைக் குறைத்து 7 கிரேடுகளாக ஆக்கவேண்டும். (2) ஆலயங்களிலே பணியாற்றும் பணியாளர்களுக்கு 30 சதமானம் வருமானம்தான் என்று உள்ளதை 40 சதமானம் என்று உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (3) வறட்சி, விலைவாசி உயர்வுகளின் காரணமாக ஊழியர்கள் மிகவும் கஷ்டப்படுவதால் ஊதியத்தை ரூ. 15 என்பதை ரூ. 25 என்று உயர்த்தித் தரவேண்டும் என்பதுதான். அதிலும் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுக்கு, பண்டிட் ஜவஹர்லால் நேருவுக்கு வலதுகரமாக எப்படி வல்லபாய் பட்டேல் இருந்து வந்தாரோ அப்படி இருக்கிறீர்கள். ஆகவே, இந்தத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவிதாங்கூர் முன்னாள் மன்னர்கள், புதுக்கோட்டை மன்னர் சமஸ்தானங்கள்—இவர்கள் ஆதினத்திற்குட்பட்ட கோவில்கள் எல்லாம் இந்து சமய அசைகட்டளை சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆறு படை வீடுகள் அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றன ஐம்பூத தலம் என்று சொல்லுகின்ற திருவானைக்காவல், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், காளகஸ்தி போன்ற இடங்களில் உள்ள கோயில்கள் கூட இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. பண்டாக்களிடமிருந்தும், மகந்த்களிடமிருந்தும் திருப்பதியையும் பத்ரிநாத்தையும் மீட்டுத் தந்திருக்கிறார்கள். அதைப்போல, ரசாக்கர்களிடமிருந்து ஹைதராபாத்தை மீட்ட வல்லபாய் பட்டேலைப்போல தாங்கள் இந்த நடராஜர் கோவிலை தீட்சதரிடமிருந்து மீட்டு, அதை ஒரு பொதுக் கோவிலாக்கி, அங்கே தமிழ் மணம் கமழச் செய்ய வேண்டும். அந்த வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும். சட்டம் இடம் தரவில்லை என்றால் அதற்கு ஒரு விசேஷ சட்டத்தைக் கொண்டுவாருங்கள்; மக்கள் உங்கள் பக்கம் இருப்பார்கள் என்று கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

1981 ஏப்ரல் 28] [திரு. துரைமுருகன்]

திரு. துரைமுருகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திலே உதயமாவதற்கு முன்னால் இப்படிப்பட்ட ஒரு தனியான விவாதம் இந்த மாமன்றத்திலே அறநிலையத் துறைக்கு நடைபெற்றது கிடையாது. பத்தோடு பதினொன்று, அத்தோடு இது ஒன்று என்று பலபட்டறையாக இந்த அறநிலையத்துறையைச் சேர்த்திருந்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபிறகு, குறிப்பாக கலைஞர் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு இந்த அறநிலையத் துறைக்கு என்று தனி அமைச்சர் நியமிக்கப்பட்டு, தனிக் கவனம் செலுத்தப்பட்டு, அதனுடைய வளர்ச்சிக்குப் பல்வேறு நிலைமைகளை உருவாக்கியிருக்கிறார்கள்.

1967-க்கு முன்னால் அறநிலையத் துறையின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கிற கோவில்கள் 9,600 என்று இருந்தது. ஆனால் 1975-க்குள் 18,268 என்று அது உயர்ந்தது தனிக் கவனம் செலுத்தப்பட்ட காரணத்தால்.

அதைப்போல வருவாய் 1967-க்கு முன்னால் 3,98,00,000 ஆக இருந்தது. ஆனால் அதனுடைய வளர்ச்சியிலே தனிக்கவனம் செலுத்தப்பட்டதன் காரணமாகச் சற்றேறப்ப 12 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இப்படித் தனிக் கவனம் செலுத்தி, திருக்கோயில்களின் வருமானத்தைப் பெருக்கி, இந்த நாட்டில் பல்வேறு அறப்பணிகளைச் செய்ததன் விளைவாக ஆண்டவன் கோயில் உண்டியல் நிரம்பியது ; வருமானம் பெருகியது ; ஆகையால் கோயில் திருப்பணிகளுக்கு அதிலிருந்து ஒருபகுதி செலவிடப்பட்டது.

ஆண்டவன் பணம் என்று சொன்னாலும், ஆண்டவன் பிள்ளைகள்தான் நாம் எல்லோரும் என்ற காரணத்தால், இந்த மக்கள் அதிலும் குறிப்பாக "ஏழைகள் சிரித்தால் அதிலே இறைவனைக் காண முடியும்" என்ற பேரறிஞர் அண்ணாவின் வாக்குக்கு ஒப்ப, அந்த ஏழைகள் மனம் மகிழத்தக்க வகையில் பல்வேறு திட்டங்களைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாக்கியது. அந்தக் கோவில் நிதியிலிருந்து இந்த நாட்டின் ஏழை எளிய சமுதாயத்திற்குத் தொண்டுபுரிய ஊனமுற்றவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. செவிடர், ஊமைகளுடைய பள்ளிகள் 2 ஆரம்பிக்கப்பட்டன. அன்பு இல்லங்கள், சிறார் காப்பகங்கள் 5 ; முதியோர் இல்லங்கள்

3 ; ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்கும் திட்டம் ; ஏழை எளியவர்களுக்கு இலவச திருமணக் கூடங்கள் ; எங்கள் ஆட்சி கலைக்கப்படு வதற்கு முன்னால் திருமண மண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டவை 79 ; இன்கம்ப்ளீட்டாக இருந்தவை 128 ; நூலகங்கள் 204 சித்த மருத்துவ மனைகள் 23 ; ஆங்கில மருத்துவ மனை ஒன்று ; கலைக்கூடங்கள் 5. இந்து சமய கண்பாட்டுக் கல்லூரி ஒன்று ; கீழ்த்திசை மொழிக் கல்லூரி ஒன்று ; ஆண்கள் கலைக் கல்லூரிகள் 4 ; மகளிர் கலைக் கல்லூரிகள் 4 ; உயர்நிலை, நடுநிலைப் பள்ளிகள் 14. ஊமை பள்ளிகள் 2. யாத்திரிகர்கள் தங்கும் விடுதி என்று இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களை திராவிட முன் னேற்றக் கழக ஆட்சியில் செய்தார்கள். காரணம் இந்தத் துறையிலே தனிக் கவனம் செலுத்தப்பட்டது. ஆலயத் திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்றன. ஆண்டவன் மகிமையை பறைசாற்ற பல்வேறு நடவடிக்கை கள் எடுக்கப்பட்டன. அதனால் உண்டியல் பணம் பெருகிவந்த காரணத் தால் கோயில் வருமானம் மிகுந்தது ; மிகுந்ததிலே ஏழைகள் முன்னேற்றத் திற்குப் பல்வேறு காரியங்கள் நடைபெற்றன.

(பிற்பகல் 1.40)

எனவேதான் அறநிலையத் துறையின் பொற்காலமாக திராவிட முன் னேற்றக் கழக ஆட்சி காலம் இருந்தது என்று சொன்னால் அது மிகையா காது. இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை வைத்திருக் கிறார்கள். அந்த அறிக்கையை நான் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த் தேன். இப்படித் தனித்தனியாக உங்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு இன்றைக்கு இதிலே உங்கள் சாதனை என்ன ? இப்பொழுது என்னென்ன அறப்பணிகளைச் செய்திருக்கிறீர்கள் ? ஏழைகளுக்கு என்ன திட்டங் களைத் தீட்டியிருக்கிறீர்கள் என்பதையெல்லாம் கொஞ்சம் தனியாகப் பிரித்து எடுத்துப் போட்டு அமைச்சர் காட்டியிருந்தால் ஒப்பிட்டுப் பார்த்து நான் பேசுவதற்குச் சுலபமாக இருந்திருக்கும். ஆனால் இதிலே அப்படி ஒன்றும் இல்லை. ஒரு பொத்தாம்போக்காக ஏதோ ஒன்று, மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்தான் என்று சொல்வதைப் போல பழைய அரசி னுடைய சாதனைகளை மறுபடியும் சேர்த்து இதிலே கோயில் திருப்பணி, அந்தக் காலத்திலிருந்து நடைபெறுவது, ஸ்ரீரங்கம் கோயில் திருப்பணி அந்தக் காலத்திலிருந்து நடைபெறுவது, இவையெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருப் பதாகச் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை.

இன்றைக்கு அறநிலையத்துறை கோயில்களில் முக்கியமாக என்ன நடை பெறுகிறது? ஒரு காலத்தில் கலைஞர் பராசக்தியிலே எழுதினார் "கோயில் கூடாது என்பது அல்ல எங்கள் கொள்கை. கோயில் கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக் கூடாது" என்பதுதான் எங்கள் கொள்கை என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். ஆனால் அப்படிப்பட்ட கொடியவர்கள் மட்டும் அல்ல; கெட்டவர்கள், கொலைகாரர்கள் இப்படிப்பட்ட ஒரு பாதகர்கள் நிறைந்த பாசறையாக இறைவனுடைய சன்னதி மாறிவிட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய வருத்தமான செய்தியாகும்.

உங்களுக்குத் தெரியும், வெளியிலே இருந்து வந்து மேய்கின்ற மாடுகள் வேறு; ஆனால் வேலியே பயிரை மேய்கின்ற கருத்தைப்போல இன்றைக்குப் பல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதை நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது சமீபத்திலே திருச்செந்தூரிலே சுப்ரமண்ய சம்ஹாரம் நடந்து முடிந்திருக்கிறது. அது நீதி விசாரணையில் இருக்கிறது, உள்ளே போகக்கூடாது என்பார்கள். நான் உள்ளே போகாமல் வெளியிலே நின்று சிலவற்றை, சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்டியல் உடைத்த தகராறு; கையாடல். அதற்குப் பிறகு இன்றைக்கு விசாரணை. நான் அமைச்சருடைய கவனத்திற்குச் சொல்லிக் கொள்கிறேன். இது திடீரென்று முளைத்தது இல்லை. உண்டியலைத் திறப்பதற்கு அறநிலையத்துறை ஒரு சுற்றறிக்கை அனுப்பி இருக்கிறது. எண். சுற்றறிக்கை அறநிலையம் 92550/77, நாள் 8—12—77 என்று ஒரு சுற்றறிக்கை அனுப்புகிறார்கள், இந்த அறநிலையைத் துறையில் இருந்து எப்படி எப்படி, என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று. அதற்குப் பிறகு அதிலே பல்வேறு திட்டங்களைச் சொல்கிறார்கள், எப்படி கோயிலை நிர்வகிக்க வேண்டும் என்று. இதை எல்லாக் கோயில்களுக்கும் அனுப்புகிறார்கள்.

கோயில்களிலே கிருத்திகை போன்ற பல விசேஷங்களும், பல பண்டிகைகளும் நடைபெறும். அப்போதெல்லாம் பக்தர்கள் கோயில் உண்டியல்களிலே பணத்தைப் போடுவார்கள். அப்படிப் பக்தர்கள் பணம் போடுவதற்கு முன்னாலே ஒரு ஆபீசர் அதற்கு சீல் வைத்துவிட்டு வந்து விடுவார். பிறகு அதே வெரிபிகேஷன் ஆபீசர் போய்த்தான் அந்த சீலை உடைக்க வேண்டும். அதிலே சொல்கிறார்கள், "கீழ்க்கண்ட ஆலயங்களில் உண்டியலைத் திறக்கும்போது அப்பிரிவைச் சேர்ந்த நகை சரிபார்க்கும் அதிகாரி உடன் இருக்க வேண்டும். உண்டியலில் வரும் காணிக்கைகளை சரிபார்த்து உடனடியாக ஒரு பையில் போட்டு ஆய்வாளர் அல்லது உதவி ஆணையாளரிடத்திலே சீல் பெற்று சீல்

இடவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. உண்டியல் பதிவேட்டிலே நகை சரிபார்க்கும் அதிகாரி அவர்களின் கையொப்பம் பெறவேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

உண்டியல் திறப்பதற்கு முன் சம்பந்தப்பட்ட ஆணையாளர், உதவியாளர், மற்றும் சம்பந்தப்பட்ட நகை சரிபார்க்கும் அதிகாரி ஆகியவர்கள் உடன் இருக்க வேண்டும். திறக்கும் தேதி, நேரம் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும்'' என்று இப்படி ஒரு சுற்றறிக்கையைத் தயாரித்து அனுப்பி இருக்கி றார்கள்.

கீழ்க்கண்ட கோயில்களுக்கு அனுப்புகிறோம் என்று சொல்லி முதல் கோயிலாக சுப்ரமண்யசாமி திருக்கோயில், திருத்தணிக்கு அனுப்பியிருக்கி றார்கள். அப்படி ஒரு கிருத்திகைக்கு இப்படிப்பட்ட உண்டியலைப் பார்ப்ப தற்கு நம்முடைய அறநிலையத்துறையைச் சேர்ந்த கே. அச்சுக்குட்டன், வெரிபிகேஷன் ஆபீசர் அவர்கள் போகிறார்கள் அவர் போகிறபோது என்ன 6 நடந்தது என்பதை,

அச்சுக்குட்டன், டு தி டெபுடி கமிஷனர், எச். ஆர். அண்ட் சி. இ. மெட்ராஸ், ஆர். சி. நம்பர் 109/80, டேட்டட 14—8—80 மெட்ராசிலேயிருந்து திருத்தணிக் கோயிலிலே நிரப்பப்பட்டிருக்கிற உண்டியலை சீலுடைத்து எண்ணுவதற்காக வெரிபிகேஷன் ஆபீசர் போகிறார். போய்ப் பார்க்கிறார். ஒரு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தில் எழுதுகிறார். . .

To my great surprise when I reached the temple on the hills I noticed that the Executive Officer had already broken the seal put by me on 10th July 1980 on the locks of 'Mahadeva Pithalai Hundi, Shanmuga Sannadhi Pithalai Hundi'. I accepted this procedur and for the gross negligence of the Commissioner's order on the spot I also telephoned to the Deputy Commissioner about this incident immediately. I have recorded in thae Hundial Assortment Register on 7tr August 1980. In respect of these two hundials about the seal being broken and the counting begun in my absence.

இவர் இல்லாமலே போய் அந்த எக்ஸ்க்யூட்டிவ் ஆபீசர் போய் உண்டியலை உடைத்திருக்கிறார். இதை எப்போது சொல்கிறார் அவர் என்று கேட்டால் அவர் சொல்கிறார்.

The staff and myself though started at 4-30 A.M. on 7th August 1980 we could reach Tiruttani only by 9.45 a.m. After reaching Tiruttani while I was taking some tea the Executive Officer sent a word to proceed to the hill. He did not even wait for five minutes, but asked us to come by bus which will return from the hills. We waited till about 10-45 a.m. and then telephoned to the Executive Officer for the bus to take us to the hills.

இங்கிருந்து ஒரு வெரிஃபிகேஷன் ஆபீசர் போகிறார். கூடவே போன எக்ஸ்க்யூட்டிவ் ஆபீசர் திருத்தணியிலே இருக்கிறார். இவரை அழைத்துக் கொண்டு போய் தானே உண்டியலை உடைக்க வேண்டும். அதுதானே சுற்ற றிக்கை, அதுதானே சட்டம், ஆனால் நீங்கள் பஸ்ஸிலே வாருங்கள் என்று சொல்லிவிட்டு அந்த எக்ஸ்க்யூட்டிவ் ஆபிசர் மட்டும் முன்னாலே போகிறார். அப்படிப் போய் வெரிஃபிகேஷன் ஆபீசர் வருவதற்கு முன்னாலேயே போய் உண்டியலை உடைத்து இருக்கிறார், இது தவறு என்று இந்த அச்சுக்குட்டன் என்பவர் டெபுட்டி கமிஷனருக்கு கடிதம் எழுதி இருக்கிறார். கடைசியிலே அவர் சொல்கிறார்.

I may submit for the information of the Deputy Commissioner that the Executive Officer of the temple had been most discourteous and unhelpful, arrogant to myself and my staff after my objection to the incident on 7th August 1980.

எவ்வளவு அரகன்டாக அவர் நடந்துகொண்டிருக்கிறார் என்று அவர் அந்தக் கடிதத்திலே டெபுட்டி கமிஷனருக்கு எழுதி இருக்கிறார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம் ஒரு வெரிஃபிகேஷன் ஆபிசர் இங்கி ருந்து திருத்தணிக்குப் போகிறார். இவர் வருவதற்கு முன்னாலேயே அந்த எக்ஸ்க்யூட்டிவ் ஆபீசர் உண்டியலை உடைத்திருக்கிறார். இவர் வருவதற்கு முன்னாலேயே முக்கியமான உண்டியல்கள் எல்லாம் உடைக்கப்பட்டிருக் கின்றன. இந்த வெரிஃபிகேஷன் ஆபீசர் மலையிலே போய்ச் சேருவதற்கு முன்னாலே இடையிலே என்ன நடந்தது ? அதிலே எவ்வளவு இருந்தது? எவ்வளவு எடுக்கப்பட்டது என்ற ஒரு சந்தேகமான சூழ்நிலை உருவா கிறதா இல்லையா அருள்கூர்ந்து இதுகுறித்து அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். இந்த நிலைமையை உரிய காலத்திலே கட்டுப்படுத்தி இருந்தால், அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருந்தால் திருச்செந்தூர் நடந்திருக்குமா ? உண்டியலிலே அவர் வைத்த சீலை இவர் உடைக்கிறார். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன் நம்முடைய அமைச்சரை. இதனால் இந்த எக்ஸ்க்யூட்டிவ் ஆபீசர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன

[திரு. துரைமுருகன்] [1981 எப்ரல் 28

அல்லது திருத்தணி கோயில்தான் கொள்ளை அடிப்பதற்கு தேர்ந்த இடம் என்று எடுத்திருக்கிறார்களா என்று கேட்கிறேன். அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். காஞ்சி பீடாதிபதி அவர்கள் திருத்தணி கோவிலுக்கு தங்கவேல் கொடுத்தார், 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலே அது காணாமல் போய் விட்டது என்று முனுசாமி நாயுடு அவர்களுடைய மகன் ஸ்ரீராமுலு ஒரு பெட்டிஷன் கொடுக்கிறார். அது இந்த அவையிலே முதலமைச்ச ருக்குக் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு மேலவையிலே திரு. வீராசாமி அவர்கள் இதைப்பற்றிப் பேசினார்கள். இதைப்பற்றி இன்றைக்கு விசாரிக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் நடவடிக்கை எடுக் கிறேன் என்று சொன்னார் நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள். எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? எங்கே அந்த ரிப்போர்ட் ? யார் திருடினார்? எங்கே அந்த வேல் ? காஞ்சி காமகோடி பீடாதிபதி கொடுத்த வேல் அது. அவர் கொடுத்த வேலையே இப்படி கோல் போட்டு எடுத்துக்கொண்டு போய் இருக்கிறார்கள் என்றால் நாங்களும், நீங்களும் போடுகிற காணிக்கை எங்கே போய்ச் சேரும்? அதிலே கூட சொல்கி றார்கள். ஒரு பெரிய வைர மோதிரத்தை அந்த அறநிலையத்துறையினுடைய தலைவராக இருப்பவர் கையிலே மாட்டிக்கொண்டு சுற்றிக்கொண்டிருக்கிறார். இப்படி ஆயிரக்கணக்கான ரிப்போர்ட்டுகள் எதிர்க்கட்சி என்ற முறையிலே எங்களுக்கு வந்திருக்கின்றன. இதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனவேதான் கொள்ளையர் கூடாரமாக மாற்றப்பட்டிருக்கின்றது அறநிலையங்கள் என்பது எங்களுடைய கருத்து என்று குறிப்பிடுகிறேன். இன்னும் கூட சொல்கிறேன். யாராவது யாத்ரீகர்கள் போய் தங்குகின்ற அளவுக்குக் கோயில்கள் இருக்கின்றனவா ? உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டல்லவா இருக்கவேண்டி இருக்கின்றது. அதே திருத்தணி கோயிலே போய்த் தங்குகிறார்கள் யாத்திரீகர்கள். ஒரு பெண் கொலை செய்யப்படுகிறார். பிணம் அழுகிய நிலையிலே இருக்கின்றது. ஃபிங்கர் பிரின்ட் அதிகாரிகள் வந்து அந்தக் கதவை உடைத்தார்களா என்று கேட்டால் இல்லை. இதுவரையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா என்றால் இல்லை. கோயில்களிலே தங்கினால் மறுநாள் பிணமாவோம் என்கிற அளவுக்கு ஒரு பலி பீடமாகத் தானே அறநிலையத்தினுடைய தங்கும் விடுதிகள் மாற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான் குற்றச்சாட்டாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

1981 ஏப்ரல் 28] [திரு. துரைமுருகன்]

இங்கே சொன்னார்கள்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்று இவரை விட்டால் அறநிலையத்துறைக்கு வேறு ஆளே இல்லை என்று அவர்களுடைய கட்சிக்காரர்கள் புகழ்ந்தார்கள். ஆனால் எனக்கு ஒன்றும் தனிப்பட்ட முறையிலே அறநிலையத்துறை அமைச்சர் மீது காழ்ப்பு இல்லை. பகையும் இல்லை. அதற்குக் காரணம் நான் அவரிடத்திலே எதையும் எதிர் பார்ப்பவன் அல்ல. நான் அவரிடம் கேட்டவனும் அல்ல. ஆனால் ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சின்ன விவகாரம். ஊழல்கள் இங்கே நடக்கின்றது என்பதற்காக எத்தனையோ எடுத்துக் காட்டுகளை நான் இந்த அவையிலே சுட்டிக்காட்ட முடியும்.

ஈரோடு வட்டம் கொடுமுடியிலே அருள்மிகு மகுடேஸ்வரர் வீரநாராயண பெருமாள் கோயில் இருக்கின்றது.

(பிற்பகல் 1-50)

அந்தக் கோவிலில் 27—5—1980 அன்று ஒரு ஏலம் விடுகிறார்கள். எதற்கு ஏலம்? முடி குத்தகை உரிமை பற்றி ஒரு மறு ஏலம் விடுகிறார்கள். அதிலே என்ன சொல்லுகிறார்கள் என்றால், யார் யார் என்னென்ன பணம் கட்ட வேண்டும் என்பதை எல்லாம் சொல்லிவிட்டு, கடைசியிலே ஒன்றைச் சொல்லு கிறார்கள். "முடி ஏலம் எடுக்கிறவர்கள் முடி அடிக்க திருக்கோயிலில், விதிக்கப்பட்டிருக்கும் சுங்க கட்டணத்தைத்தான் வசூல் செய்ய உரிமை உண்டு." இப்படி முடி அடிக்க ஏலம் எடுத்தவர்களுக்கு என்ன உரிமை உண்டு என்று கோயில் அறங்காவலர்கள் தெரிவிக்கிறார்கள். "திருக் கோயிலில் நிர்ணயம் செய்திருக்கும் கட்டணம் முடி ஒன்றுக்கு ஒரு ரூபாய். அதைத்தான் வசூல் செய்யவேண்டும். அதற்கு மேல் வசூல் செய்வதாக தெரிந்தாலே போதும், தெரிந்தால் ஏலத்தை ரத்து செய்யப்படும்" என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் ஒன்று கேட்கிறேன். ஆக முடி எடுக்க இவ்வளவு காசு வசூலிக்க வேண்டும் என்று அறநிலையத்திலேயே சொல்லியிருக்கிறார்கள் ஒரு ரூபாய் என்று. ஆனால் அப்படி ஏலம் விட்டதில் அந்த ஊரைச் சேர்ந்த எஸ்.ஆர். தங்கராஜ் என்பவர் ஏலம் எடுக்கிறார்கள். ஏலம் நடந்தது எப்போது 27—6—1980-ல். இதோ என்னுடைய கையிலே வைத்திருக்கும் இந்த ரசீது 5—7—1980லே கொடுத்திருக்கிறார்கள். அதிலே எவ்வளவு தெரியுமா? ஒரு ரூபாய்க்கு மேலே வாங்கினால் ரத்து செய்வோம் ஏலத்தை என்று

கண்டிஷன் போட்ட அறநிலையத்துறை, அதிலே வாங்கியிருப்பது 2.50 காசு. அதை எப்படி வசூலாக திருத்துகிறார்கள் என்று பாருங்கள்.

தேவஸ்தான முடி கட்டணம்	1—00 ரூபாய்.
முடி காணிக்கைக்கு	1—00 ரூபாய்.

மொட்டை அடிக்க கூலி 0—50 பைசா ஆக. 2—50 பைசா என்று போட்டிருக்கிறார்கள். முடி காணிக்கை, தேவ காணிக்கை, மொட்டை அடிக்க என்றால் என்ன அர்த்தம்? முடி அடிக்க என்றாலும் மொட்டை அடிக்க என்றாலும் ஒன்றுதானே அர்த்தம்?

என்னுடன் கூட ஒரு பையன் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய அப்பாவிற்கு இங்கிலீஷ் தெரியாது. அவரிடம் பணம் வாங்க வேண்டும் என்றால், என்ன செய்வான் தெரியுமா? புஸ்தகம் வாங்க வேண்டும் என்று எழுதிக் கொடுக்கும்போது, இங்கிலிஷ் புத்தகத்திற்கு 3 ரூபாய், ஆங்கிலப் புத்தகத்திற்கு 3 ரூபாய் என்று கொடுப்பான். அவங்க அப்பாவும் என்ன நினைப்பார் என்றால் இங்கிலிஷ் புத்தகம் வேறு, ஆங்கிலப் புத்தகம் வேறு போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு, ஒவ்வொன்றிற்கும் 3, 3 ரூபாய் கொடுப்பாராம். (குறுக்கீடு) yes, we are sailing in the same boat ஆக முடி காணிக்கைக்கு 1 ரூபாய், முடி அடிக்க ஒரு ரூபாய், மொட்டை அடிக்க 50 காசு என்று போட்டிருக்கிறார்கள். இப்படித் திடீர் என்று போடப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை: இது 1390-வது பசலிக்கு வாங்கப்பட்டது. அதற்கு முந்தைய ஆண்டு, கே. வி. சின்னான் என்னும் கொடுமுடியைச் சேர்ந்த ஒருவர் ஏலத்தை எடுத்திருக்கிறார். ஆனால் அவர் மட்டும் என்ன போட்டிருக்கிறார் என்றால் முடி காணிக்கை நபர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். எனவே, இப்படி முடி அடிப்பதிலே கூட, கொள்ளை அடிக்கிற ஒரு திட்டத்தில் அற நிலையங்கள் இறங்கியிருக்கிறது, அதற்கு உங்களுடைய அறநிலையத் துறை எடுத்த நடவடிக்கை என்ன என்று கேட்க விரும்புகிறேன்?

இதுபற்றிக் கடிதம் எனக்கு மட்டுமா வந்தது? அறநிலையத்துறை அமைச்சருக்கு வந்திருக்கிறது. ஆணையாளருக்கு இந்தக் கடிதம் வந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வந்திருக்கிறது. ஆனால் இது வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? அறநிலையத்துறை ஆணையாளர் கறுப்பா சிவப்பா என்று கூட எனக்குத் தெரியாது. ஆனால் நான் ஒன்றைக் கேட்கிறேன். நீங்கள் இந்த அவையிலே எதிர்க்கட்சியாக இருந்த போது, அன்றைய அறநிலையத்துறை ஆணையாளராக இருந்த திரு. நரசிம்மன் அவர்களுக்குக் கால நீட்டிப்பு கொடுக்கப்பட்டது. ரிடையர்

1981 ஏப்ரல் 28] [திரு. துரைமுருகன்]

றார் என்று. அப்போது அதையே ஊழல் என்று சொன்னீர்களே, நான் கேட்கிறேன். இவர் இன்றைக்குத் திறமையாகச் செயல்படுகிறாரா இல்லையா என்பது கூடப் பிரச்னையல்ல. அப்படித் திறமையாகச் செயல்பட்டிருந்தால் இவைகளையெல்லாம் கண்காணித்திருக்க வேண்டும். நான் கேட்பது, இன்றைக்கும் அப்படி ரிடையர் ஆன ஒருவரையே அதே பதவியில் வைத்திருக்கிறீர்களே இது என்ன நியாயம் என்றுதான்? கேட்டால் நீங்கள் நரசிம்மனுக்குக் கால நீட்டிப்புக் கொடுக்கவில்லையா நாங்கள் இவருக்குக் கொடுக்கிறோம் என்று சொல்வீர்கள். ஆக நாங்கள் செய்ததைத்தான் நீங்கள் செய்கிறீர்கள் என்று சொன்னால், நாங்கள் செய்தது சரியல்ல என்று சொல்லித்தானே நீங்கள் ஊரிலே ஓட்டு வாங்கி இங்கே ஆளும் கட்சியில் உட்கார்ந்திருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் செய்தீர்களே அதை நாங்களும் செய்வோம் என்றால், அதற்கு நீங்கள் ஏன் உட்காருவது? நானே உட்காருகிறேன்.

நாங்கள் தவறு செய்தோம் என்று சொல்லிவிட்டு, நீங்கள் வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள் என்றால், அந்தத் தவற்றை ரிபீட் பண்ணக் கூடாது. அதுதான் முறையே தவிர, அதே தவற்றைச் செய்துவிட்டு, அதற்குப் பிறகு, நீங்கள் அதைச் செய்தீர்கள் நாங்களும் செய்வோம் என்று சொன்னால் அது முறையாகாது என்றுதான் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல இன்னொன்று. எங்கே நடக்கிறது? ஆத்தூரிலே ஒரு கோவில் இருக்கிறது. தர்மராஜா கோவில் என்று ஒரு கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலிலே திரௌபதி அம்மன் குடி கொண்டிருக்கிறாள். அவளுக்கு விழா நடத்துகிறார்கள். அதைப் பல ஆண்டுக் காலமாகப் பரம்பரை பரம்பரையாக துளுவ வேளாளர் சமூகத்தினர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பிறகு நீங்கள் அறங்காவலரைப் போட்டீர்கள். அறங்காவலர் அந்த விழாவை நடத்த முற்படுகிறார்கள். அப்படி முற்படுகிறபோது, அவர்கள் பதவிக்கு வருவதற்கு முன்பாக பொன்னன் என்பவர் 90 கிராம் எடையுள்ள அம்மன் நகையை வைத்துக் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. அறங்காவலர்கள் கேட்கிறார்கள். அவர் தர மறுக்கிறார். அந்த நகையைச் சீர்பார்க்கிற அதிகாரி கோயம்புத்தூரிலிருந்து வருகிறார்கள். வந்து எங்கே நகை என்கிறார்கள். இன்னார் இடத்திலே இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். அவர் அதைத் தரமறுக்கிறார். உடனே இவர்கள் அங்கே சேலத்தில் இருக்கிற எ. ஸி.க்குச் சொல்கிறார்கள். எ.ஸி. கேட்கிறார். பொன்னன் நகையைத் தர மறுக்கிறார். பிறகு கோவை டி.ஸி.யிடம் செல்கிறார்கள். டி.ஸி., எ.ஸி.க்குச் சொல்கிறார். இவ்வளவு முயற்சிகள் எடுத்தார்கள், நடக்கவே இல்லை. பிறகு ஊரில் திருவிழா எப்படியோ நடந்தது, அம்மன் நகை இல்லா

விட்டால் போகிறது, சிலை இருக்கிறது. மூக்குத்தியைப்போட்டு நடத்து கிறார்கள். உடனே கலகம் விளைகிறது. முன்சிப் கோர்ட்டுக்குச் சென்று, தகராறு வருகிறது, இவற்றை நிறுத்தவேண்டும் என்று அவர்கள் கேட் கிறார்கள். அதற்கும் ஆர்டர் வாங்குகிறார்கள். அதற்குப் பிறகு நடந்த தைக் கேட்கிறேன். அம்மன் நகையை வைத்துக்கொண்டு, 90 கிராம் நகையை வைத்துக்கொண்டு சரிபார்க்கக் கூட தரமாட்டேன் என்கிறார்கள். அவர் அறங்காவலரா, கிடையாது. சாதாரண ஒரு ஆள் எடுத்து வைத்துக் கொண்டு தர மறுக்கிறார். ஆனால் அந்த ஆளை விழாக் குழுவில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று இப்போது ஓய்வு பெற்றவரும் பரிபாலனம் செய்து கொண்டிருக்கிற கமிஷனர் ஒரு அறிக்கை அனுப்புகிறார். ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை-2. ந.கா. 25156/81 தேதி 10—4—81 என்ன சொல்கிறார்? பார்வையில் கண்ட தொலைபேசி செய்தியிலும் மற்றும் குறிப்பிலும் மேற்படி விழாவை துளுவ வேளாளர் சமுதாயமும் பொதுமக் களும் சேர்ந்து கொண்டு நடத்தவேண்டும், இதுகுறித்து அறிக்கை அனுப்பும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. யாருக்கு? ஏ.ஸி. க்கு ஏற்கனவே தொலைபேசியில் கூப்பிட்டுச் சொல்கிறார். ஏ.ஸி. செய்யவில்லை. ஆத்திரம் வருகிறது. என்ன சொன்னார்? நான் சொல்லியது என்னவாயிற்று? அவனைக் கூப்பிட்டு விழா எடுக்கமாட்டேன் என்கிறாயே என்கிறார். ஐயா அறங்காவலர் இருக்கிறார் என்கிறார்இவர். அதைப்பற்றிக் கவலையில்லை. பொன்னனை சேருங்கள் என்று சொல்கிறார். அது மறுக்கப்பட்டது. அறிக்கை அனுப்பும்படி அறிவுரை வழங்கப்பட்டது. மேற்படி பொருள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்று உதவி ஆணையாளர் அறிக்கை தரப்படவில்லை என்று கோபித்துக்கொண்டு தாக்கீது அனுப்பு கிறார். அந்த பொன்னன் வகையறா என்று போட்டிருக்கிறார்கள். அவரை சேர்த்துக் கொண்டு விழா நடத்தவேண்டும் என்று ஆணையர் கடிதம் எழுது கிறார். நகையைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறவன், தர மறுக்கிறவனைக் கொண்டு விழா நடத்தவேண்டும் என்று சொன்னால் இதில் மறைந்திருக்கிற மர்மம் என்ன? இதில் நடுக்கம் என்? பொன் எடுத்துக்கொண்டு போயிருக் கிறான் பொன்னன். அவரைக் கண்டு அறநிலையை ஆணையாளர் அஞ்சுவது என்? இதுபோன்று பலயிடங்கள். அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

'ஐ வில் ஸ்டான்ட் கரெக்டெட்' என்று சொல்லி என் பேச்சைத் துவக்கு கிறேன். அறநிலையத்துறை பொறுப்பில் இயங்கி வருவது இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானம். இந்தத் தேவஸ்தானத்திற்கு இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் இருக்கின்றன. அதில் ஒன்று பங்களூரில்

1981 ஏப்ரல் 28] [திரு. துரைமுருகன்]

எண். 2, இன்பன்ட்ரி ரோட் பங்களூர் கன்டோன்மென்ட், இது ஒரு பெரிய பங்களா. சுமார் இரண்டரை ஏக்கர் விஸ்தீர்ணம் உள்ளது. இதில் ஒரு கட்டடம். டி.டி.கே. கம்பனியார் அதை வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள். அந்தக் கட்டடம் பங்களூரில் ஒரு முக்கியமான இடத்தில் இருப்பதால் உத்தேச மதிப்பு ஒரு கோடி ரூபாய் என்ற அளவில் உருவாகியிருக்கிறது. அதை ஏலத்தில் விடவேண்டும் என்று அரசாங்கத்திற்கு வருகிறது. ஏலத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டது. ஆனால் திடீரென்று அந்த ஏலம் பற்றி அக்டோபர் 22 அன்று இந்து பத்திரிகையில் ஒரு செய்தி வருகிறது.

The proposed sale of auction of the Premises No. 2, Infantry Road, Bangalore Cantonment posted on 27th October 1980 stand deferred.

RAMAMOORTHY DIWAN,
Administrative Secretary.
Ramanathapuram.

என்று போட்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்கிறேன். இராமநாதபுரம் தேவஸ்தானம் நம் அறநிலையைத்துறைக்கு உட்பட்டதுதானே. அந்த அறநிலையைத் துறைக்கு உட்பட்ட தொத்துக்களை விற்கவோ வாங்கவோ நமக்கு உரிமை உண்டு. அதை விற்பதாக இருந்தால் அதை ஒருவர் மறுக்கக் காரணம் என்ன? திவான் என்றால் அவர் பாரம்பரை டிரஸ்டியாக வேண்டுமானால் இருப்பார். ஆனால் இதற்கிடையில் நடந்தது, ஒரு பம்பாய் சேட்டுக்கு அது தரப்படவேண்டுமென்று ஆளும் கட்சியில் பலபேர்கள் அதற்கு முயற்சி எடுத்ததன் விளைவுதான் இந்த ஏலம் நிறுத்தப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

(பிற்பகல் 2-00)

* **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை நிர்வாகத்திற்காகக் கோரியிருக்கிற மானியத்தின்மீது 7 கட்சிகளைச் சார்ந்த 16 உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே எடுத்து வைத்ததற்கு, என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து படிப்படியாக ஒவ்வொரு கருத்துக்களுக்கும், நான் விடையளிக்க முன்வந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் இப்போதே அவசரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்கிற உணர்வு எனக்குத்

தெரிகிறது. ஆகவே, 16 உறுப்பினர்கள் பேசியிருக்கிற பேச்சுக்களின் கருத்திற்கு மொத்தமாகப் பதிலளிக்க நான் முன்வருகிறேன். அதிலே இறுதியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் துரைமுருகன் அவர்கள் ஒரு உச்சக் கட்டத்திலே கொண்டு வந்து, அந்த உச்சக் கட்டத்தை முடிக்க முடியாமல் இடையிலே நிறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, நான் இப்போது உச்ச கட்டத்திலே இருந்து, தொடர்ந்து பின்னாலே வரவேண்டிய அந்தத் தன்மையில் வரயிருக்கிறேன். காரணம், எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் ஒரு பட்டியலைப் போட்டு முதலிலே காட்டினார்கள். இந்த அறநிலையத் துறையைப் பற்றிய விவாதம் இந்தச் சட்ட மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினாலே கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். அதை இன்றைய எதிர்க் கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள் எனவும் சொன்னார். ஆனால், ஒரு சிறிய திருத்தம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது. ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்த, இன்றைக்குச் சட்டமன்றத்தினுடைய மேலவைத் தலைவராக இருக்கிற மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்கள் அறநிலையத் துறையைப் பற்றிய விவாதத்தை இந்த அவையிலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்ட காலத்திலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் அதற்கு ஒப்புதல் அளித்து, அதைத் தொடர்ந்து இது நடக்கிறது. என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், இங்கே இருக்கிற குறிப்பு சரியாக இருக்குமானால், 70 ஆம் ஆண்டு முதல் இந்த மானியத்தின்மீது இங்கே விவாதங்கள் தொடங்கப் பெற்றிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், நான் முன்னாள் முதலமைச்சரும், இந்நாள் எதிர்க் கட்சித் தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வருகின்ற பெயருக்குக் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கி வைத்தார்கள் என்று நான் சொல்வதற்கு நீங்கள் அனுமதிப்பீர்கள் என்ற உணர்வோடு இங்கே நான் இதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு ஒரு பட்டியலைப் போட்டுக் காட்டினார்கள். இந்தத் துறையை அரசாங்கம் எடுத்துக்கொண்டதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக்கழகம் ஆளுங் கட்சியாக வந்ததற்குப் பிறகு, எப்படியெல்லாம் சீர்திருத்தியிருக்கிறோம், எவ்வளவு வருமானத்தை உண்டாக்கியிருக்கிறோம், எப்படி ஆலயங்களை இந்த நிர்வாகத்திற்குள் கொண்டு வந்திருக்கிறோம் என்கிற குறிப்புக்களையெல்லாம் சொன்னார்கள். அந்த ஒன்றுகூட இல்லையென்று

மறுக்கவில்லை. ஆனால் எங்களுக்கு வந்த கஷ்டமெல்லாம், நீங்கள் இங்கே செய்ததாகப் பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறீர்களே, அந்த பட்டியலி னாலே வந்த சிரமங்களை இன்னும் எங்களாலே தீர்க்க முடியவில்லை என் பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எந்தத் திட்டமும் முன் னெச்சரிக்கையோடு, திட்டமிடப்பட்டு, நிதி ஆதாரம் இருக்கிறதா என்று தெரிந்து, என்ன செலவாகும் என்பதைக் கண்டறிந்து, அதற்கு எங்கிருந்து பணம் தரப்படுகின்றது என்பதைக் கண்டறிந்து திட்டம் போடுவார்கள். அதுதான் நல்ல திட்டம் போடுகிறவர்களுக்கு, நல்ல நிர்வாகிகளுக்குப் பெயர். ஆனால், நம்முடைய மாண்புமிகு துரைமுருகன் எடுத்துக்காட்டிய பட்டியல், அவசர அவசரமாக, அள்ளித் தெளித்த கோலம் என்பார்களே, அப்படி யார் யார் பிறந்த நாளுக்கோ சில திட்டங்களை அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தத் திலே, இங்கே பல திட்டங்கள் உருவாக்கப்பட்டு, பின்னாலே அதற்கு நிதி ஆதாரம் எங்கே என்பது தெரியாது திண்டாடக்கூடிய சூழ்நிலையில், இன் றைக்கு அவைகளையெல்லாம் நிலை நிறுத்துவதற்கு இந்த மூன்றாண்டுக் காலத்திலே அறநிலையத் துறையும், இந்த அரசும் பாடுபட்டுக் கொண்டிருக் கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பட்டியலிலே, ஏதோ கீழ்த் திசைக் கல்லூரியைப் பற்றிச் சொன் னார்கள். அன்றைக்கு அவர்கள் அதை ஆரம்பிக்கின்றபோது, பழனி தேவஸ்தானம் சார்பிலே நாங்கள் நடத்துகிறோம் என்ற உறுதிமொழியை அவர்கள் கொடுத்ததன் பேரில், நம்முடைய கல்வித் துறை அதற்கு மானியம் அளிக்க மறுத்துவிட்டது.

ஆகவே, ஆண்டு ஒன்றுக்கு 4½ இலட்சம் முதல் 5 இலட்சம் வரை செலவை எடுத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு பழனி தேவஸ்தானத்திற்கு வந்தது. அதிலே படிக்கிற மாணவர்கள் எத்தனை என்றால் 30 அல்லது 40. ஆண்டுக் காண்டு குறைந்து கொண்டே வருகிறது. ஆகவே எப்படி இந்த நிர்வாகத்தை நடத்துவது என்று ஓராண்டு காலம் கல்வித் துறையோடு போராடி, வாதிட்டு வேறு வழியே இல்லாமல் இன்றைக்கு அங்கே இயங்குகிற வேறு ஒரு ஆண்கள் கல்லூரியோடு அந்த கல்லூரியை இணைக்கிற முடிவை அரசாங்கம் எடுத்திருக் கிறது. முன்னாலே எல்லாம் செய்தீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. கல்யாண மண்டபத்தை பற்றி பட்டியல் போட்டு தந்தீர்கள். ஆனால் அந்த கல்யாண மண்டபம் கட்டுவதற்கு பணம் எங்கே? யார் வீட்டிலே போய் எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்தீர்கள்? அதைச் சொல்லுங்கள். எத்தனை கல்யாண மண்டபங்கள் கல் போட்ட நிலையிலே இருக்கிறது பல இடங்களிலே; நாலு சுவர் எழுப்பிய நிலையிலே இருக்கிறது பல இடங்களிலே;

மொட்டை கோபுரங்களாக நின்று கொண்டிருக்கிறது பல இடங்களிலே; போய்க் கேட்டால் எங்கே பணம்? யார் திட்டத்தை அங்கீகரித்தார்கள்? அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்ஷன் வந்ததா? நிர்வாக அனுமதி கிடைத்ததா? அதற்கு எவ்வளவு செலவாகும் என்று மதிப்பிடப்பட்டதா? அது ஏற்றுக் கொள்ளப்பட்டதா? திருப்பணி குழு அமைத்தீர்கள். அவர்கள் வசூல் செய்தார்களா? எல்லா இடத்திலேயும் நாங்கள் இத்தனை கோவில்களை கட்டினோம் என்று சொல்ல முன் வரவில்லை என்றாலும், ஏதோ மைலாப்பூர் திருக்குளத்தை தோண்டி நாங்கள் மழையை வரவழைத்தோம் என்று சொல்கிற பெருமையை பெற்றாலும்; திருவாரூர் தேரை ஓட வைத்தேன் என்று அந்தப் பெருமையை பெற்றாலும், நாங்கள் கல்யாண மண்டபத்தை கட்டி முடித்தோம் என்று சொன்னீர்களே, எங்கே கட்டி முடித்தீர்கள். இன்றைக்கும் நின்று கொண்டிருக்கிறது. நீங்கள் ஆரம்பித்த மாதவ பெருமாள் கோவில் கல்யாண மண்டபம், இதே சென்னை மாநகரத்திலே 1977 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்ததற்கு பிறகு தான் நாங்கள் அனுமதி கொடுத்து, அதற்கு பணம் கொடுத்து இன்றைக்கு 1978-79ல் அந்த கல்யாண மண்டபத்தை திறக்கிறோம். இன்றைக்கு தமிழகம் முழுவதும் அப்படி இருக்கிறது. ஆகவே நீங்கள் போட்ட பட்டியலிலே நான் குறை காண விரும்பவில்லை. ஆனால் அந்த பட்டியல் போட்ட விதம் அதற்கு எந்த அடிப்படையற்ற நிலைமையிலே போட்டது என்பதை மாத்திரம் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பல கல்யாண மண்டபங்களை முடிக்கவில்லை என்று சொன்னார்கள். நான் முதலிலேயே சொன்னேன். கட்டி முடிக்கப்பட்ட திருமண மண்டபங்கள் 79; இன்-கம்ப்ளீட்டாக 120 செய்திருக்கிறோம் என்று. ஆனால் நாங்கள் இடையிலே ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தாலே நாங்கள் தொடங்கிய வேலைகள் நின்று போய் விட்டன. ஆனால் அதற்கு பின்னாலே வந்த அரசு அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு அந்த பணிகளை தொடராமல் விட்டு விட்டது. உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். செய்யாறு திருமண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இதுவரை நீங்கள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. என்ன காரணம், இந்த காழ்ப்புணர்ச்சியைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, குறுக்கீடுகள் என்பது ஏதாவது விளக்கத்திற்காக வேண்டுமானால் வரலாம், விவாதமாக வந்து விட்டால் அது நீண்டு கொண்டே போகும். நான் சொல்

1981 ஏப்ரல் 28] [திரு. ஆர். எம். வீரப்பன்]

வருவது, இடையிலே அவைகள் துவக்குவதற்கான அடிப்படையான நிதியா தாரங்கள் இல்லாத காரணத்தாலே பல ஆண்டுகள் நிறுத்தப்பட்டு விட்டன. ஆகவே அதற்கான நிதியாதாரங்கள் தேடுவதே கஷ்டம் ஆகிவிட்டது, என்பது தான் நான் வைக்கிற வாதமே தவிர நீங்கள் முடிக்காமல் விட்டுவிட்டது இன்றைக்கும் இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்திலே பல ஆலயங்களில் சென்று பார்த்து இருக்கிறோம் பல கல்யாண மண்டபங்கள் இருக்கின்றன. அதற்கு நிதி ஆதாரங்கள் எப்படி தேடலாம்; எப்படி ஏற்படுத்துவது என்று தேடிக் கொண்டிருக்கிறோம். ஏதோ செய்யாத நிகழ்ச்சியை சொல்கிறீர்கள், முடிக்கப்பட்ட கல்யாண மண்டபத்தைத் திறப்பதற்கு எங்களுக்கு என்ன கஷ்டம்? இன்றைக்கும் சொல்கிறேன் இந்த அரசு முடிக்கப்படாமல் அரைக்குறையாக நிறுத்தப்பட்டிருக்கிற கல்யாண மண்டபங்கள் அனைத்தையும் எப்படியும் கட்டி முடிக்க வேண்டுமென்று அற நிலையத் துறைக்கு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணை மாத்திரம் அல்லாமல் நம்முடைய அறநிலையத் துறையிலே கிடைக்கிற வருமானங்களைக் கொண்டு சமுதாய திருமண மண்டபங்கள் எங்கெங்கெல்லாம் முடியுமோ அங் கெல்லாம் கட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆகவே நான் சொல்ல வந்தது, நீங்கள் எல்லாவற்றையும் பட்டியல் போட்டு காட்டி பெருமை கொண்டீர்கள். நாங்கள் அந்தப் பெருமையை குறைக்க விரும்பவில்லை. ஆனால் எங்களை குறை கூறுகின்றபோது அந்த பெருமைக்கு உரியவர்களாக நீங்கள் எப்படி விளக்குகிறீர்கள் என்பதைச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு எங்களை ஆளாக்கி விடுகிறீர்கள். அதற் காக நான் அதை சுட்டிக்காட்டினேன். அதற்குப் பிறகு திருத்தணியைப் பற்றி ஒரு கருத்தை கொடுத்திருக்கிறார்கள். திருத்தணி நிர்வாக அதிகாரி யைப் பற்றிதான் இங்கே குற்றச்சாட்டு. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு விஷயங்களை தெளிவுபடுத்திக்கொண்டு பேசவேண்டும். இங்கே உறுப்பினர்களிடமிருந்து அரசாங்கம் பல தகவல்களை எதிர்பார்க் கிறது. எங்களுக்கு பல தகவல்கள் கிடைக்கிறது. உங்களுக்கு நீங்கள் தொடர்புடைய சட்டமன்ற தொகுதியிலே பல உண்மைகள், பல நிகழ்ச்சிகள், பல தவறுகள், பல குற்றச்சாட்டுகள் உங்களுக்கு கிடைக்கலாம். ஆகவே இப்படிப்பட்ட விவாதங்கள் வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்களிட மிருந்து அந்தக் குறைகளை சுட்டிக் காட்டப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கி றோம். அதிலே தவறு இல்லை. ஆனால் ஒரு அதிகாரி செய்கிற தவறும் ஆட்சியிலே மேலே இருக்கின்ற அமைச்சர்கள் செய்கிற தவறும் இரண்டையும் இணைப்பதுபோல் பேசி ஒன்றை மட்டும் எப்படியோ கொலிட முன்னேற்றக்

கழகத்தைச் சேர்ந்தவர்கள் கற்றுக்கொண்டு இருக்கிறார்கள்—ஊழல், ஊழல் என்று. அந்த ஊழல் என்ற வார்த்தைக்கே தமிழ் அகராதியிலே பொருளை மாற்ற வேண்டும்போல் இருக்கிறது.

(பிற்பகல் 2-10)

திரு. துரை முருகன்: நீங்கள் கற்றுக் கொடுத்ததுதான்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: நாங்கள் கற்றுக் கொடுத்ததுதான். ஊழல் செய்தவர்களிடத்திலே ஊழல் என்று நாங்கள் சொன்னோம். அதற்காக சின்ன பிள்ளைகளைப்போல் நீங்கள் கற்றுக்கொண்டு எடுத்ததற்கு எல்லாம் ஊழல், ஊழல் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள் என்பது தான் என்னுடைய கருத்து. நீங்கள் தந்திருக்கின்ற விவரங்கள், இங்கே திருத்தணியைப் பற்றியது, அதிகாரிகளைப் பற்றியது. இன்னொன்றையும் சொல்கிறேன். நீங்களே படித்தீர்களே, அந்த ஆணை 1977 டிசம்பரிலே போடப்பட்ட ஆணை, முதலமைச்சர் அவர்களிடத்திலே இந்த அறநிலையத் துறை இருந்தபோது போடப்பட்ட ஆணை, நினைவிலே வைத்துக்கொள்ளுங்கள். அது மாத்திரம் அல்ல. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசுகின்றபோது கூட சொன்னார்கள் என்று கருதுகிறேன், உண்டியல்கள் எண்ணுகிறபோது மற்றவர்களையும் வரவழைத்து எண்ண வேண்டுமென்று. அதையும் நாங்கள் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். பொதுமக்களுக்கு அறிவித்து பொதுமக்கள் பிரதிநிதிகளிலிருந்து யாராவது ஒருவர்களானால் அவர்களையும் நல்லவர்களாக பார்த்து உள்ளே விட்டு உட்கார வையுங்கள் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். காரணம் பொதுமக்களை அனுமதித்ததாலே திருப்பதியிலே தவறு நடந்து அங்கே திருடுகள் நடைபெற்று குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் இந்த 77-ல் போடப்பட்ட ஆணை இருக்கிறதே அந்த ஆணையிலேயே இரண்டு பிரமுகர்களை அங்கே உண்டியல் திறக்கிறபோது முன்னாலே இருக்க வைக்க அனுமதிக்க வேண்டும், அனுமதிக்கலாம் என்ற ஆணையையும் பிறப்பித்திருக்கிறோம். அங்கே ஒரு வெரிபிகேஷன் ஆபீசர், சரிபார்க்கும் அதிகாரி. அவரும் ஏ.சி.தான் அசிஸ்டெண்ட் கமிஷனர்தான், ஆனால் திருத்தணியிலே இருக்கிற அதிகாரியும் ஏ.சி.தான் அசிஸ்டெண்ட் கமிஷனர்தான். ஆனால் அங்கே அவர் எக்சிகியூட்டிவ் ஆபீசராக பணியாற்றுகிறார். ஆகவே இரண்டு பேரும் ஒரே தரத்திலே இருக்கிற அதிகாரிகள். அந்த அதிகாரிகளுக்குள்ளே யார் பெரியவர், யார் சிறியவர் என்ற பிரச்சினை ஏற்பட்டு அதனாலே இது நடந்திருக்கிறது என்று எங்களுக்குத் தெரிகிறது. இருந்தாலும் இவர் வெரிபிகேஷன் ஆபீசராகப் போகிறபோது அந்த அசிஸ்டெண்ட் கமிஷனர் எக்சிகியூடிவ்

ஆபீசராக இருந்தால் இதைத்தான் அமல்நடத்தி இருக்க வேண்டும். அமல் நடத்தவில்லையென்றால் நிச்சயமாக கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கிறோம், எடுப்போம், அதிலே ஆட்சேபனை இல்லை, சந்தேகமே இல்லை. ஆனால் ஒரு சந்தேகத்தை எழுப்பினார்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள், உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன் துணைத் தலைவர் அவர்களே, இந்த உண்டியலை உடைத்ததும் ஒரு ஏ.சி.தான். ஒரு அசிஸ் டெண்ட் கமிஷனர்தான் எக்சிகியூடிவ் ஆபீசர்தான், அவர்தான் அதற்குக் காரணமாக இருந்தார் என்கின்றபோது அறநிலையத் துறையிலே இவ்வளவு பெரிய உயர் அதிகாரிகளே, தவறுகள் செய்வதற்குக் காரணமாக இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொண்டதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர் மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கு நான் உங்கள் மூலம் நன்றியையும் நாட்டிற்கு இந்தச் செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே ஏதோ சுப்ரமணிய சம்ஹாரம் என்றெல்லாம் பேசி விடுவதாலேயே பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. நீங்கள் முன்னாலே சுப்ரமணிய சம்ஹாரத்தை குறிப்பிட்டுவிட்டு எப்படி சுப்ரமணியர்கள் இருக்கிறார்கள் என்பதை திருத்தணியிலே சொன்னீர்கள். அங்கேயும் ஒரு ஏ.சி., இங்கேயும் ஒரு ஏ.சி. ஆகவே எல்லோரும் ஏ.சி. இதிலே இருக்கிற சங்கடம் என்னவென்றால், இன்னொன்றைச் சொன்னார்கள். ஏதோ கொடுமுடிக்குப் பக்கத்திலே ஒரு முடிசூட்டு எலம் போட்டது பற்றியெல்லாம் சொன்னார்கள். இதுதானே எங்களுக்கு இருக்கிற கஷ்டமே. கடந்த ஒரு 7, 8 ஆண்டுக்காலமாக நீங்கள் இந்த அறநிலையத் துறையை இப்படி ஆக்கிவிட்டிருக்கிறீர்கள். எங்களால் அதைச் சீர்திருத்தவே முடியவில்லை. அதனுடைய விளைவுதான் இதுவெல்லாம், அன்றைக்குப் பயிற்சி பெற்றவர்கள் இப்படி இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள்.

Thiru DURAI MURUGAN : Sir, on a point of order. The Minister is responsible.

HON. THIRU R M. VEERAPPAN : No. I am not yielding.

(கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. துரைமுருகன், உட்காருங்கள். அமைச்சர் பேசட்டும்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் வேகமாகப் பேசிய காரணத்தினாலே எங்கே நிதானத்தோடு எப்படி வார்த்தைகளைப் பயன்படுத்தினார், எங்கே நிதானம் தவறி எப்படி வார்த்தைகளைப் பயன் படுத்தினார் என்று இப்போது அவர்களுக்குத் தெரியாது. குறிப்புகளைப்

பார்த்தால் தெரியும். அவர் அந்த பெங்களூர் நிலத்தைப்பற்றிக் குறிப்பிடு கின்றபொழுதுதான் ரொம்பவும் முன்னெச்சரிக்கையோடு, அதைப்பற்றி விவ ரங்களைத் தெரிந்துகொள்கிறேன். உண்மையாக இருந்தால் என்று குறிப் பிட்டாரே தவிர, இராமநாதபுரம் தேவஸ்தானத்தைப்பற்றியும், அதன் தொடர் பான பெங்களூரிலே உள்ள நிலத்தைப்பற்றியும் குறிப்பிட்டு வருகிறபொழுது தான் அவர்கள் மிகுந்த எச்சரிக்கையோடும், ஜாக்கிரதையோடும் இது சரியான தகவலா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புவதைப் போல அந்தக் குற்றச்சாட்டை வைத்தார்கள். ஆனால் அவர்கள் அவை யிலே எடுத்துக்காட்டிய அந்தக் கொடுமுடிக்குப் பக்கத்திலே உள்ள கோயில் விவகாரத்திலே அவர்கள் சந்தேகமாகச் சொல்லவில்லை. ஆனால் முடியை எடுத்தவர் யாரோ ஒரு ஆள்; அங்கே அந்த நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன; ஆகவே நிர்வாகத்தைத் தாண்டி எலம் எடுத்த தனி மனிதர் நடத்துகிறாரா, நிர்வாகம் செய்ததா என்ற பிரச்னைகள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுமேயானால் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களுக்கு மரியாதையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக அந்தப் பிரச்னைகள் கவனிக்கப்படும் என்பதையும், விசாரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட முறைகள் நீண்ட காலமாக நடந்துவந்த காரணத்தினாலே,நான் இன்றைக்கு அதனைத் தவிர்க்க முயலு கின்றபொழுதுதான், எங்களாலே உள்ளே போய், கடலுக்குள்ளே மூச்சை அழுத்திக்கொண்டு எவ்வளவு நேரம் தேடினாலும் கடைசியிலே மூச்சு விடுவ தற்கு வெளியிலே வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையிலே நாங்கள் இருக்கி றோம் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் தேவஸ்தானத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த இராமநாதபுரம் தேவஸ்தானத்தைப் பற்றியெல்லாம் நாங்கள் நம்மு டைய கொள்கைக் குறிப்பிலேயே குறிப்பாகச் சொல்லியிருக்கிறோம். பரம்பரை அறங்காவலர்கள் என்று இந்த நாட்டிலே பல இலட்சக்கணக்கான சொத்துக்களுக்கு, வருமானத்திற்கு உரியவர்களாக சிலபேர் இருந்துகொண்டு இருக்கிறார்கள். இராமநாதபுரம் தேவஸ்தானத்திலே அவர்கள் சொல்லுகின்ற அந்த அதிகாரியையே அந்தத் தேவஸ்தானத்தினுடைய பரம்பரை அறங் காவலர்தான் நியமிக்கிறார். அவர்கள் இன்னொன்றைக் குறிப்பிட்டதற்கும் நான் தகவலுக்காகச் சொல்லுகிறேன். பெங்களூரிலே எங்கெங்கே அவர் களுக்குச் சொத்துக்கள் இருக்கின்றன என்றுகூட நம்முடைய அறநிலையத் துறைக்கு முழுவதும் வராது. அப்படி வராமல் இருக்கின்ற காரணத்தினாலே தான் பரம்பரை அறங்காவலர்களிடத்திலே இருக்கின்ற அந்தச் சொத்துக் களையெல்லாம் அறநிலையத் துறையினுடைய கண்காணிப்புக்குள்ளே கொண்டு வர வேண்டுமென்று மிகுந்த முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறோம்.

1981 ஏப்ரல் 28] [திரு. ஆர். எம். வீரப்பன்]

நான் இடையிலேயே சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்களே, இங்கேயிருக்கின்ற திருவொற்றியூர் ஆலயத்தைப்பற்றி. அந்த ஆலயம் மிகப் பெரிய ஆலயம், அதிக வருமானம் உள்ள ஆலயம், அதற்கு ஒரு பாம்பரை அறங்காவலர் இருக்கிறார். அவரும் அங்கே நம்முடைய நிர்வாகத்திற்குள்ளே இருக்கிறதாகப் பொருள். ஆனால் ஈ.ஓ. போடக்கூடாது. தடை வாங்கிவிட்டார்கள். அதற்குப் பிறகும் முறைகேடுகள் நடந்ததாக, தவறுகள் நடந்ததாக, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னார்களே அப்படிப்பட்ட புகார்கள் வந்தன. அந்தப் புகார்களைப்பற்றி விசாரித்து, உண்மை என்று தெரிந்த ஆணையர் அந்தப் பாம்பரை அறங்காவலரை நீக்குகிறார். அதற்குப் பிறகு நீக்கியதே சரியல்ல என்று உயர்நீதிமன்றத்திலே தடை ஆணை பெற்றுவிட்டு, அவர் அதிகாரத்திலே இருந்துகொண்டு இருக்கிறார். இப்படி இன்றைக்குப் பாம்பரை அறங்காவலர்களுடைய நிலைமைகள் இருக்கின்றன.

ஆகவே, இராமேஸ்வரம் தேவஸ்தானத்திற்கு உட்பட்ட ஆலயங்கள் என்ன நிர்வாகம் செய்கிறது ; எவ்வளவு வருமானம் வருகிறது ; எங்கே சொத்துக்கள் இருக்கின்றன என்பதை, நம்முடைய நிர்வாகத்திலே இருக்கின்ற ஆலயங்களிலேயே இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், நம்முடைய நேரடி நிர்வாகத்திற்குள்ளேயே வராத அந்த நிர்வாகத்திற்குள்ளே எப்படியிருக்கும் என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆனால் அங்கே அவர்கள் ஏலத்திற்காக அறிவித்து, ஏலம் நிறுத்தப்பட்டிருக்கிறது என்றுதான் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதோடு நீங்கள் நிறுத்தியிருந்தால் நான் உங்களுடைய ஆலோசனையைக் கேட்டு, அதை உடனடியாகப் பரிசீலிக்க முயன்றிருப்பேன். ஆனால் உடனே என்ன சொல்லுகிறீர்கள் ? யாரோ ஒரு வடநாட்டுக்காரருக்குக் கொடுக்கிறதாகச் சொல்கிறார்கள் என்று ஆதாரமற்ற, ஒரு தவறான, அடிப்படையற்ற, உங்களுக்கே இன்னும் முழு விவரம் கிடைக்காத சூழ்நிலைகளிலே ஏன் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறீர்கள் ? சுமத்துகிறீர்கள் ? அதுவும் இப்பொழுது அறநிலையத் துறைக்கு நேரடித் தொடர்பு அல்ல ; ஆனால் என்னிடத்திலே வந்த அந்தத் தகவல். அந்த அடிப்படையிலே சொல்கிறேன். அந்த இடத்தை மத்திய வருமான வரித் துறையினர் தங்களுக்கு வேண்டுமென்று அரசிடத்திலே அணுகினார்கள். அந்தத் தகவலை மாத்திரம் சொல்கிறேன். என்னிடத்திலே இப்போது தகவல் இல்லை. மத்திய வருமான வரித் துறையினர், பெங்களூரிலே நம்முடைய இராமநாதபுரம் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான

ஒரு இடம் இருக்கிறது, அந்த இடம் எங்களுக்கு வேண்டும், நீங்கள் மார்க்கெட் விலை என்ன நிர்ணயிக்கிறீர்களோ அதைக் கொடுத்து எடுத்துக் கொள்கிறோம் என்று மத்திய வருமான வரித்துறை கமிஷனர் மூலம் இங்கே கேட்டிருக்கிறது. அது உங்களுடைய இலக்கணப்படி ஊழல் என்றால் அதை நீங்கள் சொல்லிக்கொள்வதைப்பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை.

ஆகவே, இப்படிப்பட்ட பிரச்னைகளில் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். திருத்தணி பற்றியும் ஒன்றைச் சொன்னார்கள்; திருத்தணியிலே அது அறங்காவலர்களால் நடந்ததாகப் புகார் அல்ல. எழுப்பிய புகார் ஆங்கேயும் முன்னாலேயிருந்த அசிஸ்டென்ட் கமிஷனர்தான். உருக்கப்பட்ட நகைகள் அறங்காவலர் செய்தது அல்ல. அதிகாரி செய்ததாகத்தான் குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கங்கள் வந்திருக்கின்றன. அந்த விளக்கங்களையும் தாண்டி, மேலவையிலே மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் ஒரு அடிப்படை அற்ற குற்றச் சாட்டை, அங்கே தெரிவித்த காரணத்தாலே, முன்னாள் வருவாய் வாரி உறுப்பினர் நடராஜன் அவர்களை பகிரங்கமாக விசாரணைக்கு ஏற்பாடு செய்து, இன்னும் அந்த அறிக்கை அரசுக்கு கிடைக்கவில்லையென்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிற நேரத்திலே, இங்கே நீங்கள் சாட்டிய குற்றச்சாட்டுகள் அனைத்தும், இந்த அறநிலையத்துறை எந்த அளவுக்கு அழுகிப்போய், எங்கே கை வைத்தாலும் சொத்தையாக இருக்கிறது என்பதையும்—அது யாராலே ஆக்கப்பட்டது என்கிற விளக்கத்திற்குள்ளே நான் நுழையவில்லை—ஆகவே, அப்படிப்பட்ட அந்த நிலைமையைச் சீர்திருத்தவும் மாற்றவும் இன்றைக்கு அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது, அறநிலையத் துறை முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

ஆத்தூர் விவகாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். இங்கே வந்த குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லிவிடுகிறேன். இங்கே பேசிய இரண்டு மூன்று கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளுகிற கட்சியினரையே அறங்காவலர்களாகப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள், போட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். இது—மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கே தெரியும். அவர்கள் ஆட்சியிலே இருந்த காலத்திலே அவர்கள்மீதும் சாட்டிய குற்றச்சாட்டுத்தான். இது, எப்போதுமே பந்தை சுவற்றில் அடித்தால்

கொண்டிருக்கிற விவகாரம்தான். அதற்கு முன்னாலே, இந்தச் சட்ட மன்றத்திலே விவாதம் வரவில்லை. 1970-க்கு முன்னாலே, சட்டமன்றத்திலே இந்த விவாதம் வந்திருந்தால், அன்றைக்கு ஆட்சியாளர்கள் யாரை போட்டிருந்தார்கள் என்று அன்றைக்குத் தெரிந்திருக்கும். இன்றைக்கு விவாதம் வந்துவிட்ட காரணத்தாலே, யார் யாரைப் போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள்.. ஆனால், எங்களுக்கு வந்த குற்றச்சாட்டு என்ன தெரியுமா? எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்த அறநிலையத்துக்குள்ளே, அறங்காவலர்களாக, முன்னாலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களைப் புகுத்திவிட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் பலர் இருக்கிறார்கள், என்ற அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு உள்ளான இடம்தான் அந்த ஆத்தூர் நகரமும். அந்த ஆத்தூர் நகரத்திலே போடப்பட்ட அறங்காவலர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், அங்கே ஆரம்பத்திலே வந்த மனு என்னவென்றால், அது ஒரு சமுதாயத்தினரைச் சேர்ந்த கோயில். அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே அறங்காவலர்களாக நியமிக்கப்படவில்லை. ஆகவே, எங்களுக்கும் இடம் தரப்பட வேண்டுமென்று அரசாங்கத்திலே தடை ஆணைபெற வேண்டி வந்தார்கள். இப்பொழுது நாங்கள் அந்தத் தீர்ப்பை அளிக்க முடியாது, இதற்கிடையிலே திருவிழா நடைபெறுகிற காரணத்தாலே, திருவிழா சுமுகமாக நடைபெறவேண்டுமென்று எண்ணி, சம்பந்தப்பட்ட—வகுப்புப் பிரச்னை இதற்குள்ளே வருகிற காரணத்தாலே, ஜாதிப் பிரச்னை வருகிற காரணத்தாலே—எல்லோரையும் சேர்த்துக் கொண்டு அந்தத் திருவிழாவை நடத்தவேண்டுமென்று ஆணையாளருக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது. அதைப்பற்றி மேலவையிலேகூட நாளைக்குக் கேள்விகள் எல்லாம் வர இருக்கின்றன. ஆகவே, அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. இதிலிருந்தே அவர்கள் தெரிந்து கொள்ளலாம். இல்லையானால், அவருக்கு அவ்வளவு விவரங்கள் எப்படிக் கிடைக்கும்? அங்கே இருக்கிற அறங்காவலர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்தான். நான் வேண்டாமென்று தீர்மானிக்கவில்லை. எல்லோரும் இருக்கலாம். அவர்கள் நல்லவர்களாக இருக்கலாம் என்பதுதான் இந்த அரசினுடைய முடிவு. அவர்கள் தவறு செய்தால், எந்த நேரத்திலே தவறு செய்தாலும், எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், சுட்டிக்காட்டுங்கள். அவர்கள் அடுத்த விநாடியே சட்டப்படி நடவடிக்கை எடுத்து வெளியேற்றப்படுவார்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, உங்களுடைய கட்சிக்காரர்களைத்தான் போட்டீர்கள் என்பதற்கு மாண்புமிகு துரைமுருகன் அவர்களே, ஆத்தூர் நிகழ்ச்சியை, இங்கே பேசியதிலிருந்து,

யார், யாரெல்லாம் இந்த அறநிலையங்களுக்குள்ளே அறங்காவலர்களாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டியதற்கு நன்றி. நேரம் அதிகமாகி விட்டது. நான் நம்முடைய துரைமுருகன் அவர்களுக்கே நீண்ட நேரம் பதில் அளிக்க எடுத்துக் கொண்டேன். பொதுவாக, நான் அறநிலையத் துறையைப் பற்றி உங்களிடத்திலே முக்கியக் கருத்தை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே, 31,423 ஆலயங்கள் இருப்பதாகவும், அதற்கு ஏதோ கோடிக்கணக்கிலே பெரிய அளவிலே வருமானங்கள் வந்து கொண்டிருப்பதாகவும் அதையெல்லாம் நாம் எங்கே வைப்பது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருப்பதைப்போல் ஒரு கருத்து பொதுவாக பொதுமக்களிடத்திலும் இருக்கிறது: மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசுகிறபொழுது அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். வருஷத்திற்கு ரூபாய் 200-க்குக் கீழே வருமானமுள்ள கோயில்கள் 7,934. ரூபாய் 200-லிருந்து ரூபாய் 300 வரை வருமானமுள்ள கோயில்கள் 1,074. ரூபாய் 300 லிருந்து ரூபாய் 500 வரை வருமானமுள்ள கோயில்கள் 3,986. ரூபாய் 500 லிருந்து ரூபாய் 1,000 வரை வருமானமுள்ள கோயில்கள் 6,647. ரூபாய் 1,000-ல் இருந்து ரூபாய் 5,000 வரை உள்ளது, 9,034 ; ரூபாய் 5,000-ல் இருந்து ரூபாய் 10,000 வரை உள்ளது 1,498 ; ரூபாய் 10,000-ல் இருந்து ரூபாய் 20,000 வரை உள்ளது 606 ; ரூபாய் 20,000-ல் இருந்து ரூபாய் 50,000 வரை உள்ளது 387. ரூபாய் 50,000-ல் இருந்து ரூபாய் 1 லட்சம் வரை 129. ரூபாய் லட்சத்திற்கு மேற்பட்டது 128. அசிஸ்டென்ட் கமிஷனர் அவர்கள் எக்சிகியூட்டிவ் ஆபீசராக இருப்பது 10 கோயில்களில். டெபுடி கமிஷனர், எக்சிகியூடிவ் ஆபீசராக இருக்கிற கோயில் 1. இதுதான் நம்முடைய அறநிலையத் துறையிலே இருக்கிற ஆலயங்களுடைய நிலைமை. ஆகவே இதிலே எல்லோரையும் அரசு அலுவலர்கள் ஆக்குங்கள் என்று கேட்கிறீர்களே, ஆண்டிற்கு ரூபாய் 200-க்குக் கீழே 8,000 கோயில்கள் இருக்கின்றன. இதில் பணிபுரிகின்றவர்கள் எல்லோரையும் எப்படி அரசு அலுவலர்கள் ஆக்குவது ? யாரை ஆக்குவது ? ஆகவே இங்கே இருக்கிற கிட்டதட்ட சுமார் 700 ஆலயங்களிலேதான் ஒரு லட்ச ரூபாயை எட்டி ஏதோ சமாளிக்கக்கூடிய நிலைமையிலே இருக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே , இந்த துறையை நிர்வகிக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதே நேரத்தில் எப்படி நீங்கள் இதில் வளர்ச்சியைக் காட்டினீர்கள். இங்கே குறிப்பேட்டிலே ஒன்றுமே காட்டப்படவில்லையே என்றெல்லாம் சொன்னார்கள். நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை எல்லாம் அதிலே சொல்லியிருக்கிறோம். இருக்கிற சிக்கலை தீர்ப்பதற்கே இன்னும் எங்களாலே முடியவில்லை. இருக்கிற

1981 ஏப்ரல் 28] [திரு. ஆர். எம். வீரப்பன்]

சிக்கலைத் தீர்த்ததற்குப் பிறகு அல்லவா புதிதாக நாம் ஏதாவது உருவாக்கு வதற்கு முயற்சிக்க வேண்டும். அப்படிப்பட்ட சிக்கல்கள் பல இருக்கின்றன. இதுவரை கவனிக்கப்படாமல் இருக்கின்றன.

கடந்த இரண்டாண்டு காலத்திற்குள்ளேதான் நம்முடைய அறநிலையத் துறையிலே அறங்காவலர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள்.

மூன்றாண்டு ஆட்சிக் காலத்திலே, இடையிலே ஒரு 3½ மாதம் இல்லை. ஒரு ஆண்டு காலத்திற்கு சில அடிப்படை நடவடிக்கை எடுத்தோம். அதற் குப் பிறகும் ஒரு 6 மாதம் ஆகிவிட்டது. சில ஆலயங்களில் 1 ஆண்டு காலத் தில், சில ஆலயங்களில் 1½ ஆண்டு காலத்தில் அறங்காவலர்களைப் போட்டிருக்கிறோம்.

நீங்கள் என்னென்ன செய்தீர்கள் என்று கேட்கிறார்களே இன்றைக்கு இந்த நாட்டு மக்கள், புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே இந்த அரசு அறநிலையத் துறையிலே என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதற்கு அவர்கள் பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த பதில் நாங்கள் ஏற்றுக் கொள்கிற பதில் என்பதை நான் மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன் மாண்புமிகு தலைவர் அவர்களே.

ஒரு சின்னக் கணக்கைச் சொல்கிறேன். எப்படி வருமானங்கள் கூடியது. உண்டியலிலே முன்னாலே எப்படி இருந்தது என்று நானும் சந்தேகத்தை எழுப்பலாம் அல்லவா ? ஒரு 5 நிமிடம் ஒரு வெரிபிகேஷன் ஆபீசர் போகாமல் இன்னொரு அசிஸ்டென்ட் கமிஷனர் திறந்தால் அதிலே ஊழல் நடைபெற்று விட்டது என்று சொல்கிற துரைமுருகன் அவர்களுக்கு நான் இந்த 3-ஆண்டு காலத்திலே ஒரு சின்ன கணக்கைத் தருகிறேன். அப்படியானால் அதற்கு முன்னால் இதே தவறு நடந்தது என்று பெயர் சூட்ட வேண்டுமானால், நான் சூட்டமாட்டேன். மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கே அந்த உரிமையை விட்டு விடுகிறேன்.

வருமானம், திருச்செந்தூரில் சொல்கிறேன். இந்த 3 ஆண்டு காலத்திற்கு முன்னாலே, 25,87,807—84-ம் பசலி, 85-ம் பசலியிலே 28,46,588, 86-ம் பசலியிலே 31,23,483.

ஆனால், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு 31 லட்சம் இருந்தது 38,43,578 முதல் ஆண்டிலே. 2-வது ஆண்டிலே 46,67,800. மூன்றாவது ஆண்டிலே, இன்னும் கணக்கு முடிக்கவில்லை.

அதைப்போல் பழனியையும் சொல்கிறேன். பசலி 85-லே 71,31,930. 86-லே 82,64,000. இந்த மூன்றாண்டிலே 84,75,329. 88-லே 95,32,129. 89-லே 1 கோடியே 35 லட்சத்து 59 ஆயிரத்து 963. நான் வேறு விவரங்களுக்குப் போக விரும்பவில்லை.

ஆகவே, இந்த மூன்றாண்டுக் காலத்திலே உண்டியல் வருமானத்தை உயர்த்தி இருக்கிறோம். யார் யார் கொடுக்காமல் இந்தச் சொத்துக்களை அடைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களிடத்திலே வசூலித்திருக்கிறோம். இவ்வளவு பெரிய சட்டங்கள் ஏழை விவசாயிகளுக்காகப் போட்டதற்குப் பிறகும் நிலத்தை விட்டு வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட்டதற்குப் பிறகும் 24 கோடி பாக்கியாக நிற்பதற்குப் பிறகும் இன்றைக்கு இந்த அற நிலையத் துறையிலே வருமானத்தை உயர்த்தியிருக்கிறோம், என்றால், இந்த அரசு, அறநிலையத்துறை எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி என்று பொது மக்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயும் மாண்புமிகு உறுப்பி னர்கள் பலபேர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் துரைமுருகன் அவர் களை எப்படித்தான் திருப்தி செய்வது என்று எனக்குத் தெரியாது. ஏனென் றால், தூங்குகிறவர்களை எழுப்பலாம், தூங்குகிறவர்களைப்போல் இருப்ப வர்களை எப்படி எழுப்புவது? அவர் முன்னாலேயே சொல்லிவிட்டார். என் மீது ஒன்றும் குற்றம் இல்லை, கோபதாபம் இல்லை என்று. என்மீது எந்தக் கோபம் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இந்த அரசின் மீது கோபம் காட்டாதீர்கள். அதுதான் என்னுடைய பணிவான

(பிற்பகல் 2-30)

வேண்டுகோள். என்மீது கோபப்பட்டால் எனக்கு ஒன்றும் வந்துவிடாது. நான் தனி ஆள். ஆனால் இந்த ஆட்சியின் மீது களங்கப்படுத்த முயற்சி செய்யாதீர்கள். நீங்கள் சொன்ன குற்றச்சாட்டு அனைத்தும் எந்த அதிகாரி களுக்கு வக்காலத்து வாங்குகிறீர்களோ அந்த அதிகாரிகள் பற்றியது என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த விவாதத்திலே பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அறநிலையத் துறையின் சார்பிலே அவர்கள் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் நாங்கள் பரிசீலிப்போம என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஒரு கருத்தை திரு. நெடுமாறன் அவர்கள் தெரிவித்தார்கள். இதை ஒரு தனி அமைப்பாக, அட்டானமஸ் பாடியாக அமைக்க வேண்டு மென்ற கருத்தைச் சொன்னார்கள். அவர் என்னை தனியாக கேட்டால்

விளக்கம் தருகிறேன். இந்த நிர்வாக அமைப்பு 1925-லே இந்தச் சட்டம் கொண்டுவந்தபோது தனியாகத்தான் இருந்தது. ஆகவே, படிப்படியாக இந்த நிர்வாக அமைப்பைப் பார்த்த பெரியவர்கள், 1958-லே இந்த நிர்வாக அமைப்புக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற கதைக்கு வரவேண்டுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பரிசிலனைக்கே விட்டுவிடுகிறேன்.

இன்னும் சொல்கிறேன், இந்தத் துறையிலே யாரைப் போடுவது, யாரை நம்பி ஒப்படைப்பது? இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்வதற்காக மடங்களைப் பற்றி, பரம்பரை நிர்வாகத்தைபற்றி, மற்றும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி சொல்லியிருக்கிறோம். உங்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவும் விவாதத்திற்கு வரவேண்டும் என்பதற்காகவும் சொல்லியிருக்கிறோம். யாரை நம்பி விடச் சொல்கிறீர்கள். இந்த மடத்தின் இடத்திலே இருக்கிற ஆலையங்கள் எத்தனை தெரியுமா? மொத்தம் நம்முடைய தஞ்சாவூரிலே 94 ஆலையங்கள் நம்முடைய நேரடி நிர்வாகத்திலுள்ளே வாரமல் ஆதீனங்கள், மற்றவர்கள் பொறுப்பிலே இருக்கின்றன. சிவகங்கை சமஸ்தானத்தில் 83 ஆலையங்கள், 22 கட்டளைகள் இருக்கின்றன. இராமநாதபுரம் சமஸ்தானத்தில் 23 ஆலையங்கள் இருக்கின்றன. 64 மடங்கள் நம்முடைய நேரடி நிர்வாகத்தில் வாரமல் கண்காணிப்பில் மாத்திரம் இருக்கின்றன. இந்த மடங்களுடைய ஹெரிடிட்டரி டிரஸ்டிஸ் என்று நம்முடைய ஆதீனகர்த்தர்கள் பரம்பரை தர்மகர்த்தர்களாக இருக்கிற ஆலையங்கள் 54. அதில் ஒன்றுதான் வைத்தீஸ்வரன்கோவில்.

இன்றைக்கு எவ்வளவு ஏக்கர் நிலங்கள், எவ்வளவு சொத்துக்கள், எவ்வளவு வருமானம் இந்த மடங்களுக்கு இருக்கிறது என்ற விவரங்களை எல்லாம் நீங்கள் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். அவர்கள் இன்றைக்கு என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்- நம்முடைய சமயத்தை வளர்க்க என்பதைப்பற்றி நீங்கள் தெரிந்துகொள்வதற்காக வைத்தீஸ்வரன்கோவிலை கோடிட்டுக் காட்டினேன். சென்ற ஆண்டே தங்க நகை களவு போனது. அந்த நகைக்குப் பொறுப்பாக இருந்தவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. கிரிமினல் கம்ப்ளைன்ட் கொடுக்கப்பட்டு, அதுவும் நிறுத்தப்பட்டுவிட்டது. அதே ஆளை மீண்டும் அதே நகைக்கு பொறுப்பு அதிகாரியாக நியமித்திருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன். இந்த நகைகளை எல்லாம் கொண்டுபோய் ஒரு இடத்தில் பத்திரமாக சேர்த்து வைத்துவிட்டு, திருவிழா சமயங்களில் மட்டும் கொடுக்கலாம், அப்படியானால் நகைகள் பத்திரமாக இருக்கும் என்று சொன்னார்கள்.

இந்த வைத்தீஸ்வரன்கோவிலில் போன கொள்ளை பூட்டி வைத்திருக்கும் போது போகவில்லை. திருவிழா நாளில், பல ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கும்போது, பட்டப்பகலில் போனது. என்ன செய்யச் சொல்கிறீர்கள்? காலையில் சாமிக்கு நகைகளைப் பூட்டினார்கள். சாமி சுற்றி வந்துவிட்டது. நகைகளைக் கழற்றி திரும்பக் கொண்டுபோய் பெட்டகங்களில் பூட்டி வைக்கிறார்கள். நானே அந்தப் பெட்டகங்களைப் பார்த்திருக்கிறேன். மூன்று பாதுகாப்பான பெட்டகங்கள், இரும்பு அறைகள், அதற்குள்ளே வைத்து பூட்டியிருக்கிறார்கள். யார்? போன ஆண்டு, இதற்கு முன்னால் நகை காணாமற் போனதற்கு காரணம் என்று கருதப்படுபவர், திருடர் என்று சொல்லவில்லை, காரணம் என்று கருதப்படுபவர். அவருடைய பொறுப்பிலே கழற்றி வைக்கிறார்கள். அங்கே நகைகள்—தங்க நகைகள் இருக்கின்றன; கல் பதித்த நகைகளும் இருக்கின்றன. இது எல்லாம் திருடுபவர்களுக்கு, வெளியிலே இருப்பவர்களுக்கு அவ்வளவு சுலபமாகத் தெரியாது, எது கல் பதித்த நகை, எது சுத்த தங்க நகை என்று.

மறுபடியும் சாமிக்கு சாயங்காலம் நகைகளைப் பூட்ட வேண்டும். அவர் வருகிறார். அவர் பெயரும் சுப்பிரமணிய பிள்ளைதான். இங்கே ஒன்றும் சுப்பிரமணிய சம்காரம் நடக்கவில்லை. நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். அவரும் அறநிலையத் துறையிலே உள்துறை அதிகாரிதான். ஆகவே, உறுப்பினர்கள் கொஞ்சம் அருள்கூர்ந்து நெஞ்சிலே கைவைத்துச் சொல்வது நல்லது. அவரும் சுப்பிரமணிய பிள்ளைதான். அந்த சுப்பிரமணிய பிள்ளை மாலையிலே வருகிறார். அந்த பூட்டு ஏதோ கெட்டுப்போய்விட்டது என்று புகார் செய்கிறார்.

உடனே அடுத்த 5 நிமிடத்திலே வருகிறார். உள்ளே இருந்த நகைகள் காணவில்லை என்கிறார். அவரே கொண்டுபோய் வைத்த நகை. எந்த நகை தெரியுமா அப்படியே இருக்கின்றது? கல் பதித்த நகை. சுத்த தங்க நகையை மாத்திரம் எடுத்திருக்கிறார்கள். ஏதோ அன்னத்தைப் பற்றிச் சொல்வார்களே, தண்ணீரை நீக்கிவிட்டு பாலை மட்டும் எடுத்துக் கொள்ளும் என்று. அதுபோன்று சுப்பிரமணிய பிள்ளை என்கின்ற அன்னமோ அல்லது வேறு யாரோ தெரியவில்லை. இந்த அன்னத்திற்கு

1981 ஏப்ரல் 28] [திரு. ஆர். எம். வீரப்பன்]

சுத்த தங்கம் எது, கல் பதித்த தங்கம் எது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கின்றது. ஆறு இலட்சம் 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கம் காணாமல் போய்விட்ட என்றால் என்ன தகவல் தருகிறார்கள்? புக் வேல்யூவிலே 23,000 ரூபாய் என்று இருக்கின்றது, அது காணாமல் போய்விட்டது என்று. நான் கேட்கிறேன் மாண்புமிகு திரு. நெடுமாறன் அவர்களிடம் மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களின் மூலம். யாரிடத்திலே இந்த அறநிலையத் துறையை ஒப்படைக்கச் சொல்கிறீர்கள் ? தயவு செய்து சொல்லுங்கள். ஒரு அரசாங்கத்தின் அறநிலையத்துறையை நம்பாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை நம்பாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கீழே இருக்கின்ற அறநிலையத் துறையை நம்பாமல் வேறு யாரிடத்திலே நம்பிக்கை கொள்ளச் சொல்கிறீர்கள் ?

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், யாரிடத்திலே ஒப்படைப்பது என்று. அட்டானாமஸ் பாடியாக அப்படிப்பட்ட ஒரு அமைப்பாக அது இருக்க வேண்டும் என்று நான் சொன்னதன் நோக்கமே இஸ்லாமிய சமுதாயத்தாரின் மத சொத்துக்கள் அனைத்தையும் தனியாக வக்ப் போர்டிடம் ஒப்படைத்து இருக்கிறீர்களே, அது அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருக்கிறதே தவிர அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்திலே இல்லையே. அதை எப்படி நீங்கள் அனுமதித்தீர்கள் ? அதைப் போல

* **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து என்ன என்பதைப் புரிந்துகொண்டுவிட்டேன். வக்ப் போர்ட் என்று இஸ்லாமிய சமுதாயத்திற்கு இருக்கின்றது. அதற்கும் நம்முடைய மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சரவர்கள் பொறுப்பாக இருக்கிறார்கள். இங்கே இந்த மானிய விவாதம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அவர்கள் வந்து தகவலைத் தெரிவித்து விட்டு சென்றிருக்கிறார்கள். தனியான ஒரு நிறுவனமாகவோ அல்லது அட்டானமஸ் பாடியாகவோ அமைத்து விட்டால் கோளாறே இல்லை என்று சொல்லாதீர்கள். அதைப்பற்றியும் வழக்கு மன்றத்திலே வழக்குகள் எல்லாம் போய்க்கொண்டிருக்கின்றன. நீங்கள் பத்திரிகைகளிலே பார்த்தால் தெரியும். ஆகவே வக்ப் போர்டைப் பொறுத்தவரையிலே அதற்கு கோடிக் கணக்கான சொத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அவை எங்கே எவரிடத்திலே இருக்கின்றது, யார் அதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. ஆகவே அதைப்பற்றியும் அடுத்த ஆண்டு முதல் இந்த சட்ட மன்றத்திலே விவாதிக்கின்ற ஒரு கொள்கை முடிவை நம்முடைய நீர்ப்பாசனத்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1981 ஏப்ரல் 28

துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே சொல்லி இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அது எந்த அளவிற்கு அனுமதிக்கப்படுகின்றது என்பது வேறு விஷயம். அதற்குக் காரணம் 70 ஆம் ஆண்டு பற்றிய பிரச்சினையை இங்கே விவாதிக்கின்றபோது—இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார் திருப்பதியிலே நாம் ஏன் ஒருவரை நியமிக்கக்கூடாது என்று. இது குறித்து அன்றைக்கே பதிலளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமே என்பதுதான் அது. ஆனால் நாம்தானே அங்கே போகிறோம் என்று சொல்கிறீர்கள். அந்த வாதம் சரியாக இருக்காது. அப்படிப் பார்த்தால் பழனிக்கு வருபவர்களிலே பாதிப்பேர் கேரளாவிலே இருந்துதான் வருகிறார்கள். பழனியிலே இருக்கின்ற அந்த தண்டபாணி என்ற முருகனே மேற்குத் திசை நோக்கித்தான் இருக்கிறார். அதுதான் பழனியிலே இருக்கின்ற விசேஷம். அந்தப் பழனிக்கு நம்முடைய நாட்டிலே இருந்து போகிறவர்களை விட கேரளாவிலே இருந்து வருகிறவர்களின் தொகைதான் அதிகம். அதே போன்று இப்போது ஐயப்பன் கோவிலுக்கு அகில இந்தியாவிலே இருந்தும் போகிறார்கள். ஆகவே ஒவ்வொருவரும் பிரதிநிதித்துவம் கேட்டால் பிரச்சினை எங்கேயோ போய் முடிந்துவிடும். ஆகவே வக்ப் போர்டைப்பற்றி இந்த அரசு அதனுடைய நிர்வாகத்திற்குள்ளே புகுந்து, நுழைந்து பரிசீலித்துக்கொண்டு இருக்கின்றது. அதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களும் முதல் அமைச்சர் அர்வகளும் அதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றியும் முடிவு எடுக்கப்படும் என்பதை முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) . . . கிறிஸ்தவ மதத்தைப் பற்றிச் சொல்கின்றபோது இஸ்லாமிய மதம் போன்று மைனாரிட்டி என்று சொல்லப்படுகின்ற அந்த வார்த்தைக்குள்ளே சென்று அரசியல் சட்டத்திலே பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கேரளாவினுடைய வலிமை பொருந்திய ஒரு ஆட்சியான திரு. இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களின் ஆட்சியையே வீழ்த்திய ஒரு கிளர்ச்சி எது என்பதை எண்ணிப் பார்த்தால் அது எவ்வளவு வலிமை பொருந்தியது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே சட்டம் எந்த அளவுக்கு அனுமதிக்கின்றதோ அந்த அளவுக்கு உள்ளே நுழைவோம். நிச்சயமாக உள்ளே நுழைய இருக்கிறோம். கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூட தெரிவித்திருக்கிறார்கள். இது எல்லாம் அந்தக் கண்ணோட்டத்திலேதான். ஆகவே மதத்தின் பெயராலே, அது எந்த மதமாக இருந்தாலும் தவறுகள் நிகழ்வதை ஒரு பொது

மக்களுடைய அரசு பார்த்துக்கொண்டிருக்காது. இந்த அரசு இந்துக்களுக்கு மாத்திரமல்ல, இஸ்லாமிய சமுதாயத்திற்கும் இதுதான் அரசு. கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் இதுதான் அரசு. ஜைனர்களுக்கும் இதுதான் அரசு. ஆகவே எந்த மதத்தின் நிறுவனத்திலே தவறுகள் இருந்தாலும் சட்டம் அனுமதிக்கின்ற அளவுக்கு உள்ளே நுழைந்து தவறுகளைக் களையும் இந்த அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-40)

இன்னொன்றைச் சொன்னார்கள். கமிஷனர்ஸ் காமன் குட் பண்டு என்பதைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே அடிப்படையிலே ஒரு சட்டப் பிரச்னை இருக்கிறது. அதில் மக்களுடைய பக்தியை அடிப்படையாக ஒட்டி ஒரு உணர்வுப் பிரச்னையும் இருக்கிறது. தமிழ்நாடு முழுவதிலும் இருந்து ஆலயங்களுக்குப் போகிற மக்கள் எல்லாம் நான் இந்து சமயத்திற்கு காணிக்கை செலுத்துகிறேன் என்று சொல்வது கிடையாது. தமிழ்நாடு முழுவதிலும் இருக்கிற மக்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட கடவுளின் பெயரைச் சொல்லி, அவருக்குக் காணிக்கைச் செலுத்துகிறேன் என்றும் சொல்வது கிடையாது.

இங்கே இருக்கும் ஒருவர் தேவி கருமாரியம்மனுக்கு காணிக்கை செலுத்துகிறார். பக்கத்திலிருக்கும் ஒருவர் மாங்காட்டு அம்மனுக்குச் செலுத்துகிறார். இன்னொருவர் கபாலி கோவிலுக்குச் சென்று செலுத்துகிறார். மற்றும் ஒருவர் சமயபுரம் மாரியம்மனுக்கு செலுத்துகிறார். இன்னும் ஒருவர் பக்கத்திலே இருக்கும் வைணவ கோவில் ஸ்ரீரங்கத்திற்குச் சென்று செலுத்துகிறார். இன்னொருவர் திருப்பரங்குன்றத்தில் இருக்கும் சுப்பிரமணியனுக்குச் சென்று செலுத்துகிறார். இன்னொருவர் மீனாட்சி அம்மனுக்குச் செலுத்துகிறார். ஆகவே இப்படி காணிக்கை செலுத்தும் பக்தர்கள் எல்லாம் ஒரு உணர்வினாலேயே செலுத்துகிறார்கள். ஆகவே, அந்த உணர்வின் அடிப்படையில், அந்த நிறுவனத்தின் மீது தான், நாம் சில சட்ட திட்டங்களை உருவாக்கி அந்த நிதியிலேயிருந்து செய்ய முடியும். பொது நிதியாக அதை மாற்றுவது என்பது முடியாது. எத்தனையோ ஸ்டேக்கள் ஹைகோர்ட்டிலே வந்து கொண்டிருக்கிற காரணத்தால் அதை சட்டத்தின் மூலம் மாற்ற முடியாது. (குறுக்கீடு)

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, சமயபுர ஆலய நிர்வாகத்தோடு ஸ்ரீரங்க ஆலய நிர்வாகத்தை இணைத்து, திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய ஸ்வாமி ஆலய நிர்வாகத்தோடு மீனாட்சி அம்மன் ஆலயத்தை இணைத்து அந்த ஆலய நிர்வாகங்களிலிருந்து, இந்த ஆலயங்களுக்கு பணத்தை எடுத்து செலவு செய்யவில்லையா ? (மணியடிக்கப்பெற்றது).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதைத்தான் சொன்னேன். ஒரு ஆலய நிர்வாகத்திலிருந்து இன்னொரு ஆலயத்திற்கு மாற்றலாம். வேறு செலவுகளுக்கு மாற்றக் கூடாது. ஒரு ஆலயத்தினுடைய நிர்வாகத்திலிருந்து கிடைக்கக் கூடிய உபரி நிதியை இன்னொரு ஆலயத்திற்கு மாற்றலாம். அது சமயம் சம்பந்தப்பட்டது; துறை சம்பந்தப்பட்டது. வேறு பொது நிதியாக மாற்றுவது என்பது சட்டப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட பிரச்னை. யாராவது ஒருவர் வழக்கு மன்றத்திற்குப் போய் சாதாரணமாக ஒரு தடை உத்தரவை பெற்று விடலாம். ஆகவே ஒரு ஆலயத்திலிருந்து இன்னொரு ஆலயத்திற்கு மாற்றுகிற, அதாவது டைவர்ஷன் என்கிற முறையின்படிதான் நாம் இன்று பல திருப்பணிகளை, பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். நீங்கள் சொல்வதுபோல், கமிஷனருடைய காமன் குட் பண்டிலே போட முடியாது. சட்ட நிபுணர்கள் தெரிந்துதான் அந்த வார்த்தையைப் போட்டிருக்கிறார்கள். அவர்களாகவே கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்றும் ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி இருப்பது சட்டத்தினுடைய அனுமதியைப் பெறுவதற்காகத்தான். ஆகவே, ஒவ்வொரு ஆலயமும் தாங்களாகவே முன் வந்து, நாங்கள் அந்த ஆணையர் பொது நல நிதிக்கு ஒரு லட்சத்தை தருகிறோம், இரண்டு லட்சத்தை தருகிறோம் என்று அவர்களாகவே தீர்மானத்தைப் போட்டுவிட்டுக் கொடுக்கலாம்.

இப்படியெல்லாம் இங்கு விவாதித்துக் கொண்டிருந்தால் அதையே கோர்ட்டுக்குக் கொண்டு போய் விடுவார்கள். இந்த விதிகளைச் சொன்னாலே, யாராவது ஒருவர் கோர்ட்டுக்கு கொண்டு போய் விடுவார்.

இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் திருவரங்கம் குடமுழுக்கு விழாவிற்கு அழைப்பு தாமதமாக வந்தது என்பதுபற்றிச் சொன்னார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், அதற்கு முதல்நாள் இரவு வரையில் அங்கு சிக்கல் இருந்தது. அடுத்தநாள் காலையிலே பல்லாயிரக்கணக்கிலே, லட்சக்கணக்கிலே மக்கள் கூடுகிற ஒரு விழா நடக்க இருக்கிறது. ஆனால் சில மனிதர்கள், இரண்டு மூன்று பேர்கள், கோர்ட்டிலே கொண்டு போய் வழக்கு போட்டு அந்த விழா அன்று நடைபெறக் கூடாது என்பதற்காக வழக்காடிக் கொண்டிருக்கும் நிலையில், முதல்நாள் இரவு வரையில் அங்கே சிக்கல் இருந்தது. ஆகவே, அந்த விழாவே நடக்குமோ நடக்காதோ என்பதே பிரச்னையாக இருந்தது. அதனாலேதான் அழைப்பு அனுப்புவதிலே இத்தகைய தாமதம் ஏற்பட்டிருக்கலாம்.

1981 ஏப்ரல் 28] [திரு. ஆர். எம். வீரப்பன்]

அதேபோல நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொக்கலிங்கம் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் அவர்களுடைய தொகுதியிலே நடைபெற்ற ஒரு விழாவிற்கு போடப்பட்ட வளைவைப் பற்றிச் சொன்னார்கள். அந்த வளைவை யாரோ தனிப்பட்டவர்கள் தங்களுடைய சொந்தச் செலவிலே போட்டுக் கொண்டு, விழா நடத்தினார்கள். அந்த வளைவு அறநிலையத்துறைக்குச் சொந்தமானது அல்ல. அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், நான் அவரிடம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறேன், அவரிடத்திலேயும் அதற்கான உறுதி தந்திருக்கிறேன், அவர் தொகுதியிலிருக்கும் அந்தக் கோவிலினுடைய திருப்பணியைச் செய்து விட்டுத் தான் நான் மறுவேலை பார்ப்பேன் என்று அதிலே அவர் நம்பிக்கையாக இருக்கலாம். அவருடைய தொகுதி மக்களுக்கும் உறுதியாகச் சொல்லலாம். ஆகவே, அந்த வளைவு என்பது தனிப்பட்டவர்கள் ஏற்படுத்திய ஒன்று என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறையிலே இருக்கிற பிரச்னைகளே என்னவென்றால், எதற்கெடுத்தாலும் நடைமுறை, எதற்கெடுத்தாலும் சட்டம், எதற்கெடுத்தாலும் ஆகம விதிகள் என்றெல்லாம் நுழைந்து நுழைந்து, ஒரு வேலையையும் செய்ய விடாமல் தடுத்துக் கொண்டிருப்பார்கள். பல விவரங்களை இங்கே என்னாலே சொல்ல இயலவில்லை. பல்வேறு கோரிக்கைகளை நீங்கள் இங்கே வைத்திருக்கிறீர்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதலுடன், அவருடைய ஆணையாக அறநிலையத் துறைக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற காரணத்தாலே, நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையின் சம்பந்தப்பட்ட ஆலையங்களுடைய நிலங்களைப் பற்றிக் குறிப்பிட்டவர்கள் நிலங்களை எல்லாம் அரசு எடுத்துக் கொள்ள வேண்டும், அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். எடுத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் நானும் முடிவெடுத்திருக்கிறேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் முடிவெடுத்திருக்கிறார்கள். ஆனால், நிதித்துறையிடத்திலே போகிறபோதுதான், அங்கே எங்களுக்கு பெரிய தடை வருகிறது. 5 லட்சம் ஏக்கர் நிலங்களை எடுத்துக் கொள்ளுங்கள் என்று நான் சரண்டர் செய்ய தயாராக இருக்கிறேன். வருவாய்த்துறை அமைச்சரும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் என்ன விலை கொடுப்பது என்கிறபோதுதான், பிரச்னையே வருகிறது. ஏனென்றால், இது ஒவ்வொன்றும் தனித் தனி நிறுவனங்களானாலும், தனியார்களுடைய நிலத்தைப் போன்றது.

தயவுசெய்து நீங்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு இன்டிவிஜுவல் எப்படி வழக்குமன்றத்தில் வழக்கு போட்டால் நிற்குமோ, அதேபோல் இந்த நிறுவனங்களுடைய நிலங்கள். ஆகவே இதை அவ்வளவு சுலபத்தில் எடுத்துக்கொள்ளமுடியாது. மக்களுடைய தேவைக்காக நிறைவேற்றப்பட்ட பினாமி ஒழிப்புச் சட்டமே எந்த நிலைமையில் இருக்கிறது என்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே அப்படி இருக்கிறபோது இவ்வளவு ஆயிரம் கோவில்களுக்கு சொந்தமான நிலங்களை—ஒரு ஏக்கரிலிருந்து ஆயிரம் ஏக்கர், ஐயாயிரம் ஏக்கர், ஆறாயிரம் ஏக்கர் வரை உரிமை படைத்திருக்கிற உரிமையாளர்கள் ஒவ்வொரு ஆலயமும். ஆகவே இதில் கை வைக்கிறபோது ஜாக்கிரதையாக வைக்கவேண்டும். ஆனால் நான் துணிந்து சொல்லிவிட்டேன். நாங்கள் இந்த நிலத்தை உங்களிடத்தில் தந்துவிடுகிறோம், எங்களால் வைத்துக்கொண்டு நிர்வகிக்க முடியாது என்று சொல்லிவிட்டோம். அதை வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இருக்கிற பிரச்னையெல்லாம், இதற்கு எப்படி விலை கொடுப்பது, யார் கொடுப்பது என்பதுதான். பாண்ட்ஸ் கொடுக்கலாம் என்று ஒரு உறுப்பினர் கருத்து தெரிவித்தார். அதையும் இப்போது ரிசர்வ் வங்கி தடுத்துநிறுத்திவிட்டது. ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் பாண்ட்ஸ் கொடுப்பது, அரசு உத்தரவாதம் கொடுப்பதை ரிசர்வ் பாங்க் அனுமதிப்பதில்லை. ஆகவே பாண்ட்ஸும் வராது. ஆகவே என்ன செய்வது என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறோம். புரட்சித் தலைவர் அவர்கள் இதற்கு ஒரு இறுதி முடிவை எடுக்க இருக்கிறார்கள். எப்படியானாலும் இந்த அறநிலையத் துறையில் இருக்கிற நிலங்களை உண்மையான நிலமற்ற ஏழைகளுக்கு, நிலத்தில் பாடுபடுகிற விவசாயிகளுக்கு, குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு இதைப் பிரித்துக்கொடுத்து அவர்களை நில உடைமையாளர்களாக ஆக்குவது என்ற அந்தக் கொள்கை முடிவை புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.) அதை எப்படிச் செய்யவேண்டும் என்பதும், எந்தளவிற்கு நிதி ஆதாரம் அதில் ஏற்படுத்துவது என்பதும்—ஏனென்றால் முன்னாலே இருந்தவர்கள் இங்கே சட்டமன்றத்தில் அறிவித்துவிட்டு சேலம், மேட்டூரில் இருக்கிற நிறுவனத்தை, தமிழ்நாட்டில் இருக்கிற ஒரே ஒரு அலுமினியம் நிறுவனத்தை நாங்கள் தேசியவுடைமையாக்கி விட்டோம் என்று அறிவித்துவிட்டு அதற்குப்பின்னால் அது என்னவாயிற்று என்று- கேட்கிற நிலைமைக்கு புரட்சித் தலைவர் அரசு போகாது. ஒருமுடிவை எடுப்பதற்கு முன்னால், எல்லா முனைகளையும் பரிசீலித்துத்தான் முடிவு எடுப்பது, எடுத்த

முடிவிற்குப் பிறகு ஆண்டவனே வந்து மாற்றினாலும், நக்கீரன் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டினாலும் குற்றம் குற்றமே என்று சொன்னதுபோல் தான் இந்த அரசு சொல்லும். ஆகவே அதை ஆழ்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். ஏழை விவசாயிகளுக்கு, ஆதி திராவிட விவசாயி களுக்கு, நிலமற்ற ஏழை மக்களுக்கு இந்தச் சொத்துக்களைப் பகிர்ந்து கொடுக்கவேண்டும், சொந்தமாக்கவேண்டும் என்ற கொள்கை முடிவினை புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இந்த வைத்தீஸ்வரன் கோவில் தர்மபுரம் மடத்தின் ஆதின கர்த்தர் அதனுடைய பரம்பரை தர்மகர்த்தா. அதற்கு இருக்கிற நிலம் ஆறாயிரம் ஏக்கர்கள். அதில் 3,000 ஏக்கருக்கு ஆண்டுக்கு ஏட்டணா கட்டிக் கொண்டு வைத்திருக்கிற நிலப் பிரபுக்கள் பல பேர்கள். அதையும் கட்டுவதில்லை. ஆனால் இவர்கள் தங்களுடைய பட்டாவை ஸ்தாபித்துக்கொள்ள வருவாய்த் துறைக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 54.50 கிஸ்தி கட்டிக்கொண்டிருக்கிறது அந்த ஆலயம். இப் படிப்பட்ட அக்கிரமங்கள், அநியாயங்கள் எல்லாம் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எதையோ கண்டுபிடித்தோம், கண்டு பிடித்தோம் என்கிறீர்களே இதை ஏன் கண்டுபிடிக்கவில்லை, 7 ஆண்டுக்காலமாக உங்களுக்கு நேரமில்லை, வேறு எது எதற்கோ நேரம் இருந்தது அதனால் முடியவில்லை, ஏற்றுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-50)

நிலச்சீர்திருத்தத்தைப் பொறுத்து, நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிற அதே நேரத்தில் ஆலய அலுவலர்களுக்கு பல்வேறு என்னென்ன சீர்திருத்தம் செய் திருக்கிறோம் என்று கொள்கைவிளக்கக் குறிப்பில் தெரிவித்திருக்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

திரு. துரைமுருகன் : ** **

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் பேசிய பேச்சு குறிப்பிலே இடம் பெறுகிறதா? அமைச்சர் அவர்களைப் பார்த்து. ** என்று கேட்டார் என்று சொன்னால், அதை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை. இந்த வார்த்தைகளை வாபஸ் வாங்கி யாக வேண்டும். (கூச்சல்—குழப்பம்)

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பேசிய பேச்சை குறிப்பிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு: துரைமுருகன் : திரு. மணிமாறன் குறிப்பிட்டது இருக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையும் சேர்த்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுங் கட்சியைச் சார்ந்த கொறடா அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மானியத்தை நிறைவேற்றும் நிலைமையிலே இருப்பது நாம் என்பதை அருள்கூர்ந்து நினைவிலே வைத்துக்கொண்டால், இந்தச் சபையின் நடவடிக்கைகளை நடத்துவதற்கு நன்மையாக இருக்கும். காரணம், இப்போதே நேரமாகி விட்டது. நாம் எத்தனையோ சகித்துக் கொண்டிருக்கிறோம் ; எவ்வளவோ பொறுத்துக் கொண்டிருக்கிறோம். எவ்வளவோ பொறுமையோடு இருந்திருக்கிறோம். பொறுத்தவர் பூமி ஆள்வார் என்பது பழமொழி. நாம் ஆத்திரப்பட வேண்டாம். அவர் என்னைச் சொல்வதையெல்லாம் நான் எற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இந்த அறநிலையத் துறை நிர்வாகத்திலே இன்றைக்கு இங்கே வந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களிலே ஒன்று, 'திருமணங்களுக்கு இலவசமாக ஆலையங்களிலே இடம் ஒதுக்க வேண்டும்' என்று கேட்டிருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புகிறேன். திருமணங்களுக்கு இடம் இலவசமாக ஒதுக்குவதோடு மட்டுமின்றி, ஆதித் திராவிட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு, ஏழைகளாக இருக்கின்றவர்களுக்கு, ஏ.சி. கோயில்கள் அதாவது உதவி ஆணையாளர் அவர்கள் நிர்வாகத்திலே உள்ள கோயில்களில் ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்கு ஆண்டுதோறும் இந்தத் திருமணங்களுக்காக உதவித் தொகை வழங்குவது என்ற ஒரு அறிவிப்பை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சார்பிலே நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சத்திலிருந்து 15 இலட்சம் ரூபாய் வரையில் இதற்காக ஒதுக்கப்படும். அப்படி ஒதுக்கப்படுகின்ற தொகை கலப்புத் திருமணம் செய்துகொள்ளுகின்றவர்களுக்கு ஆயிரம் ரூபாய் என்றும், அதற்குக் கீழே வருகின்றவர்களுக்கு ரூ. 500-லிருந்து ரூ. 750 வரையில், அவர் அவர்களுடைய செலவுகளுக்கு ஏற்ப, ஏழை மக்களுக்கு, ஆதித் திராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்த அறநிலையத் துறையின் சார்பில் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சத்திலிருந்து 15 இலட்சம் ரூபாய் அளவிற்குச் செலவிட திட்டமிட்டு, இந்த இலவசத் திருமணங்கள்

செய்து வைக்கப்பட இருக்கின்றன. மீண்டும் சொல்கிறேன், கலப்புத் திருமணம் செய்துகொள்கிறவர்களுக்கு ரூ. 1,000, மற்றவர்களுக்கு ரூ. 500-லிருந்து 740 வரை உதவித்தொகை வழங்கப்பட இருக்கிறது என்பதை புரட்சித் தலைவர் அவர்களின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஊதியத்தைப் பற்றிச் சொன்னார்கள். சட்டியிலே இருந்தால் தானே அகப்பையில் வரும். வருமானம் வருகின்ற கோயில்களிலே கொடுத்துக் கொண்டிருக்கிறோம் ; அதிலே வஞ்சனை இல்லை. என்றாலும். கோயில்களிலே வேலை செய்கின்ற அர்ச்சகர்கள் இன்றைக்கு வறுமையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதால், ஆலையத்தினுடைய வருமானம் எவ்வளவு குறைவாக இருந்தாலும், இப்போது உடன;டியாக ரூ. 100 குறைந்தபட்ச ஊதியமாக அவர்களுக்குத் தந்தாக வேண்டும். அறநிலையத் துறை தீர்மானித்துள்ளது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, அலுவலர்கள் சங்கத்தின் சார்பிலே நம்முடைய ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர், அருமைச் சகோதரர் செளந்திரராஜன் அவர்கள் தலைமையேற்று, அந்தச சங்கத்தின் சார்பில் பல கோரிக்கைளை வைத்திருக்கிறார்கள். அதிலே 3 கோரிக்கைகளைப் பரிசீலித்து, ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது 30 சதவீதம் அந்த ஆலயத்தினுடைய வருமானத்திலே இருந்து சம்பளம் தாலாம் என்று விதி இருக்கிறது. அதை 40 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது எந்தெந்த ஆலயங்களில் முடியுமோ அந்த ஆலயங்களில் 40 சதவீதமாக உயர்த்துவதுபற்றி பரிசீலித்து ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது 12 கிரேட் பணியாளர்கள் என்பதை 7 கிரேடாக மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் அரசு ஆணையாளரிடத்திலே பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறது. அதை இயன்ற அளவிற்கு குறைத்து அப்படி மாற்ற முடியுமானால் அதையும் மாற்றுவோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு பல்வேறு நிலைமைகள், விலைவாசி ஏற்றம் இவைகளை மனதிலே கொண்டு 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சம்பளம் ஒவ்வொரு ஆலயத்திற்கு ஏற்றபடி, அதனுடைய வருமானத்திற்கேற்றபடி மாறிக் கொண்டிருக்கும். ஆகவே எங்கே குறைந்த சம்பளமாக இருக்கிறதோ, அந்த

இடத்திலே இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று நான் தெரிவித்து, நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தாலே இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிற அத்தனை கருத்துக்களையும் நான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வேன். இங்கே நான் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிற பல்வேறு பிரச்சினைகள், இந்த நாட்டிலே ஒரு புதிய சமுதாயத்தை தோற்றுவிக்கிற அடிப்படைகள் என்பதை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள் என்று நான் எண்ணுகிறேன். ஏனென்றால் தம்பட்டம் அடித்துக் கொண்டு காரியங்களை செய்வதிலே பலனில்லை. காரியம் நிறைவேறியாக வேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையிலே நீங்கள் சொல்லியிருக்கிற அத்தனை கருத்துக்களும் இங்கே குறிப்புகளிலே இருக்கின்றன. அதை நாங்கள் பரிசீலித்து முயற்சிகள் எடுத்து நிச்சயமாக ஒரு குறையற்ற, குற்றமற்ற நிர்வாகத்தை நடத்துவதற்கு முயற்சிப்போம். குறை காண்கிற இடத்திலே நீங்கள் எடுத்துச் சொல்லுங்கள். குற்றம் கண்டால் எடுத்துச் சொல்லுங்கள். அதைத் திருத்திக்கொள்ள நாங்கள் என்றைக்கும் தயாராக இருக்கிறோம். ஆகவே யார், அதிகாரிகள் தவறு செய்கிறார்களா, அரசு தவறு செய்கிறதா என்பதைப் பிரித்து பார்த்து மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டு, நீங்கள் இந்த அளவிற்கு விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், எல். இளையபெருமாள், ஜே. ஹேமச்சந்திரன், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

“மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1,94,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்”

1981 ஏப்ரல் 28] பேரவைத் துணைத் தலைவர்[

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 29—4—1981 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

266. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமைப் பொறியியலாளர் (பொது) திரு. கே. நாராயணசாமியை பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகக் கல்விக் குழுவின் உறுப்பினராக 31—3—1981 ஆம் தேதியிலிருந்து நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 31—3—1981 ஆம் தேதியிடப் பெற்ற 569 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

171. கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

(53 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 12.

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

முகவுரை.

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 1960 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்கீழ் இந்து சமய அறநிலையத் துறைக்கு ஆணையாளர் ஒருவரும் அவருக்குக்கீழ் 7 துணை ஆணையாளர் களும் 16 உதவி ஆணையாளர்களும் உள்ளனர். அவர்கள் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்குச் சட்டப்படி அமைந்த அதிகாரிகளாவர். இந்த அதிகாரி களுடன் அறநிலையத் துறையின்கீழ் தலைமைத் தணிக்கை அதிகாரி ஒருவரும், அவருக்குத் தேவையான சார்நிலை அலுவலர்கள், பணியாளர்களுடன் ஒரு தணிக்கைப் பிரிவும் இருந்து வருகின்றது. இத்தணிக்கைப் பிரிவு சமய நிறு வனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்து வருகின்றது. மேலும், மேற் பார்வைப் பொறியாளர் ஒருவரின் தலைமையில் கோட்டப் பொறியாளர் ஒரு வரும், தேவையான மேற்பார்வை அலுவலர்களும், பணியாளர்களும் மாவட்டங்கள்தோறும், இந்து சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடுகளை தயாரித்தும் மற்றும் அப்பணிகளையும், மற்ற கட்டிட வேலைகளையும் மேற் பார்வையிட்டு கவனித்து வருகின்றனர். நீண்ட காலமாக நிலுவையிலிருக்கும் வழக்கு விசாரணைகளை விசாரித்து முடிப்பதற்காகத் துணை ஆணையாளர் (நீதி) ஒருவர் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றார். மாவட்டத் துணை ஆட்சியர் பதவித் தரத்தில் தனி அதிகாரி ஒருவரும் தனி வட்டாட்சியர் ஐந்து பேரும் அடங்கிய வருவாய்த் தனிப் பிரிவு ஒன்று, கோயில் நிலங்களை ஆய்வு செய்தல், பதிவேடுகளைத் தயாரித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. உதவி ஆணையாளர் பதவி தரத்தில் சரிபார்ப்பு அதிகாரிகள் எண்மரும், அவர் களுக்குத் தேவையான துணைப் பணியாளர்களும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான திருவாபரணங்களையும் மற்ற விலையுயர்ந்த பொருட்களையும் ஆய்வு செய்து மதிப்பிடும் பணியைக் கவனித்து வருகின்றனர். இது தவிர,

1981 ஏப்ரல் 28]

பணியாளர்கள்மீது சுமத்தப்படுகிற கடுமையான புகார்களையும் குற்றச்சாட்டு களையும் விசாரணை செய்வதற்கு ஆணையாளருக்கு உதவியாக உதவி ஆணை யாளர் பதவித் தரத்தில் தனி அதிகாரி பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் சில மடங்கள் செயல்படுவதில் முறைகேடுகள் காணப்படுவ தாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து, தனிப்பட்ட புலனாய்வு நடத்தும் பொருட்டு, துணை ஆணையாளர் ஒருவரும், அவருக்கு உதவி புரிவ தற்கென தனிப் பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பணியாளர்கள் 1980 நவம்பர் திங்கள் முதல் பணியாற்றத் தொடங்கினர். மொத்தம் 166 வட்டங் களுக்கும் துணை வட்டங்களுக்குமாகச் சேர்த்து 131 ஆய்வாளர்கள் மட்டுமே இருந்தனர். ஒவ்வொரு வட்டத்தில் உள்ள சமய நிறுவனங்கள் தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்கு, அந்த வட்டத்திற்குக் குறைந்தது ஓர் ஆய்வாளர் இருக்க வேண்டுமென்கிற நோக்கத்தில் 1980-ல் கூடுதலாக 35 ஆய்வாளர்களை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உதவி ஆணையாளரின் பொறுப் பிலுள்ள 16 கோட்டங்கள் ஒவ்வொன்றுக்கும், தனிப்பட்ட நீதிமன்றப் பணியைக் கவனிக்கும் பொருட்டு ஒவ்வொரு வட்டத்துக்கும் ஓர் ஆய்வாளர் வீதம் மொத்தம் 16 ஆய்வாளர்களை நியமிப்பதற்கு 1980 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால், முறையாக அமைந்த ஆய்வாளர் களுக்கு இப் பணிச் சுமை குறைவதனால் அவர்கள் நிர்வாகப் பணியைக் கவனிப்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்த இயலும்.

2. இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத் துறையில், தணிக்கைப் பிரிவு 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து செயல்படத் தொடங்கியது. துணை ஆணையாளர் உள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வட்டாரத் தணிக்கை அலுவலகம் ஒன்று ஏற்படுத்துவது குறித்து அரசின் கொள்கை படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் கோட்டத்திலும் வட்டார தணிக்கை அலுவலகம் ஒன்று அமைக்கப்படும்.

3. இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத் துறைப் பொறுப்பின்கீழ், 33,455 சமய நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்களில் 31,423 கோயில்கள், 64 மடங்கள், மடங்களைச் சேர்ந்த 54 கோயில்கள், 1,706 குறிப்பிட்ட அறக் கட்டளைகள், 17 சமண சமய நிறுவனங்கள், 191 அறக்கட்டளைகள் அடங்கும்.

4. இந்நிறுவனங்களின் மதிப்பிடத்தக்க ஆண்டு வருமானம் சுமார் ரூபாய் 16 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1981 எப்ரல் 28

இந்து சமய நிறுவனங்களில் பரம்பரை அர்ச்சகர்கள் நியமிக்கப்படுவதை நீக்குதலும், சாதி, சமய உட்பிரிவு அல்லது பாகுபாடின்றி அர்ச்சகர்களை நியமித்தலும்.

அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்க வேண்டும் என்னும் நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய நெறிமுறைக் கோட்பாட்டுக்கிணங்க ஒரு சமூக சீர்திருத்த நடவடிக்கையாக இந்து சமயத்தைச் சேர்ந்தோரில் தகுதி வாய்ந்தோரை சமய உட்பிரிவு அல்லது இனம் ஆகியவற்றைக் கருதிப்பாராமல் இந்து சமய நிறுவனங்களில் அர்ச்சகர்களாக, பூசாரிகளாக அல்லது ஏனைய கருவறைப் பணியாளர்களாக நியமிக்க அரசு விழைகிறது. இந்து கோயில்களில் அர்ச்சகர்களை நியமிப்பது தொடர்பாக உச்ச நீதிமன்றக் குறிப்புரைகளைக் கருத்தில் கொண்டு மேற்சொன்ன நோக்கத்தை செயல்படுத்துவதற்குரிய வழி வகைகளைக் காணும் வகையில் வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள் முதலியனவற்றில் நன்கு புலமையுள்ள வல்லுநர் குழு ஒன்றை ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி திரு. மகாராசன் அவர்களின் தலைமையில் அரசு நியமித்துள்ளது. இக்குழுவின் பதவிக்காலம் 3-7-1931 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இக்குழுவிடமிருந்து அறிக்கை வரப்பெற்று பரிசீலனை செய்த பின்னர் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

இந்து சமய நிறுவனங்களில் பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமித்தல்.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) கீழ் இந்து சமய நிறுவனங்களில் நியமனம் செய்யப்பட்ட பரம்பரையில்லா அறங்காவலர்களின் பதவிக்காலம், தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தமும் தனி விதித் துறைகளும்) சட்டத்தின் (இந்தியக் குடியரசுத் தலைவர் சட்டம் 24/1976) 11 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் சொல்லியுள்ள விதித் துறைகளின்படி, 1976 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து அற்றுப்போயிற்று. இந்து சமய நிறுவனங்களில் மேற்சொன்ன குடியரசுத் தலைவரது சட்டத்தைச் சேர்ந்த விதித் துறைகளின்கீழ் நியமனம் செய்யப்பட்ட பரம்பரை அறங்காவலர்கள் அல்லது அறங்காவலர் அல்லது நிர்வாக அதிகாரிகள் அல்லது தக்கார் நிர்வகித்து வருகின்றனர். அவர்களது இடங்களில் புதிய பரம்பரையில்லா அறங்காவலர் குழுக்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1981 ஏப்ரல் 28]

1978 செப்டம்பரில், தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 42/1978) இந்து சமய அறக்கட்டளை நிறுவனங்கள், அவற்றின் ஆண்டு வருவாயின் அடிப்படையில் பின்வரும் நான்கு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன :—

1. ஆண்டு வருவாய் ரூபாய் 10,000-க்கு குறைவாகக் கொண்டுள்ள சமய நிறுவனங்கள் ;

2. ஆண்டு வருவாய் ரூபாய் 10,000-க்குக் குறையாமலும் ஆனால் ரூபாய் 50,000-க்குக் குறைவாகவும் கொண்டுள்ள சமய நிறுவனங்கள் ;

3. ஆண்டு வருவாய் ரூபாய் 50,000-க்குக் குறையாமலும் ஆனால் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறைவாகவும் கொண்டுள்ள சமய நிறுவனங்கள் ;

4. ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறையாமல் உள்ள சமய நிறுவனங்கள்.

ஒன்றாவது வகையின்கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் உதவி ஆணையாளர், 2-வது வகையின்கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் துணை ஆணையாளர், 3-வது வகையின்கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் ஆணையாளர், 4-வது வகையின்கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் அரசு ஆகியோர் பரம்பரை முறையில் வாராத அறங்காவலர்களை நியமிக்கத்தக்க அதிகாரிகள் ஆவர்.

பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமிக்கவும் அத்தகைய நியமனங்களுக்குத் தகுதிவாய்ந்த பொருத்தமான நபர்களின் பெயர்ப் பட்டியல்களைத் தயாரித்து சம்பந்தப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு, அதாவது உதவி ஆணையாளர்கள், துணை ஆணையாளர்கள், ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்புவதற்காக இச்சட்டத்தின் 46-ஏ பிரிவின்கீழ் வட்டாரக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பரிந்துரைக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியல்களிலிருந்து ஒவ்வொரு கோயிலுக்கும் மூன்று அறங்காவலர்களை இவ்வதிகாரிகள் நியமிக்கின்றனர்.

மேலே குறிப்பிட்டவாறு மூன்று அறங்காவலர்களை நியமிப்பதோடு பொதுவாக மக்களின் நலம், சமய நிறுவனத்தின் வருமானம், சொத்துக்கள் மற்றும் வழிபடுபவர்களின் எண்ணிக்கை, யாத்திரை தலமாக அச்சமய நிறுவனத்திற்குள்ள முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அவசியமெனக் கருதினால், அத்தகைய சமய நிறுவனங்களுக்கு மேலும் அறங்காவலர்கள் இருவரை நியமிக்க அரசு அதிகாரம் பெற்றுள்ளது.

எந்த சமய நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் அறங்காவலர்களை நியமிப்பதற்குத் தகுதி பெற்ற அதிகாரிகளாக துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் உள்ளனரோ அந்தச் சமய நிறுவனங்கள் தொடர்பாக இந்து சமய அறநிலைய நிர்வாகத் துறை ஆணையாளருக்கு அரசு கூடுதல் அறங்காவலர்களை நியமிக்க அதிகாரங்களை அளித்துள்ளது.

எந்த நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அறங்காவலர்களை நியமிப்பதற்கு ஆணையாளர் தகுதிபெற்ற அதிகாரியோ, அந்த நிறுவனங்கள் தொடர்பாக அரசு, கூடுதல் அறங்காவலர்களை நியமிக்கும் அதிகாரங்களைச் செலுத்துகிறது.

ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருவாய் உடைய நிறுவனங்களுக்கு பாரம்பரையில்லாத ஏனைய அறங்காவலர்களை நியமிக்க அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 31-3-1981 ஆம் நாள் அன்றுள்ளவாறு 74 நிறுவனங்களில் 63 நிறுவனங்களுக்கு அறங்காவலர்களை நியமித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்நிறுவனங்களில் அறங்காவலர்களை நியமிப்பதற்குரிய தகுதி பெற்ற அதிகாரமன்றம் அரசேயாகும். ஆணையாளர் 75 சமய நிறுவனங்களுள், இதுவரையில் 53 சமய நிறுவனங்களுக்கு அறங்காவலர்களையும், துணை ஆணையாளர் 723 நிறுவனங்களுள் 513 நிறுவனங்களுக்கும், உதவி ஆணையாளர் 15,703 நிறுவனங்களுள் 7,141 நிறுவனங்களுக்கும் அறங்காவலர்களை நியமித்துள்ளனர். துணை ஆணையாளர்கள் ஏற்கெனவே மூன்று அறங்காவலர்களை நியமித்துள்ள 513 நிறுவனங்களுள் 227 நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இரண்டு அறங்காவலர்களை ஆணையாளர் நியமித்துள்ளார். அத்தகைய நியமனம் 72 நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் தேவையற்றது எனக் கருதப்பட்டது. இதேபோன்று உதவி ஆணையாளர்கள் ஏற்கெனவே மூன்று அறங்காவலர்களை நியமித்துள்ள 7,141 நிறுவனங்களில் 316 நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இரண்டு அறங்காவலர்களை ஆணையாளர் நியமித்துள்ளார். அத்தகைய நியமனம் 5,310 நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் தேவையற்றது எனக் கருதப்பட்டது. ஆணையரால் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்ட 53 ஆலயங்களில் 35-க்கு அரசு கூடுதல் அறங்காவலர்களை நியமனம் செய்துள்ளது.

1981 எப்ரல் 28]

கன்னியாகுமரி மாவட்டத்தில் உரிய சட்டப்படி சேர்த்துக்கொள்ளப் பட்டதும் சேர்த்துக்கொள்ளப்படாததுமான தேவஸ்வங்களும், புதுக்கோட்டை யிலுள்ள கோவில்களும்.

1974 ஆம் ஆண்டின் 50 ஆம் சட்டத்தின்படி, கன்னியாகுமரி தேவஸ்வக் குழு 1975 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து கலைக்கப்பட்டது. முன்னாள் திருவிதாங்கூர் மன்னர்களின் நிர்வாகத்திலிருந்து நிறுவனங்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் செயல் வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டன. அவை, திருநெல்வேலி துணை ஆணை யாளர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையாளர் பதவித்தரத்திலுள்ள நிர்வாக அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப் பட்டு வருகின்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 290-எ பிரிவில் வகை செய்துள்ளவாறு இந்நிறுவனங்களைப் பராமரிப்பதற்காக ஆண்டொன் றுக்கு ரூபாய் 13,50,000 தொடர் மானியத்தையும் சுசீந்திரம் தேவஸ்தானத் துடன் இணைக்கப்பெற்ற பனிரெண்டு சங்கேத ஆலயங்களின் நிர்வாகத்திற்காக ரூபாய் 18,000மும் இரண்டு ஸ்ரீபாத ஆலயங்களின் நிர்வாகத்திற்காக ரூபாய் 2,000மும் அரசு அளித்துவருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள உரிய சட்டப்படி சேர்க்கப்பட்ட மற்றும் சேர்க்கப்படாத தேவஸ்வங்களுக்காக, 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் முதல் அறங்காவலர் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

1979 ஆம் ஆண்டு கன்னியாகுமரி தேவஸ்வங்களின் பணியாளர் அமைப்பி லுள்ள 131 பணியாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் அரசுப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டனர். அதன்பின் 1-1-1975-க்குப் பின்னர், ஆனால் 1-4-1979-க்கு முன்பாக ஓய்வு பெற்ற தேவஸ்வப் பணியாளர் களில் சிலர் செய்துகொண்ட மேல்முறையீட்டின் பேரில் அரசு முன்னர் பிறப் பித்த ஆணைகளை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக தேவஸ்வம் பணி யாளர்களை 1-1-1975 முதல் அரசுப் பணியாளர்களாக அறிவித்துள்ளது. அதன் காரணமாக ஓய்வு பெற்ற பத்து பணியாளர்கள், ஓய்வூதியத்தையும், ஏனைய இணைக்கப்பட்ட ஓய்வுகால நன்மைகளையும் தமிழ்நாடு தாராள ஓய்வூதிய விதிகளின்கீழ் பெறுவர். எனினும் பணியில் உள்ளவர்கள் இந்து சமய அற நிலையத் துறையில் இன்னும் சிறிது காலத்திற்குத் தனிப் பிரிவாக செயல் படுவர். அவர்களது பணி நிபந்தனைகளைப் பொறுத்தவரை தனி விதிகள் இயற்றி, அவர்களது பணிகளை துறையின் ஏனைய பதவித்தரங்களுடன் ஒருங் கிணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

முன்னாள் புதுக்கோட்டை அரசரின் நிர்வாகத்திலிருந்த 136 கோயில்களைப் பராமரிப்பதற்காக ஆண்டுதோறும் ஐந்து லட்சம் ரூபாயை அரசு வழங்கிவருகிறது.

இத்துடன் சுவாமி தூக்கும் செலவுக்கு ரூபாய் 30,000 நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. ஆக ரூபாய் 5,30,000 அரசு மானியமாக அளிக்கப்படுகிறது.

கோயில் பணியாளர்கள்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள சமய நிறுவனங்களில் 28,500 அர்ச்சகர்கள், குருக்கள் ஆகியோர் தவிர சுமார் 50,000 பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்களின் சம்பள விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டு, கூடுதல் அகவிலைப்படி அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது. நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படியும் ஒரே சீரான விகிதத்தில் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படிகள் பெற நிதிநிலை அனுமதிக்காத இடங்களில் ரூபாய் 5 கிராமப்படியாக 1-1-1981 முதல் கொடுக்கப்பட்டு வருகிறது.

கோயில் பணியாளர்களுக்கு குடும்பநல நிதித் திட்டம் 1980 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 25 வயது முடிவடைந்து ஆனால் 55 வயதைக் கடக்காத இந்து சமய அறநிலையங்கள் நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள், அதிகாரிகள் அனைவரும் இத்திட்டத்தில் சேரத் தகுதி உடையவர்கள் ஆவர்.

இத்திட்டத்தின்கீழ், இந்து சமய அறக்கட்டளை நிலைய அதிகாரிகளும் பணியாளர்களும் தங்களது சம்பள விகிதத்தின்படி, ரூபாய் 2.50 முதல் ரூபாய் 7.50 வரையில் குடும்பநல நிதிக்கு பங்குத் தொகையாக செலுத்த வேண்டும். பங்கு தொகை செலுத்துகிற பணியாளர் அல்லது அதிகாரி இறந்து விடும் நேர்வில் ரூபாய் 2,000 முதல் 5,000 வரையில் ஒட்டுமொத்தமாகப் பெறுவார். பணியாளர் அல்லது அதிகாரி ஓய்வு பெறும்போது அல்லது அலுவலகத்தை விட்டு விலகிச் செல்லும்போது அல்லது பணியிலிருந்து நீக்கப்படும்போது, அவர் எவ்வளவு தொகை செலுத்தி உள்ளாரோ அத்தொகையுடன் நிதி நிர்வாகியான இந்து சமய அறக்கட்டளை ஆணையாளர் நிர்ணயிக்கக்கூடிய தொகையையும் சேர்த்துப் பெறுவார்.

இதோடு மட்டுமல்லாது, கோயில் பணியாளர்கள் பண்டிகை முன்பணமாக ரூபாய் 400 அல்லது இரு திங்களுக்குரிய சம்பளம் இவற்றில் எது குறைவோ அத்தொகையைப் பெற்று வருகின்றனர். துணை ஆணையாளர் அல்லது உதவி ஆணையாளர்கள் செயல் அலுவலர்களாக உள்ள கோயில்களிலுள்ள பணியாளர்

1981 ஏப்ரல் 28]

கள் ஓராண்டில், திருவிழாக் காலங்களில் செய்யும் கூடுதல் பணிக்காக, ஒரு திங்கள் சம்பளத்தை அதிகமாக பெறுகின்றனர். கோயில் பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்கும் திருமணத்திற்கும் முன்பணம் வழங்க ஆணையாளர் திட்டமொன்றை வகுத்துள்ளார். கோயில் பணியாளர்கள் விடுப்பு வசதிகளையும் பெற்றிருக்கின்றனர். கோயில் பணியாளர்களுக்குத் தற்போதுள்ள 22 நாட்களுக்கு ஒரு நாள் ஈட்டிய விடுப்பு என்றிருப்பதை 11 நாட்களுக்கு ஒரு நாள் ஈட்டிய விடுப்பாக்குவதற்கும், தற்போது அவர்களது பணிக்காலம் முழுவதற்குமாக அனுமதிக்கப்படுகின்ற 90 நாள் மருத்துவ விடுப்புக்குப் பதிலாக 180 நாட்கள் மருத்துவ விடுப்பு வழங்குவதற்கும் உரிய செயற்குறிப்பு ஆணையாளரின் பரிசீலனையில் இருக்கிறது. ஆலயங்களில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது வன்முறைக்கு ஆளாகி உயிரை இழக்கும் கோயில் பணியாளர் ஒவ்வொருவருக்கும் கோயில் நிதியிலிருந்து ரூபாய் 2,000 முதல் 5,000 வரையில் ரொக்கமாக வழங்க அரசு அனுமதி அளித்திருக்கிறது.

திருவுருவச் சிலைகள், ஏனைய விலை மதிப்புள்ள பொருட்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.

1980-81 ஆம் ஆண்டில், தொன்மை சிறப்பு மிக்க கோயில்களைப் புதுப்பிப்பதற்காகவும் தொன்மைக்கால அய்ம்பொன் மற்றும் வெண்கலப் பொருள்களையும் சிலைகளையும், ஏனைய விலை மதிப்புள்ள பொருட்களையும் பாதுகாப்பதற்காக ரூபாய் 20 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியது.

பாதுகாப்புப் பெட்டக வசதிகளுக்கும் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் வகை செய்ய இயலாத இடங்களில், போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடைய, அருகில் உள்ள கோயில்களில் திருவுருவச் சிலைகள் முதலியவை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வகையில் 161 கோயில்களுக்குச் சொந்தமான, 1,031 சிலைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. ஆதி திராவிட குடியிருப்புகளிலுள்ள கோயில்களின் சிலைகளையும் சேர்த்து மேற்சொல்லப்பட்ட பாதுகாக்கும் பணிகளுக்காகவும் மற்றும் ஆலயத் திருப்பணிகளுக்கும் 1981-82 ஆம் ஆண்டுக் காலத்தில், அரசு ரூபாய் 12 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

1972 ஆம் ஆண்டு தொன்மைக்கால அரும் பொருட்கள் கலைப்பொருட்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 52/1972) 12 ஆம் பிரிவின்கீழ் திருவுருவச் சிலைகள் தொல்பொருள் ஆய்வியல் துறையில் பதிவு செய்யப்படுகின்றன. இது வரையில், இச்சட்டத்தின்கீழ் 3,954 சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான 22,388 தொன்மைக்காலத் திருவுருவச் சிலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இவ்வாறு பதிவு செய்யப்படுவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்தும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. சிலைகளைப் புகைப்படமெடுத்துத் தொகுப்பேடு தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு தயாரிக்கப்படும் தொகுப்பேட்டின் முதல் நகல் தொல்பொருள் ஆய்வுத் துறைக்கும், இரண்டாம் நகல் ஆணையாளருக்கும், மூன்றாம் நகல் துணை ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இது வரையில் 1,749 கோயில்களில் புகைப்படத் தொகுப்பேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அப்பணிகள் முன்னேற்றம் குறித்து கண்காணிக்கப்படுகிறது. 1980-81 நிதியாண்டில் புகைப்படம் தொகுப்பேடு பணிக்காக, ஆணையர் பொது நல நிதியிலிருந்து ரூபாய் 4,361 நான்கு நிலையங்களுக்கு வழங்கப்பெற்றுள்ளது. சிலைகள் பாதுகாப்புக்காக ரூபாய் 28,500 அரசு மானியமாக 6 ஆலயங்களுக்கும் ரூபாய் 11,174.80 ஆணையர் பொது நல நிதியிலிருந்து 2 ஆலயங்களுக்கும் வழங்கப் பெற்றுள்ளது.

திருக்கோயில்.

“திருக்கோயில்” தமிழில் வெளியிடப்படும் மாத இதழ் ஆகும். இவ்விதழுக்குச் சிறந்த தமிழ் அறிஞர்கள் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வருகின்றனர். இவ்விதழ் 5,000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விற்பனையாகிறது.

செப்பனிடுதலும் திருப்பணிகளும்.

1388 ஆம் பசலியிலிருந்து (1-7-1978 முதல்) திருப்பணிகள் மற்றும் ஏனைய பணிகள் குறித்து 2,206 பணிகளுக்கு ரூபாய் 15.93 கோடி மொத்தச் சிலவிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பெற்றுள்ளது. இப்பணியில் 1.35 கோடி செலவில் 395 திருப்பணிகளும், 97 இலட்சம் செலவில் ஏனைய 509 பணிகளும் முடிக்கப்பெற்றுள்ளன. ரூபாய் 4.61 கோடி செலவில் 875 திருப்பணிகளும், ரூபாய் 9 கோடி செலவில் ஏனைய 427 பணிகளும் நடந்தேறிவருகின்றன.

1981 ஏப்ரல் 28]

நடந்தேறி வருகின்ற முக்கியமான பணிகள் வருமாறு :

(1) அருள்மிகு அரங்கநாத சுவாமி கோயில், ஸ்ரீரங்கம்.

இக்கோயில் திருப்பணி 1966-இல் தொடங்கியது. சுமார் 17 இலட்சம் ரூபாய் செலவில், திருப்பணி முடிக்கப்பட்டு குடமுழுக்கு விழா 26—3—1981-ல் நடைபெற்றது. இத்திருப்பணிக்காக ரூபாய் 5.25 இலட்சம் அரசு மானியமும் ஆணையரின் பொது நல நிதியிலிருந்து ரூபாய் 50,000 மானியமும் அளிக்கப்பட்டது. பொது மக்களிடமிருந்து நன்கொடையாக ரூபாய் 13.50 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

கிருஷ்ணதேவராயர் காலத்திலேயே துவக்கி முடிக்கப்படாதிருந்த ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி கோயிலின் தெற்கு இராய கோபுரத்தைக் கிட்டத்தட்ட ரூபாய் 55 இலட்சம் செலவில் கட்டித் தருவதற்கு தவத்திரு அஹோபில மடத்து ஜீயர் சுவாமிகள் முன் வந்துள்ளார்கள். முதல் அடுக்குப் பணி சுமார் ரூபாய் 25 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அடுக்குப் பணியின் வேலையை தவத்திரு ஆண்டவன் ஸ்வாமிகள் மேற்கொண்டு வேலை நடைபெற்று வருகிறது. இக்கோபுரம் பதிமூன்று அடுக்கு நிலைகள் கொண்ட 68.87 மீட்டர் (226 அடி) உயரம் உள்ளதாகவும் இருக்கும். கட்டி முடிக்கப்பட்ட பின் இக்கோபுரம், இந்தியாவிலேயே மிக உயர்ந்த கோபுரமாக விளங்கும். இறுதிச் செலவு ரூபாய் 75 இலட்சத்தை எட்டும் என்றும் கணக்கிடப்படுகிறது.

(2) அருள்மிகு சபாநாயகர் கோயில், சிதம்பரம்.

ரூபாய் 30.66 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூபாய் 25 இலட்சம் மதிப்புள்ள பணிகள் இதுவரையில் முடிக்கப்பட்டுள்ளன. ரூபாய் 9.5 இலட்சம் அரசு மானியமும், ஆணையரின் பொது நல நிதியிலிருந்து ரூபாய் 20,000-மும் ஒதுக்கப்பட்டுள்ளன. பழனி கோயில் நிதியிலிருந்து ரூபாய் 2.65 இலட்சம் இக்கோயிலுக்கு மாற்றப்பட்டுள்ளது. பொதுமக்கள் நன்கொடை மூலம் செலவு செய்த தொகை ரூபாய் 9.96 இலட்சமாகும்.

(3) பழனியில் இரண்டாவது மின் இழுவை ரயில் அமைத்தல்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில் இரண்டாவது மின் இழுவை ரயில் ரூபாய் 18.45 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

(4) அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில், திருச்செந்தூர்.

ரூபாய் 5.60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஜெயந்தி நாதர் விடுதியின் கீழ்த்தளம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கீழ்த்தளத்திற்கு மேல், முதல் தளமும், இரண்டாவது தளமும் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(5) சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோயில்.

இராஜகோபுரம் கட்டும் பணி ரூபாய் 10 இலட்சம் செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள இராஜகோபுரம் 5 அடுக்கு உடையதாயிருக்கும். 23 மீட்டர் உயரமுடையதாகும்.

(6) மாங்காடு அருள்மிகு காமாட்சி அம்மன் கோயில்.

ரூபாய் ஏழு இலட்சம் செலவில் கோயிலின் தெற்குப் புறத்தில் புதிதாக இராஜகோபுரம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏழு அடுக்குகளுடன் புதிதாகக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கோபுரத்தின் உயரம் 26 மீட்டராகும்.

வழிபடுபவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் வசதிக்காக ரூபாய் 4 இலட்சம் செலவில் திருமண மண்டபம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(7) திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் கோயில்.

ரூபாய் 6 இலட்சம் செலவில் 36 அறைகள் கொண்ட தங்கும் விடுதி கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. கோயில் தேர் வீதி வலம் வருவதற்காக பட்டா நிலங்களைக் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(8) அவினாசி அருள்மிகு அவினாசிலிங்கேஸ்வரர் கோயில்.

ரூபாய் 4.6 இலட்சம் செலவில் இராஜகோபுரம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

(9) இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாத சுவாமி கோயில்.

சிற்ப வேலைப்பாடுகள் கூடிய தூண்கள் அமைக்கப்பட்டு கருங்கற்பாளங்கள் பாவப்பட்ட இரண்டாவது பிரகாரம் கட்டுவது பற்றிய பெரும்பணி ரூபாய் 5.5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணி நடந்தேறி வருகிறது.

அம்மன் சன்னதி முன்னர் அதே போன்று கருங்கல் மண்டபம் ஒன்று கட்டும் பணி ரூபாய் 7.5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு நடந்தேறி வருகிறது.

(10) திரு உத்திரகோசமங்கை அருள்மிகு மங்களநாதசுவாமி கோயில்.

சிற்ப வேலைப்பாடுடன் கூடிய தூண்களுடைய மண்டபம் ஒன்று ரூபாய் 7.5 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

1981 ஏப்ரல் 28]

(11) ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் கோயில்.

அருள்மிகு நாச்சியார் கோயில் கட்டுமானப் பணியும் வடபத்ரசயன கோபுரத்தில் சிலை வடிக்கும் பணியும் ரூபாய் 9.35 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் (4 + 5.35 இலட்சம்) மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டன. ரூபாய் 3.56 இலட்சம் செலவில் கட்டுமானப்பணி முடிக்கப்பட்டுள்ளது. சிலை வடிக்கும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

(12) பாரியூர் அருள்மிகு கொண்டத்து காளியம்மன் கோயில்.

ரூபாய் 5 இலட்சம் செலவில் இராஜகோபுரம் கட்டும் பணி மேற்கொள்ளப் பட்டு, பணி நடந்தேறி வருகிறது. திருஉருவச் சிலைகளுடன் ரூபாய் 8 இலட்சம் செலவில் மகாமண்டபம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(13) திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில்.

திருவிழாக் காலத்தில் கூட்டத்தினர் எளிதாக வெளியில் செல்வதற்கு இயலும் வண்ணம், முன்னரே அமைக்கப்பட்ட சிமிட்டி கற்கலவை சாய்வுத் தூண்கள் பொருத்தப்பட்ட இரண்டாவது நடைபாதை ரூபாய் 2 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

(14) மயிலாப்பூர், அருள்மிகு மாதவபெருமாள் கோயில்.

ரூபாய் 2 இலட்சம் செலவில் திருமண மண்டபம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

(15) சைதாப்பேட்டை, அருள்மிகு காரணீஸ்வரர் கோயில்.

ரூபாய் 2 இலட்சம் செலவில் இராஜகோபுரம் கட்டும் பணி மேற் கொள்ளப்பட்டு பணி முடியுந்தருவாயில் உள்ளது.

(16) கோடம்பாக்கம், அருள்மிகு வெங்கீஸ்வரர் கோயில்.

ரூபாய் 4.2 இலட்சம் செலவில் இராஜகோபுரம் கட்டும் பணி மேற் கொள்ளப்பட்டு பணி நடந்தேறி வருகிறது.

(17) வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் கோயில்.

ரூபாய் 1.3 இலட்சம் செலவில் கிழக்கு இராஜகோபுரம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு பணி முடியுந்தருவாயில் உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

(18) பச்சை மலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில்.

ரூபாய் 7.5 இலட்சம் செலவில் கோயில் மண்டபங்கள் ஆகியவற்றைப் புதுப்பித்துக் கட்டும் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு நடந்தேறி வருகிறது.

1980 ஆம் ஆண்டில் கிராமங்களிலுள்ள பல சிறிய கோயில்களுக்கு குடமுழுக்கு விழா நடந்ததுடன் 59 கோயில்களுக்கும் குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது.

தங்கத் தேர்.

1980 ஆம் ஆண்டில் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலுக்கு ரூபாய் 18.32 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 5.33 மீட்டர் உயரமுள்ள தங்கத் தேர் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கான வசதிகள்.

பொதுவாக ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடும் ஆலயங்களில் ஆலயத் திருப்பணி, கல்யாண மண்டபம், தங்கும் விடுதி போன்ற பணிகளோடு பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் மக்களின் அவசியத் தேவைகளான குடிநீர் வசதி, கழிப்பறைகள், குளியலறைகள் வசதி போன்ற பணிகளிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோயில்களில் தமிழ்ப் புலவர்களை நியமித்தல்.

ஆண்டொன்றுக்கு ரூபாய் 1 இலட்சத்திற்கும் அதிகமாக வருவாயுள்ள கோயில்களில் இதுவரை தமிழ்ப் புலவர்கள் 88 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சமய மற்றும் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் சமயப் பண்புகளையும் மற்றும் தமிழ்ப் பண்பாட்டைப் பலரும் அறியும் வண்ணம் எடுத்துரைத்தும் நற்பணியாற்றி வருகின்றனர்.

1981 ஏப்ரல் 28]

தமிழிசை வளர்ச்சி.

தமிழிசை வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் நாதஸ்வாத்திலும் தவிலிலும் ஒவ்வொரு துறையிலும் 5 மாணவர்களுக்கு நாதஸ்வாத்தில் மேற்பயிற்சி பெற திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 500-ம் தவிலில் மேற்பயிற்சி பெற திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 300-ம் உதவித் தொகை வழங்குவதற்கான திட்டம் ஒன்றை அரசு நடைமுறைப்படுத்துகிறது. புகழ்வாய்ந்த வித்வான்களைக் கொண்டு நடத்தப்படும் மேற்பயிற்சிக்காக, நாதஸ்வரப் பள்ளிகளில் பயிற்சி முடித்துள்ள நாதஸ்வர மாணவர்கள் ஐவரும், தவில் மாணவர்கள் ஐவரும் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

வாடகை வருமானம்.

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள், மனைகள் குறித்த 7,536 இனங்களில் வாடகை 1980-ல் உயர்த்தப்பட்டது. இதனால் ஆண்டு தோறும் கூடுதலாக ஏறக்குறைய ரூபாய் 11 இலட்சம் வருமானம் கிடைக்கும்.

உயர்நிலைப் பள்ளிகளும் கல்லூரிகளும்.

இம்மாநிலத்தில் 5 கல்லூரிகள், 22 உயர்நிலைப் பள்ளிகள், 11 இதர பள்ளிகள் ஆகியவற்றை இந்து சமய நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. இவற்றுள் 7 தேவாரப் பாடசாலைகள் மற்றும் 4 ஆகம பாடசாலைகள் அடங்கும். கோயில்களின் அறக்கட்டளை நிதியைக் கொண்டு பராசக்தி மகளிர் கலைக் கல்லூரி, திருக்குற்றாலம், மற்றும் பூம்புகார் பேரவைக் கல்லூரி, மேலையூர் ஆகிய இரு கல்லூரிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்துடன் தவில், நாதஸ்வரக் கலைகளுக்கான பள்ளிகளும், பழனி, சுவாமிமலை, சிக்கல் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

சமுதாய நலப்பணிகள்.

சமய நிறுவனங்களின் உபரி நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சமுதாய நலப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. செவிடர், ஊமையர் பள்ளி ஒன்றும் பரிவு இல்லங்கள் மூன்றும், நூலகங்கள் 202-ம் சித்த வைத்திய மருந்தகங்கள் 35-ம், ஆங்கில முறை மருத்துவ மனைகள் இரண்டும் 35 அன்பு இல்லங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

[1981 ஏப்ரல் 28

25 சதவீத அரசு மானியத்தைக் கொண்டு அன்பு இல்லங்களை பராமரித்தல்.

கோயில்களின் ஆதரவில் 2,770 சிறார்களைக் கொண்டு (2,000 சிறுவர்கள், 770 சிறுமிகள்) 35 அன்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இல்லத்தில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 60 செலவிடப்பட்டு வருகிறது. இல்லங்களை நடத்துவதற்கு ஆகும் தொடர் செலவில் நான்கில் மூன்று பங்கை, சம்பந்தப்பட்ட கோயில்கள் ஏற்றுக்கொள்கின்றன. எஞ்சிய ஒரு பாகத்தை அரசு ஏற்கிறது. செலவின் விவரம் வருமாறு :—

		25 சதவீதம் அரசு மானியம்.	75 சதவீதம் கோயிலின் பங்கு.
1976—77	13,08,000	3,27,000	9,81,000
1977—78	9,60,997	2,40,200	7,20,797
2978—79	9,26,060	2,31,500	6,94,560
1979—80	9,58,849	2,39,724	7,19,125
1980—81 (தோராயமாக)	10,00,000	2,50,000	7,50,000

இதைத் தவிர சமய நிறுவனங்கள் முழுமையாக தங்கள் நிதியைக் கொண்டு 7 அன்பு நிலையங்களைப் பராமரித்து வருகின்றன. இந்த 7 நிலையங்களில் தற்போது 400 பேர் உள்ளனர்.

ஆணையாளரின் பொது நல நிதி.

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 97 ஆம் பிரிவின்படி இந்து சமய அறக்கட்டளைகள் பொது நல நிதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. சமய நிறுவனங்கள் தங்கள் உபரி நிதியிலிருந்து அல்லது வேறு எவரேனும் மனமுவந்து கொடுக்கும் தொகையைக் கொண்டு இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எல்லா இந்து சமய நிறுவனங்களுக்கும் அல்லது யாதொரு வகை சமய நிறுவனங்களுக்குப் பொதுவாக உள்ள சமய நெறிகளை பரப்பவும் 66 ஆம் பிரிவின் (1)-வது உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயல் நோக்கங்கள் எவற்றிற்காகவும் கோயிலையும் அதிலுள்ள சிற்பங்கள் ஓவியங் களையும் புதுப்பிக்கவும் அவற்றைப் பாதுகாக்கவும் இந்நிதியிலிருந்து செல விடப்படுகிறது. இந்நிதி ஆணையாளரின் பொறுப்பில் உள்ளது.

1980-81 நிதியாண்டில் மேற்சொன்ன செயல் நோக்கங்களுக்காக இந்நிதி யிலிருந்து ரூபாய் 4,01,265 வழங்கப்பட்டது.

1981 ஏப்ரல் 28]

முடிவு பெறாப்பணிகளும் முடிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும்.

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சரிவர திட்டமிடப்படாமலும் திருக்கோயில் நிதி நிலைமையை கருத்தில் கொள்ளாமலும் பல திருக்கோயில்களில் திருப்பணி திருமண மண்டபங்கள் மற்றும் இதர பணிகள் ஆரம்பிக்கப்பெற்று முடிவு பெறாமல் இருந்து வந்தன. அவைகளில் ரூபாய் 1,62,66,150-க்கான 315 பணிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவைகளில் ரூபாய் 67,66,850-க்கான 202 வேலைகளும் ரூபாய் 20,58,000-க்கான 17 திருமண மண்டபங்களும் 1-1-1978-க்குப் பிறகு பூர்த்தி செய்யப்பட்டு முடிக்கப் பெற்றுள்ளன. எஞ்சியவற்றை முடிப்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

ஆலய நிலங்கள்.

1980 ஆம் ஆண்டில் 3,990 நேர்வுகளில் 7,908 ஏக்கர் ஆலய நிலங்களின் குத்தகைத் தொகை குறைவாக இருந்தமையால் அவற்றின் குத்தகைத் தொகை அதிகப்படுத்தப்பட்டு அதன் மூலம் வருவாய் ரூபாய் 3,22,710 கூடுதலாக்கப் பட்டது. முதன்முறையாக 768 நேர்வுகளில் 1,042.51 ஏக்கர் தரிசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு அதன் மூலம் ஆண்டு வருமானம் ரூபாய் 2,21,796 கிடைக்க வகை செய்யப்பட்டது.

இதைப் போலவே விளை நிலம் அல்லாத விவசாயத்திற்கு பயன்படாத, குத்தகை குறைவாக வந்து கொண்டிருந்த (776 நேர்வுகளில்) 182.65 ஏக்கர் நிலங்களின் ஆண்டு வருமானம் ரூபாய் 12,876 ஆக அதிகப்படுத்தப்பட்டது. மேலும் 2,376 நேர்வுகளில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட 6,437.31 ஏக்கர் விவசாய நிலங்கள் குத்தகைதாரர்களிடம் ஒப்பந்தங்கள் (பத்திரங்கள்) எழுதி வாங்கப் பட்ட பின்னர் துறையின் பார்வையின்கீழ் கொண்டுவரப்பட்டன. இதன் மூலம் ஆண்டுக்கு குத்தகை ரூபாய் 1,75,723 கிடைக்கும். விளை நிலம் அல்லாத 429 நேர்வுகளில் 753.37 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருந்தவற்றையும் குத்தகைதாரர்களிடம் பத்திரங்கள் எழுதி வாங்கப்பட்ட பின்னர் துறையின் பார்வையின்கீழ் கொண்டுவரப்பட்டு ரூபாய் 19,455 ஆண்டு வருமானம் கிடைக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக சுமார் ஐந்து இலட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. இவைகளிலிருந்து சமய நிறுவனங்களுக்குச் சேரவேண்டிய குத்தகை பாக்கிகள் சுமார் ரூபாய் 23.30 கோடி உள்ளது. நிலங்கள் சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட சீர்திருத்தச் சட்டங்கள்

பலவற்றால் இந்த பாக்கிகளை வசூல் செய்ய இயலாத நிலையில் சமய நிறுவனங்களின் வருவாய் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பல ஆலயங்களில் பூசை முதலியன செய்யவும், ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும் திருப்பணி மற்றும் கட்டுமான வேலைகளை மேற்கொள்ளவும் இயலாத நிலை உள்ளது. வரவேண்டிய பாக்கிகளை பெற்றால்தான் அத்தியாவசியமான செலவுகளை ஆலயங்கள் செய்துகொள்ள ஏதுவாகும். எனவே இது சம்பந்தமாக என்ன கொள்கை கடைபிடிப்பது என்பதற்கு பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆராய்ந்து அரசு விரைவில் கொள்கை பற்றி அறிவிக்கும்.

சில முக்கியமான நிர்வாகச் சீர்திருத்தங்கள்:

(1) அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில், சிதம்பரம்.

அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில் மிக தொன்மை வாய்ந்த புகழ் பெற்ற திருக்கோயிலாகும். இக்கோயில் நிர்வாகம் நீண்ட காலமாகவே பொது தீக்ஷிதர் என்ற பிரிவினரிடமிருந்து வருகிறது. இக்கோயிலுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் பல்வேறு காலங்களில் மன்னர்களாலும் பொது மக்களாலும் கொடுக்கப்பட்டு அவற்றின் நிர்வாகம் ஆலயத்தின் நேரடி பார்வைக்கு வராமல் இருந்து வந்தது, தவிர கட்டளைகள் அர்ச்சனை இதர காணிக்கைகள் மூலமும் இக்கோயிலுக்கு நிறைய வருமானம் வருகிறது என்றாலும் இவ்வளவு பெரிய ஆலயத்தின் மொத்த வருமானம், செலவு பற்றிய எந்த விபரங்களையும் அறநிலையத் துறையோ, பொதுமக்களோ தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் உள்ளது. முழு விபரங்களை பொது தீட்சிதர்கள் தெரிவிப்பதும் இல்லை. பொது தீட்சிதர்கள் தருகிற கணக்குப்படி இந்த ஆலயத்தின் ஆண்டு வருமானம் ரூபாய் 3,215 (1389-ம் பசலி) குறிப்பிடத்தக்கதாகும்.

எற்கெனவே கூறியதுபோல் இந்தக் கோயிலுக்கு தேவையான திருப்பணிகளுக்கு பெருமளவில் அரசும் அறநிலையத் துறையும், பொதுமக்களும் உதவியும் அக்கோயில் அறநிலையத் துறையின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்படாமலும் இருந்துவருகிறது. இந்த கோயிலின் நிர்வாகத்தில் முறைகேடுகள் நிகழ்ந்து வருவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரவே, நிர்வாகத்தை சீர்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், எற்கெனவே, சென்னை உயர்நீதி மன்றத்தால் உறுதி செய்யப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்

படி ஐவர் கௌரவ பார்வையாளராக ஆணையரால் நியமிக்கப்பட்டனர். கோவில் நிர்வாகம் நிர்வாகத் திட்டப்படி நடைபெறுகிறதா என்று மேற் பார்வை செய்து வரவு-செலவு கணக்குகளை ஆய்வு செய்யவும், கட்டளைகள் சரிவர நடைபெறுகிறதா என்பதை தெரிந்து கொண்டு குறைபாடுகளை, நிர்வாகக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரவும், நிவர்த்தி செய்யா விட்டால் ஆட்சித் துறையின் கவனத்திற்கு அறிக்கை அனுப்புதலும் இவர் களது பணியாகும். இத்திருக்கோயிலில் உண்டியல் வைப்பது, அர்ச்சனை சிட்டுகள் அமுல்படுத்துவது போன்ற நடவடிக்கைகளும் மேற்கண்ட திட்டத் தில் அடங்கும். இதை பொது தீட்சிதர்கள் ஆட்சேபணை செய்து வருவதோடு கௌரவ பார்வையாளர்கள் நியமனத்தை எதிர்த்தும் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தடை உத்திரவு பெற்றுள்ளனர்.

சென்னை உயர்நீதி மன்றம் இதன் மீதான விசாரணையை விரைவில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக அரசு தரப்பில் மனு தக்கல் செய்யப் பட்டுள்ளது. இக்கோயிலுக்கு சொத்துக்கள் எதும் இல்லையென்றும் அத னால் பெரிய வருமானம் எதும் இல்லையென்றும் பொது தீட்சிதர்கள் கூறி வருகிறார்கள். ஆனால் இந்த ஆலயத்திற்கு சொந்தமாக 910.00 ஏக்கர் பட்டா நிலமும், 2,878.00 ஏக்கர் அறக்கட்டளை நிலங்களும் இருக்கின்றன. ஆல யத்தின் பட்டா நிலங்களுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 39,159 குத்தகை நிர்ணயம் செய்யப்பட்டு, இத்துறையின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள வருவாய் அலு வலர்களால் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்த கோவிலுக்குச் சொந்தமான இதரச் சொத்துக்களையும் ஆலயத்தின் நேரடி நிர்வாகத்திற்கு கொண்டு வரவும் நிர்வாக சீரமைப்புக்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருமடங்கள்.

தமிழ்நாட்டில் உள்ள மடங்களில் பெருவாரியான வருமானம் வரக்கூடிய திருமடங்கள் பல உள்ளன. அவைகளில் அதிகமான சொத்துக்கள் உள்ளதும் வருமானம் வரக்கூடியதும் திருவாவடுதுறை மடம் ஆகும். ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள நஞ்செய், புன்செய் நிலங்களையும் விலை மதிப்புள்ள திருவாபரணங்களையும் கொண்டுள்ளது இம்மடம். இந்த திருமடத்தின் நிர்வாகத்தில் பல குறைபாடுகள் நடப்பதாக பல புகார்கள் பொதுமக்களிட மிருந்து வந்துள்ளன. இந்த மடங்களைச் சேர்ந்த திருக்கோயில்களுக்கு மடாதிபதிகளே பரம்பரை அறங்காவலர்கள். இந்த கோயில்களின் நிர்வாகத் திலும் பல முறைகேடுகள் நிகழ்கின்றன என்ற புகார்கள் வரப்பெற்றன. இந்த

திருக்கோயில்களுக்கு நிர்வாக சீரமைப்பு கருதி முப்பத்திரண்டு செயல் அலுவலர்கள் நியமனம் செய்ய அரசு ஆணை பிறப்பித்தது. இதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டு, திருவாவடுதுறை, தருமபுரம், குன்றக்குடி ஆதீனங்கள் அரசு ஆணைக்கு தடை உத்தரவினை பெற்றுள்ளது. ரிட் மனு நிலுவையில் உள்ளது. சமீபத்தில் கல்வி மற்றும் தகுதி குறைபாடு உடையவர் ஒருவரை தனக்கு வாரிசாக திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் நியமித்துள்ளார் என புகார் வந்ததின் பேரில் ஆணையர், ஆதீன கர்த்தரை அவரது வாரிசு நியமித்த செய்கைக்கு முகாந்திரம் கேட்டார். இதனை எதிர்த்த ஆதீன கர்த்தரால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவினை சென்னை உயர் நீதி மன்றம் தள்ளுபடி செய்தது. இதனை எதிர்த்து ஆதீன கர்த்தர் உயர்நீதி மன்றத்தில் ரிட் அப்பீல் தாக்கல் செய்து, ரிட் மனுவின் மீதான உயர் நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு தடை ஆணை பெற்றுள்ளார்கள். இந்த ரிட் அப்பீல் நிலுவையில் உள்ளது. தஞ்சை மாவட்டம் சீர்காழி தாலுக்கா வைத்தீஸ்வரன் கோயில் கிராமத்தில் உள்ள தர்மபுரம் மடத்தை சேர்ந்த அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோவிலில் 3-3-1981 அன்று நகைகள் களவு போய்விட்டன. இக்கோயிலுக்கு தருமபுரம் மடத்தின் மடாதிபதி பரம்பரை அறங்காவலர். இந்த ஆலயத்தில் நடைபெற்ற உற்சவ தேதிகளில் சுவாமி அலங்காரத்திற்காக இந்த நகைகளும் இன்னும் சில நகைகளும் 21-2-1981-ம் தேதி மெய்க்காவலர் சுப்ரமணியப் பிள்ளையிடம் கொடுக்கப்பட்டன. எப்போதும் போல் இவைகளை தன் பொறுப்பில் ஆலயத்தின் உட்பகுதியில் ஒரு அறையில் வைத்திருந்த அந்த மெய்க்காவலர் 3-3-1981 ஆம் தேதி மாலை ரூபாய் 5 இலட்சம் மதிப்புள்ள பவுன் நகைகள் திருட்டு போய் விட்டதாக தெரிவித்தார். உடனடியாக காவல் துறையினருக்கு முறையீடு கொடுக்கப்பட்டு காவல் துறையினரின் புலன் விசாரணையில் உள்ளது. இன்னும் நகைகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

17-2-1979 அன்று இதே மெய்க்காவலர் சுப்ரமணியப்பிள்ளை வசம் நகைகள் இருந்தபோது, சில நகைகள் காணாமல் போயிற்று. இந்த நகைகள் இன்னும் கிடைக்கவில்லை. இந்த இழப்பிற்காக மெய்க்காவலரின் சம்பளத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் பிடித்தம் செய்து வருகிறார்கள். இந்த தவிர வேறு நடவடிக்கை எடுக்காமல் அவரை தொடர்ந்து இதே பணியில் வைத்து பல இலட்சங்கள் மதிப்புள்ள நகைகளை தொடர்ந்து ஒப்படைத்து வந்துள்ளனர். ஆலயத்தின் பரம்பரை அறங்காவலரான தர்மபுரம் மடாதிபதியின் விளக்கம் அறநிலையத் துறையினரால் கேட்கப்பட்டுள்ளது.

1981 ஏப்ரல் 28]

இந்தக் கோயில் நிர்வாகம் சம்பந்தமாகவும் அப்பகுதியில் உள்ள பக்தர்கள் பிரமுகர்கள் பலர் அரசுக்கு புகார் செய்துள்ளார்கள். எனவே இவைகளை விரிவாகப் பரிசிலித்து, மடங்களின் நிர்வாகங்களைச் சீர்செய்து ஒழுங்குபடுத்துவதற்காக சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

திருமடங்களின் நிர்வாக சீர் அமைப்பு கருதி ஆய்வு நடத்த அரசு தனித் துணை ஆணையர் ஒருவரையும் போதிய தணிக்கையாளர்களையும் நியமனம் செய்துள்ளது. ஆய்வு நடந்துகொண்டு வருகிறது.

பரம்பரை அறங்காவலர்களுள்ள ஆலயங்கள்.

சிவகங்கை சமஸ்தான ஆலயங்கள்:

இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கையில் உள்ள சிவகங்கை தேவஸ்தானம் என்பது 83 ஆலயங்களையும், 22 கட்டளைகளையும் கொண்ட ஒரே சமய நிறுவனமாகும். முன்னால் சிவகங்கை ராஜ குடும்பத்தைச் சேர்ந்ததாகும். இந்த ஆலயங்களுக்கு சென்னை உயர் நீதிமன்றத்தினால் ஒரு நிர்வாகத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு அது மதுரை துணை ஆணையரால் திருத்தி அமைக்கப் பெற்று அமுலில் உள்ளது. தற்போது இந்த ஆலயங்களுக்கு முன்பு சிவகங்கை ராஜாவின் குடும்பத்தின் வாரிசான திரு. கார்த்திகேய வெங்கடாஜலபதி பரம்பரை அறங்காவலர். இந்த நிர்வாகத் திட்டம் பத்தி 3-ன்படி மேற்படி சிவகங்கை சமஸ்தான ஆலயங்களின் அன்றாட நிர்வாகம் பரம்பரை அறங்காவலரால் நியமனம் செய்யப்பட்ட மேலாளரால் கவனித்து வரப்படுகிறது. ஆலயத்தின் பசலி 1389-ம் ஆண்டு வருமானம் ரூ. 13,76,534.67. இந்த சமஸ்தான ஆலயங்களுக்குச் சொந்தமாக 1488-11 ஏக்கர் நஞ்சையும் 356.17 ஏக்கர் புஞ்சை நிலங்களும் உள்ளன.

இந்த ஆலயத்தில் காணப்பட்ட நிர்வாகக் குறைபாடுகளுக்காக இந்த ஆலய பரம்பரை அறங்காவலர்மீது 41 குற்றச்சாட்டுகள் ஏற்பட்டுள்ளன. தமிழ்நாடு இந்து சமய அறநிலைய திருத்தச் சட்டம் 42/78 பிரிவு 53-A-ன்படி பிரிவு 46 (iii) படி பட்டியலில் சேர்க்கப்பட்ட ஆலயங்களின் அறங்காவலர்கள் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

இவ்வாலயங்களுக்கு இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு 45 (1) படி செயல் அலுவலர் நியமனம் செய்ய மதுரை துணை ஆணையரிடம் அறிக்கை கேட்கப்பெற்று மேல் நடவடிக்கையில் உள்ளது.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இவ்வாலயத்திற்கும் இது போன்ற மற்ற ஆலயங்களுக்கும் ஏற்பட்டுள்ள நிர்வாகத் திட்டம், சட்ட விதிகளுக்கு முரணாக இருப்பவற்றை நீக்கியும சட்டத்திற்கு உட்பட்டும் மாற்றி அமைக்கவும் மேல் நடவடிக்கை எடுக்க அறிவுரையும் வழங்கப்பெற்று தகுந்த மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

செயல் அலுவலர்கள் இல்லாத ஆலயங்கள்.

செயல் அலுவலர்கள் இல்லாத ஆலயங்களில் குறிப்பாக பரம்பரை அறங் காவலர்கள் நிர்வாகத்துக்கு உட்பட்ட ஆலயங்களில் நிர்வாக குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்த ஆலயங்களுக்கு, செயல் அலுவலர்கள் நியமனம் செய்வதற்கு முன்பு நீதிமன்ற தீர்ப்புகள்படி அவர்களுக்கு அறிவிப்பு கொடுத்து விசாரணை செய்து நியமனம் செய்ய வேண்டியுள்ளது. கடந்த மூன்று ஆண்டு களில் 116 ஆலயங்கள் சட்டப் பிரிவு 45 (1)-ன்கீழ் செயல் அலுவலர்களின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வர உத்திரவு பிறப்பிக்கப்பட்டன. ஆலயங்களுக்கு செயல் அலுவலர்கள் நியமனத்தை எதிர்த்து சட்டப் பிரிவு 114-ன்கீழ் 28 ஆல யங்கள் மேல்முறையீடு மனு அரசிடம் தாக்கல் செய்துள்ளதில் 24 ஆலயங்கள் பரம்பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப் பெற்று வருவன. மேலும் பரம் பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப் பெறும் 7 ஆலயங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

நிர்வாக இடர்பாடுகள்.

செங்கல்பட்டு நகரத்திலுள்ள அருள்மிகு சக்தி விநாயகர் கோவில் சமீப காலத்தில் மிகவும் புகழ் பெற்றுள்ளது. ஆகவே அதிக எண்ணிக்கையான பொது மக்கள் வழிபாடு செய்கிறார்கள். இப்போது இருந்த ஒரு குருக்களுக்கு மேல் இரண்டாவது குருக்கள் நியமனம் செய்து இத்துறையில் உத்திரவிடப் பெற்றது. இந்த உத்திரவை எதிர்த்து குருக்கள் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தடை உத்திரவு பெற்றுள்ளார்.

எனவே எடுக்கப்படுகிற ஆலய நிர்வாக சீர்திருத்த நடவடிக்கைகளுக் கெல்லாம் நீதிமன்றங்களுக்குச் சென்று முட்டுக்கட்டை போடும் வழக்கம் அதிகரித்து வருவதைத் தடுத்து நிறுத்த தக்க சட்டத் திருத்தங்களை கொண்டுவர அரசு பரிசீலித்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 28]

தணிக்கை.

சமய நிறுவனங்கள் கணக்குகளை தணிக்கை செய்யும் முறையும் தணிக்கை அறிக்கை அமைப்பும் ஆய்வு செய்யும் வகையும் திருத்தி அமைக்க பெற்று, விரிவான அதே சமயத்தில் நுணுக்கமான தணிக்கை முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகத் தமிழ் மாநாடு.

அண்மையில் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் இத்துறை தமிழர் நாகரிகம், பண்பாடு, சமய வழிபாட்டு முறை ஆகியவற்றை விளக்கும் அரங்கு ஒன்று அமைத்து, பொதுமக்களின் மகத்தான பாராட்டை பெற்று வருகிறது.

இம்மாநாட்டினை ஒட்டி வண்டியூர் மாரியம்மன் ஆலய தெப்பக்குளம மையமண்டபம் ரூ. 5,01,400 அரசு மானியத்தைக் கொண்டு செப்பனிடப் பட்டுள்ளது.

நமது பண்டைய நாகரிகத்தையும், கலையினையும், பண்பாட்டினையும் கட்டிக்காக்கும் கருவூலப் பெட்டகங்களாக நமது முன்னோர்கள் உருவாக்கி விளங்கிக் கொண்டிருக்கும் கோயில்களைப் பேணிப் பாதுகாக்க அரசு தொடர்ந்து அயராது பாடுபடும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

17 AUG 1982

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS